லொயோலா

# ஈசி தமிழ்

# 12

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி
விடைக் குறிப்பு (Key) அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

Loyola
Publications
Vivek Illam, No. 19, Raj Nagar, N.G.O. 'A' Colony,
Palayamkottai, Tirunelveli - 627 007.
Ph: 0462 - 2553186
Cell : 94433 81701, 94422 69810, 90474 74696

₹.

Less Strain Score More

## நூலாக்கம்

லொயோலா பப்ளிகேஷன்

**Copy right : © LOYOLA PUBLICATION.**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

www.kalviexpress.in

நூலாசிரியர் :

**மு. கெஜமுத்துமாரி,** M.A., M.Phil., B.Ed.,
முதுகலைத் தமிழாசிரியை,
ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் பொன்விழா
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
சங்கர் நகர், திருநெல்வேலி.

Loyola Publications

**"தித்திக்கும் முத்தமிழே!**
**கவிதை சீதனம் தரும் எங்கள் உயிரே!**
**பூம்புனல் காவிரி தாய்மடி வளர்ந்திட்ட**
**பொதிகை மலை தந்த செல்வமே!"**

**ஈசி தமிழ் உரைநூல் மூலம் தமிழமுதைப் பருக வரும் எனதருமை மாணவச் செல்வங்களே!**

**மொழி மீது நாம் கொண்டுள்ள ஆர்வம் தான், இலக்கண இலக்கியப் பிழையற்ற, மொழி ஆளுமைத் திறனுடைய ஒரு முழு மனிதனாக நம்மை மாற்றும்.**

**முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை!**
**ஆர்வத்தோடு முயலுங்கள்!**
**அறிவினைப் அள்ளிப் பருகுங்கள்!**

**உரைநூலின் சிறப்பம்சங்கள் :**

- புத்தகப் பயிற்சி வினாக்களைப் **புத்தகப் புறநிலை வினாக்கள்** எனவும் பாடப்பகுதியின் உட்பகுதியிலிருந்து கேட்கப்படும் வினாக்களை **அகநிலை வினாக்கள் எனவும் பிரித்தளிக்கப்பட்டுள்ளது.**
- கூடுதல் வினாக்களாக இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம், புணர்ச்சி விதிகள், மொழிப்பயிற்சிகள் விடைகளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.
- அணி, திணை மற்றும் துறைகளுக்கான விடைகள், முழு மதிப்பெண் பெறுவதற்கான உரிய முறையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.
- தலைப்புகள், துணைத்தலைப்புகள், தனித்தனித் தொடர்களாக எழுதும் பாங்கு போன்றவை மாணவர்களின் படிப்பார்வத்தைத் தூண்டும் தூண்டுகோலாக விளங்கும் வகையில் அமைந்துள்ளன.
- **எட்டி எட்டி முயன்று,**
  **தரவரிசையில் முதன்மை இடம்பிடிக்க,**
  **வழித்துணையாக வரும் இந்த உரைநூல்**
  மாணவர்களின் அறிவுப் பெட்டகத்திற்கு ஓர் உரைகல்லாக அமைந்துள்ளது.

  **அரிதின் முயன்று தேடிப்பெறும் செல்வமாக,**
  **இந்த 'ஈசி தமிழ் உரைநூல்' மூலம்**
  **எளிதின் முயன்று தமிழ்ச் செல்வத்தை அடைந்தால்**

  **வானமும் வசப்படும்!**
  **உங்கள் கைகளில் ....**
  **என்ற வாழ்த்துகளும் வணக்கங்களும் ....**
- தமிழ் உரைநூல் எழுதுவதற்கு அரியதொரு வாய்ப்பினை எனக்கு நல்கிய '**லொயோலா ஈசி**' பதிப்பகத்தார்க்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளும் வணக்கங்களும் ....

**என்றென்றும் தமிழுடன்...**
**மு.கெஜமுத்துமாரி,**
திருநெல்வேலி

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ஆசிரியர் | ப. எண் |
|---|---|---|---|---|---|
| | **மனப்பாடப்பகுதிகள்** | | | | 6 |
| 1 | மொழி | செய்யுள் | இளந்தமிழே! | சிற்பி.பாலசுப்பிரமணியம் | 9 |
| | **உயிரினும் ஓம்பப்படும்** | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் | தி.சு.நடராசன் | 20 |
| | | செய்யுள் | தண்டியலங்காரம் | தண்டி | 27 |
| | | துணைப்பாடம் | தம்பி நெல்லையப்பருக்கு | பாரதியார் | 33 |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | | 37 |
| 2 | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் | உரைநடை | பெருமழைக்காலம் | | 49 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | அய்யப்ப மாதவன் | 58 |
| | | | நெடுநல்வாடை | நக்கீரர் | 66 |
| | **பெய்யெனப் பெய்யும் மழை** | துணைப்பாடம் | முதல்கல் | உத்தமசோழன் | 74 |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | | 76 |
| 3 | பண்பாடு | உரைநடை | தமிழர் குடும்ப முறை | பக்தவத்சல பாரதி | 88 |
| | **சுற்றத்தார் கண்ணே உள** | செய்யுள் | விருந்தினர் இல்லம் | ஜலாலுத்தீன் ரூமி | 98 |
| | | | கம்பராமாயணம் | கம்பர் | 104 |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | பூமணி | 121 |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | | 124 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | திருவள்ளுவர் | 138 |
| 4 | கல்வி | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | உ.வே.சாமிநாதர் | 153 |
| | **செல்வத்துள் எல்லாம் தலை** | செய்யுள் | இதில் வெற்றி பெற | சுரதா | 163 |
| | | | இடையீடு | சி.மணி | 169 |
| | | | புறநானூறு | ஔவையார் | 175 |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | | 182 |
| | | இலக்கணம் | பா.இயற்றப் பழகலாம் | | 185 |
| 5 | நாகரிகம், தொழில், வணிகம் | உரைநடை | மதராசப்பட்டினம் | | 199 |
| | **நாடென்ப நாட்டின் தலை** | செய்யுள் | தெய்வமணிமாலை | இராமலிங்க அடிகள் | 208 |
| | | | தேவாரம் | திருஞானசம்பந்தர் | 215 |
| | | | அகநானூறு | அம்மூவனார் | 220 |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | தோப்பில் முகமது மீரான் | 229 |
| | | இலக்கணம் | படிமம் | | 232 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | கலை, அழகியல், புதுமைகள் | உரைநடை | திரைமொழி | | 242 |
| | சிறுகை அளாவிய கூழ் | செய்யுள் | கவிதைகள் | நகுலன் | 249 |
| | | | சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் | 254 |
| | | | மெய்ப்பாட்டியல் | தொல்காப்பியர் | 266 |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | பாலசந்திரன் சுள்ளிக்காடு | 271 |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | | 273 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | திருவள்ளுவர் | 287 |
| 7 | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | வெ.இறையன்பு இ.ஆ.ப | 301 |
| | | செய்யுள் | அதிசயமலர் | தமிழ்நதி | 309 |
| | | | தேயிலைத் தோட்டப் பாட்டு | முகம்மது இராவுத்தர் | 315 |
| | அருமை உடைய செயல் | | புறநானூறு | பிசிராந்தையார் | 322 |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | ஐராவதம் மகாதேவன் | 328 |
| | | இலக்கணம் | தொன்மம் | | 329 |
| 8 | மனிதம், ஆளுமை | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | | 339 |
| | எல்லா உயிரும் தொழும் | செய்யுள் | முகம் | சுகந்தி சுப்பிரமணியன் | 344 |
| | | | இரட்சணிய யாத்திரிகம் | எச்.ஏ.கிருட்டிணனார் | 347 |
| | | | சிறுபாணாற்றுப்படை | நத்தத்தனார் | 355 |
| | | துணைப்பாடம் | கோடை மழை | சாந்தாதத் | 361 |
| | | இலக்கணம் | குறியீடு | | 363 |
| | | | | | |
| | | கவிதைகள் | | | 373 |
| | கூடுதல் மொழிப் பயிற்சிகள் | உவமைத் தொடரில் அமைத்து எழுதுக, மயங்கொலிச் சொற்கள், வல்லினமெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக. தொடர்ப் பிழைகளை நீக்குக. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க, பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக, பிறமொழிச்சொற்களைத் தமிழ்ப்படுத்துக, மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக, விடைக்கேற்ற வினா அமைக்க, நிறுத்தக்குறியிட்டு எழுதுக, தொகைச்சொற்கள், கலைச்சொற்கள் | | | 374 |
| | மாதிரி வினாத்தாள் | | | | 390 |

# மனப்பாடப்பகுதி

## இயல் : 1

1. **தன்னேர் இலாத தமிழ்**

**தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**– தண்டி**

பா: நேரிசை வெண்பா
பா விளக்கம்

- நான்கு அடிகளை உடையதாகவும் இரண்டாவது அடியில் தனிச்சொல் பெற்றும் வரும்.
- நான்கு அடிகளும் ஒரே வகையான எதுகையாகவோ அல்லது முதல் இரண்டு அடிகளும் ஒரு வகை எதுகையாகவும் அடுத்த இரண்டு அடிகளும் வேறு வகை எதுகையாகவும் பெற்றிருக்கும்.
- எனவே, இப்பாடல் **'நேரிசை வெண்பா'** ஆகும்.

## இயல் : 2

### நெடுநல்வாடை

2. வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

பா: நேரிசை ஆசிரியப்பா
பா விளக்கம்

- ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் பெற்று வந்துள்ளதால் இப்பாடல், **'நேரிசை ஆசிரியப்பா'** ஆகும்

## இயல் : 3

### கம்பராமாயணம்

**அயோத்தியா காண்டம் – குகப்படலம்**

3. "துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்" (1995)

**– கம்பர்**

பா: கலி விருத்தம்
பா விளக்கம் :

நான்கு சீர்கள் கொண்ட அளவடிகள் நான்கு பெற்று வருவது **'கலி விருத்தம்'** ஆகும்.

4. **யுத்த காண்டம் – வீடணன் அடைக்கலப் படலம்**

"குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்
புகல் அருங் கானம் தந்து
புதல்வரால் பொலிந்தான் நுந்தை" *(6507)*

**– கம்பர்**

பா: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.
பா விளக்கம் :

- அடிதோறும் ஆறு சீர்களையும் பல ஈரசைச் சீர்களையும்பெற்றுவருவது **"அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்"** ஆகும்.
- அகவலோசையைப் பெற்று வரும்.

5. ### திருக்குறள்

**இல்வாழ்க்கை**

அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

### செய்நன்றி அறிதல்

அ) செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது

ஆ) நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று

இ) எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

### வெஃகாமை

அ) அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

### வெகுளாமை

அ) மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

ஆ) தன்னைத்தான் காக்கின் சினம்காக்க! காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

இ) சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்"
ஏமப் புணையைச் சுடும்.

### ஊழ்

அ) "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

**- திருவள்ளுவர்**

பா: குறள் வெண்பா

பா விளக்கம்

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று. முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாமடியில் மூன்று சீர்களும் பெற்று ஈரடியில் அமைந்துள்ளதால் 'குறள் வெண்பா' ஆகும்.

## இயல்: 4

### இதில் வெற்றி பெற

6. விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

**- சுரதா**

பா: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பா விளக்கம்:

- அடிதோறும் எட்டு சீர்களையும் பல ஈரசைச் சீர்களையும் பெற்று வந்துள்ளதால், இப்பாடல் 'எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகும்.
- அகவலோசையைப் பெற்று வரும்.

### புறநானூறு

7. அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,

வறுந்தலை உலகமும் அன்றே! அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே (206)

**- ஔவையார்**

பா: நேரிசை ஆசிரியப்பா

பா விளக்கம்:

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வந்துள்ளதால் இப்பாடல், **'நேரிசை ஆசிரியப்பா'** ஆகும்

## இயல்: 5

### தெய்வமணிமாலை

8. 'ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்

**- இராமலிங்க அடிகள்**

பா: பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

பா விளக்கம்:

அடிதோறும் பன்னிரண்டு சீர்களைப் பெற்று வந்துள்ளதால் இப்பாடல், **"பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்"** ஆகும்.

www.kalviexpress.in www.kalviexpress.in



# இயல்: 6

## சிலப்பதிகாரம்

### புகார்க் காண்டம் - அரங்கேற்று காதை

**9. இசைக்கருவிகள் ஒலித்தமுறை**

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை [95-142]

**- இளங்கோவடிகள்**

பா: ஆசிரியப்பா

பா விளக்கம்

- ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாக வந்துள்ளதால் இப்பாடல் ***'ஆசிரியப்பா'*** ஆகும்.
- அகவலோசை பெற்று வந்துள்ளது.

10. **திருக்குறள்**

### அறிவுடைமை

அ) அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்

ஆ) எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவ

இ) எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்

### சிற்றினம் சேராமை

அ) நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்

### வினைத்திட்டம்

அ) வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற

ஆ) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்

இ) உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து

### தூது

அ) கடன் அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை

### உட்பகை

ஆ) வாள்போல் பகைவரை அஞ்சற்க: அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு

### சூது

ஆ) பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்'

**- திருவள்ளுவர்**

பா: குறள் வெண்பா
பா விளக்கம்:

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதலடியில் நான்கு சீர்களும் இரண்டாமடியில் மூன்று சீர்களும் பெற்று ஈரடியில் அமைந்துள்ளதால் **'குறள் வெண்பா'** ஆகும்.

# இயல்: 7

### புறநானூறு

11. காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே,
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும் (184)

**- பிசிராந்தையார்**

பா: நேரிசை ஆசிரியப்பா
பா விளக்கம்:

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வந்துள்ளதால் இப்பாடல், **'நேரிசை ஆசிரியப்பா'** ஆகும்

# இயல்: 8

### இரட்சணிய யாத்திரிகம்

12. 'பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி

**- எச்.ஏ.கிருட்டிணனார்**

பா: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
பா விளக்கம்:

- அடிதோறும் ஆறு சீர்களையும் பல ஈரசைச் சீர்களையும் பெற்று வந்துள்ளதால், இப்பாடல் 'அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்' ஆகும்.
- அகவலோசை பெற்று வந்துள்ளது.

### சிறுபாணாற்றுப்படை

13. "எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலிவியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்."

**- நத்தத்தனார்**


பா: நேரிசை ஆசிரியப்பா
பா விளக்கம்:

ஈற்றயலடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நான்கு சீர்களாகவும் வந்துள்ளதால் இப்பாடல்,

**'நேரிசை ஆசிரியப்பா'** ஆகும்



www.kalviexpress.in www.kalviexpress.in


இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் – பிராம்மி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை, மாங்குளம், மதுரை.

மொழி

# உயிரினும் ஓம்பப்படும்

**இயல்: 1**

செய்யுள் : இளந்தமிழே!
உரைநடை : தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.க.நடராஜன்
செய்யுள் : தண்டியலங்காரம்
துணைப்பாடம் : பாரதியின் கடிதம்
இலக்கணம் : தமிழாய் எழுதுவோம்

கவிதைப்பேழை

## 1. செய்யுள் : இளந்தமிழே!

- சிற்பி பாலசுப்பிரமணியம்

### சொல்லும் பொருளும்

1. செம்பரிதி → சிவந்த நிறமுடைய சூரியன்
2. மலைமேடு → மலை உச்சி
3. நோக → வருந்த
4. விம்முதல் → தேம்பியழுதல் / மகிழ்வுறுதல் / நிறைதல்
5. இயம்பிடாயே → கூறுவாயே
6. மூண்டு வரும் → மிகுந்த ஆர்வமுடன் / தீவிரமாகத் தோன்றும்
7. முன்னம் → முற்காலம்
8. கொலு → உல்லாச வீற்றிருப்பு / அரச முன்னிலை
9. புதுக்குதல் → புதுப்பித்தல் / அலங்கரித்தல்

### நம்மை அளப்போம்

**I. பலவுள் தெரிக**

**புத்தகப் புறநிலை வினாக்கள்**

1. **'மீண்டுமந்த பழமைநலம் புதுக்கு தற்கு' கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்**
   க) பாண்டியர் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

**விடை: ஈ) க, ங இரண்டும் சரி**

**அகநிலை வினாக்கள்**

1. **1963– ல் வெளிவந்த சிற்பி.பாலசுப்பிரமணியத்தின் முதல் கவிதைத் தொகுப்பு ________.**
   அ) ஒளிப்பறவை ஆ) நிலவுப்பூ
   இ) ஒரு கிராமத்து நதி ஈ) சூரிய நிழல் **விடை: ஆ) நிலவுப்பூ**

www.kalviexpress.in

**2. நம் பண்பாட்டின் நீட்சி ________.**
அ) கவிதை ஆ) காப்பியம் இ) இசை ஈ) தமிழ்மொழி
**விடை: ஈ) தமிழ்மொழி**

**3. செந்நிறத்துப் பூக்காடு ________.**
அ) வானம் ஆ) பரிதி இ) கைகள் ஈ) தலை
**விடை: அ) வானம்**

**4. கவிதை வெறிக்கு உணவாய் உள்ளது ________.**
அ) வியர்வை ஆ) செந்நிறம் இ) பூக்காடு ஈ) முத்தமிழ்
**விடை: ஈ) முத்தமிழ்**

**5. தமிழ்மொழி கொலுவிருந்தது ________ சங்கத்தில்**
அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) முதல்
**விடை: இ) பாண்டியர்**

**6. தமிழன்னை ஈன்று தந்தது ________.**
அ) பாண்டியர்களை ஆ) குயில்களை
இ) வள்ளல்களை ஈ) பொதிகையை
**விடை: இ) வள்ளல்களை**

**7. கூவி வா, வா! குயிலே! என்று சிற்பி பாலசுப்பிரமணியம் அழைப்பது ________.**
அ) தமிழை ஆ) பரிதியை இ) கைகளை ஈ) வள்ளல்களை
**விடை: அ) தமிழை**

**8. பொதிகைத் தென்தமிழே! சீறி வா, வா! என்று அழைப்பவர் ________.**
அ) தி.சு. நடராசன் ஆ) பாண்டியர்
இ) சிற்பி.பாலசுப்பிரமணியம் ஈ) பாரதி
**விடை: இ) சிற்பி பாலசுப்பிரமணியம்**

**9. தம் கைகள் சிவந்து நோக வியர்வை சிந்தி உழைப்பவர்கள் ________.**
அ) பாண்டியர்கள் ஆ) வள்ளல்கள்
இ) புலவர்கள் ஈ) தொழிலாளர்கள்
**விடை: ஈ) தொழிலாளர்கள்**

**10. மலைமேட்டில் தலையைச் சாய்ப்பவன் ________.**
அ) செம்பரிதி ஆ) செந்நிறப்பூக்காடு இ) தொழிலாளர் ஈ) சிங்கம்
**விடை: இ) செம்பரிதி**

**11. சிற்பி.பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய பல்கலைக்கழகம் ________.**
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) மனோன்மணீயம் ஈ) அன்னை தெரசா
**விடை: ஆ) பாரதியார்**

**12. இரு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் ________.**
அ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஆ) தி.சு.நடராசன்
இ) ரா.அ. பத்மநாபன் ஈ) பரலி.சு.நெல்லையப்பர்
**விடை: அ) சிற்பி பாலசுப்பிரமணியம்**

**13. சாகித்திய அகாதெமி விருது பெற்ற சிற்பி பாலசுப்பிரமணியத்தின் கவிதை நூல் ________.**
அ) நிலவுப்பூ ஆ) ஒரு கிராமத்து நதி இ) ஒளிப்பறவை ஈ) சர்ப்பயாகம்
**விடை: ஆ) ஒரு கிராமத்து நதி**

14. நிலவுப்பூ, ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர் ________.

அ) பாரதியார் ஆ) தி.சு.நடராசன்

இ) பரலி.சு.நெல்லையப்பர் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

**விடை: ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்**

15. இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்டவை சிற்பி பாலசுப்பிரமணியத்தின்___.

அ) கவிதை நூல்கள் ஆ) உரைநடை நூல்கள்

இ) மொழிபெயர்ப்பு நூல்கள் ஈ) புதினங்கள்

**விடை: ஆ) உரைநடை நூல்கள்**

16. ________ இருந்து கவிதைகளையும் புதினங்களையும் சிற்பி.பாலசுப்பிரமணியம் மொழிபெயர்த்துள்ளார்

அ) மலையாளத்தில் ஆ) கன்னடத்தில் இ) மராத்தியில் ஈ) ஆங்கிலத்தில்

**விடை: அ) மலையாளத்தில்**

17. சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராக இருப்பவர் ________

அ) தி.சு.நடராசன் ஆ) பரசு.சு.நெல்லையப்பர்

இ) ரா.அ.பத்மநாபன் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியன்

**விடை: ஈ) சிற்பி பாலசுப்பிரமணியன்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

**தமிழின் துணை :**

➢ உடல் வருந்த தினமும் உழைப்பதால், சிவந்த கைகளை உடைய தொழிலாளரின் தோள் மீது காணப்படும் வெள்ளம் போன்ற உழைப்பின் வியர்வையை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி.

### அகநிலை வினாக்கள்

1. **கவிஞர் சிற்பி எங்கு, எப்போது பிறந்தார்?**

**கவிஞர் சிற்பி :**

**பிறப்பு** : கோவை மாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சியில் ஜூலை 29, 1936–ல் பொ. பாலசுப்பிரமணியம் பிறந்தார்.

**பெற்றோர்** : கி.பொன்னுசாமி, கண்டியம்மாள் ஆவர்.

2. **கவிஞர் சிற்பியின் பன்முகத் திறமைகள் யாவை?**

**பன்முகத் திறமை :**

➢ கவிஞர் ➢ பேராசிரியர் ➢ மொழிபெயர்ப்பாளர்

➢ இதழாசிரியர் ➢ எழுத்தாளர் ➢ சாகித்திய அகாதெமி ஒருங்கிணைப்பாளர்

3. **கவிஞர் சிற்பியின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழிகள் யாவை?**

**மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள் :**

➢ ஆங்கிலம் ➢ கன்னடம் ➢ மலையாளம்

➢ மராத்தி ➢ இந்தி

4. **கவிஞர் சிற்பி எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்?**
**சாகித்திய அகாதெமி விருது :**
- மொழிபெயர்ப்புக்காவும்
- 'ஒரு கிராமத்து' நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர் கவிஞர் சிற்பி.

5. **கவிஞர் சிற்பியின் கவிதை நூல்கள் யாவை?**
**கவிதை நூல்கள் :**
- நிலவுப்பூ (1963)
- சிரித்த முத்துகள் (1968)
- ஒளிப்பறவை (1971)
- சர்ப்பயாகம் (1976)
- மௌன மயக்கங்கள் (1982)
- புன்னகை பூக்கும் பூனைகள் (1982)
- சூரிய நிழல் (1990)
- ஆதிரை (1992)
- இறகு (1996)
- ஒரு கிராமத்து நதி (1998)
- பூஜ்யங்களின் சங்கிலி (1999)
- பாரதி கைதி எண் 253 (2001)

6. **கவிதை வெறிக்கு உணவாய் இருப்பது எது?**
**முத்தமிழ் :**
மிகுந்த ஆர்வமுடன் வெளிவரும் கவிதைக்கு, அவ்வுணர்வினை ஏற்கும் உணவாக இருப்பது இயல், இசை, நாடகமான முத்தமிழே ஆகும்.

7. **வானம் எவ்வாறு காட்சியளித்தது?**
**செந்நிற வானம் :**
- மேற்கு மலையில் சூரியன் மறைந்ததால் அதன் செந்நிறக் கதிர்கள் பரவி மேகங்கள் யாவும் செந்நிறமானது.
- அதனால், செந்நிறப் பூக்கள் நிறைந்த காடாக வானம் காட்சியளித்தது.

8. **தமிழைப் பற்றிய கவிஞர்களின் அவா யாது?**
**கவிஞர்களின் அவா :**
தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு தம் பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பது கவிஞர்களின் அவா ஆகும்.

9. **கடையெழு வள்ளல்கள் யாவர்?**
**கடையெழு வள்ளல்கள் :**
- பேகன்
- பாரி
- காரி
- ஆய்
- நள்ளி
- ஓரி
- அதியமான்

## II. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்!–தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக**
**மாலைக்கால காட்சியின் நயம் :**
- மாலைப்பொழுதில் கதிரவன் தன் ஒளிமிகுந்த சிவந்த கதிர்களைச் சுருக்கிக் கொண்டு, மேற்கு தொடர்ச்சி மலை மீது சென்று மறையத் தொடங்குகிறது.
- அப்போது, சூரியனின் செந்நிறக்கதிர்கள் வானம் முழுதும் பரவியதால் வெண்மேகங்கள் யாவும் செந்நிறமாகக் காணப்படுகிறது.
- அதனால் செந்நிறப்பூக்கள் நிறைந்த காடாக வானமெல்லாம் காட்சியளிக்கிறது.

 – என்று கவிஞர் சிற்பி மாலைக்காலக் காட்சியை நயமாக விளக்கியுள்ளார்.

## அகநிலை வினாக்கள்

**1. உன்னையல்லால் ஏற்ற துணை வேறுண்டோ?
இயம்பிடாயே செந்தமிழே! என்று கவிஞர் சிற்பி ஏன் கூறுகிறார்?**

**ஏற்ற துணை செந்தமிழே! :**

**செந்நிறப்பூக்காடு :**

- மேற்கு மலையில் சூரியன் மறைந்ததால் அதன் செந்நிறக்கதிர்கள் வானமெல்லாம் பரவி, மேகங்கள் யாவும் செந்நிறமானது.
- அதனால், செந்நிறப்பூக்கள் நிறைந்த காடாக வானம் காட்சியளித்தது.

**வியர்வை வெள்ளம் :**

- செந்நிற வானத்தைப் போன்ற சிவந்த கைகளை உடைய, நாள்தோறும் தன் உடல் வருத்தி உழைக்கும் தொழிலாளரின் தோள் மீது காணப்படும் வெள்ளம் போன்ற உழைப்பின் வியர்வையை வியந்து பாட வேண்டும்

**தமிழின் துணை வேண்டும் :**

- உழைப்பின் உயர்வைப் போற்றிப் பாட, உள்ளத்து உணர்வை எடுத்துக் கூற செந்தமிழே! உன்னையல்லால் ஏற்ற துணை வேறில்லை என்கிறார் கவிஞர் சிற்பி.

---

**2. முன்னம் ஒரு நாள் தமிழ்மொழி எவ்வாறு பழமை நலம் பெற்றிருந்ததாகக் கவிஞர் சிற்பி பாடுகிறார்?**

**பாண்டியரின் சங்கத்தில் கொலு :**

- முற்காலத்தில் முதல், இடைச்சங்கங்கள் கடல்கோளால் அழிந்த போதிலும். மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டியரின் அவை முன்னிலையில் தமிழன்னை கொலுவாக வீற்றிருந்தாள்.
- அப்போது, பாண்டிய நாடெங்கும் தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளம் பெற்றுத் தழைத்தோங்கியது.

**கடையெழு வள்ளல்கள் :**

- தமிழன்னை ஈன்று தந்த பாரி முதலான கடையெழு வள்ளல்கள், தமிழ்ப்புலவர்களைப் பெரிதும் ஆதரித்தனர்.
- எனவே தான், கடையெழு வள்ளல்களின் கொடை, வீரம், கல்வி, புகழ் போன்ற தன்மைகளைப் போற்றிப் பாடிய சங்கப்பாடல்கள் நிறைவாகக் காணப்படுகின்றன.
- இவ்வாறு கடையெழு வள்ளல்களின் காலத்தில், தமிழ் நாடெங்கும் தமிழ்மொழி ஆட்சி செலுத்தியிருந்தது.

**பழமை நலம் :**

- இத்தகைய தொன்மையும் அழியாத்தன்மையும் தனிச்சிறப்புகளுமான பழமை நலம் பெற்றிருந்ததாகக் கவிஞர் சிற்பி தமிழன்னையைப் போற்றிப் பாடுகிறார்.

---

**3. தமிழன்னை தம் பழமைநலம் புதுக்குதற்கு எவ்வாறெல்லாம் வரவேண்டும் என்று கவிஞர் சிற்பி அழைக்கிறார்?**

**பழமை நலம்**

- தமிழ்ச்சங்கங்கள் அமைத்து, பாண்டியர்கள் தமிழை வளர்த்தனர்.
- பாரி முதலான கடையெழு வள்ளல்கள் காலத்தில் தமிழ்நாடெங்கும் தமிழ்மொழி பரவியிருந்தது.

**தமிழ்க்குயிலே! கூவி வா!**

- இத்தகைய பழமைநலமிக்க தமிழ்மொழி காலத்திற்கேற்ப புதிய புதிய இலக்கியங்களைப் பெற்று, மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு மறுபடியும் ஒரு வசந்த காலம் தோன்றிட தமிழ்க்குயிலாகக் கூவி வா என்று அழைக்கிறார் கவிஞர்.

**சிங்கம் போலச் சீறி வா!**

- மக்களிடம் காணப்பட்ட பிறமொழிக்கலப்பு மற்றும் ஆர்வமின்மையால் கூண்டுக்குள் அடைப்பட்டிருந்தது தமிழ்மொழி.
- அதைத் தமது புதுப்புது இலக்கிய வளர்ச்சிகள் மூலம் உடைத்தெறிந்து விட்டு, குளிர்ந்த தென்றல் வீசும் பொதிகை மலையில் தோன்றிய தென்தமிழானது சிங்கம் போல விரைவாகப் பாய்ந்து வா என்று அழைக்கிறார் கவிஞர்.

## III. நெடு வினா

### பாடநூல் வினாக்கள்

**1. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.**

**முன்னுரை :**

- **'இளந்தமிழே!'** என்ற கவிதை 1963—ல் வெளிவந்த கவிஞர் சிற்பி.பாலசுப்பிரமணியத்தின் முதல் கவிதைத் தொகுப்பான 'நிலவுப்பூ' என்ற கவிதை நூலில் இடம்பெற்றுள்ளது. கவிபாட ஏற்ற துணையாகத் தமிழைக் கருதும் கவிஞரின் கருத்துகளைக் காண்போம்.

**செந்நிறப் பூக்காடு :**

- மேற்கு மலையில் சூரியன் மறைந்ததால் அதன் செந்நிறக்கதிர்கள் வானமெல்லாம் பரவி, மேகங்கள் யாவும் செந்நிறமானது.
- அதனால், செந்நிறப்பூக்கள் நிறைந்த காடாக வானம் காட்சியளித்தது.

**முத்துமுத்தாக வியர்வை வெள்ளம் :**

- செந்நிற வானத்தைப் போன்ற சிவந்த கைகளை உடைய, நாள்தோறும் தன் உடல் வருத்தி உழைக்கும் தொழிலாளரின் தோள் மீது காணப்படும் வெள்ளம் போன்ற உழைப்பின் வியர்வையை வியந்து பாட வேண்டும்

**தமிழின் துணை வேண்டும் :**

- உழைப்பின் உயர்வைப் போற்றிப் பாட, உள்ளத்து உணர்வை எடுத்துக் கூற செந்தமிழே! உன்னையல்லால் ஏற்ற துணை வேறில்லை என்கிறார் கவிஞர் சிற்பி.

**கவிதைக்குணவு – முத்தமிழே! :**

- மிகுந்த ஆர்வமுடன் தம் உள்ளத்தே பொங்கி வரும் கவிதையின் கருத்தை வெளிப்படுத்தத் தமிழ்மொழியே உதவுகிறது.

**பாண்டியரின் சங்கத்தில் கொலு :**

- முற்காலத்தில் முதல், இடைச்சங்கங்கள் கடல்கோளால் அழிந்த போதிலும். மூன்றாம் தமிழ்ச்சங்கம் அமைத்த பாண்டியரின் அவை முன்னிலையில் தமிழன்னை, கொலுவாக வீற்றிருந்தாள்.
- அப்போது, பாண்டிய நாடெங்கும் தமிழ்மொழி இலக்கிய இலக்கண வளம் பெற்றுத் தழைத்தோங்கியது.

**தமிழன்னை ஈன்ற கடையெழு வள்ளல்கள் :**

- தமிழன்னை ஈன்று தந்த பாரி முதலான கடையெழு வள்ளல்களும் தமிழ்ப்புலவர்களைப் பெரிதும் ஆதரித்தனர்.
- எனவே தான், கடையெழு வள்ளல்களின் கொடை, வீரம், கல்வி, புகழ் போன்ற தன்மைகளைப் போற்றிப் பாடிய சங்கப்பாடல்கள் நிறைவாகக் காணப்படுகின்றன.
- இவ்வாறு கடையெழு வள்ளல்களின் காலத்தில், தமிழ் நாடெங்கும் தமிழ்மொழி ஆட்சி செலுத்தியிருந்தது.

**தமிழ்க்குயிலே! கூவி வா!**

- இத்தகைய பழமைநலமிக்க தமிழ்மொழி காலத்திற்கேற்ப புதிய புதிய இலக்கியங்களைப் பெற்று, மீண்டும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு மறுபடியும் ஒரு வசந்த காலம் தோன்றிட தமிழ்க்குயிலாகக் கூவி வா என்று அழைக்கிறார் கவிஞர்.

**சிங்கம் போலச் சீறி வா!**

- மக்களிடம் காணப்பட்ட பிறமொழிக்கலப்பு மற்றும் ஆர்வமின்மையால் கூண்டுக்குள் அடைப்பட்டிருந்தது தமிழ்மொழி.
- அதைத் தமது புதுப்புது இலக்கிய வளர்ச்சிகள் மூலம் உடைத்தெறிந்து விட்டு குளிர்ந்த தென்றல் வீசும் பொதிகை மலையில் தோன்றிய தென்தமிழானது சிங்கம் போல விரைவாகப் பாய்ந்து வா என்று அழைக்கிறார் கவிஞர்.

**முடிவுரை:**

- இத்தகைய தொன்மையும் தனிச்சிறப்புமிக்க தமிழ் தன்னைப் புதுப்பித்துக்கொண்டும் தம் பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொண்டும் மிளிர வேண்டும் என்று தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி. பாலசுப்பிரமணியம் கூறுகிறார்.

## V. இலக்கணக் குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. செம்பரிதி → பண்புத் தொகை
2. செந்தமிழ் → பண்புத் தொகை
3. செந்நிறம் → பண்புத் தொகை
4. முத்துமுத்தாய் → அடுக்குத் தொடர்
5. சிவந்து → வினையெச்சம்
6. வியர்வை வெள்ளம் → உருவகம்

### அகநிலை வினாக்கள்

1. விம்முகின்ற → பெயரெச்சம்
2. வியந்து → வினையெச்சம்
3. பாட → பெயரெச்சம்
4. இயம்பிடாயே → முன்னிலை ஒருமை வினைமுற்று
5. கொலுவிருந்தாய் → முன்னிலை ஒருமை வினைமுற்று
6. ஈன்று → வினையெச்சம்
7. தந்தாய் → முன்னிலை ஒருமை வினைமுற்று
8. தமிழ்க்குயில் → உருவகம்
9. வா வா → அடுக்குத் தொடர்
10. உடைத்தெழுந்த → பெயரெச்சம்
11. குளிர் பொதிகை → வினைத்தொகை
12. சீறி → வினையெச்சம்
13. கூவி → வினையெச்சம்
14. கவிதை வெறி → ஐந்தாம் வேற்றுமைத் தொகை

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **சாய்ப்பான்** → சாய் + ப் + ப் + ஆன்
சாய் → பகுதி
ப் → சந்தி
ப் → எதிர்கால இடைநிலை
ஆன் → படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

2) **விம்முகின்ற** → விம்மு + கின்று + அ
விம்மு → பகுதி
கின்று → நிகழ்கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

3) **வியந்து** → விய + த்(ந்) + த் + அ
விய → பகுதி
த் → சந்தி, த் –'ந்' – ஆனது விகாரம்
த் → இறந்தகால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

4) **இருந்தாய்** → இரு + த்(ந்) + த் + ஆய்
இரு → பகுதி
த் → சந்தி, த் – 'ந்' – ஆனது விகாரம்
த் → இறந்தகால இடைநிலை
ஆய் → முன்னிலை ஒருமை வினைமுற்று பகுதி

### அகநிலை வினாக்கள்

1) **பாட** → பாடு + அ
பாடு → பகுதி
அ → பெயரெச்ச விகுதி

2) **ஈன்று** → ஈன் + ற் + அ
ஈன் → பகுதி
ற் → இறந்தகால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

3) **தந்தாய்** → தா(த) + த்(ந்) + த் + ஆய்
தா → பகுதி, தா – 'த' – எனக் குறுகியது விகாரம்
த் → சந்தி, 'த' – 'ந்' – ஆனது விகாரம்
த் → இறந்த கால இடைநிலை
ஆய் → முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

4) **கூவி** → கூவு + இ
கூவு → பகுதி
இ → வினையெச்ச விகுதி

5) **உடைத்தெழுந்த** → உடைத்தெழு + த்(ந்) + த் + அ
உடைத்தெழு → பகுதி
த் → சந்தி, த் – 'ந்' – ஆனது விகாரம்
த் → இறந்தகால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

6) **சீறி** → சீறு + இ
சீறு → பகுதி
இ → வினையெச்ச விகுதி

## VII. புணர்ச்சி விதி தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **செம்பரிதி ⟶ செம்மை + பரிதி**

i) 'ஈறு போதல்'

⟶ என்ற விதிப்படி, 'மை' கெட்டது

= செம்மை + பரிதி

= செம்பரிதி

= என்று புணர்ந்தது

2) **வானமெல்லாம் ⟶ வானம் + எல்லாம்**

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி,

ம் + எ = 'மெ' ஆனது.

= வானமெல்லாம்

= என்று புணர்ந்தது

3) **உன்னையல்லால்** = உன்னை+ அல்லால்

i) 'இ ஈ ஐ வழி யவ்வும்'

⟶ என்ற விதிப்படி

'ய்' – உடம்படுமெய் தோன்றியது.

உன்னை + ய் + அல்லால்

= என்று புணர்ந்தது

ii) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி,

ய் + அ = 'ய' ஆனது

= உன்னையல்லால்

= என்று புணர்ந்தது

4) **செந்தமிழே** ⟶ செம்மை + தமிழே

i) 'ஈறுபோதல்'

⟶ என்ற விதிப்படி 'மை' கெட்டது

⟶ செம்மை + தமிழே

= செம் + தமிழே

ii) 'முன்னின்ற மெய் திரிதல்'

⟶ என்ற விதிப்படி

'ம்' – 'ந்' ⟶ ஆனது

செந்தமிழே என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

1) **செந்நிறம்** ⟶ செம்மை + நிறம்

i) 'ஈறுபோதல்'

⟶ என்ற விதிப்படி 'மை' கெட்டது

⟶ செம்மை

= செம் + நிறம்

ii) 'முன்னின்ற மெய் திரிதல்'

⟶ என்ற விதிப்படி

ம் ⟶ 'ந்' ஆனது

= செந்நிறம்

= என்று புணர்ந்தது

2) **தாமுழைக்கும்** ⟶ தாம் + உழைக்கும்

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி

ம் + உ = 'மு' ⟶ ஆனது

= தாமுழைக்கும்

= என்று புணர்ந்தது

**3) வீற்றிருக்கும்** → வீற்று + இருக்கும்

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

→ என்ற விதிப்படி 'உ' நீங்கியது

று = ற் + உ̸

= வீற்ற் + இருக்கும்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

→ என்ற விதிப்படி

ற் + இ = றி → ஆனது

= வீற்றிருக்கும்

= என்று புணர்ந்தது

**4) அவையெல்லாம்** → அவை + எல்லாம்

i) 'இ ஈ ஐ வழி யவ்வும்'

→ என்ற விதிப்படி '

ய்' – உடம்படு மெய் தோன்றியது

அவை + ய் + எல்லாம்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

→ என்ற விதிப்படி

ய் + எ = 'யெ' → ஆனது

= அவையெல்லாம்

= என்று புணர்ந்தது

**5) எம்மருமை** → எம் + அருமை

i) 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்'

→ என்ற விதிப்படி

'ம்' –ஒற்று இரட்டித்தது

→ எம் + ம் + அருமை

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

**6) வேறுண்டோ** → வேறு + உண்டோ

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

→ என்ற விதிப்படி

→ 'உ' – நீங்கியது

று = ற் + உ̸

→ வேற் + உண்டோ

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

→ என்ற விதிப்படி

ற் + உ = 'று' → ஆனது

= வேறுண்டோ

= என்று புணர்ந்தது

**7) வெறிக்குணவாய்** → வெறிக்கு + உணவாய்

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

→ என்ற விதிப்படி

கு = க் + உ̸

= 'உ' – நீங்கியது

வெறிக் + க் + உணவாய்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

→ என்ற விதிப்படி

க் + உ = 'கு'

= வெறிக்குணவாய்

= என்று புணர்ந்தது

**8) நீயுள்ளாய்** → நீ + உள்ளாய்

i) 'இ ஈ ஐ வழி யவ்வும்'

→ என்ற விதிப்படி

ய் – உடம்படு மெய் தோன்றியது

நீ + ய் + உள்ளாய்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

→ என்ற விதிப்படி

ய் + உ = 'யு' → ஆனது

= நீயுள்ளாய்

= என்று புணர்ந்தது

9) **கொலுவிருந்தாய்** ⟶ கொலு + இருந்தாய்

i) 'ஏனைய உயிர் வழி வவ்வும்'

⟶ என்ற விதிப்படி

வ் – உடம்படு மெய் தோன்றியது

கொலு + வ் + இருந்தாய்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி

வ் + இ = வி

= கொலுவிருந்தாய்

= என்று புணர்ந்தது

10) **கூண்டதனை** ⟶ கூண்டு + அதனை

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

⟶ என்ற விதிப்படி

டு = ட் + உ̸

'உ' – நீங்கியது

கூண்ட் + அதனை

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி

ட் + அ = 'ட' ஆனது

= கூண்டதனை

= என்று புணர்ந்தது

11) **உடைத்தெழுந்த** ⟶ உடைத்து + எழுந்த

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

⟶ என்ற விதிப்படி

'உ' – நீங்கியது

து = த் + உ̸

=உடைத்த + தெழுந்த

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி

த் + எ = 'தெ' ⟶ ஆனது

= உடைத்தெழுந்த

= என்று புணர்ந்தது

12) **தென்தமிழே** ⟶ தெற்கு + தமிழே

i) 'திசையொடு திசையும் பிறவும் சேரின் நிலையீற்று உயிர்மெய் கவ்வொற்று நீங்கலும்'

⟶ என்ற விதிப்படி

'கு' – நீங்கியது

= தெற்கு̸

= தெற் + தமிழே

ii) 'றகரம் னலவாத் திரிதலும் ஆம்பிற'

⟶ என்ற விதிப்படி

'ற்' – 'ன்' ⟶ ஆனது

= தென்தமிழே

= என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

1. **தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

கிருஷ்ணா : இரண்டு பேரும் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

தணிகாஸ்ரீ : நான் எனது புதிய தமிழ்ப்புத்தகத்தை எடுத்து வைத்துள்ளேன்

அருணகிரி : எனக்கு ஒரு சந்தேகம். கிருஷ்ணா!

| | | |
|---|---|---|
| கிருஷ்ணா | : | என்ன சந்தேகம்? |
| அருணகிரி | : | எல்லா வகுப்பு தமிழ்ப் புத்தகத்திலும் மொழி வாழ்த்துப் பாடல் முதலில் இடம் பெறுகின்றதே அது ஏன்? |
| கிருஷ்ணா | : | நல்ல ஐயம் தான்! சொல்கிறேன் கேள்!<br>நாம் எந்தவொரு செயலைச் செய்தாலும் அச்செயலில் வெற்றி பெற வேண்டுமென்று கடவுளை வணங்கி விட்டு தானே அச்செயலைத் தொடங்குவோம். |
| தணிகாஸ்ரீ | : | ஆம், சரியாகச் சொன்னாய் கிருஷ்ணா! |
| கிருஷ்ணா | : | எனவே தான், நம் மொழிப்பாடத்திலும் முதலில் இனிதே இச்செயல் நிறைவடைய வேண்டி அல்லது இறைவனை, மொழியை அல்லது நாட்டை வாழ்த்தி விட்டு தொடங்குகிறோம். |
| அருணகிரி | : | ம்ம். அதுதான் இறைவாழ்த்து, மொழிவாழ்த்து, நாட்டு வாழ்த்து என்று இருக்கின்றதோ! |

தணிகாஸ்ரீ, & அருணகிரி : நன்றி! கிருஷ்ணா

**உரைநடை உலகம்**

# 1. தமிழ்மொழியின் நடை அழகியல்

**- தி.சு. நடராசன்**

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் **விடை: இ) தொல்காப்பியம்**

**2. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு**

**கருத்து 2: தொடரமைப்பு. சங்கப்பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது**

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

**விடை: இ) இரண்டு கருத்தும் சரி**

**3.**

| | |
|---|---|
| அ) தமிழ் அழகியல் | 1) பரலி. சு. நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | 2) தி.சு. நடராசன் |
| இ) கிடை | 3) சிற்பி, பாலசுப்பிரமணியம் |
| ஈ) உய்யும் வழி | 4) கி. ராஜநாராயணன் |

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை: ஈ) 2,3,4,1**

## அகநிலை வினாக்கள்

1. 'தமிழ் அழகியல்' என்ற நூலை எழுதியவர் ________.
   அ) தி.சு. நடராசான் ஆ) கி. ராஜநாராயணன்
   இ) பாரதியார் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

   **விடை: அ) தி.சு.நடராசன்**

2. ________ கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு.நடராசன் குறிப்பிடத்தக்கவர்
   அ) கவிதை ஆ) நாடக
   இ) பண்பாட்டு ஈ) திறனாய்வு

   **விடை: ஈ) திறனாய்வு**

3. போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் ________ பணியாற்றியவர் தி.சு. நடராசன்
   அ) தமிழ்ப் பேராசிரியர் ஆ) ஆங்கிலப் பேராசிரியர்
   இ) தத்துவப் பேராசிரியர் ஈ) வரலாற்றுப் பேராசிரியர்

   **விடை: அ) தமிழ்ப் பேராசிரியர்**

4. மலரும் மணமும் போல கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது தமிழர்களின் ________.
   அ) கலையுணர்வு ஆ) கவிதையுணர்வு இ) பண்பாட்டுணர்வு ஈ) அழகுணர்வு

   **விடை: ஈ) அழகுணர்வு**

5. தீங்கவிகளைச் செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைப்பது ________.
   அ) கலையுணர்வு ஆ) பண்பாட்டுணர்வு
   இ) இலக்கிய உணர்வு ஈ) அழகியல் உணர்வு

   **விடை: ஈ) அழகியல் உணர்வு**

6. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகக் கருதும் நூல் ________.
   அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம்
   இ) தண்டியலங்காரம் ஈ) அணியிலக்கணம்

   **விடை: ஆ) தொல்காப்பியம்**

7. மொழி சார் கலை என்பது ________.
   அ) நடனம் ஆ) நாடகம் இ) இலக்கியம் ஈ) தத்துவம்

   **விடை: இ) இலக்கியம்**

8. இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டும் நூல் ________.
   அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
   இ) நடை அழகியல் ஈ) பண்பாட்டுக் கலை

   **விடை: அ) தொல்காப்பியம்**

9. எவை சரியானவை?
   க) சங்க இலக்கியம் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணை சார்ந்த செய்திகளையும் பாடற்பொருளாக வடிவமைத்துள்ளது
   உ) தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை, இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் 'லட்சியப்' பொருள்களோடு இரண்டற இணைந்து விடுகின்றது.
   அ) க – மட்டும் சரி ஆ) க, உ – இரண்டும் சரி
   இ) உ – மட்டும் சரி ஈ) க, உ – இரண்டும் தவறு

   **விடை: ஆ) க. உ – இரண்டும் சரி**

**10. தமிழ் அழகியலின் நெடும் பரப்பு ________.**

அ) கலை முழுமை ஆ) மொழி இ) கவிதை ஈ) ஒலிக்கோலங்கள்

**விடை: அ) கலை முழுமை**

**11. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வது ________.**

அ) கலை முழுமை ஆ) அழகியல் இ) ஒலிப்பின்னல் ஈ) இசை

**விடை: இ) ஒலிப்பின்னல்**

**12. சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் ________ பேசும் தன்மையைக் காட்டுகின்றன**

அ) விரைவாக ஆ) தெளிவாக இ) இயல்பாக ஈ) அறுதியிட்டு

**விடை: ஈ) அறுதியிட்டு**

**13. எவை தவறானவை?**

i) **உணர்வும் பொருளும் சொல்லில் தான் பொதிந்து கிடக்கின்றன**
ii) **ஒலிக்கோலம் சங்கப்பாடலில் முக்கியமான ஒரு பண்பு ஆகும்**
iii) **சொல்வளம் என்பது பலசூழல்களுக்கும் பல புனைவுகளுக்கும் பொருந்தி வராது**
iv) **சங்க இலக்கியத்தில் சொற்புலம் மலர்ந்தும் கனிந்தும் கிடக்கிறது**

அ) i & ii இரண்டும் ஆ) iv மட்டும் இ) iii & iv இரண்டும் ஈ) iii மட்டும்

**விடை: ஈ) iii மட்டும்**

**14. 'நீர்படு பசுங்கலம்' – என்பது**

அ) தொடர் மொழி ஆ) தனி மொழி இ) தொகைமொழி ஈ) பொது மொழி

**விடை: இ) தொகை மொழி**

**15. 'தொகை மொழி' பற்றித் தொல்காப்பியத்தின் இயல் ________ பேசுகிறது**

அ) எச்சவியல் ஆ) புணரியல் இ) எழுத்தியல் ஈ) உருபனியல்

**விடை: அ) எச்சவியல்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்தைக் குறிப்பிடுக**

**நடை அழகியல்**

- மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.
- கவிதையின் இயங்காற்றல் தான் நடை.

**2.** *'படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்*
*கடாஅ யானைக் கலிமான் பேக'*

இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

**ஓசைநயமிக்க சொற்கள் :**

- படாஅம்
- கெடாஅ
- கடாஅ

**இலக்கணக் குறிப்புகள் :**

➢ படாஅம்
➢ கெடாஅ
➢ கடாஅ

– இம்மூன்றும் இசைநிறை அளபெடை / செய்யுளிசை அளபெடை ஆகும்.

## அகநிலை வினாக்கள்

**1. பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது எது?**

**கவிஞர்களுக்கு இயல்பாக அமைந்தது:**

➢ கவிதையின் பொருளை அமைக்கும் விதத்திலும்

➢ உணர்ச்சியை எடுத்துக்காட்டும் விதத்திலும்

➢ கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.

---

**2. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது எது?**

**தளம் அமைத்துத் தருவது :**

➢ அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது தொல்காப்பியமே.

➢ ஏனெனில், இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணம் தொல்காப்பியமே ஆகும்.

---

**3. கவிதைக்கலையின் வேறுபாடு யாது?**

**அழகியல் :**

➢ ஏனைய கலைகளிலிருந்து கவிதைக்கலையை வேறுபடுத்துகின்ற அதன் முதன்மையான, தனிச்சிறப்பான பண்பே அழகியல் ஆகும்.

➢ இது கிரேக்கம், வடமொழி முதலிய பிற மொழிகளை விட, தமிழ் மொழிக்கே உரித்தான தனிச்சிறப்பாகும்.

---

**4. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை யாவை?**

**கலையியல் வழக்குகளாக மாற்றுபவை :**

➢ உவமம் ➢ உருவகம் ➢ எச்சம் ➢ குறிப்ப ➢ உள்ளுறை ➢ இறைச்சி

---

**5. மொழி சார்ந்த கலை என்றால் என்ன?**

**இலக்கியம் :**

➢ மொழி சார்ந்த கலை என்பது ‘இலக்கியம்’ ஆகும்.

➢ மொழியின் தனித்துவமான பண்புகள் இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்து விடுகிறது.

➢ இதை ‘**கவிதைத்தனம்**’ அல்லது ‘**இலக்கியத்தனம்**’ என்பர்

➢ இதனால் மொழி சார்ந்த பொருளை, ‘**மொழி சார்ந்த கலை**’ என்கிறோம்.

---

**6. இலக்கியத்தின் பயன் பற்றித் தொல்காப்பியம் சுட்டிக்காட்டுவது யாது?**

**பயன் :**

➢ ஓர் இலக்கியத்தின் உருவாக்கத்தில் அறம், பொருள், இன்பமோ அல்லது வேறு ஏதாவது ஒரு உயர்ந்த குறிக்கோளோ இடம் பெறல் வேண்டும்.

**தொல்காப்பியம் சுட்டுவது:**

- இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டியுள்ளது.
- இதையே '**கலை முழுமை**' என்கிறோம்.

**7. கவிதையின் நடையியல் கூறுகளில் முக்கியமானவை யாவை?**

**நடையியல் கூறுகள் :**

- பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிகவும் முக்கியமானவை ஆகும்.

**8. ஒலிப்பின்னல் என்றால் என்ன?**

**ஒலிப்பின்னல் :**

- இசையோடும் இசைக்கருவியோடும் தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை 'ஒலிப்பின்னல்' என்கிறோம்.

**9. சொல்வளம் என்பது யாது?**

**சொல்வளம் :**

- சொல் வளம் என்பது, தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.
- ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் (அணைந்த கை நழுவிவிடாமல் தழுவிக்) கிடப்பதையும் குறிக்கும்.

**10. தமிழில் சில தொகை மொழிகளை எடுத்தெழுதுக**

**தொகை மொழிகள் :-**

வைகுறு விடியல், கன்னி விடியல், புல்லென் மாலை, நள்ளென் யாமம். காமர் வனப்பு, மாண்கவின், காண்டகு வனப்பு, கவினுறு வனப்பு, தீநீர், நெடுநீர், சின்னீர், பனிநீர், ஒலிவெள்ளருவி, பறைக்குரல் எழிலி, பொய்படு சொல், நகைக்கூட்டம், ஓவச் செய்தி.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் – விளக்குக**

**ஒலிப்பின்னல்:**

- இசையோடும் இசைக்கருவியோடும் தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை 'ஒலிப்பின்னல்' என்கிறோம்.

**எ.கா:**

*"கடந்தடு தானை மூவிருங்கூடி*
*உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே"*

என்ற புறநானூற்றுப் பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள் பிற மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருகின்றன.

- இதன் மூலம் ஒலிக்கோலத்தின் வலிமையை நாம் அறியலாம்.

**சிறு சிறு வாக்கியங்கள் :**

- சிறு சிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றன.

**ஒலிக்கோலத்தின் தன்மைகள்:**

- பாடல்களில் நெடில் ஒலிகளின் வருகையும்,
- சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மையைப் பெற்றிருப்பதும்,
- சொல்விளையாட்டுகள் நிகழ்த்த ஏதுவாக இருத்தலும் ஒலிக்கோலத்தின் தன்மைகள் ஆகும்.
- இவ்வாறே, ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பாக விளங்குகிறது.

## அகநிலை வினாக்கள்

**1. மொழி சார் கலை – இலக்கியம் என்பதை தி.சு.நடராசன் வழி விளக்குக**

**தளம் அமைத்து தருவது :**

- அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது தொல்காப்பியமே.
- ஏனெனில், இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப் பேசுகின்ற இலக்கணம் தொல்காப்பியமே ஆகும்.

**அழகியல் :**

- ஏனைய கலைகளிலிருந்து கவிதைக்கலையே வேறுபடுத்துகின்ற அதன் முதன்மையான, தனிச்சிறப்பான பண்பே அழகியல் ஆகும்.
- இது கிரேக்கம், வடமொழி முதலிய பிற மொழிகளை விட, தமிழ் மொழிக்கே உரித்தான தனிச்சிறப்பாகும்.

**மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை:**

- உவமம்
- உருவகம்
- எச்சம்
- குறிப்பு
- உள்ளுறை
- இறைச்சி

**மொழிசார் கலை :**

- மொழி சார்ந்த கலை என்பது இலக்கியம் ஆகும்.
- மொழியின் தனித்துவமான பண்புகள் இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்து விடுகிறது.
- இதை '**கவிதைத்தனம்**' அல்லது '**இலக்கியத்தனம்**' என்பர்
- இதனால் மொழி சார்ந்த பொருளை, **'மொழி சார்ந்த கலை'** என்கிறோம்.

**2. சங்க இலக்கியத்தில் சொற்புலம் மலர்ந்தும் கனிந்தும் கிடக்கிறது – விளக்குக**

**சொல் :**

- சொல்லில் தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.

**சொல் வளம் :**

- சொல் வளம் என்பது, ஒரு பொருள் குறித்து வரும் பல சொல்லாகவும் பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லாகவும் வரும்.
- பல துறைகளுக்கும் பல சூழல்களுக்கும் பல புனைவுகளுக்கும் உரியதாகவும் வரும்.
- உணர்வும் தெளிவும் கொண்டதாகவும் வரும்.

**சங்க இலக்கிய சான்று :**

- முல்லைக் கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பக் கிடக்கின்றன.

**பண்பாட்டு அடையாளம் :**

- இவ்வாறாக, சொல்வளம் ஒரு பண்பாட்டு அடையாளமாகவும் விளங்குகிறது.
- சங்க இலக்கியத்தில் சொற்புலம் மலர்ந்தும் கனிந்தும் கிடக்கிறது.

**3. தி.சு.நடராசன் பற்றிக் குறிப்பெழுதுக**

**தி.சு.நடரசான் :**

- திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.ச,நடராசன் குறிப்பிடத்தக்கவர். திறனாய்வாளராகப் பரவலாக அறியப்படும் இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

## IV. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக் காட்டி விளக்குக.**

**முன்னுரை :**

- தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.
- கவிதையானது கருத்தியல் நிலையிலும் வடிவமைப்பு நிலையிலும் அழகியல் பெறுகிறது.

**அழகியல் :**

- உண்மையும் உணர்வையும் அறிவுப்புலனையும் அழகியல் இலக்கியமாக ஆக்குகிறது.
- தமிழில் அழகியலின் வழித்தடங்கள் ஆழமாகப் பதிந்துள்ளன.

**மொழி சார் கலை :**

- மொழி சார்ந்த கலை என்பது இலக்கியம் ஆகும்.
- மொழியின் தனித்துவமான பண்புகள் இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்து விடுகிறது.
- இதை '**கவிதைத்தனம்**' அல்லது '**இலக்கியத்தனம்**' என்பர்

**கலை முழுமை :**

- இலக்கியத்தின நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்து நிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டியுள்ளது.

**நடையியல் :**

- மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.
- கவிதையின் இயங்காற்றல் தான் நடை.

**ஒலிப் பின்னல்:**

- இசையோடும் இசைக்கருவியோடும் தான் மொழி சார்ந்த கவிதை பிறக்கிறது.
- ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்வதை 'ஒலிப்பின்னல்' என்கிறோம்.

**சொற்புலம் :**

- சொல் வளம் என்பது, தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.
- ஒன்றற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் (அணைந்த கை நழுவிவிடாமல் தழுவிக்) கிடப்பதையும் குறிக்கும்.

**தொடரியல் :**

- சொல்லுபவனுடைய மொழித்திறனை, கேட்போன் அல்லது வாசிப்போன் பெற வேண்டும்.
- பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் நேர் நடந்தும் ஏறியிறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்கும்.

**முடிவுரை :**

சங்க இலக்கியம், சமூக – பண்பாட்டுத் தளத்தில் குறிப்பிட்ட சில பண்புகளையும் போக்குகளையும் தனக்கெனச் சொந்த மரபுகளாக வைத்திருக்கின்றன.

இவையே கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள் ஆகும்.

## கற்பவை கற்றபின்

1. **தமிழின் சொல் வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை / மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக:**

**ஆண் யானையின் பெயர்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ➢ வேழம் | ➢ களிறு | ➢ களபம் | ➢ மாதங்கம் | ➢ கைம்மா | ➢ உம்பர் |
| ➢ உம்பல் | ➢ அஞ்சனாவதி | ➢ அரசவா | ➢ அல்லியன் | ➢ அறுபடை | ➢ ஆம்பல் |
| ➢ ஆனை | ➢ இபம் | ➢ இரதி | ➢ குஞ்சரம் | ➢ இருள் | ➢ தும்பு |
| ➢ வல்விலங்கு | ➢ தூங்கல் | ➢ தோல் | ➢ கறையடி | ➢ எறும்பி | ➢ பெருமா |
| ➢ வாரணம் | ➢ பூட்கை | ➢ ஒருத்தல் | ➢ ஓங்கல் | ➢ நாக | ➢ பொங்கடி |
| ➢ கும்பி | ➢ தும்பி | ➢ நால்வாய் | ➢ கரேணு | ➢ உவா | ➢ கரி |
| ➢ கள்வன் | ➢ கயம் | ➢ சிந்துரம் | ➢ வயமா | ➢ புகர்முகம் | ➢ தந்தி |
| ➢ மதாவளம் | ➢ தந்தாவளம் | ➢ கைம்மலை | ➢ வழுவை | ➢ மந்தமா | ➢ மருண்மா |
| ➢ மதகயம் | ➢ போதகம் | ➢ விரமலி | ➢ மதோற்கடம் | ➢ கடகம் | |

**பெண் யானையின் பெயர்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| ➢ பிடி | ➢ அதவை | ➢ வடவை | ➢ கரிணி | ➢ அத்தினி |

**மலரின் பெயர்கள்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ➢ அரும்பு | ➢ நனை | ➢ முகை | ➢ மொக்குள் | ➢ போது | |
| ➢ முகிழ் | ➢ மலர் | ➢ அலர் | ➢ பொதும்பர் | ➢ வீ | ➢ பொம்மல் |
| ➢ செம்மல் | ➢ நறுவீ | | | | |

### கவிதைப்பேழை

# 1. செய்யுள் : தன்னேர் இலாத தமிழ்

**- தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்**

**- தண்டி**

## சொல்லும் பொருளும்

1. ஓங்கல் → உயர்ந்த மலை
2. உயர்ந்தோர் → சான்றோர்
3. தொழ விளங்கி → வணங்கத்தக்க
4. ஏங்கொலி → கடலொலி
5. ஞாலம் → உலகம்
6. இருளகற்றும் → புறஇருளை / அகஇருளை அகற்றும்
7. ஆங்கவற்றுள் → இரண்டனுள்
8. வெங்கதிர் → குளிர்ந்த கதிர்களை உடைய கதிரவன்
9. ஏனையது → மற்றது / இன்னொன்று
10. தன்னேர் → தனக்கு நிகர்
11. மின்னேர் → ஒளிர்கின்ற
12. ஆழி → சக்கரம்/வட்டம்

www.kalviexpress.in

# நம்மை அளப்போம்

## I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. ***'மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது***
***தன்னேர் இலாத தமிழ்!'*** **– இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்**

அ) அடி மோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர் எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர் எதுகை, அடிமோனை

**விடை: இ) அடிஎதுகை, சீர்மோனை**

### அகநிலை வினாக்கள்

1. **அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று ________.**

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) தண்டியலங்காரம் ஈ) வீரசோழியம்

**விடை: இ) தண்டியலங்காரம்**

2. **'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி' – என்னும் பாடல் இடம் பெற்றுள்ள பகுதி**

அ) உவமையணியியல் ஆ) பொருளணியியல்
இ) சொல்லணியியல் ஈ) பொதுவியல்

**விடை: ஆ) பொருளணியியல்**

3. **தண்டி ஆசிரியரின் காலம் ________.**

அ) கி.பி. 11–ஆம் நூற்றாண்டு ஆ) கி.பி. 15–ஆம் நூற்றாண்டு
இ) கி.பி. 18–ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி. 12–ஆம் நூற்றாண்டு

**விடை: ஈ) கி.பி.12–ஆம் நூற்றாண்டு**

4. **தண்டியலங்காரம் ________ பெரும் பிரிவுகளை உடையது**

அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) பத்து

**விடை: அ) மூன்று**

5. **இலக்கணநூலார், உரையாசிரியர்கள் ஆகியோர் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்ற நூல் ________.**

அ) மாறனலங்காரம் ஆ) குவலயானந்தம்
இ) தண்டியலங்காரம் ஈ) தொன்னூல் விளக்கம்

**விடை: இ) தண்டியலங்காரம்**

6. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்களுள் ஒன்று ________.**

அ) குவலயானந்தம் ஆ) இலக்கண விளக்கம்
இ) தொன்னூல் விளக்கம் ஈ) முத்து வீரியம்

**விடை: அ) குவலயானந்தம்**

7. **வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமைமிக்கது ________.**

அ) உயிர் ஆ) தமிழ் இ) கலை ஈ) புகழ்

**விடை: ஆ) தமிழ்**

8. **'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி' – என்ற பாடலில் பயின்று வருவது**

அ) நேரிசை வெண்பா ஆ) நேரிசை ஆசிரியப்பா
இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா

**விடை: அ) நேரிசை வெண்பா**

www.kalviexpress.in

9. **'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி' – என்ற பாடலில் பயின்று வரும் அணி ________.**
அ) உருவக அணி ஆ) வேற்றுப்பொருள் வைப்பணி
இ) ஏகதேச உருவக அணி ஈ) பொருள் வேற்றுமை அணி
**விடை: ஈ) பொருள் வேற்றுமை அணி**

10. **தன்னேரில்லாதது ________.**
அ) சூரியன் ஆ) சான்றோர்கள் இ) தமிழ் ஈ) ஞாலம்
**விடை: இ) தமிழ்**

11. **புறஇருளை அகற்றுவது ________ அகஇருளை அகற்றுவது ________.**
அ) நூல், மின்விளக்கு ஆ) சூரியன், தமிழ் இ) சூரியன், ஞாலம் ஈ) நீர், ஒழுக்கம்
**விடை: ஆ) சூரியன், தமிழ்**

12. **விண்ணில் கோலங்கொண்டு வலம் வருவது ________.**
அ) நட்சத்திரம் ஆ) நாள்மீன் இ) விண் மீன் ஈ) கதிரவன்
**விடை: ஈ) கதிரவன்**

13. **ஏங்கொலி நீரால் சூழப்பட்டுள்ளது ________.**
அ) கதிரவன் ஆ) ஞாலம் இ) சான்றோர் ஈ) விண்
**விடை: ஆ) ஞாலம்**

14. **ஓங்கலிடையில் வந்து உதிப்பது ________.**
அ) விண்மின் ஆ) ஞாயிறு இ) திங்கள் ஈ) நிலவு
**விடை: ஆ) ஞாயிறு**

## II. குறுவினா

### அகநிலை வினாக்கள்

1. **தண்டியலங்காரம் – பற்றி எழுதுக**
**தண்டியலங்காரம்**
- தண்டியலங்காரம் நூலின் ஆசிரியர் தண்டி.
- காவ்யதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி, தமிழில் எழுதப்பட்டுள்ளது
- பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
- அணியிலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று தண்டியலங்காரம்.

2. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் சிறப்பான நூல்கள் யாவை?**
**அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்கள் :**
- தண்டியலங்காரம்
- மாறனலங்காரம்
- குவலயானந்தம்

3. **அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
**அணியிலக்கணத்தையும் கூறும் நூல்கள் :**
- தொல்காப்பியம்
- வீரசோழியம்
- இலக்கண விளக்கம்
- தொன்னூல் விளக்கம்
- முத்து வீரியம்

4. **பொருள் வேற்றுமை அணி என்றால் என்ன?**
**பொருள் வேற்றுமை அணி**
இரு வேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

## III. சிறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்சுட்டுதல் :**

- ஆசிரியர் தண்டி எழுதிய தண்டியலங்காரம் என்ற இலக்கண நூலில், நிகரற்ற ஆற்றல் கொண்ட கதிரவனுக்கு ஒப்பவும் அதற்கு மேலாகவும் தமிழைப் போற்றும் பாடலில் 'ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்' என்ற வரிகள் இடம்பெற்றுள்ளன.

**பொருள் :**

ஒலி எழுப்புகின்ற நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒளிர்கின்ற கதிரவன்.

**விளக்கம் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்

1. **பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| *பழையன கழிதலும் புதியன புகுதலும்*<br>*வழுவல கால வகையி னானே*<br>– நன்னூல் | *மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு*<br>*மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!*<br>– சிற்பி பாலசுப்பிரமணியம் |

**வேற்றுமை:**

- பழையவனாகிய வழக்கொழிந்து போனவற்றை எல்லாம் விட்டு விட்டு. காலத்திற்கேற்றாற் போன்று புதுப்பித்துக் கொண்டே வரும் சொற்களையும் இலக்கியங்களையும் ஏற்றுக் கொள்வது குற்றமல்ல என்கிறது நன்னூல்.
- முற்காலத்தில் தமிழ்நாடெங்கும் பரவியும் செழித் தோங்கியும் இருந்த தமிழ்மொழியின் அதே பழமைநலம் பெறுவதற்கு, தன்னைப் புதுப்பித்துக் கொண்டும் புதிய இலக்கியங்களை உருவாக்கிக் கொண்டும் மீண்டும் அந்த வசந்தகாலத்தைக் கூவி அழைக்க தமிழ்க்குயிலே வா என்று அழைக்கிறார் கவிஞர் சிற்பி.

**வேற்றுமை**

**நன்னூலார்** ⟶ பழையன கழிதல் குற்றமல்ல என்கிறார்.

**கவிஞர் சிற்பி** ⟶ மீண்டும் அந்த பழமைநலமே தற்போது வசந்தகாலமாய் தோன்ற வேண்டும் என்கிறார்.

### அகநிலை வினாக்கள்

1. **பொருள் வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**பொருள் வேற்றுமை அணி:**

**அணி இலக்கணம்**

இரு வேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

www.kalviexpress.in www.kalviexpress.in



எ.கா: –

*"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி*
*ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்*
*மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது*
*தன்னேர் இலாத தமிழ்"!*
*– தண்டி*

**பாடலின் பொருள் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**அணிப்பொருத்தம்:**

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று. இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

---

**2. கதிரவனுக்கு ஒப்பவும் அதற்கு மேலாகவும் தமிழைப் புலவர் போற்றுவது யாங்ஙனம்?**

**(அல்லது)**

**'*தன்னேர் இலாத தமிழ்*' – என்று கூறும் புலவரின் கருத்துகளை எடுத்தியம்புக?**

**ஓங்கலிடை வந்து உதித்தல்:**

- உயர்ந்த மலைகளுக்கு இடையில் சூரியன் தோன்றியது.
- உயர்ந்த பொதிகை மலைகளுக்கு இடையிலுள்ள பகுதியில் தமிழ்மொழி தோன்றியது

**உயர்ந்தோர் தொழ விளங்குதல்:**

- ஒப்பற்ற தன்மையுடைய கதிரவனை உயர்ந்தவர்கள் காலையில் வணங்குவர்.
- சான்றோர்கள் தம் வாழ்வில் உயர அறிவு வழங்கும் தமிழ் நூல்களை வணங்குகின்றனர்,

**ஏங்கொலிநீர் ஞாலம் இருளறுக்கும்:**

- கடலால் சூழப்பட்ட இவ்வுலகின் புற இருளை நீக்குவது சூரியன்.
- இவ்வுலக மக்களின் உள்ளத்திலுள்ள அறியாமை என்னும் அக இருளை நீக்குவது தமிழ்.

**தன்னேர் இலாத தமிழ்:**

- மலையில் தோன்றி உயர்ந்தவர் தொழுமாறு விளங்கி, இந்த உலகத்து இருளையெல்லாம் அகற்றுபவை இரண்டு
- அவற்றுள் ஒன்று கதிரவன்; மற்றொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்மொழி.

**பொருள் வேற்றுமை :**

- இவ்வாறு பல தன்மைகளில் கதிரவனோடு தமிழ் ஒற்றுமை பெற்றிருந்தாலும், தனக்கு நிகரில்லாதது என்ற பண்பில் தமிழ் வேறுபட்டு மேலோங்கி நிற்கிறது என்று புலவர் குறிப்பிடுகிறார்.



www.kalviexpress.in www.kalviexpress.in

## கற்பவை கற்றபின்

**1. வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

**அணி இலக்கணம்:**

➢ இரு பொருள்களுக்கிடையே உள்ள ஒப்புமையை முதலில் கூறிய பின்னர் அவற்றுக்கிடையே வேற்றுமை தோன்றக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

"கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே"

**எ.கா:**

"அனைத்து உலகும் சூழ்போய், அரும்பொருள் கைக்கொண்டு
இனைத்து அளவைத்து என்றற்கு அரிதாம் - பனிக்கடல்
மன்னவ! நின் சேனைபோல் மற்றுஅது நீர்வடிவிற்று
என்னும் இது ஒன்றே வேறு"

**பொருள்:**

மன்னவனே! கடலும் நின் சேனையும் ஒரே வகையான இயல்பு, தொழில்களை உடையவை. குளிர்ந்த கடல், உலகம் முழுவதையும் சூழ்ந்து, பல அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டு, இன்ன அளவு என்று அளப்பதற்கு அரிதாய் உள்ளது.

உன் சேனையும் பல நாடுகளையும் கைப்பற்றுவதற்கு உலகம் முழுவதையும் சூழ்ந்து, பகை நாட்டு பொருட்களையெல்லாம் கைக் கொண்டு இன்ன அளவு என்று அளப்பதற்கு அரியதாய் உள்ளது.

ஆனால் கடல், நீர் வடிவில் உள்ளது என்ற ஓர் இயல்பில் வேறுபடுகிறது.

**அணிப்பொருத்தம்:**

இப்பாடலில் சேனை, கடல் ஆகிய இரண்டனுக்குமுள்ள ஒற்றுமைகளைக் கூறிப் பின்பு, கடல் நீர் வடிவில் உள்ளது என்று வேறுபடுத்தப்பட்டதால் "வேற்றுமை அணி" பயின்று வந்துள்ளது.

---

**2. வேற்றுமை அணி:**

**எ.கா:**

"மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும் - மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ எல்லாம் படும்"

**பொருள்:**

மிக்க தேர்ப்படையை உடைய எம் அரசனுடைய காஞ்சி மாநகரும் பெரிய கடலும் தமக்குள்ளே ஒலியாலும் பெருமையாலும் ஒத்தவை. எனினும் காஞ்சி மாநகரில் உள்ளவை எல்லாம் கடலில் இல்லை. கடலில் இருப்பவை எல்லாம் காஞ்சி மாநகரில் உள்ளன.

**அணிப்பொருத்தம்:**

இப்பாடலில் ஒலியாலும் பெருமையாலும் காஞ்சிபுரமும் கடலும் ஒத்தவை என்று முதலில் ஒப்புமை கூறிவிட்டுப் பின்பு, கடலைவிடக் காஞ்சி மாநகர் உயர்ந்தது என வேறுபடுத்திக் கூறுவதால் "வேற்றுமை அணி" பயின்று வந்துள்ளது.

விரிவானம்

# 1. துணைப்பாடம் : தம்பி நெல்லையப்பருக்கு

- பாரதியார்

## பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

1. **காலத்தின் குரல்களாக, கடிதங்களில் வீறு பெறுவது ________.**
   அ) மொழி ஆ) கருத்து இ) கோபம் ஈ) சமூகநிலை
   **விடை: அ) மொழி**

2. **மொழிக்கு, கடித இலக்கியங்கள் வழியாகத் தனி அழகை உருவாக்கித் தருபவர்கள் ________.**
   அ) விடுதலை போராட்ட வீரர்கள் ஆ) தம்பிமார்கள்
   இ) எழுத்தாளர்கள் ஈ) ஆராய்ச்சியாளர்கள்
   **விடை: இ) எழுத்தாளர்கள்**

3. **'பாரதி கடிதங்கள்' என்னும் நூலைப் பதிப்பித்தவர் ________.**
   அ) பரலி.சு.நெல்லையப்பர் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்
   இ) ரா.அ. பத்மநாபன் ஈ) குத்தி கேசவர்
   **விடை: இ) ரா.அ.பத்மநாபன்**

4. **பாரதியின் கடிதங்கள் அனைத்தும் நம்மிடம் பேசுவது போல இருப்பதே அவருடைய ________ சிறப்பு**
   அ) தனி ஆ) நீங்காத இ) கவிதையின் ஈ) நடையழகின்
   **விடை: ஈ) நடையழகின்**

5. **'பாரதி கடிதங்கள்' – நூலில் இடம்பெற்றுள்ள முதல் கடிதம் ________ எழுதியது**
   அ) நெல்லையப்பருக்கு ஆ) எட்டயபுரம் அரசருக்கு
   இ) தம்பிமார்களுக்கு ஈ) தமிழுக்கு
   **விடை: ஆ) எட்டயபுரம் அரசருக்கு**

6. **பாரதி, தம் மறைவிற்கு முன்னர் எழுதிய கடிதம் ________ எழுதியது**
   அ) நெல்லையப்பருக்கு ஆ) எட்டயபுரம் அரசருக்கு
   இ) பத்மநாபனுக்கு ஈ) குத்தி கேசவருக்கு
   **விடை: ஈ) குத்தி கேசவருக்கு**

7. **எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி 'வம்சமணி தீபிகை' என்னும் நூலை எழுதியவர்**
   அ) பாரதியார் ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்
   இ) பத்மநாபன் ஈ) பரலி.சு.நெல்லையப்பர்
   **விடை: ஆ) கவிகேசரி சாமி தீட்சிதர்**

8. **'வம்சமணி தீபிகை' என்னும் நூலை வெளியிட்ட ஆண்டு________.**
   அ) 1880 ஆ) 1879 இ) 1875 ஈ) 1872
   **விடை: ஈ) 1879**

www.kalviexpress.in

9. **'வம்சமணி தீபிகை' என்னும் நூலின் பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசை கொண்டவர்________.**
அ) பாரதியார் ஆ) நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசை மணி **விடை: அ) பாரதியார்**

10. **'வம்சமணி தீபிகை' நூலின் மூலவடிவத்தை மறுபதிப்பாக 2008–இல் அப்படியே வெளியிட்டவர் ________.**
அ) பாரதியார் ஆ) பத்மநாபன்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) இளசை மணி **விடை: ஈ) இளசை மணி**

11. **விடுதலைப் போராட்டட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர் ________.**
அ) இளசைமணி ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா.அ,பத்மநாபன்
**விடை: ஆ) பரலி.சு.நெல்லையப்பர்**

12. **பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு, ஆகியவற்றைப் பதிப்பித்தவர் ________.**
அ) இளசைமணி ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா.அ,பத்மநாபன்
**விடை: ஆ) பரலி.சு.நெல்லையப்பர்**

13. **பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராக இருந்தவர் ________.**
அ) இளசைமணி ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா.அ,பத்மநாபன்
**விடை: ஆ) பரலி.சு.நெல்லையப்பர்**

14. **லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர் ________.**
அ) இளசைமணி ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா.அ,பத்மநாபன்
**விடை: ஆ) பரலி.சு.நெல்லையப்பர்**

15. **நெல்லைத் தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களை எழுதியவர் ________.**
அ) இளசைமணி ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா.அ,பத்மநாபன்
**விடை: ஆ) பரலி.சு.நெல்லையப்பர்**

16. **வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர் ________.**
அ) இளசைமணி ஆ) பரலி.சு.நெல்லையப்பர்
இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) ரா.அ,பத்மநாபன்
**விடை: ஆ) பரலி.சு.நெல்லையப்பர்**

17. **'கைப்பொருள் அற்றான் கற்ப தெவ்வகை'? இவ்வரிகள் பாரதியார், யாருக்கு எழுதிய கடிதத்தில் இடம்பெற்றுள்ளது?**
அ) குத்திகேசவருக்கு ஆ) ரா.அ,பத்மநாபனுக்கு
இ) நெல்லையப்பருக்கு ஈ) எட்டயபுர ஜமீனுக்கு
**விடை: ஈ) எட்டயபுர ஜமீனுக்கு**

# நம்மை அளப்போம்

## II. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க**

**முன்னுரை :**

'பாரதியின் கடிதங்கள்' என்னும் நூலை ரா.அ.பத்மநாபன் பதிப்பித்துள்ளார். பாரதியின் கடிதங்கள் அனைத்தும் அவர் நம்மிடம் பேசுவது போல இருப்பதே அவருடைய நடையழகின் சிறப்பு. பாரதியாரை விட ஏழாண்டுகள் இளையவரான பரலி.சு.நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமைத் தம்பியாகவே கருதி அன்பு காட்டி வந்தார்.

**மொழிப்பற்று :**

ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு மொழிகள் தெரிந்திருந்து, அந்த மொழிப் பத்திரிகைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்து கொள்ள முடியுமானால் தமிழ்நாட்டிற்கு எத்தனை நன்மையுண்டாகும். தமிழ். தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும். எனினும் புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் என்று தமிழில் பல முயற்சிகளைச் செய்து முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும் என்று பாரதி, தம்பி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் மூலம் பாரதியின் மொழிப்பற்று புலப்படுகிறது.

**சமூகப்பற்று :**

நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்து விட வேண்டும் என்கிறார். அதுவே, நாம் வலிமை பெறுவதற்கு வழியாகும். தமிழ்நாட்டில் நோய்கள் தீர்ந்து மக்கள் ஆனந்தமாக வாழ வேண்டும். தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் அமைய வேண்டும். அந்த தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர வேண்டும்.

**ஆணும் பெண்ணும் சமம் :**

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்று பேதமின்றி வாழவேண்டும். அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை. பெண்ணைத் தாழ்மை செய்தோன் தன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றும். பெண்ணை அடைத்தவன் தன் கண்ணை அடைத்தற்குச் சமம் என்றும் கூறி பெண்ணின் பெருமையைச் போற்றச் சொல்கிறார்.

**தொழில்கள் பெருகுக :**

நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக் கொண்டு பிழைக்க முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் சிறகுகள் தோன்றும் நாம் விரும்பிய இடங்களுக்குப் பறந்து செல்லலாம். தமிழ்நாட்டிலே தொழில்கள் பெருக வேண்டும். இயந்திரங்கள் பெருகிட வேண்டும். மக்கள் முயற்சிகள் செய்து சங்கீதம், சிற்பம், இயந்திர நூல், பூமி நூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் போன்ற வற்றில் கலைகளும் நூல்களும் முயற்சிகளால் நிறைந்திருக்க வேண்டும்.

**முடிவுரை :**

பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய இக்கடிதத்தின் மூலம் மொழி மீது கொண்ட பற்றால் தன் தம்பியை மேலும் பயின்று தமிழை வளர்க்கச் சொல்கிறார். சமுதாயத்தின் மீது கொண்ட அக்கறையால் தன் தமிழ்நாடெங்குமே நலம் பல பெற்றுத் திகழ வேண்டும் என்று கூறுகிறார்.

www.kalviexpress.in www.kalviexpress.in



## கற்பவை கற்றபின்

**பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**

| | |
|---|---|
| 1882 | டிசம்பர் 11ல் எட்டயபரத்தில் பிறந்தார் |
| 1887 | தாய் இலட்சுமி அம்மாளின் இறப்பு |
| 1889 | முதன் முதலில் கவிதை பாடுகிறார் |
| 1893 | எட்டயபுர மன்னர் "பாரதி" என்ற பட்டம் வழங்குகிறார் |
| 1897 | ஜீன் 15ல் பாரதிக்கும் செல்லம்மாளுக்கும் திருமணம் நடந்தது |
| 1898 | தந்தை சின்னச்சாமி இறப்பு |
| 1898 - 1902 | 4 ஆண்டுகள் காசியில் இருந்தார் |
| 1903 | எட்டயபுர மன்னரின் அழைப்பை ஏற்று தமிழகம் திரும்பி 'அரசவைக் கவிஞர்' ஆனார். முதன் முதலில் இவரது கவிதைகள் அச்சில் வந்தது |
| 1903 - 1905 | மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசிரியராகப் பணிப்புரிந்தார்<br>சுதேச மித்திரன் பத்திரிகையின் துணை ஆசிரியராகப் பொறுப்பேற்றார் |
| 1905 - 1907 | அரசியலில் ஆர்வம் காட்டினார்.<br>வ.உ.சி. உடன் நெருங்கிய தொடர்பு<br>கல்கத்தாவில் நடந்த தாதாபாய் நௌரோஜி கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்<br>நிவேதிகா-வை ஞானகுருவாக ஏற்றல் |
| 1907 | இந்தியா - வார இதழையும் பாலபாரதம் - ஆங்கில இதழையும் நடத்தினார்.<br>இந்திய விடுதலைக்கான இவரது பாடல்கள் காட்டுத்தீயாய் பரவியது.<br>பிரிட்டீஷ் அரசு கைது செய்ய ஆணை பிறப்பித்தது |
| 1907 | புதுவையிலிருந்து "இந்தியா" பத்திரிகை வெளிவந்தது. |
| 1908 - 1912 | கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் போன்ற பலவற்றை இயற்றினார் |
| 1912 | பகவத் கீதையைத் தமிழில் மொழி பெயர்த்தார் |
| 1918 | பாண்டிச்சேரியிலிருந்து வெளியேறியதும் கைது செய்யப்பட்டார்.<br>34 நாட்கள் சிறையிலருந்து விடுதலையானதும் தம் மனைவி ஊரான கடையத்தில் குடியேறினார். |
| 1919 | சென்னை சென்ற போது இராஜாஜியின் வீட்டில் காந்தியைச் சந்தித்தார் |
| 1921 | ஜீலை மாதம் - திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் யானை தூக்கி எறிந்ததால் தலையிலும் கையிலும் காயங்கள் ஏற்பட்டது.<br>அந்தப் பேரதிர்ச்சியால் நோய்வாய்ப்பட்டார்<br>வயிற்றுக்கடுப்பு நோயால் பாதிக்கப்பட்டார்.<br>செப்டம்பர் 11-ல் மறைந்தார் |



www.kalviexpress.in www.kalviexpress.in

## இனிக்கும் இலக்கணம்

# 1. தமிழாய் எழுதுவோம்

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

#### அகநிலை வினாக்கள்

1. பிழைபடப் பேசுவதால்தான் ________ போது பிழைகள் பெருகுகின்றன.
அ) எழுதும் ஆ) கற்கும் இ) சொல்லும் ஈ) படிக்கும்
**விடை: அ) எழுதும்**

2. பொருள் வேறுபாட்டினை ________ எழுத வேண்டும்
அ) பொருளறிந்து ஆ) கருத்தை அறிந்து
இ) சொல்லறிந்து ஈ) இடமறிந்து
**விடை: ஈ) இடமறிந்து**

3. உயிர்மெய் நெடில் எழுத்துகள் ________ உயிர் மெய்க்குறில் எழுத்துகள் ________.
அ) 216, 90 ஆ) 12, 8 இ) 126, 90 ஈ) 1, 90
**விடை: இ) 126, 90**

4. சொல்லின் தொடக்கமாக மட்டுமே வருவது ________.
அ) நகரம் ஆ) னகரம் இ) ணகரம் ஈ) னாகாரம்
**விடை: அ) நகரம்**

5. தமிழில் சொல்லின் தொடக்கமாக ________ வருவதில்லை
அ) உயிரெழுத்துகள் ஆ) மெய்யெழுத்துகள்
இ) உயிர்மெய் எழுத்துகள் ஈ) குறில் எழுத்துகள்
**விடை: ஆ) மெய்யெழுத்துகள்**

6. ஈரொற்றாய் வராத வல்லின மெய்கள் ________.
அ) ட், ற் ஆ) த், ச் இ) ப்,க் ஈ) த்,ப்
**விடை: அ) ட், ற்**

7. சொல்லின் இடையில் மட்டுமே வருவது ________.
அ) உயிரெழுத்து ஆ) உயிர்மெய் எழுத்து இ) ஆய்த எழுத்து ஈ) குறில் எழுத்து
**விடை: இ) ஆய்த எழுத்து**

8. மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வராதது ________.
அ) ந ஆ) ண, ன இ) ந, ன ஈ) ண
**விடை: ஆ) ண, ன**

9. i) **ணகர ஒற்றினை அடுத்த வருவது டகரம்**
ii) **னகர ஒற்றினை அடுத்து வருவது றகரம்**
அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு **விடை: இ) இரண்டும் சரி**

10. **தனிக்குறிலை அடுத்து வராத ஒற்றுகள் ________.**
அ) ட், ற் ஆ) க், ச் இ) ப்,ய் ஈ) ர்,ழ் **விடை: ஈ) ர்,ழ்**

11. i) **உயிர்வரின் ஒரு என்பது ஓர் என மாறும்**
ii) **உயிர் வரின் அது என்பது அஃது என மாறும்**
அ) (i) சரி (ii) தவறு ஆ) (i) தவறு (ii) சரி
இ) (i) மற்றும் (ii) இரண்டும் தவறு ஈ) (i) மற்றும் (ii) இரண்டும் சரி
**விடை: ஈ) (i) மற்றும் (ii) இரண்டும் சரி**

12. **லகரத்தை தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் ________ ஆகத் திரியும்**
அ) ணகரம் ஆ) னகரம் இ) டகரம் ஈ) றகரம்
**விடை: ஆ) னகரம்**

13. **ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் ________ அகத் திரியும்**
அ) ணகரம் ஆ) னகரம் இ) டகரம் ஈ) றகரம்
**விடை: இ) டகரம்**

14. **ளகரத்தை தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ________ ஆகத் திரியும்**
அ) ணகரம் ஆ) னகரம் இ) டகரம் ஈ) றகரம்
**விடை: அ) ணகரம்**

15. **பல் + நூல் = ________ என மாறும்**
அ) பல் நூல் ஆ) பல நூல்
இ) பன் நூல் ஈ) பன்னூல் **விடை: ஈ) பன்னூல்**

16. **அல் + திணை = ________ என மாறும்**
அ) அல் திணை ஆ) அற்றிணை இ) அஃதிணை ஈ) அஃறிணை
**விடை: ஈ) அஃறிணை**

17. **பஃறுளி என்பதை எவ்வாறு பிரிக்கலாம்**
அ) பல் + றுளி ஆ) பல + றுளி இ) பஃ + றுளி ஈ) பல் + துளி
**விடை: ஈ) பல் +துளி**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **விடியல், வனப்பு – இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க**
சூரியனின் நல் **விடியல்** காட்சி காண்பதற்கு மிகுந்த **வனப்பு** உடையது.

### அகநிலை வினாக்கள்

1. **மயங்கொலி எழுத்துகள் யாவை?**
ந, ண, ன / ல, ள, ழ / ற, ர
இந்த எட்டு எழுத்துகளுமே மயங்கொலி எழுத்துகள் எனப்படும்.

www.kalviexpress.in www.kalviexpress.in



**2. மயங்கொலிப் பிழைகள் என்றால் என்ன?**

- ந, ண, ன / ல, ள, ழ / ற, ர ஆகிய எட்டு எழுத்துகளும் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.
- இவ்வெழுத்துகளை ஒலிக்கும் போது நுண்ணிய வேறுபாடுகளை மட்டுமே கொண்டிருப்பதால் எது சரி, எது தவறு என மயங்க வைப்பதால் ஏற்படும் பிழைகளையே மயங்கொலிப் பிழைகள் என்கிறோம்.

**3. எவ்வாறு எழுதினால் பிழைகளைத் தவிர்க்கலாம்?**

- மொழியின் இயல்பை உணர்ந்தும் இலக்கண விதிகளை அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.
- சொல் உருவாகும் முறையை அறிந்தும், பொருள் வேறுபாட்டினை உணர்ந்தும் எழுதும் போது பிழைகளைத் தவிர்க்க முடியும்.

**4. எழுதும் போது ஏற்படும் பிழைகளின் வகைகள் யாவை?**

- எழுத்துப் பிழை
- சொற்பொருட் பிழை
- சொற்றொடர்ப் பிழை
- பொதுவான பிழைகள்

**5. கீழ்க்காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டினைக் கற்றுணர்க**

**1) அறம் – அரம்**
- அறம் – தர்மம் / நீதி / கடமை
- அரம் – ஒரு கருவி

**2) குறை – குரை**
- குறை – குற்றம் கூறுதல்
- குரை – நாய் எழுப்பும் ஒலி

**3) வளம் – வலம்**
- வளம் – செழிப்பு
- வலம் – வலப்பக்கம்

**4) களம் – கலம்**
- களம் – இடம்
- கலம் – பாத்திரம் / கப்பல்

**5) கிளி – கிலி**
- கிளி – ஒரு பறவை
- கிலி – அச்சம்

**6) என்றாள் – என்றால்**
- என்றாள் – என்று கூறினாள் (பெண் பால் கூற்றைக் குறிக்கும்)
- என்றால் – என்பது

**7) போனாள் – போனால்**
- போனாள் – சென்றாள் / சென்று விட்டாள்
- போனால் – கிடைக்கவில்லையென்றால் / தவற விட்டு விட்டால்

**8) ஆணை – ஆனை**
- ஆணை – கட்டளை
- ஆனை – யானை

**9) மழை – மலை**
- மழை – மழை நீர் / குளிர்ச்சி
- மலை – குன்று / பொருப்பு

## கற்பவை கற்றபின்

**மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

பாவலன் : இன்று தமிழ் வகுப்பில் நடந்த மயங்கொலி எழுத்துகள் அமைந்த சொற்களுக்குப் பொருள் கூறுங்கள் பார்க்கலாம்!

வளவன் : ம்ம். சரி. வினாவை நீ கேட்கிறாயா? இல்லை நான் கேட்கட்டுமா?

பாவலன் : இல்லை. இல்லை. நானே கேட்கிறேன்.

தலை - தளை - தழையின் பொருள் கூறுங்கள்!



www.kalviexpress.in www.kalviexpress.in

செழியன் : தலை - நம் உடம்பிலுள்ள ஓர் உறுப்பு
தளை - விலங்கிடு, கட்டு
தழை - இலை என்றும் பொருள்படும்

பாவலன் : நன்று! சரியாகச் சொன்னாய்! புரம் - புறம் பற்றிக் கூறுங்கள்!

வளவன் : புரம் என்றால் ஊர், புறம் என்றால் வெளியே / பக்கம்

வளவன் : இப்போது நான் கேட்கிறேன். தேநீருக்கும் தேனீருக்கும் உள்ள வித்தியாசம் கூறுங்கள் பார்க்கலாம்!

பாவலன் : தேநீர் என்பது தேயிலை வடிகட்டிய நீர் எனப்படும். தேனீர் என்பது தேன் போன்ற இனிமையான நீர் எனப்படும்.

செழியன் : சரி சரி! மயங்கொலி எழுத்துகளை நன்றாகப் புரிந்து கொண்டோம். தினமும் இதுபற்றி ஓரிரு வார்த்தைகளை அறிந்து வந்து கலந்துரையாடுவோம்.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்
ஆ) மலை மீது ஏறி கல்வெட்டுக்களைக் கண்டறிந்தனர்
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் முழ்கின

**விடை: ஈ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது**

**2. பேச்சுத் தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்
ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது
இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது
ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன

**விடை: ஈ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்**

**3. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் – இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

**முடிந்தால் தரலாம்** – என்னால் தர இயன்றால் தருவேன்.

**முடித்தால் தரலாம்** – என் வேலையை நிறைவு செய்து விட்டால் பின்பு தருவேன்.

**4. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

- எழுத்துகளின் ஒலிப்பு முறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும் சரியாக அறிய வேண்டும்.
- ந, ண, ன / ல, ள, ழ /ற, ர – என்ற மயங்கொலி எழுத்துகளை ஒலிக்கும் முறையையும் அவற்றின் பொருள் வேறுபாட்டினையும் புரிந்து கொள்ள வேண்டும்.

# நம்மை அளப்போம்

## II. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'சொல்லோவியங்கள்' (கவிதை) என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**

### நிகழ்ச்சி நிரல்

**'சொல்லோவியங்கள்' – கவிதை நூல் வெளியீட்டு விழா**

**நேரம் : 2.30 பிற்பகல்**

**இடம் : அரசு மேல்நிலைப்பள்ளி**

**நாள் : ஜூலை 10**

| | |
|---|---|
| 2.30 | தமிழ்த்தாய் வாழ்த்து |
| 2.35 | வரவேற்புரை – மாணவர். பாரதி கிருஷ்ணா |
| 2.40 | தலைமையுரை – திரு. வெங்கடாச்சலம், தலைமை ஆசிரியர் |
| 2.50 | நூல் வெளியீடு : உயர்திரு. மாவட்டக் கல்வி அலுவலர் 'சொல்லோவியங்கள் – கவிதை நூல்' |
| 3.00 | வாழ்த்துரை : ஆசிரியர். கவிநேசன் |
| 3.15 | ஏற்புரை : நூலாசிரியர். மணிமாறன் |
| 3.45 | நன்றியுரை : மாணவி. சுகுமாரி |
| 4.00 | நாட்டுப்பண் |

### நன்றியுரை

நவில்பவர் : மாணவி. சுகுமாரி

நன்றி மறவேல்! என்ற பொன்மொழியைப் பொறித்த என் செந்தமிழையும், செம்மை குணம் வாய்ந்த என் ஆசிரியப் பெருமக்களையும், இங்குள்ள சான்றோர்களையும் வணங்கி, இந்த நன்றியுரையை நவில்கின்றேன்.

'சொல்லோவியங்கள்' – என்ற கவிதை நூலின் வெளியிட்டு விழாவில், வரவேற்புரை வழங்கிய நண்பர். பாரதி கிருஷ்ணா அவர்களுக்கும், தலைமையுரை வழங்கிய திரு.வெங்கடாச்சலம் தலைமை ஆசிரியர் ஐயா அவர்களுக்கும்

தங்களது பொன்னான நேரத்தினை எங்கள் பள்ளி விழாவிற்காக ஒதுக்கி, விழாவில் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்த உயர்திரு. மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கும்,

வாழ்த்துரை வழங்கிய ஆசிரியர் கவிநேசன் அவர்களுக்கும் ஏற்புரை வழங்கிய நூலாசிரியர். மணிமாறன் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்பெரும் ஆன்றோர்களின் தமிழமுதைப் பருகியதால் எங்கள் செவிகளும் மனமும் மகிழ்ச்சி வெள்ளத்தில் நிறைந்துள்ளன.

நூலாசிரியரின் 'சொல்லோவியங்கள்' கவிதை நூல் பற்றிய கருத்துகள் எங்கள் அறிவுப் பெட்டகத்தைத் திறக்கும் பொன்சாவியாக அமைந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்விழாவானது செவ்வனே அமைவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் நல்கிய எம் பள்ளி நிருவாகத்திற்கு மாணவர்கள் சார்பில் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வளவு நேரமும் அமைதி காத்து இவ்விழாவினைச் சிறப்பாக நடைபெறச் செய்த அனைவருக்கும் நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்!

நன்றி! வணக்கம்!

## மொழியை ஆள்வோம்

**I. சான்றோர் சித்திரம் :**



ஆறுமுக நாவலர் (1822 1879)

**வினாக்கள் :**

1. **'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' – என்பதன் பொருள் யாது?**

   'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்ட போது'

2. **'வசன நடை கைவந்த வல்லாளர்' – எனப் புகழப்படுபவர் யார்?**

   ஆறுமுக நாவலர்

3. **ஆறுமுக நாவலர் தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். இவ்விடைக்கேற்ற வினாவை எழுதுக?**

   ஆறுமுக நாவலர் எத்தனை மொழிகளில் புலமை பெற்றார்?

4. **ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை?**
   - திருக்குறள் பரிமேலழகர் உரை
   - சூடாமணி நிகண்டு
   - நன்னூல் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை

5. **ஆறுமுகநாவலருக்கு 'நாவலர்' – என்ற பட்டம் வழங்கிய ஆதீனம் யாது?**

   திருவாவடுதுறை ஆதினம்

6. **ஆறுமுகநாவலர் புராண நூல்களை வசனமாக எழுதி, அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவமாக மாற்றினார்.**

   **இத்தொடரில் உள்ள வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடரமைக்க.**

   புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவமாக மாற்றியவர் ஆறுமுகநாவலர்.

www.kalviexpress.in www.kalviexpress.in


## II. தமிழாக்கம் தருக

1. *Learning is a tresure that will follow its owner everywhere*
   கற்றல் என்பது அதன் உரிமையாளரைப் பின்பற்றும் ஒரு கருவூலமாகும்.
2. *A new language is a new life*
   ஒரு புதிய மொழி ஒரு புதிய வாழ்க்கை
3. *If you want people to understand you, speak thier language*
   மக்கள் உங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், அவர்களுடைய மொழியைப் பேசுங்கள்
4. *Knowledge of languages is the doorway to wisdom*
   மொழி அறிவானது ஞானத்தின் நுழைவாயில்
5. *The limits of my language are the limits of my world.*
   என் மொழியின் எல்லையே என் உலகின் எல்லை.

## III. கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக :

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல், அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி, குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே மொழியால் வளர்பவரும் மக்களே.

–மொழி வரலாறு (மு. வரதராசனார்)

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை எது?
2. பெற்ற தாயின் முதல் வேட்கை எது?
3. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?
4. மொழிக்கு ஆசிரியராகவும் மாணவராகவும் இருப்பவர் யார்?
5. மொழியை வளர்ப்பவரும், மொழியால் வளர்பவரும் யாவர்?

## IV. இலக்கிய நயம் பாராட்டுக

*முச்சங்கங் கட்டி*
*முதுபுலவர் தமைக் கூட்டி*
*அச்சங்கத் துள்ளே*
*அளப்பரிய பொருள்கூட்டி*
*சொற்சங்க மாகச்*
*சுவைமிகுந்த கவிகூட்டி*
*அற்புதங் ளெல்லாம்*
*அமைத்த பெருமாட்டி!*

→ *கண்ணதாசன்*


www.kalviexpress.in www.kalviexpress.in

**முன்னுரை:**

சிவகங்கை மாவட்டம் சிறுகூடல்பட்டி என்ற கிராமத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் முத்தையா சாத்தப்பன் – விசாலாட்சி தம்பதியரின் மகன். திரை ஒலி, சண்டமாருதம், தென்றல், தென்றல் திரை உள்ளிட்ட பத்திரிகைகளில் பணியாற்றினார். கண்ணதாசன் என்ற பத்திரிகையை அவரே நடத்தினார். கதை, வசனம், தயாரிப்பு என சகல துறைகளிலும் இயங்கியவர். தமிழக அரசின் அரசவைக் கவிஞர். சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

**திரண்ட கருத்து:**

முதல், இடை, கடைச் சங்கங்களை அமைத்து அதில் அனுபவமும் அறிவும் மிக்க முதுமை வாய்ந்த புலவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து மூன்று சங்கங்கள் மூலமாகவும் அளவிடற்கரிய பொருளான அகம், புறம் மற்றும் அறம் சார்ந்த நூல்களையெல்லாம் ஆக்கி, சொற்போர் நிகழ்த்தும் இடமான சங்கத்தில் எண்வகைச் சுவைகளும் மிகுந்த கவிதைகளை இயற்றி, மனித வாழ்விற்கே அறம், புறம் என்ற இலக்கணங்களையும், விண்ணியல், மண்ணியல், கனிமவியல் போன்ற பல அற்புதம் நிறைந்த அறிவுசார் நூல்களையெல்லாம் அமைத்தவள் நம் தமிழன்னையே!

**மையக் கருத்து:**

முதுமைத் தன்மை வாய்ந்த புலவர்களால் முச்சங்களையும் அமைத்து, அதிலே அளவிடற்கரிய பொருள்களாலும் எண் சுவை மிகுந்த பாடல்களாலும் பல அற்புதங்களெல்லாம் தம் நூல்களில் அமைத்தவள் தமிழன்னை என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

## தொடை நயம்:

i) **எதுகைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை ஆகும்.

**எ.கா:**

**அடி எதுகை:**

மு**ச்**சங்கங் – அ**ச்**சங்கத்
சொ**ற்**சங்க – அ**ற்**புதங்க

ii) **மோனைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை ஆகும்.

**எ.கா:**

**சீர் மோனை:**

**மு**ச்சங்கங் – **மு**துபுலவர்
**அ**ச்சங்கத் – **அ**ளப்பரிய
**சொ**ற்சங்க – **சு**வைமிகுந்த
**அ**ற்புதங்க – **அ**மைத்த

iii) **இயைபுத் தொடை:**

அடிதோறும் கடைசி சீரோ, அசையோ, எழுத்தோ ஒன்றி வருவது இயைபுத் தொடை ஆகும்

**எ.கா:**

தமைக்**கூட்டி**, பொருள் **கூட்டி**
கவி**கூட்டி**, பெருமா**ட்டி**

**அணி நயம்:**

இப்பாடலில் '**கூட்டி'** என்ற சொல் 'அமைத்து' என்ற பொருளில் பலமுறை வந்துள்ளதால், இப்பாடல் **''சொற்பொருள் பின்வருநிலையணி''** ஆகும்.

**எ.கா:** முச்சங்கங் **கூட்டி**
முதுபுலவர் தமைக் **கூட்டி**

**சுவை நயம்:**

தமிழன்னை, தம் தமிழ்ச் சங்கத்தில் முதுபுலவர்களால் அளவிடற்கரிய பொருள் சுவையோடும் எண்வகைச் சுவைகளாலும் மிகுந்த சொற்களால் கவிதையை அமைத்துள்ளதாகப் பெருமையாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் '**பெருமிதச் சுவை'** பயின்று வந்துள்ளது.

**எ.கா:** சொற்சங்க மாகச்
சுவைமிகுந்த கவி**கூட்டி**

**சொல் நயம்:**

எ.கா:– **சுவைமிகுந்த**

இப்பாடலில் எண்வகைச் சுவைகளால் கவிஞர்கள் தம் மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ள பாடல்கள் நிறைந்துள்ளன. எனவே ' **சுவை மிகுந்த'** என்ற சொல் இப்பாடலுக்கு ஏற்ற நயமான சொல்லாக அமைந்து வந்துள்ளது.

**தலைப்பு : முச்சங்கம் வளர் பெருமாட்டி**

**முடிவுரை:**

இப்பாடல் தொடைநயம், அணிநயம், சுவைநயம், சொல்நயம் போன்ற அனைத்து நயங்களும் நிரம்பப் பெற்றுள்ளதால் கண்ணதாசனின் கவியின்பத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.

www.kalviexpress.in

## V. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக

**1. தாமரை இலை நீர் போல :**

வாசன் தனக்குக் கிடைத்த ஆடம்பரமான வாழ்க்கையில் **தாமரை இலை நீர் போல** ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்கிறான்.

**2. கிணற்றுத் தவளை போல :**

தொழில் நுட்பத்தின் அதிநவீன போக்குகளுக்கு மத்தியில் என் நண்பன் கார்த்தி **கிணற்றுத் தவளை போல** வெளியுலகம் அறியாமல் வாழ்கிறான்.

**3. எலியும் பூனையும் போல :**

அண்ணனும் தங்கையும் எப்பொழுதும் **எலியும் பூனையும் போல** சண்டையிட்டுக் கொள்வார்கள்.

**4. அச்சாணி இல்லாத தேர் போல :**

வறுமையால் இரவியின் கல்வி பாதியில் நின்றதும் அவன் வாழ்க்கை **அச்சாணி இல்லாத தேர் போல** உடைந்து போனது.

**5. உள்ளங்கை நெல்லிக்கனி போல :**

என் தமிழாசிரியர் நடத்திய இலக்கணம் எனக்கு **உள்ளங்கை நெல்லிக்கனி போல** எளிதாக விளங்கியது.

## VI. ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக

தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை

# தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்

**முன்னுரை :**

*'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!'*

என்ற பாவேந்தரின் புரட்சி வரிகளுக்கேற்ப தமிழ் தமிழர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்தது, கைச்சைகையாலும் முகப்பாவனையாலும் வெளிப்படுத்திய தம் எண்ணங்களை நம் வாழ்வோடு பின்னிப்பிணைத்து வெற்றிப்பாதையில் கொண்டு செல்ல மொழி முக்கியப்பங்கு வகிக்கிறது.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

தாய் புகட்டிய மொழியில் நாம் அறிவைத் தேடினால் நம் இலட்சியப் பாதையை விரைவிலே அடைந்து விடலாம். அனைத்துத் துறை சார் கல்வியையும் நாம் நம் தாய்மொழி வழியே பயின்றால் புதுமைப் படைப்புகளை எளிதாகவே உருவாக்கி விடலாம், எனவே,

*'தொண்டு செய்வாய் தமிழுக்குத்*
*துறை தோறும் துடித்தெழுந்தே!'*

– என்கிறார் பாவேந்தர்.

**தாய் மொழிச் சிந்தனை :**

அறிவுக் கடலில் மாணவர்கள் மூழ்கி முத்துக்குளிக்க தாய்மொழியிலேயே சிந்தனை செய்ய வேண்டும். நம் தாய்மொழியிலுள்ள புரிதலும் சிந்தனையும் ஆளுமையும் பிற மொழியில் பயிலும் போது ஏற்படாது.

*'தமிழன் என்றொரு இனம் உண்டு!*
*தனியே அவர்க்கொரு குணம் உண்டு!'*

- என்கிறார் நாமக்கல் கவிஞர்.

**அறிஞர்களின் பார்வை :**

அறிவியலாளர்களும், கண்டுபிடிப்பாளர்களும் பயின்றதும் சிந்தித்ததும் படைத்ததும் தம் தாய்வழிக் கல்வியில் தானே! நாம் மட்டுமே பிறமொழிக் கல்வியை உயர்த்தி நம் தாய்மொழியைத் தாழ்த்திப் பேசுகிறோம். அறிஞர்களின் பார்வையில் அவரவர் மொழியில், தம் சிந்தனையில் தோன்றும் புதிய படைப்புகளே மதிப்பிற்குரியதாகும்.

*'எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழ் அணங்கே*
*உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துவோம்!'*

- என்கிறார் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

**கற்கும் திறன் :**

பிற மொழிகளில் கல்வி கற்பதால் மனனம் செய்யும் முறையே பெருகி விட்டது. மதிப்பெண்ணைத் தேடித் தேடி நாம் கற்கும் திறனைத் தொலைத்து விட்டோம், ஏடும் எழுதுகோலும் இல்லாமல் குருவின் ஆசிரமத்திலும் திண்ணைப் பள்ளிகளிலும் கல்வி பயின்ற தமிழர்களின் பரம்பரையே நாம். தம்மைச் சுற்றியுள்ள சூழல்களால் விளக்கப்படும் பாடங்களையும், வாழ்வியல், தத்துவியல், அறிவியல் போன்ற எல்லா துறை சார்ந்த கருத்துகளையும் எளிதாக தம் தாய்வழிக் கல்வியான தமிழிலேயே அறிந்தும் புரிந்தும் கற்றனர்.

*"தமிழ் என்று தோள் தட்டி ஆடு – நல்ல*
*தமிழ் வெல்க வெல்க வென்றே தினம் பாடு"*

– என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

**பயன் :**

'குறிக்கோளில்லாது கெட்டேன்' – என்ற விதியின் வழியே செல்லாமல், நம் மதியால் விதியை வெல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். கல்வியின் பயன் ஒழுக்கம், அறம் முதலியவை ஆகும். அனைத்தையும் கற்றும் கற்றதன்படி வாழ்வில் ஒழுகியும் வாழ்பவனே சான்றோன் ஆகிறான். ஆன்றோர்களும் சான்றோர்களும் காட்டிய அறவழியில் பொருளை ஈட்டி இன்பம் துய்த்தலே கல்வியின் பயனாகும்.

*"இனிமை தமிழ்மொழி எமது – எமக்கு*
*இன்பந்தரும்படி வாய்த்த நல் அமுது"*

– என்கிறார் புரட்சிக் கவிஞர்.

**இன்றைய நிலை :**

போட்டிகளையும் சவால்களையும் மட்டுமே எதிர்கொள்ள இன்றைய கல்வி முறை வாய்ப்பளிக்கிறது. வெற்றியும் தோல்வியும் வேறல்ல. அவற்றின் மூலம் நாம் நிறைய அனுபவங்களை மட்டுமே கற்றுக் கொள்ள வேண்டும். பரந்த மனப்பான்மையோடும் பொதுநலத் தன்மையோடும் விசாலமான சிந்தனையோடும் வாழ இன்றையக் கல்வி முறை கற்றுக் கொடுக்க வேண்டும்.

*"தகத்தாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்'*

– பாவேந்தர் பாரதிதாசன்

**முடிவுரை :**

நம் எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் நம் தாய்மொழியே துணைநிற்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கையை உணர்ந்தவர்களுக்குத் தாய்மொழிக்கல்வியின் தேவையும் பயன்களும் இனிதே புலப்படும்.


*இன்பம் எனப்படுதல் – தமிழ்*
*இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!*

– என்ற பாரதிதாசனின் வரிகளே தமிழ் மொழியின் அவசியத்தைப் பறைசாற்றுகின்றன.

## மொழியோடு விளையாடு

### VII. எண்ணங்களை எழுத்தாக்குக

**தொன்மைச் சான்றுகள்**



தனக்குத் தெரிந்த செய்திகளையும் தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளையும் தான் வாழ்ந்த குகைகளில் செதுக்கி வைத்தனர். வரிவடிவங்களுக்கு முன்பே ஆதி மனிதன் சித்திரங்கள் மூலம் தன் மனக்குறிப்புகளை வரைந்துள்ளான். அக்கால மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாகக் கல்வெட்டுகள் உள்ளது. நம் முன்னோர்களின் தொன்மையான சான்றுகளைப் பாதுகாப்பதே நம் கடமையாகும்.

### VIII. அந்தாதித் தொடரில் கவித்துவமாக்குக

*குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்*
*தாயின் குரலில் உயிரின் ஒலி*
*உயிரின் ஒலியில் தமிழின் மூச்சு*
*தமிழின் மூச்சில் வளர்ந்தது குழந்தை*

## IX. குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்

கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம் - **கவிமணி**

1. தமிழறிஞர்: முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்
2. தாய்மொழி: ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும்
3. சிறுகதை ஆசிரியர்: முதல் பாதி நவீனம்
4. முன்னெழுத்து அரசன்: பின்னெழுத்து தமிழ் மாதம்.

(தமிழ் மொழி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைபித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலையடிகள்)

**விடைகள்:** 1) மறைமலை அடிகள் 2) தமிழ் ஒளி 3) புதுமைப்பித்தன் 4) கோதை

## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளில் சரி,தவறு எனப் பிரிந்து சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| எ.கா. பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும் | – |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | – | தவறு. நமது சுற்றுப்புறம் தூய்மையாக இருக்க வேண்டும். நோய் பரவி விடும். எனவே எச்சில் துப்பக்கூடாது என்பதைக் கண்டிப்புடன் கூறுவேன் |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்து போடுதல் | – | தவறு.காகிதங்களைக் கிழிப்பது தவறு என்பதைப் புரிய வைப்பேன். அதற்குரிய குப்பைத் தொட்டியில் போடச் சொல்லுவேன். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | – | தவறு. இருக்கை மேசைகளில் கிறுக்குவதால் சுத்தமற்ற இடமாகக் காணப்படும். எனவே, தேவையற்ற தாளில் மட்டுமே கிறுக்குவதற்கு அனுமதிப்பேன். |

## XI. படிப்போம் பயன்படுத்துவோம்

| | | | |
|---|---|---|---|
| subscription | உறுப்பினர் கட்டணம் | Archieve | ஆவணம் |
| Fiction | புனைவு | Manuscript | கையெழுத்துப் பிரதி |
| Biography | வாழ்க்கை வரலாறு | Bibliography | நூல் நிரல் |

☺ ☺ ☺ ☺ ☺



www.kalviexpress.in



இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

**இயல்: 2**

# பெய்யெனப் பெய்யும் மழை

| | |
|---|---|
| உரைநடை : பெருமழைக்காலம் | துணைப்பாடம் : முதல்கல் |
| செய்யுள் : பிறகொரு நாள் கோடை, நெடுநல்வாடை | இலக்கணம் : நாலவகைப் பொருத்தங்கள் |

உரைநடை

## 2. பெருமழைக்காலம்

### நம்மை அளப்போம்

**I. பலவுள் தெரிக**

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்**

அ) பருவ நிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

**விடை: ஆ) மணல் அள்ளுதல்**

2. **உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது**

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது **விடை: அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது**

www.kalviexpress.in

### அகநிலை வினாக்கள்

1. **மாமழை போற்றுதும் என்று மழையைப் போற்றியவர்**

அ) சீத்தலைச் சாத்தனார் ஆ) ஔவையார்

இ) கம்பர் ஈ) இளங்கோவடிகள்

**விடை: ஈ) இளங்கோவடிகள்**

2. **கூற்று : எட்டு நாடுகளும் பரிந்துரை செய்த பெயர்களின் வரிசைப்படி தான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.**

**காரணம் : சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், வங்கக் கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கியுள்ளது.**

அ) கூற்றும் காரணமும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும் காரணமும் தவறு

**விடை: அ) கூற்றும் காரணமும் சரி**

3. **இயற்கை சமநிலையை நாம் சீர்குலைத்ததன் விளைவே ------------ மாற்றம்**

அ) கோடை கால ஆ) புயல்

இ) சிந்தனை ஈ) பருவநிலை **விடை: ஈ) பருவநிலை**

www.kalviexpress.in www.kalviexpress.in



4. **கூற்று 1 : கதிரவனைச் சுற்றியுள்ள கோள்களில் புவியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த சூழ்நிலை நிலவுகிறது.**

**கூற்று 2 : மழைப்பொழிவு என்ற இயற்கை நிகழ்வின் மூலம் மண்பரப்பில் நீர்நிறைந்து தாவர உயினங்கள், விலங்கினங்கள் தோன்றின.**

அ) கூற்று (1) சரி கூற்று (2) தவறு ஆ) கூற்று (1) தவறு, கூற்று (2) தவறு

இ) கூற்று (1) தவறு, கூற்று (2) தவறு ஈ) கூற்று (1) சரி, கூற்று (2) சரி

**விடை: ஈ) கூற்று (1) சரி, கூற்று (2) சரி**

5. **'உயிரினங்கள் அனைத்தும் ஒரு குழுவாக ஒன்றையொன்று சார்ந்து வாழும் உணவுச்சங்கிலியே இயற்கைச் சமநிலை'. - இத்தொடருக்கேற்ற வினாத்தொடரைத் தேர்ந்தெடு.**

அ) உணவுச் சங்கிலி என்பது யார்?

ஆ) உயிரினங்கள் அனைத்தும் ஒரு குழுவா?

இ) இயற்கைச் சமநிலை என்பது யாது?

ஈ) உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றனவோ?

**விடை: இ) இயற்கை சமநிலை என்பது யாது?**

6. **கூற்று : ஆர்டிக் பகுதி, கடந்த முப்பது ஆண்டுகளில் நான்கு இலட்சம் சதுர மைல்கள் உருகியுள்ளது.**

**காரணம் : இதற்குப் புவிவெப்பமாதலே காரணமாகும்.**

அ) கூற்றும் காரணமும் தவறு ஆ) கூற்றும் காரணமும் சரி

இ) கூற்று மட்டும் தவறு ஈ) காரணம் மட்டும் தவறு

**விடை: ஆ) கூற்று மட்டும் தவறு**

7. **இந்திய வானிலை ஆய்வுத்துறையினர், கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்த ஆண்டு________.**

அ) 2009 ஆ) 2019 இ) 2008 ஈ) 2018

**விடை: அ) 2009**

8. **வெள்ளச் சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய ________.**

அ) காப்பரண் ஆ) மதில் இ) கரை ஈ) மதகு

**விடை: அ) காப்பரண்**

9. **தமிழக நிலப்பரப்பில், விடுதலைக்கு முன்பு இருந்த நீர்நிலைகள் ஏறத்தாழ ______ இப்போது இருப்பன ______.**

அ) 20,000, 10,000 ஆ) 50,000, 10,000

இ) 10,000, 20,000 ஈ) 50,000, 20,000

**விடை: ஈ) 50,000, 20.0000**

10. **நிலத்தடி நீர்மட்டத்தைப் தக்க வைத்துக் கொள்வதில் இன்றியமையாத பங்கு வகிப்பது ________.**

அ) நீர் ஆ) மணல் இ) ஆறு ஈ) ஏரி

**விடை: ஆ) மணல்**

11. **கடற்கரை ஓரங்களில் வளர்க்க வேண்டிய காடுகள் ________.**

அ) வெப்ப மண்டலக்காடுகள் ஆ) மித வெப்பமண்டலக் காடுகள்

இ) சதுப்பு நிலக் காடுகள் ஈ) கரிசல் நிலக் காடுகள்

**விடை: ஈ) சதுப்புநிலக்காடுகள்**



www.kalviexpress.in www.kalviexpress.in

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

**ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்**

- பசுமைக்குடில் வாயுக்களுக்கு மாற்று ஆற்றலான காற்று ஆற்றலைப் பெற வழிவகுக்கும்.
- காற்றில் கலந்துள்ள மாசுக்களை மறையச் செய்யும்.
- உயிர் வளியைப் பெருகச் செய்யும்.
- சாலையோரங்களில் மரம் நடுவதால் மண்ணரிப்பைத் தடுக்கிறது.
- இதுபோன்ற மரங்களின் பயன்களையெல்லாம் 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக வலியுறுத்துவேன்.

**2. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.**

**இரு தொடர்களாக்குதல்**

- மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தினான்.
- மனிதன், இயற்கை வளங்களைச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

### அகநிலை வினாக்கள்

**1. பேரிடர் போன்ற மாறுபட்ட நிகழ்வுகள் ஏன் நடக்கின்றன?**

**சமநிலை :**

- இயற்கையானது சமநிலையோடு இருந்தால் தான், அந்தந்தப் பருவநிலைக்கேற்ற நிகழ்வுகள் நடக்கும்.

**மாறுபட்ட நிகழ்வுகள் :**

- இயற்கை சமநிலையை இழக்கும் போது இயல்பான பருவநிலையில் மாற்றம் ஏற்படுகிறது.
- இதன் காரணமாகப் புயல், பெருமழை, பெருவெள்ளம் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கின்றன.

**2. புயலுக்கு பெயர் வைக்கும் கூட்டமைப்பு முறை பற்றி எழுதுக**

**கூட்டமைப்பு :**

- சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், வங்கக் கடலிலும் அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைப்பதற்குக் 'கூட்டமைப்பு' ஒன்றை உருவாக்கியுள்ளது.

**புயலுக்குப் பெயர்:**

- இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மர், ஓமன், தாய்லாந்து ஆகிய எட்டு பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கின்றன.
- அந்தப் பட்டியலிலுள்ள 64 பெயர்களின் வரிசைப்படி தான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

**3. புவி வெப்பமடைதல் பற்றி டேவிட் கிங் என்ற அறிவியல் கருத்தாளரின் கருத்து யாது?**

**புவி வெப்பமடைதல் :**

- இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் 'புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே' என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

**4. பசுமைக்குடில் வாயுக்கள் என்பவை யாவை?**

**பசுமைக்குடில் வாயுக்கள் :**

- கார்பன் - டை - ஆக்ஸைடு
- மீத்தேன்
- நைட்ரஸ் ஆக்ஸைடு
- ஓசோன்
- நீர் வாயு

**5. கார்பன் அற்ற ஆற்றல்கள் யாவை?**
**கார்பன் அற்ற ஆற்றல்கள்:**
- சூரிய ஆற்றல்
- காற்று ஆற்றல்
- ஹைட்ரஜன் ஆற்றல்
- தாவர ஆற்றல்

**6. பசுமைக் குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகள் கொண்டுள்ள நாடுகள் யாவை?**
**முன்னணியில் உள்ள நாடுகள் :**
- பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளில் சீனா, அமெரிக்க, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன
- இந்தப் பட்டியலில் இந்தியாவும் உள்ளது.

**7. வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையன யாவை?**
**வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்துவன :**
- உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளச் சமவெளிகளும் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையனவாகும்.

**8. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணமென்ன?**
**வெள்ளச் சமவெளிகள் :**
- ஆற்றில் பாறைகள் தெரியும் அளவிற்கு மணல் அள்ளியதன் விளைவாக வெள்ளச் சமவெளிகள் அழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்படுகிறது.
- கடந்து நாற்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85 சதவீதம் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்டவையே.
- இதற்கு, மணல் அள்ளுவதும் ஒரு காரணம் ஆகும்.

**9. வெள்ளப் பாதிப்பின் போது நாம் செய்ய வேண்டிய உதவிகள் யாவை?**
**உதவிகள்:**
- வெள்ளப் பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்டெடுத்தல்
- முகாம்கள் அமைத்தல்
- அடிப்படை வசதிகளை உண்டாக்குதல்
- உணவு வழங்குதல்
- மருத்துவ உதவிகளைச் செய்தல்

## II. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**
**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் :**
- பேரிடர்க் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.
- நீர்வழிப்பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.
- சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும்.
- கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக்காடுகளை வளர்த்தல் வேண்டும்.

**9. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.**
**தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்:**
- நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

**பேரிடர்களின் போது உதவும் ஆணையம்:**

➢ புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீவிபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துக்கள் முதலான பேரிடர்கள் நிகழும் போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் உதவுகிறது.

**குழுக்கள் :**

➢ மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற, பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.

## அகநிலை வினாக்கள்

**1. புவி வெப்பமடைவது இயற்கையாக நேர்கிறதா? மனிதர்களது செயல்பாடுகளால் நேர்கிறதா?**

➢ புவி வெப்பமடைவது மனிதர்களது செயல்பாடுகளால் தான் நேர்கிறது.

**மனிதனின் பேராசை :**

➢ மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

**டேவிட் கிங்–இன் கருத்து :**

➢ இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் கருத்தாளர் டேவிட் கிங் 'புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே' என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

**ஆர்டிக் பகுதி உருகுதல் :**

➢ ஆர்டிக் பகுதி, கடந்த முப்பது ஆண்டுகளில் நான்கு இலட்சம் சதுர மைல்கள் உருகியுள்ளது.

➢ இதற்குப் புவி வெப்பமாதலே காரணமாகும்.

---

**2. புவி வெப்பமயமாதலுக்கும் தட்ப வெப்பநிலை மாற்றங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு யாது?**

**பசுமைக் குடில் வாயுக்கள் :**

➢ கார்பன் டை ஆக்ஸைடு
➢ மீத்தேன்
➢ நைட்ரஸ் ஆக்ஸைடு
➢ ஓசோன்
➢ நீர்வாயு

போன்றவற்றைத்தான் 'பசுமைக்குடில்' வாயுக்கள் என்கிறார்கள்.

**தட்ப வெப்பநிலை மாற்றம் :**

➢ பசுமைக்குடில் வாயுக்களின் அளவு அதிகமாக அதிமாகப் புவி வெப்பமடையத் தொடங்குகிறது.

➢ இதனால், காலநிலை மாறுதல்கள் ஏற்பட்டுப் புவியின் இயக்கம் குறைந்து வருகிறது.

**கார்பன் அற்ற ஆற்றல்களின் பயன்பாடு :**

➢ மாற்று ஆற்றல்களாக விளங்கக்கூடிய சூரிய ஆற்றல்.
➢ காற்று ஆற்றல்
➢ ஹைட்ரஜன் ஆற்றல்
➢ தாவர ஆற்றல்

⟶ போன்ற கார்பன் அற்ற ஆற்றல்களின் பயன்பாட்டை நோக்கி உலக நாடுகள் சென்றால் மட்டுமே நிலைமையை ஓரளவேனும் கட்டுப்படுத்த முடியும்.

---

**3. உலக நாடுகள் ஒன்றிணைந்து புவிவெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன?**

**காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவை:-**

➢ ஐக்கிய நாடுகள் அவை 1992 ஆம் ஆண்டு ரியோ டி ஜெனிரோவில் 'கால நிலை மாற்றம்' பற்றிய பணித்திட்டப் பேரவையை'யை உருவாக்கியது.

**உறுப்பினராக இருக்கும் நாடுகள் :**

- இந்த அமைப்பில் தொடக்கத்தில் 50 நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன.
- பின்னர், இந்த எண்ணிக்கை 193 நாடுகளாக உயர்ந்தது.

**நடவடிக்கைகள் :**

- ஒவ்வோர் ஆண்டும் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்த உரையாடல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பட்டியலில் இந்தியா :**

- பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைக் கணக்கெடுத்தால் சீனா, அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகள் முன்னணியில் உள்ளன.
- இந்தப் பட்டியலில் இந்தியாவும் இடம்பெற்று உள்ளது.

**4. புவி வெப்பமாதலால் ஏற்படும் கேடுகள் நம் எதிர்கால வாழ்வையும் வரும் தலைமுறையையும் அச்சுறுத்துவதாக இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்படுகிறதா? அது குறித்து விளக்குக?**

- ஆம், எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

**இந்திய வானிலை ஆய்வுத் துறையினர்:**

- இந்திய வானிலை ஆய்வுத் துறையினர் 2009 - ஆம் ஆண்டைக் கடந்த 110 ஆண்டுகளில் மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர்.

**உலகம் வெள்ளத்தால் சூழப்படும் அபாயம்:**

- 2001-ஆம் ஆண்டிற்குப் பிறகு புவியின் வெப்பம் ஆண்டிற்கு ஆண்டு உயர்ந்து கொண்டே போகிறது.
- இவ்வாறு புவியின் வெப்பம் உயர்ந்து கொண்டே போனால் அடுத்த 50 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் உயர்ந்து உலகத்தில் 200 கோடி மக்கள் வெள்ளத்தால் சூழப்படுவர் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**இயற்கை சமநிலை பாதிப்பு :**

- புவி வெப்பமாதல் காரணமாக உலகின் சமநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

**மனித சமூகத்தின் பொறுப்பு :**

- உலகில் நாற்பது விழுக்காடு மக்கள் தண்ணீர்ப் பற்றாக்குறையோடு வாழ்ந்து வருகிறார்கள்.
- நாளுக்கு நாள் பெருகி வரும் தேவைகளுக்காக இயற்கை வளங்களை அளவுக்கதிமாகப் பயன்படுத்தி வருகிறோம்.
- அதனாலேயே, இயற்கைச் சமநிலை குலைந்து பேரிடர் ஏற்படுகிறது.
- இவற்றைச் சரி செய்ய வேண்டிய பொறுப்பு மனித சமூகத்திற்கு உண்டு.

**5. பெருமழைக்காலங்களில் நகரங்கள் ஏன் வெள்ளத்தில் மிதக்கின்றன?**

**இயற்கை அமைந்திருக்கும் ஏற்பாடுகள் :**

- இயல்பாகவே பெருமழையைத் தாங்கக்கூடிய குளம், குட்டை, ஏரி, ஆறு, வடிகால், வாய்க்கால்கள், வெள்ளச் சமவெளிகள் போன்ற ஏற்பாடுகளை இயற்கை அமைத்திருக்கிறது.

**நீர் நிலைகளை அழிந்து இடையீடு செய்தவை :**

- நாம் இந்த இயற்கையின் அமைப்பில் இடையீடு செய்து நீர்நிலைகளை அழித்து
  - ☐ குடியிருப்புகள் ☐ தொழிற்சாலைகள் ☐ கல்வி நிறுவனங்கள்
  - ⟶ போன்றவற்றை உருவாக்கிக் கொள்கிறோம்.

**வெள்ளச் சமவெளிகளை அழித்தல் :**

- நெகிழி மற்றும் திடக்கழிவுகளைக் கொட்டி நீர்வழிப்பாதைகளைக் குறுக்கி வெள்ளச் சமவெளிகளை இல்லாமல் செய்து விடுகிறோம்.



www.kalviexpress.in

**வெள்ளத்தில் மிதக்கும் நகரம் :**

- இயற்கை அமைப்புகளையும் வெள்ளச் சமவெளிகளையும் அழித்ததன் விளைவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிர், உடைமை இழப்புகள் ஏற்படுகின்றன.
- இதனால், பெருமழைக்காலங்களில் நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

---

**6. வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையன யாவை? அவற்றின் பயன்கள் குறித்து எழுதுக.**

**வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்துவன:**

- உபநீர்க் கால்வாய்களும் வெள்ளச் சமவெளிகளும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையன.

**உபநீர்க் கால்வாய்களின் பயன்கள்:**

**நீர் மேலாண்மை அமைப்பு :**

- தமிழ்நாட்டில் மழைக்காலங்களில் பெறும் நீரைச் சேமித்து வைக்கும் 'நீர் மேலாண்மை அமைப்புகள்' இருந்தன.

**பயன்கள் :**

- உபரிநீர்க் கால்வாய்களை அமைத்திருப்பது வெள்ளங்காலங்களில் உதவியாக இருக்கும்.

**வெள்ளச் சமவெளிகளின் பயன்கள் :**

**காப்பரண் :**

- வெள்ளச் சமவெளி என்பது ஆற்றின் நீரோட்ட வழியில் இயற்கை உருவாக்கிய காப்பரண்.

**ஆற்றங்கரைப் படிவு :**

- ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில் அடித்து வரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்து விடும். இது, ஆற்றங்கரைப்படிவு எனப்படும்.

**அடுக்குப்படிவம் :**

- இதில் படிகின்ற பொருள்களால் ஆற்றுச் சமவெளியில் அடர்த்தியான மணலாலும் சேற்றினாலும் அடுக்குப்படிவம் உருவாகும்.

**பயன்கள் :**

- இந்தப் படிவம் வெள்ளப்பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும்.
- நீர் மாசடைவதைத் தடுக்கும்.
- மண் அரிப்பைத் தடுக்கும்.
- வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்து விடாமல் பாதுகாக்கும்.

---

**7. ஆற்றில் மணல் அள்ளியதால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?**

**வெள்ளப் பெருக்கு ஏற்படுதல் :**

- ஆற்றில் பாறைகள் தெரியும் அளவிற்கு மணல் அள்ளியதன் விளைவாகத்தான் வெள்ளச் சமவெளிகள் அழிந்து வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது.
- கடந்த நாற்பது ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட பேரிடர்களில் 85 சதவீதம் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்டவையே.
- இதற்கு மணல் அள்ளுவதும் ஒரு காரணம் ஆகும்.

**புள்ளி விவரங்கள் :**

- தமிழக நிலப்பரப்பில், ஏறத்தாழ ஐம்பதாயிரம் நீர்நிலைகள் இருந்தன. இன்றைக்கு அது, வெறும் இருபதாயிரமாகக் குறைந்து போயுள்ளது.

- சென்னை, மதுரை ஆகிய மாநகரங்களைச் சுற்றி மட்டுமே ஏறத்தாழ ஐந்நூறு ஏரிகள், குளங்கள் காணாமல் போய்விட்டன.
- இருக்கின்ற நீர்நிலைகளிலும் பேணப்படாமல் தூர்ந்து கிடக்கின்றன.

**நிலத்தடி நீர் மட்டம் குறைதல் :**

- நிலத்தடி நீர்மட்டமும் ஆண்டுக்கு ஆண்டு குறைந்து இலட்சக்கணக்கான ஏக்கர் விளைநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

**மணலின் பங்கு :**

- நிலத்தடி நீர் மட்டத்தைத் தக்க வைத்துக் கொள்வதில் மணலின் பங்கு இன்றியமையாதது.

**எதிர்மறை விளைவுகள் :**

- அளவுக்கதிகமாக மணலை எடுத்துப் பயன்படுத்தியதன் விளைவாக நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து நீரோட்டத்தில் தடை ஏற்பட்டு ஏராளமான எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டுள்ளன.
- இந்நிலை தொடர்ந்தால் வேளாண்மைத் தொழில் இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

**8. பேரிடர் வந்து விட்டால் நாம் மேற்கொள்ள வேண்டியவை பற்றி எழுதுக.**

**பேரிடர் வந்து விட்டால் நாம் மேற்கொள்ள வேண்டியவை :**

- பதற்றடைதலைத் தவிர்த்து, வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல், மழை தொடர்பான தகவல்களின் அடிப்படையில் மக்கள் செயல்பட வேண்டும்.
- வதந்திகளை நம்பவோ, பரப்பவோ கூடாது.
- அரசு, தீயணைப்புத்துறை, காவல்துறை, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் மீட்பு மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட வேண்டும்.
- பாதுகாப்பு மையங்களையும் மருத்துவக்குழுக்களையும் அணியமாக வைத்திருக்க வேண்டும்.

**9. மழையைக் கணிக்கும் அறிகுறிகள் யாவை?**

**மழையைக் கணிக்கும் அறிகுறிகள் :**

- கார்மேகங்கள்
- செம்மை நிற மேகங்கள்
- திடீர்ப் புயல்
- காற்றின் திசை
- இடி
- மின்னல்
- பலமான காற்று
- வானவில்
- முட்டைகளைச் சுமந்து செல்லும் எறும்புகள்
- பறக்கும் பருந்து
- சூரியனைச் சுற்றிக் காணப்படும் ஒளிவட்டம்
- வெப்பமும் ஈரப்பதமுமான வானிலை
- தூசுப் பனிமூட்டம்

⟶ இவையே குஜராத்தில் உள்ள ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மழையைக் கணிக்கும் அறிகுறிகளாகக் குறிப்பிடுபவை ஆகும்.

## IV. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

### கலந்துரையாடல்

**சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன்**
**நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து**
**என்னும் தலைப்பிலான கலந்துரையாடல்**

**சுற்றுச்சூழல் ஆர்வலர் : பசுமைதாசனார்**

**பங்கேற்பாளர்கள்** **: கண்ணுக்கினியாள், காவியா, புகழேந்தி**

**கண்ணுக்கினியாள் :** அனைவருக்கும் வணக்கம்!

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளோடும் பின்னிப்பிணைந்ததே தமிழர் வாழ்க்கை. ஐந்திணைகளோடும் தொடர்பு கொண்ட தமிழர் தம் வாழ்க்கைக்கு அகம், புறம் என இலக்கணம் வகுத்தனர். சங்க காலத்தில் இத்தகு நிலத்தின் சிறப்போடு இலக்கிய இலக்கணங்கள் தோன்றின. ஆனால் அத்தகு பெருமைக்குரிய நிலத்தின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமாகவே உள்ளது. நிலத்தின் இயற்கை வறம் அழிந்து போனதைக் குறித்து நம்முடன் கலந்துரையாட சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாரும் வந்துள்ளார்கள். அவர்களிடம் தொடர்ந்து பேசுவோம்.

**சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனார் :**

இயற்கையை நாம் அழித்துக் கொண்டு வருவதே பலவிதமான மாறுதல்களுக்கும் பேரழிவுகளுக்கும் காரணமாக விளங்குகிறது. இயற்கையானது மனித வாழ்விற்கு நன்மையைத் தருவதாகவும் பாதுகாப்பாகவும் மட்டுமே இருந்துள்ளது அவற்றைச் சீரழித்ததன் விளைவாகவே நாம் இன்று பேரிடர்களைச் சந்தித்து வருகிறோம்.

**காவியா :**

நிறத்தின் அடிப்படையில் ‘செம்மண் நிலம்’ எனவும், தன்மையின் அடிப்படையில் ‘களர் நிலம்’ எனவும், சுவையின் அடிப்படையில் ‘உவர் நிலம்’ எனவும் நிலத்தைத் தமிழர் வகைப்படுத்தி, அதன் பயன் கருதி போற்றினர். சங்கப் பாடல்களும் நிலத்தின் பகுப்பைப் புகழ்ந்து பாடின.

ஆனால், நெகிழி என்னும் அரக்கன் நம் வாழ்வில் புகுந்த பின்பு தான், நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாத அளவிற்கு அழிவுகளைச் சந்திக்க நேரிட்டது. காரணம் தாம் என்ன?

**பசுமைதாசனார் :**

நெகிழி பல ஆண்டுகளாக மட்காமல் இருப்பதோடு மண்ணையும் மலடாக்கி விடுகிறது. மழைநீரைப் பூமிக்குள் செல்லவிடாமல் தடுக்கிறது. இதனால் பூமி வறண்டு நிலத்தடி நீர்மட்டம் குறைகிறது. மரங்களின் வளர்ச்சிக்கும் தடையாக இருக்கிறது. விலங்குகள், பறவைகள் மூலம் மரங்கள் வெட்ட வெளிகளில் பரவி பின்பு அடர்ந்த காடாக மாறும். இப்போது அவற்றிற்கெல்லாம் வழியில்லாமல் நெகிழிகள் தடுத்து விடுகின்றன. நிலத்தடி நீர்மட்டம் குறைவதால் பூமி வறண்டு இயற்கையான காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. நெகிழிகளை எரிப்பதால் பலவிதமான அசுர நோய்கள் பரவுகின்றன. சுற்றுப்புற மண்டலமும் மாசுபடுகிறது.

**புகழேந்தி :**

***காட்டு வளமே நாட்டு வளம்!***
***காட்டின்றேல் நாடில்லை!***

⟶ என்பதற்கேற்ப காடுகள் அழிவதால் ஏற்படும் தீயவிளைவுகள் குறித்து மக்கள் அறிந்துள்ளார்களா? ‘மரம் வளர்க்க வேண்டும்’ என்ற விழிப்புணர்வு மக்களிடையே பரவி வருகிறதா! ஐயா!

**பசுமைதாசனார் :**

இலவசத்தை தேடி ஓடிச் செல்லும் மனிதன் உயிர்வளியை இலவசமாகத் தருவது மரம் தான் என்பதை மறந்தான் போலும்!

மக்களின் பெருக்கத்திற்கேற்ப தேவைக்கேற்ப நாம் இன்னும் அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டும். மாறாக அவற்றை அழித்து வருவது நமக்கு நாமே இட்டுக் கொள்ளும் கொள்ளி ஆகும்.

மரங்கள் பெருகினால் தான் மழைவளம் பெருகும். மழைவளம் பெருகினால் தான் நம் மண்வளம்

பெருகும். நிலத்தடி நீர்மட்டும் உயரும். தரிசு நிலமெல்லாம் விளைநிலங்களாக மாறும். இயற்கையான ஆற்றின் வழித்தடத்தில் கட்டுமானங்கள் இல்லையென்றால் இயற்கையே நம்மை பேரழிவிலிருந்து காத்துக் கொள்ளும். மண்வளத்தை அழித்து வரும் நெகிழியை நாம் முழுவதுமாக கைவிட்டாலொழிய நம் நிலம் செழிக்காது.

**கண்ணுக்கினியாள் :**

நெகிழியைத் தவிர்த்தோமோனால் மீண்டும் ஒரு வசந்த காலம் நம் மண்ணில் மலரும் என்பதில் ஐயமில்லை. நெகிழியைத் தவிர்த்து வாழ்ந்தால் தான் நம் எதிர்காலத் தேவைகளும். நம் வருங்கால சந்ததியினரும் நலமுடன் வாழ முடியும். எனவே, 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்துவோம்'. இந்த கலந்துரையாடலில் பங்கேற்றவர்களுக்கு உளமார்ந்த நன்றி!

## கற்பவை கற்றபின்

**1. ஜீன் 5, உலகச்சுற்றுச் சூழல் நாள். இந்நாளில் பள்ளியின் கூட்டத்தில் ஏற்க வேண்டிய உறுதிமொழியை உருவாக்குக.**

**உறுதிமொழி**

- மரங்களை அழிக்க மாட்டோம்.
- வருடத்திற்கு இரண்டு மரக்கன்றுகளையாவது நட்டுப் பராமரிப்பேன்.
- நெகிழிப் பொருட்களைப் பயன்படுத்த மாட்டேன்
- பிறர் நெகிழியைப் பயன்படுத்தாமல் இருக்க வலியுறுத்துவேன்.
- மிதிவண்டியைத் தினமும் பயன்படுத்துவேன்.
- மழைநீர் தொட்டி அமைத்து நிலத்தடி நீர்மட்டம் உயரச் செய்வேன்.

### கவிதைப்பேழை

# 2. செய்யுள் : பிறகொரு நாள் கோடை

**- அய்யப்ப மாதவன்**

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | வெளிச்சம் | → | ஒளி |
| 2. | நீர்நிலைகள் | → | அணை, ஆறு, ஏரி மற்றும் குளங்கள் |
| 3. | சுவடுகள் | → | தடங்கள் |
| 4. | தோய்கிறது | → | மறைகிறது |
| 5. | உதறுகிறது | → | வெளியேற்றுகிறது |
| 6. | பீறிட | → | வெளிவர |
| 7. | வெறித்துக்கொண்டு | → | ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு |
| 8. | அலைகிறேன் | → | வீணாய்த் திரிகிறேன் |
| 9. | பிறகொருநாள் | → | மற்றொரு நாள் / இன்னொரு நாள் |

www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



# நம்மை அளப்போம்

## I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது**

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள் **விடை: இ) மழைத்துளிகள்**

### அகநிலை வினாக்கள்

1. **நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்த கவிஞர் ________.**

அ) நக்கீரர் ஆ) உத்தம சோழன்
இ) அய்யப்ப மாதவன் ஈ) டேவிட் கிங்

**விடை: இ) அய்யப்ப மாதவன்**

2. **அய்யப்ப மாதவனின் கவிதைக் குறும்படம் ________.**

அ) அறம் ஆ) இன்று இ) அன்று ஈ) பிறகொருநாள்

**விடை: ஆ) இன்று**

3. **அய்யப்ப மாதவன் இயங்கும் துறைகள் ________.**

அ) இதழியல் துறை, பத்திரிகைத்துறை ஆ) திரைத்துறை, இலக்கியத்துறை
இ) கலைத்துறை, அறநிலையத்துறை ஈ) இதழியல் துறை, திரைத்துறை

**விடை: ஈ) இதழியல் துறை, திரைத்துறை**

4. **மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி - முதலான கவிதை நூல்களை வெளியிட்டுள்ளவர்**

அ) அய்யப்ப மாதவன் ஆ) உத்தம சோழன்
இ) நக்கீரர் ஈ) மாதவன் **விடை: அ) அய்யப்ப மாதவன்**

5. **நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சியது ________.**

அ) வான் மேகங்கள் ஆ) ஒளிக்கதிர்கள்
இ) மழைத்துளிகள் ஈ) நிலவுக்கதிர்கள்

**விடை: ஆ) ஒளிக்கதிர்கள்**

6. **சுவரெங்குமிருந்த ________ அழிந்ததால் வருத்தம் தோய்ந்தது**

அ) ஒளிக்கதிர்கள் ஆ) மழைத்துளிகள்
இ) நீர்ச்சுவடுகள் ஈ) ஈரமான மரங்கள்

**விடை: இ) நீர்ச்சுவடுகள்**

7. **மிதமான சொட்டுக்களைத் தலையசைத்து உதறியது ________.**

அ) ஈரமான மரங்கள் ஆ) வெயில் கண்ட பறவைகள்
இ) மழை மேகங்கள் ஈ) வீணை மீட்டும் விரல்கள்

**விடை: அ) ஈரமான மரங்கள்**

8. **உற்சாகம் பீறிட சங்கீதம் இசைத்தவை ________.**

அ) ஈரமான மரங்கள் ஆ) வீணை மீட்டும் விரல்கள்
இ) கை ஏந்தி வாங்கிய துளிகள் ஈ) வெயில் கண்ட பறவைகள்

**விடை: ஈ) வெயில் கண்ட பறவைகள்**



www.kalviexpress.in www.kalviexpress.in

**9. வீட்டுச்சுவரில் செங்குத்தாய் இறங்கிய மழையை, நான் வழிய விட்டுக் கொண்டிருப்பது ________.**

அ) இதயத்தினுள் ஆ) கனவினுள்

இ) கோடையில் ஈ) வீணை மீட்டும் விரல்கள்

**விடை: அ) இதயத்தினுள்**

**10. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருந்தது ________.**

அ) கை ஏந்தி வாங்கிய துளிகள் ஆ) வெயில் கண்ட பறவைகள்

இ) ஈரமான மரங்கள் ஈ) மழைக்காலத்தில்

**விடை: அ) கை ஏந்தி வாங்கிய துளிகள்**

**11. போன மழை திரும்பவும் வருமென்று நான் வெறித்துப் பார்த்தது ________.**

அ) ஈரமான மரங்களை ஆ) மேகங்களை

இ) மழைக்கனவை ஈ) வீட்டுச்சுவரை **விடை: ஆ) மேகங்களை**

**12. வந்து விட்டது பிறகொரு நாள் ________.**

அ) குளிர் ஆ) மழை இ) கோடை ஈ) ஈரம்

**விடை: இ) கோடை**

## II. குறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக**

**'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' :**

- மழைக்காலத்தில் நனைந்திருந்த பகுதிகள் எல்லாம் மழைக்காலம் முடியும் வேளையில் சூரியனின் ஒளிக்கதிர்களால் காய்ந்து விட்டது.
- மழைக்காலம் முடிந்து கோடை தொடங்கியதும் நனைந்திருந்தவை எல்லாம் காய்ந்து விட்டதால் வெளிச்சம் வெயிலாகப் பரவிக் காணப்பட்டது.

→ இதனையே கவிஞர் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது என்கிறார்.

### அகநிலை வினாக்கள்

**1. எதனால் வருத்தம் தோய்ந்தது?**

**வருத்தம் தோய்கிறது :**

- சூரியனின் ஒளிக்கதிர்கள் பட்டவுடன் மழையினால் சுவரெங்குமிருந்த நீர்ச்சுவடுகள் அழிந்ததால் மனதில் உள்ள வருத்தம் தோய்ந்தது.

**2. வெயிலைக் கண்ட மரங்களும் பறவைகளும் என்ன செய்தன?**

**ஈரமான மரங்கள் :**

- மழைக்காலத்தில் தம் இலைகளில் வழிந்திருந்த ஈரமான மரங்கள் தற்போது வெயிலைக் கண்டவுடன் மகிழ்ச்சியில் தன் தலையை அசைத்து இலையிலுள்ள சொட்டுக்களை உதறிவிடுகிறது.

**வெயில் கண்ட பறவைகள் :**

- வெயிலைக் கண்டதும் பறவைகள் உற்சாகம் வெளிவர சங்கீதம் இசைத்துக் கொண்டு சுறுசுறுப்பாகத் தம் இரையைத் தேடி மரத்தை விட்டுப் பறந்து சென்றன.

3. **கவிஞரின் இதயத்தினுள் வழிந்து கொண்டிருந்தது எது?**

**இதயத்தினுள் வழிய விடுதல் :**

- மழையிலிருந்து விடுபட்டு ஊர் முழுவதும் வெயில் தொடங்கினாலும், தன் வீட்டுச் சுவரில் செங்குத்தாய் இறங்கிய மழையை கவிஞர் இன்னும் தன் இதயத்தினுள் வழிய விட்டுக் கொண்டிருக்கிறார்.

4. **நரம்புகளுக்கள் வீணை மீட்டியது எது?**

**நரம்புகளுக்குள் மீட்டும் வீணை :**

- மழைக்காலங்களில் கை ஏந்தி வாங்கிய துளிகள் கோடை தொடங்கிய பின்பும் அதன் நினைவுகள், தம் நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது.

5. **வெறித்துக் கொண்டு கவிஞர் அலைவதேன்?**

**நெஞ்சின் ஏக்கம் :**

- வெயில் கண்டு மகிழ்ந்தாலும் மீண்டும் மழைக்காக நெஞ்சம் ஏங்கத்தான் செய்கிறது.
- போன மழை திரும்பவும் வருமென்று மேகங்களை வெறித்துக் கொண்டு அலைகிறேன் என்கிறார் கவிஞர்.

6. **அய்யப்ப மாதவனின் கவிதை நூல்கள் யாவை?**

**கவிதை நூல்கள் :**

- மழைக்குப் பிறகும் மழை
- நானென்பது வேறொருவன்
- நீர்வெளி

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. ***'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்'*** **- இக்கவிதையின் அடி.**

**'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

**நயவுரை :**

**'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்ற நாட்டுப்புற பாடலில்,**

- பொழுது புலராத காலை வேளையில் இரவு முழுவதும் நிலவின் குளிர்ச்சியில் புல், செடி, கொடி முதலானவற்றில் பனிநீர் படர்ந்து காணப்படும்.
- பொழுது புலர்ந்த பின்பு சூரியக் கதிர்களின் ஒளி அந்நீரை உறிஞ்சிக் கொள்ளும். பனி மறைந்து விடும்.
- நிலவின் பனிப்பொழிவு முடிந்து சூரியனின் வெப்பக் கதிர்கள் பரவி விட்டது என்பதை இவ்வரிகள் நயமாக எடுத்துரைக்கின்றது.

*'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து*
*உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்'*

→ இக்கவிதையில்,

- மழைக்காலங்களில் நிரம்பி வழிந்து குளிர்ச்சியாக இருந்தன நீர்நிலைகள்.
- தற்போது கோடைக்காலம் தொடங்கியவுடன் சூரியனின் ஒளிக்கதிர்கள் பட்டவுடன் நீர்நிலையிலுள்ள நீர் ஆவியாகின்றன. அந்த அளவிற்கு வெயிலின் தாக்கத்தைக் குறிப்பிடுகிறது இவ்வரிகள்.
- மழைக்காலம் முடிந்து கோடை தொடங்கிவிட்டது என்பதை இவ்வரிகள் நயமாக உணர்த்துகிறது.

## அகநிலை வினாக்கள்

1. **மழைக்கனவிலிருந்து ஊர் எவ்வாறு விடுபடுகிறது?**

**நீர்நிலைகள் :**

மழைக்காலங்களில் நீர் தேங்கி நிரம்பி வழிந்த நீர்நிலைகள் யாவும் வெயில் காலம் தொடங்கியவுடன் சூரியனின் ஒளிக்கதிர்கள் பட்டதும் ஆவியானதால் நீர் குறைந்து விட்டது.

**நீர்ச்சுவடுகள் :**

வீட்டின் சுவரெங்குமிருந்த மழைநீரின் தடங்கள் யாவும் வெயில் பட்டவுடன் மறைந்து போயின.

**ஈரமான மரங்கள் :**

மழைக்காலங்களில் ஈரமான மரங்களின் இலைகளில் தங்கியிருந்த நீர்ச்சொட்டுக்களையெல்லாம் வெயில் பட்டவுடன் மகிழ்ச்சியில் தன் தலையை அசைத்து உதறுகிறது.

**வெயில் கண்ட பறவைகள் :**

மழைக்காலங்களில் இரை தேட வழியின்றி மரத்திலுள்ள தம் கூட்டிலேயே தங்கியிருந்த பறவைகள் யாவும் வெயிலைக் கண்டவுடன் உற்சாகத்தில் சங்கீதம் இசைத்துக் கொண்டு தம் இறையைத் தேடிப் பறந்து சென்றது.

**பட்டை தீட்டிய வெள்ளை வைரம் :**

- இவ்வாறு மழைக்காலத்தில் நனைந்திருந்தவை அனைத்தும் வெயில் காலம் தொடங்கியவுடன் சூரியனின் வரவால் அனைத்தும் காய்ந்து விட்டது.
- மழையில் நனைந்து வெயிலில் காய்ந்ததால் நகரமே பளபளபத்தது.
- ஒளிக்கதிரால் வெளிச்சம் பரவி நகரம் முழுவதும் வெயில் காணப்பட்டதால் 'பட்டை தீட்டிய வெள்ளை வைரமாக' நகரம் காட்சியளித்தது.

2. **அய்யப்ப மாதவன் - பற்றிக் குறிப்பெழுதுக**

- சிவகங்கை மாவட்டம், நாட்டரசன் கோட்டையைச் சேர்ந்தவர் கவிஞர் அய்யப்ப மாதவன்; இதழியல் துறை, திரைத்துறை சார்ந்து இயங்கி வருபவர்; 'இன்று' என்ற கவிதைக் குறும்படத்தையும் மழைக்குப் பிறகும் மழை, நானென்பது வேறொருவன், நீர்வெளி முதலான கவிதை நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

1. நனைந்திருந்த → பெயெரச்சம்
2. வெள்ளை வைரம் → உருவகம்
3. குவித்து → வினையெச்சம்
4. அழிந்த → பெயரெச்சம்
5. இறங்கிய மழை → பெயரெச்சம்
6. கை ஏந்தி → இரண்டாம் வேற்றுமைத்தொகை
7. ஏந்தி → வினையெச்சம்
8. வாங்கிய துளிகள் → பெயரெச்சம்
9. வெறித்துக் கொண்டு → வினையெச்சம்
10. அலைகிறேன் → தன்மை ஒருமை வினைமுற்று
11. மழைக்கனவு → உருவகம்
12. நீர்ச்சுவடுகள் → உருவகம்
13. உதறுகிறது → ஒன்றன் பால் வினைமுற்று
14. வீட்டுச் சுவரில் → ஏழாம் வேற்றுமைத் தொகை

www.kalviexpress.in www.kalviexpress.in



15. பீறிட → பெயரெச்சம்
16. மீட்டி → வினையெச்சம்
17. இசைக்கின்றன → பலவின் பால் வினைமுற்று
18. உறிஞ்சுகிறது → படர்க்கை ஒருமை வினைமுற்று

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### அகநிலை வினாக்கள்

1) **தீட்டிய** → தீட்டு + இ(ன்) + ய் + அ
- தீட்டு → பகுதி
- இ(ன்) → இறந்த கால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது விகாரம்
- ய் → உடம்படுமெய் சந்தி
- அ → பெயரெச்ச விகுதி

2) **குவித்து** → குவி + த் + த் + அ
- குவி → பகுதி
- த் → சந்தி
- த் → இறந்த கால இடைநிலை
- உ → வினையெச்ச விகுதி

3) **உறிஞ்சுகிறது** → உறிஞ்சு + கிறு + அ + து
- உறிஞ்சு → பகுதி
- கிறு → நிகழ்கால இடைநிலை
- அ → சாரியை
- து → படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி

4) **அழிந்த** → அழி + த்(ந்) + த் + அ
- அழி → பகுதி
- த் → சந்தி, த் – 'ந்' – ஆனது விகாரம்
- த் → இறந்தகால இடைநிலை
- அ → பெயரெச்ச விகுதி

5) **உதறுகிறது** → உதறு + கிறு + அ + து
- உதறு → பகுதி
- கிறு → நிகழ்கால இடைநிலை
- அ → சாரியை
- து → ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

6) **கண்ட** → காண்(கண்) + ட் + அ
- காண் → பகுதி; 'கண்' எனக் குறுகியது விகாரம்
- ட் → இறந்தகால இடைநிலை
- அ → பெயரெச்ச விகுதி

7) **பிறீட** → பீறிடு + அ
- பீறிடு → பகுதி
- அ → பெயரெச்ச விகுதி

8) **வாங்கிய** → வாங்கு + இ(ன்) + ய் + அ
- வாங்கு → பகுதி
- இ(ன்) → இறந்த கால இடைநிலை; 'ன்' புணர்ந்து கெட்டது விகாரம்
- ய் → உடம்படு மெய் சந்தி
- அ → பெயரெச்ச விகுதி

9) **மீட்டி** → மீட்டு + இ
- மீட்டு → பகுதி
- இ → வினையெச்ச விகுதி

10) **ஏந்தி** → ஏந்து + இ
- ஏந்து → பகுதி
- இ → வினையெச்ச விகுதி

11) **அலைகிறேன்** → அலை + கிறு + ஏன்
- அலை → பகுதி
- கிறு → நிகழ்கால இடைநிலை
- ஏன் → தன்மை ஒருமை வினைமுற்று விகுதி



www.kalviexpress.in www.kalviexpress.in

## VI. புணர்ச்சி விதி தருக.

### அகநிலை வினாக்கள்

1) **மழைக்காலம்** ⟶ மழை + காலம்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி,

'க்' ⟶ மிகுந்தது

= மழை + க் + காலம்

⟹ மழைக்காலம் = என்று புணர்ந்தது

2) **திடீர்ப்பயணம்** ⟶ திடீர் + பயணம்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி,

'ப்' ⟶ மிகுந்தது

= திடீர் + ப் + பயணம்

⟹ திடீர்ப்பயணம் = என்று புணர்ந்தது

3) **நனைந்திருந்த** ⟶ நனைந்து + இருந்த

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'

⟶ என்ற விதிப்படி 'உ' நீங்கியது

த் = த் + ~~உ~~

= நனைந்த் + இருந்த

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி

த் + இ = 'தி' ஆனது

= நனைந்திருந்த

= என்று புணர்ந்தது

4) **சுவரெங்குமிருந்த** ⟶ சுவரெங்கும் + இருந்த

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி,

ம் + இ = 'மி' ⟶ ஆனது

= சுவரெங்குமிருந்த

⟹ என்று புணர்ந்தது

5) **ஒளிக்கதிர்கள்** ⟶ ஒளி + கதிர்கள்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி,

'க்' ⟶ மிகுந்தது

= ஒளி + க் + கதிர்கள் = ஒளிக்கதிர்கள்

⟹ என்று புணர்ந்தது

6) **நீர்ச்சுவடுகள்** ⟶ நீர் + சுவடுகள்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்'

⟶ என்ற விதிப்படி,

'ச்' ⟶ மிகுந்தது

= நீர்ச்சுவடுகள் ⟹ என்று புணர்ந்தது

7) **தலையசைத்து** ⟶ தலை + அசைத்து

i) 'இ ஈ ஐ வழி யவ்வும்'

⟶ என்ற விதிப்படி

⟶ 'ய்' – உடம்படுமெய் தோன்றியது

= தலை + ய் + அசைத்து

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

⟶ என்ற விதிப்படி

ய் + அ = 'ய' ⟶ ஆனது

= தலையசைத்து

= என்று புணர்ந்தது

8) **மழைக்கனவு** ⟶ மழை + கனவு

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி,

'க்' ⟶ மிகுந்தது

= மழைக்கனவு ⟹ என்று புணர்ந்தது

www.kalviexpress.in

**9) வீட்டுச் சுவரில்** ⟶ வீடு + சுவரில்

i) ‘நெடிலோடு உயிர்த் தொடர்க குற்றுகரங்களுள் டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே’
⟶ என்ற விதிப்படி
ட் – இரட்டித்தது
= வீட்டு + சுவரில் ⟶ என்றானது

ii) ‘‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’
⟶ என்ற விதிப்படி’
‘ச்’ - மிகுந்தது
= வீட்டுச் சுவரில்
= என்று புணர்ந்தது

**10) கையேந்தி** ⟶ கை + ஏந்தி

i) ‘இ ஈ ஐ வழி யவ்வும்’
⟶ என்ற விதிப்படி
ய் – உடம்படுமெய் தோன்றியது
= கை + ய் + ஏந்தி

ii) ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’
⟶ என்ற விதிப்படி
ய் + ஏ = ‘யே’ ஆனது
= என்று புணர்ந்தது

**11) வருமென்று** ⟶ வரும் + என்று

i) ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’ ⟶ என்ற விதிப்படி,
‘ம் + எ = ‘மெ’ ⟶ ஆனது
= வருமென்று ⟹ என்று புணர்ந்தது

**12) பிறகொரு நாள்** ⟶ பிறகு + ஒரு நாள்

i) ‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’
⟶ என்ற விதிப்படி
‘உ’ – நீங்கியது
கு = க் + ~~உ~~
= பிறக் + ஒரு நாள்

ii) ‘உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’
⟶ என்ற விதிப்படி
க் + ஒ = ‘கொ’ ⟶ ஆனது
= பிறகொரு நாள்
= என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

**1. மழை தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் ஒன்று உருவாக்குக.**

**மழை**

வண்ண மலர்களின் சிரிப்பொலியும், தோகை
விரிக்கும் மயிலின் நடனஒளியும் மண்ணில்
விழும் எந்தன் துளியின் ஒளியால்
விளையும் அற்புத மன்றோ!

எந்த யோசனையு மில்லாமல் நனைய தோன்றிய
உணர்வு கொண்டவர்களுக் காக
கூடுகின்றன மேகங்கள்

முதல் மழையோடு
முடிந்து போவதில்லை வானிலை
அடுத்த சந்திப்பிற்காக காதலோடு
காத்துக் கிடக்கிறது பூமி

சிதறிப்போன வாழ்க்கை
மண்போல கரைந்து விடுகின்றன
மழையில்

கவிதைப்பேழை

# 2. நெடுநல்வாடை

- நக்கீரர்

## சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | புதுப்பெயல் | → புதுமழை | 10. | வலனேர்பு | → வலப்பக்கமாகச் சூழ்ந்து |
| 2. | ஆர்கலி | → வெள்ளம் | 11. | பொய்யா | → தப்பாமல் மழை பொழியும் |
| 3. | கொடுங்கோல் | → வளைந்த கோல் | 12. | கோவலர் | → ஆயர் |
| 4. | புலம்பு | → தனிமை | 13. | மேயல் | → மேய்ச்சல் |
| 5. | கண்ணி | → தலையில் சூடும் மாலை | 14. | மந்தி | → குரங்குகள் |
| 6. | கவுள் | → கன்னம் | 15. | கூர | → நடுங்கின |
| 7. | மா | → விலங்கு | 16. | படிவன வீழ | → நிலத்தில் வீழ்ந்தன |
| 8. | வையகம் | → உலகம் | 17. | கறவை | → பசுக்கள் |
| 9. | பனிப்ப | → குளிருமாறு | 18. | கன்றுகோள் ஒழிய | → கன்றுகளைத் தவிர்த்தன |
| | | | 19. | கூதிர்பானாள் | → குளிர்கால நள்ளிரவு |

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

#### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **பொருத்துக**

| | | |
|---|---|---|
| அ) குரங்குகள் | - | 1. கன்றுகளை தவிர்த்தன |
| ஆ) பசுக்கள் | - | 2. மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| இ) பறவைகள் | - | 3. குளிரால் நடுங்கின |
| ஈ) விலங்குகள் | - | 4. மேய்ச்சலை மறந்தன |

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 2, 4
இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

**விடை: ஆ)** 3, 1, 2, 4

2. **பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு**

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**விடை: ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

## அகநிலை வினாக்கள்

1. பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நூல் ------------.
   அ) புறநானூறு ஆ) அகநானூறு
   இ) நெடுநெல்வாடை ஈ) பதிற்றுப்பத்து

**விடை: இ) நெடுநல்வாடை**

2. மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் ------------.
   அ) நெடுநல்வாடை ஆ) புறநானூறு
   இ) அகநானூறு ஈ) சிறுபாணாற்றுப்படை

**விடை: அ) நெடுநல்வாடை**

3. நெடுநல்வாடை ------------ நூல்களுள் ஒன்று
   அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு
   இ) பதினெனண்கீழ்கணக்கு ஈ) ஐம்பெருங்காப்பியம்

**விடை: ஆ) பத்துப்பாட்டு**

4. நெடுநல்வாடை பாடல்களில் பயின்று வருவது ------------
   அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
   இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**விடை: ஆ) ஆசிரியப்பா**

5. தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ----------- ஆகவும், போர்ப்பாசறையில் இருக்கும் தலைவனுக்கு ----------- ஆகவும் நெடுநல்வாடை அமைந்துள்ளது
   அ) நல்வாடை, நெடுவாடை ஆ) நெடுநல்வாடை, நெடுநல்வாடை
   இ) நெடுவாடை, நெடுவாடை ஈ) நெடுவாடை, நல்வாடை

**விடை: ஈ) நெடுவாடை, நல்வாடை**

6. நெடுநல்வாடை நூலின் அடிகள் -----------
   அ) 185 ஆ) 189 இ) 188 ஈ) 186

**விடை: இ) 188**

7. ஐப்பசி -----------! கார்த்திகை ----------- ! என்பது சொலவடை
   அ) கனமழை, அடைமழை ஆ) அடைமழை, கனமழை
   இ) குளிர்மழை, பனிமழை ஈ) அமிலமழை, பனிமழை

**விடை: ஆ) அடைமழை. கனமழை**

8. பழந்தமிழர் ஓராண்டை ----------- பருவங்களாக வகைப்படுத்தினர்
   அ) நான்கு ஆ) ஆறு இ) ஐந்து ஈ) பத்து

**விடை: ஆ) ஆறு**

9. ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் ----------- பருவம்
   அ) பின்பனி ஆ) முதுவேனில் இ) முன்பனி ஈ) கூதிர்

**விடை: ஈ) கூதிர்**

10. பருவ மாற்றங்களால் முல்லை நில உயிரினங்களின் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்திய மாற்றத்தைப் பதிவு செய்துள்ள நூல் -----------
    அ) அக இலக்கியம் ஆ) அற இலக்கியம் இ) சங்க இலக்கியம் ஈ) புற இலக்கியம்

**விடை: இ) சங்க இலக்கியம்**



www.kalviexpress.in

**11. உலகம் குளிருமாறு பொழிந்தது -----------**

அ) புதிய மழை ஆ) கதிரொளி இ) மேகம் ஈ) நிலவொளி

**விடை: அ) புதிய மழை**

**12. அ) குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன பறவைகள்**
**ஆ) குளிர் மிகுதியால் கன்றுகளைத் தவிர்த்தன குரங்குகள்**

அ) அ, சரி, ஆ-தவறு ஆ) அ, சரி, அ -தவறு

இ) அ, ஆ -இரண்டும் சரி ஈ) அ, ஆ -இரண்டும் தவறு

**விடை: ஈ) அ, ஆ -இரண்டும் தவறு**

**13. 'வளை இ' - என்பதன் இலக்கணக் குறிப்பு**

அ) சொல்லிசை அளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) இசைநிறை அளபெடை

**விடை: அ) சொல்லிசை அளபெடை**

**14. 'கண்ணி' - என்பதன் பொருள்**

அ) பெண் ஆ) மோதிரம்

இ) கண்கள் ஈ) தலையில் சூடும் மாலை

**விடை: ஈ) தலையில் சூடும் மாலை**

**15. '*குன்று குளிர்பன்ன கூதிர்ப் பானாள்*' - இவ்வடியில் அமைந்துள்ள உவம உருபு**

அ) குன்று ஆ) குளிர் இ) அன்ன ஈ) கூதிர்

**விடை: இ) அன்ன**

**16. '*புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்*' - தம் நிலத்தை விட்டுப் பெயரும் நிலையில் வருத்தம் அடைந்தவர்கள் -----------**

அ) பசுக்கள் ஆ) ஆயர் இ) குரங்குகள் ஈ) பறவைகள்

**விடை: ஆ) ஆயர்**

**17. '*ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்*' - இவ்வடியில் பண்புத்தொகை இடம்பெற்றுள்ள சொல் -----------**

அ) ஆர்கலி ஆ) முனைஇய இ) கொடுங்கோல் ஈ) கோவலர்

**விடை: இ) கொடுங்கோல்**

**18. போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படை வீடு -----------**

அ) போர்ப்பாசறை ஆ) கூதிர்ப்பாசறை இ) முன்பனிப்பாசறை ஈ) வாகைப்பாசறை

**விடை: ஆ) கூதிர்ப்பாசறை**

**19. வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியைக் கொண்டாடுவது ----------- திணை**

அ) வாகை ஆ) பொதுவியல் இ) பாடாண் ஈ) பெருந்திணை

**விடை: ஆ) வாகை**

**20. '*மாமேயல் மறப்ப மந்தி கூரப்*' - இவ்வடியில் 'விலங்கு' என்னும் பொருள் தரும் சொல்?**

அ) மா ஆ) மேயல் இ) மந்தி ஈ) கூர

**விடை: அ) மா**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக**

**இனநிரை** ⟶ இனம் + நிரை

i) 'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' ⟶ என்ற விதிப்படி,

'ம் நீங்கியது

= இனம் + நிரை ⟹ இனநிரை ⟹ என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

**1. வாகைத் திணையை விளக்குக:**

**வாகைத் திணை:**
வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை ஆகும்.

---

**2. கூதிர்ப்பாசறைத் துறை பற்றி விளக்குக**

**கூதிர்பாசறைத் துறை**
போர் மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு ஆகும்.

---

**3. ஆயர்கள் ஏன் வருத்தம் அடைந்தனர்?**

**ஆயர்களின் வருத்தம்:**
- தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
- தாம் பழகிய நிலத்தை விட்டு பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

---

**4. ஆயர்கள் குளிரால் எவ்வாறு வருந்தினர்?**
- குளிர் காலமாதலால் ஆயர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது.
- பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் ஆயர்களது பற்கள் குளிரால் நடுங்கின.

---

**5. குளிர்கால நள்ளிரவில் முல்லை நிலப் பறவைகள் எவ்வாறு வருந்தின?**

**பறவை படிவன:**
குளிர்கால நள்ளிரவில் மரங்களில் தங்கியிருந்த பறவைகள் குளிரின் மிகுதியால் நிலத்தில் வீழ்ந்தன.

---

**6. குளிர்கால நள்ளிரவில் முல்லை நில விலங்குகளின் நிலை என்ன?**

**விலங்குகளின் குளிர் கால நிலை:**
- விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.
- குரங்குகள் நடுங்கின.
- பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

**புதிய மழை :**
கோவலர்கள் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது.

**மேடான நிலம் தேடினர் :**
தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு. ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்கில் மேய விட்டனர்.

**ஆயர்களின் வருத்தம் :**
தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

**குளிர்கால நள்ளிரவு :**
- குளிரின் மிகுதியால் ஆயர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது.
- பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் ஆயர்களது பற்கள் நடுங்கின.
- மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது குளிர்கால நள்ளிரவு.

### அகநிலை வினாக்கள்

**1. கூதிர் காலத்தில் முல்லை நில மக்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்திய மாற்றத்தை நெடுநல்வாடை எங்ஙனம் பதிவு செய்கிறது?**

**முல்லை நில ஆயர்களின் வருத்தம் :**
தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர்.

**முல்லை நில பறவைகளின் நிலை :**
குளிர்கால நள்ளிரவில் மராங்களில் தங்கியிருந்த பறவைகள் குளிரின் மிகுதியால் நிலத்தில் வீழ்ந்தன.

**முல்லை நில விலங்குகளின் நிலை :**
- விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.
- குரங்குகள் நடுங்கின.
- பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

**2. நெடுநல்வாடை - குறித்தெழுதுக**

பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் நெடுநல்வாடை. இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று; 188 அடிகளைக் கொண்டது ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது. இப்பாடலின் பெயர் இருவகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடை (நீண்ட வாடை) யாகவும் போர்ப் பாசறையலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் இருப்பதால் நெடுநல்வாடை எனும் பெயர் பெற்றது.

**3. வாகைத் திணையைச் சான்றுடன் விளக்குக.**

**வாகைத் திணை விளக்கம்:-**

வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத் திணை ஆகும்.

**எ.கா:- '*குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்*'**

**நூல் : நெடுநல்வாடை**

**ஆசிரியர் : நக்கீரர்**

**விளக்கம் :**

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு. ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது. அக்குளிர்கால நள்ளிரவு.

**திணை பொருத்தம் :**

போர்ப் பாசறையிலிருக்கும் பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாக இருப்பதால், இப்பாடலில் வாகைத்திணை பொருந்தி வந்துள்ளது.

**4. கூதிர் பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.**

**கூதிர்ப்பாசறைத் துறை விளக்கம் :-**

போர் மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு ஆகும்.

**எ.கா:- '*குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்*'**

**நூல் : நெடுநல்வாடை**

**ஆசிரியர் : நக்கீரர்**

**விளக்கம் :**

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு. ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது. அக்குளிர்கால நள்ளிரவு.

**துறைப் பொருத்தம் :**

போர் மேற் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் அரசன் குளிர்காலத்தில் தங்கும் படை வீட்டில் நிலவும் வாடை மிகுதியால் ஆயர்கள், பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றத்தைக் கூறுவதால் இப்பாடல், கூதிர்பாசறைத் துறைக்குப் பொருத்தமானது.

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

**முன்னுரை :**

பருவ மாற்றங்களால் உயிரினங்களின் இயல்பு வாழ்க்கை மாற்றம் பெறுகிறது. முல்லைநில மக்கள், விலங்குகள், பறவைகள் இவற்றின் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்தும் மாற்றத்தைப் பற்றிக் காண்போம்.

**மழைக்கால வருணனை :**

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய ஆயர் எருமை, பசு. ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப் பெயரும் நிலையால் வருத்தம் அடைந்தனர். அவர்கள் தலையில் சூடியிருந்த நீண்ட இதழ்களையுடைய காந்தள் மாலை கசங்கியது. பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றிய போதிலும் அவர்களது பற்கள் நடுங்கின.

விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது. அக்குளிர்கால நள்ளிரவு.

**முடிவுரை :**

தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாகவும், போர்ப்பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாகவும் அமைந்த மழைக்கால வருணனையை நக்கீரர் விளக்கியுள்ளார்.

## V. இலக்கண குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. வளைஇ → சொல்லிசை அளபெடை
2. பொய்யா → ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
3. புதுப்பெயல் → பண்புத் தொகை
4. கொடுங்கோல் → பண்புத் தொகை

### அகநிலை வினாக்கள்

1. கலங்கி → வினையெச்சம்
2. நீடு இதழ்க் கண்ணி → இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையும்
3. பெரும்பனி → பண்புத் தொகை
4. கொள்ளியர் → வினையாலணையும் பெயர்
5. நடுங்க → பெயரெச்சம்
6. ஒழிய → பெயரெச்சம்
7. வீசி → வினையெச்சம்
8. வீழ → பெயரெச்சம்

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **கலங்கி** → கலங்கு + இ
கலங்கு → பகுதி
இ → வினையெச்ச விகுதி

### அகநிலை வினாக்கள்

1) **நடுங்க** → நடுங்கு + அ
நடுங்கு → பகுதி
அ → பெயரெச்ச விகுதி

2) **வீழ** → வீழ் + அ
வீழ் → பகுதி
அ → பெயரெச்ச விகுதி

3) **ஒழிய** → ஒழி + ய் + அ
ஒழி → பகுதி
அ → பெயரெச்ச விகுதி
ய் → உடம்படுமெய் சந்தி

4) **வீசி** → வீசு + இ
வீசு → பகுதி
இ → வினையெச்ச விகுதி

## VII. புணர்ச்சி விதி தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **புதுப்பெயல்** → புதுமை + பெயல்

i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி 'மை' கெட்டது
→ புது~~மை~~
→ புது + பெயல்

ii) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்'
→ என்ற விதிப்படி
→ ப் மிகுந்தது
→ புதுப்பெயல்
→ என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

1) **கொடுங்கோல்** → கொடுமை + கோல்

i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி 'மை' கெட்டது
→ கொடு~~மை~~
= கொடு + கோல்

ii) 'இனமிகல்' → என்ற விதிப்படி
→ 'க்' ற்கு இனமான 'ங்' மிகுந்தது
→ கொடுங்கோல்
→ என்று புணர்ந்தது

2) **பெரும்பனி** → பெருமை + பனி

i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி 'மை' கெட்டது
→ பெரு~~மை~~
= பெரு+ பனி

ii) 'இனமிகல்' → என்ற விதிப்படி
→ 'ப்' ற்கு இனமான 'ம்' மிகுந்தது
→ பெரும்பனி
→ என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

1. **தற்கால வாழ்க்கை முறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

கவின் : இரண்டு நாள் மழை பெய்தாலே ஊர் மூழ்கிவிடும் போன்று இருக்கிறதே!

கனிஷ்கன் : ஆம். வெளியில் செல்ல முடியாமல் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுவிட்டது.

பாரதி : இவையெல்லாம் ஏன் தெரியுமா? முன்பொரு காலத்தில் மாதம் மும்மாரி பொழிந்ததாம்! எவ்வாறு வாழ்ந்தனர் நம் முன்னோர்கள்?

கவின் : ஆமாம். காலநிலைகளுக்கு ஏற்றபடி, உடலைப் பேணிக் காத்தனர். வரும் முன்னரும், வந்த பின்னரும் உணவையே மருந்தாக உட்கொண்டனர். அதனால் தான் வயதானவர்களாலும் கூட குடிசை வீட்டில் மழைக்காலங்களில் வாழ முடிந்தது.

கனிஷ்கன் : அது மட்டுமல்ல, ஆற்றின் இயற்கை ஓட்டத்தினைத் தடுக்காமல் இருந்தனர். எனவே தண்ணீர் ஊருக்குள் வராமல் தன் வழியிலேயே ஓடி கடலில் கலந்தது.

கவின் : சரியாகச் சொன்னாய்! மேலும், ஏரி, குளம், அணைகள் அமைத்து அதில் தண்ணீரைச் சேமித்தனர்.

பாரதி : நம் முன்னோர்களின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் மழை, குளிர் காலங்களில் தங்களையும், தங்கள் உடைமைகளையும், ஏன் ஊரையுமே காத்துக் கொண்டனர்.

கவின் : இப்போது நம் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட பல மாற்றங்களும் ஆற்றில் மணலை அள்ளியதும், காட்டை அழித்ததும், ஆற்றின் வழித்தடத்தில் கட்டடங்கள் கட்டியதுமே இப்போதைய சீரழிவுகளுக்குக் காரணங்களாக அமைகின்றன.

பாரதி : நம் போன்ற இளைய தலைமுறையினராவது இனி ஒரு விதி செய்வோம்!

## விரிவானம்

# 2. முதல்கல்

**- உத்தம சோழன்**

## நம்மை அளப்போம்

### I. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினா

1. **பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.**

**முன்னுரை :**

உத்தமசோழன் (செல்வராஜ்) எழுதிய 'முதல் கல்' கதை தஞ்சைச் சிறுகதைகள் என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. மனிதத்தீவுகள், குருவி மறந்த வீடு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளையும் தொலைதூர வெளிச்சம், கசக்கும் இனிமை, கனல் பூக்கள் உள்ளிட்ட, புதினங்களையும் எழுதியுள்ளார். 'கிழக்கு வாசல் உதயம்' என்ற திங்களிதழைக் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறார்.

www.kalviexpress.in

**கதைச் சுருக்கம் :**

வளவனாற்றின் வடகரையில் நின்று கொண்டு மருதன் வடக்கே பார்த்த பொழுது, வயல்வெளியெங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான இளம்பயிர் நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில் இருப்பதைக் காண்கிறான். ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால் முழுவதும் மண்டிக் கிடந்த நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும். ஒரே நாளில் நீர் முழுவதும் வடிந்து விடும். இந்த யோசனையைத் தான் வழியில் காணும் மாரிமுத்து, காளியப்பன், பிரேம்குமார் என்ற அனைவரிடமும் கூறிவிட்டான். யாரும் செவிசாய்க்கவில்லை. மறுநாள் காலையில் மருதனே தனியாளாகச் சென்று காட்டாமணக்குக் செடிகளை அறிந்து எறிந்தான். இதையறிந்த அனைவரும் மருதனோடு ஒன்று சேர்த்து செடிகளை அறுக்க வடிவாய்க்காலில் இறங்கினர். மருதனின் பண்பு நலன்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**குழந்தைப் பயிர்களைக் காக்கும் குணமுடையவன் :**

வயல்வெளியெங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான இளம்பயிர் அனைத்தும் நீருக்குள் மூழ்கி விடும் ஆபத்தில் இருப்பதைக் கண்ட மருதனுக்குத் திக்கென்றது. அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்குப் பலத்த மழை பெய்யக்கூடும் என்ற வானொலி அறிவிப்பைக் கேட்டவன் ஒரு வாரமே ஆன 'குழந்தைப் பயிர்கள்' ஒரு நாள் மூழ்கினால் போதும் முழுவதும் அழுகிவிடும் என்ன செய்யலாம் என்று எண்ணும் மருதனுக்குள் ஆயிரம் யோசனைகள்.

⟶ இதன் மூலம் குழந்தைப் பயிர்களைக் காக்கும் குணமுடையவன் மருதன் என்பதை நாம் அறியலாம்.

**தீர்வினைத் தேடும் அறிவும் அக்கறையும் மிகுந்தவன் :**

ஊரைச் சுற்றிலுமுள்ள மூன்று மைல் நீள வடிவாய்க்கால் முழுவதுமே செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும். ஒரே நாளில் உபரிநீர் முழுவதும் வடிந்து விடும்.

'விரல்கள் பத்தும் மூலதனம்' என்ற தாராபாரதியின் கருத்திற்கேற்ப ஊர் மக்களை எல்லாம் ஒன்று சேர்த்து இந்த வேலையைச் செய்து விடலாம் என்ற தன்னம்பிக்கையில் ஊருக்குள் சென்றான்.

⟶ இந்நிகழ்வின் மூலம் தீர்வினைத் தேடும் அறிவும் ஊர் மீது அவன் கொண்டுள்ள அக்கறையும் வெளிப்படுகிறது.

**பொதுநலம் மிக்க பண்பாளன் :-**

வழியெங்கிலும் தம் கண்ணுக்குத் தென்படும் மாரிமுத்து, காளியப்பன், பிரேம்குமார் எனத் தொடங்கி அனைவரிடமும் தம் யோசனையைக் கூறுகிறான். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் சொல்லிப் பின்வாங்குகிறார்கள். பயிர் அழிந்தால் ஊர் வறுமை எய்தி விடுமே என்ற பொது நலத்தில் அக்கறை கொண்டு தன்னம்பிக்கையோடு அனைவரிடமும் பகிர்கிறான்.

⟶ இந்நிகழ்விலிருந்து மருதனின் பொதுநலப் பண்பு கண்முன்னே காட்சியளித்தது.

**தன்னம்பிக்கை தளராதவன் :-**

'பயிர் வாடத் தாமும் வாடிய வள்ளலார்' போன்று மருதனும் ஊர் கூடித் தேர் இழுக்கும் போது வடம் பிடிக்கும் முதல் கையாக தாம் இருக்க வேண்டும் என்ற தன்னம்பிக்கை பலத்தால் மறுநாள் விடிவதற்குள் வடிவாய்க்கால் சென்று காட்டாமணக்குச் செடிகளை வெட்டி எறிகிறான். விடிந்ததும் அவன் மனைவி அல்லியும் அவனுக்கு உதவி செய்யச் செய்கிறாள். அப்படியே மாரிமுத்து, காளியப்பன், பிரேம்குமார் என்று ஊரிலுள்ள அனைவரும் வடிவாய்க்கால் நோக்கித் திரண்டனர்.

⟶ இந்நிகழ்வின் மூலம் 'முயற்சி உடையார் இகழ்ச்சி உடையார்' என்பதை தன் தன்னம்பிக்கை மூலம் சாதித்துக் காட்டியவன் மருதன்.

**முடிவுரை :-**

'ஒற்றுமையே பலம்', 'ஊர் கூடித் தேர் இழுப்போம்' என்ற பொன்மொழிக்கேற்ப மருதனின் முதல் கல் எடுத்து வைத்த தொடக்கமே வெற்றியைத் தந்தது. மருதனின் தன்னம்பிக்கை பொதுநலம் போன்ற குணநலன்கள் மக்களிடையே 'ஒற்றுமையே வலிமை' என்பதை உணரச் செய்தது.

## கற்பவை கற்றபின்

1. **உங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமணவிழாவிக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மரக்கன்று ஒன்று தருவதாக முடிவு செய்துள்ளீர்கள். மரக்கன்று வழங்கும் நோக்கங்களையும் அதனைப் பயிரிடுவதால் ஏற்படும் பொது நன்மைகளையும் கொண்ட இருபக்கச் சிற்றேட்டை உருவாக்குக.**

**மரக்கன்று வழங்கும் நோக்கங்கள்:**

- ➢ எங்கள் இல்லத் திருமண விழாவிற்கு வருகை தருபவர்களுக்கு மரக்கன்று தருவதால் மக்களிடையே இப்போதைய தேவை பற்றிய விழிப்புணர்வு ஏற்படும்.
- ➢ சில தினங்களில் இந்நிகழ்ச்சியை மறக்காமல் இருப்பர்.
- ➢ மரக்கன்றினைப் பார்க்கும் போதெல்லாம் எங்கள் இல்லத் திருமண விழா நினைவு வரும்.
- ➢ திருமண விழாவில் கலந்து கொள்பவர்களுக்கு வயிறு நிறைவதுடன் மரம் நட்டதும் அவர்களது மனமும் நிறையும்.
- ➢ அன்றைய நாளை அவர்கள் அர்த்தமுள்ளதாகக் கருதுவர்.

**பயிரிடுவதால் ஏற்படும் பொது நன்மைகள்:**

- ➢ இச்செய்தி அனைவரிடமும் பரவும். அப்போது இனிவரும் தங்கள் வீட்டு நிகழ்வுகளிலும் இவ்வாறு செய்ய விரும்புவர்.
- ➢ இவ்வாறு மரம் வளர்ப்பதன் அவசியத்தை மக்கள் உணர்வர்.
- ➢ அனைவரும் மரக்கன்றினை நடுவதால் இயற்கையின் அழிவை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தலாம்.
- ➢ நிறைய காடுகளை அழித்து விட்டோம். இப்போதிருந்தே மரம் நட ஆரம்பித்தால் தான் மிகக் கொடிதான வறண்ட நிலை ஏற்படாமல் தடுக்க முடியும்.

www.kalviexpress.in

## இனிக்கும் இலக்கணம்

# 2. நால்வகைப் பொருத்தங்கள்

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

1. **மொழியின் அடிப்படைப் பண்புகள் ________.**

அ) திணை, பால் ஆ) எண், இடம்

இ) திணை,பால் எண், இடம் ஈ) இடம், திணை

**விடை: இ) திணை, பால் எண், இடம்**

2. **முருகன் நூலகம் சென்றான்**

**→இத்தொடரில், முருகன் என்னும் எழுவாய் உணர்த்துவது ________.**

அ) திணை ஆ) பால் இ) திணை, இடம் ஈ) திணை, பால், எண் இடம்

**விடை: ஈ) திணை, பால், எண் இடம்**

www.kalviexpress.in www.kalviexpress.in



3. **கூற்று 1 : மொழி வளர்ச்சியும் இலக்கணத்தின் தேவையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை**
**கூற்று 1 : எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு உண்டு.**

அ) கூற்று 1 மட்டும் சரி ஆ) கூற்று 2 மட்டும் சரி
இ) கூற்று 1 , 2 இரண்டும் சரி ஈ) கூற்று 1 , 2 இரண்டும் தவறு

**விடை: இ) 1, 2 இரண்டும் சரி**

4. **உலக மொழிகள் அனைத்திலும் ________ சொற்களே மிகுதி**

அ) பெயர் ஆ) வினை இ) இடை ஈ) உரி

**விடை: அ) பெயர்**

5. **பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் ________ வகையாகப் பிரிப்பர்**

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு

**விடை: அ) இரண்டு**

6. **பால் பகுப்பைக் காட்டும் பயனிலை விகுதிகள் ________.**

அ) ஆள், ஆள் ஆ) ஐ, ஆல், கு, இன், அது, கண்
இ) க, இய, இயர் ஈ) ஆன், ஆள், ஆர், அது, அன்

**விடை: ஈ) ஆன், ஆள், ஆர், அது, அன்**

7. **ஐம்பால்களுள் பலர்பால் சொல் சில வேளைகளில் உயர்வு கருதி ஒருமையில் வருவதற்கான எடுத்துக்காட்டு**

அ) மாணவர் வந்தனர் ஆ) ஆசிரியர் வந்தார்
இ) அவர்கள் வந்தார்கள் ஈ) தங்கமணி பாடினாள்

**விடை: ஆ) ஆசிரியர் வந்தார்**

8. **'அவர்கள் வந்தார்கள்' என்ற தொடரில் உள்ள 'அவர்கள்' என்பது ________.**

அ) வினைச்சொல் ஆ) இடைச்சொல்
இ) பதிலிடு பெயர்ச்சொல் ஈ) தன்மை பன்மை சொல்

**விடை: இ) பதிலிடு பெயர்ச்சொல்**

9. **பால் காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச் சொற்கள் தத்தம் பாலை உணர்த்துவதற்கான சான்று ________.**

அ) தங்கமணி பாடினாள் ஆ) தங்கமணி பாடினான்
இ) தந்தை - தாய் ஈ) குழந்தை சிரித்தது

**விடை: இ) தந்தை - தாய்**

10. **எது தவறானது?**

அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.
ஆ) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.
இ) ஒவ்வொரு பள்ளியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது
ஈ) ஒவ்வொரு குழந்தையும் நல்லொழுக்கத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும்

**விடை: அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது**

## II. குறுவினா

### அகநிலை வினாக்கள்

1. **நால்வகைப் பொருத்தங்கள் யாவை?**

எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று எழுவாயுடன் சேர்ந்து திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தங்கள் உடையதாய் அமைகிறது.



www.kalviexpress.in www.kalviexpress.in

**2. இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள் எழுவாயாக அமையும் போது, வினைமுடிபு எவ்வாறு அமையும்?**

**இரு திணைப் பொதுப் பெயர்கள் :**

இரு திணைக்கும் பொதுவாக வரும் குழந்தை, கதிரவன் என்னும் பெயர்கள் எழுவாயாக அமையும் போது, அவற்றின் வினை முடிபும் இருதிணையும் பெற்று வரும்.

**எ.கா :**
- குழந்தை சிரித்தான் - குழந்தை சிரித்தது
- கதிரவன் உதித்தான் - கதிரவன் உதித்தது.

**3. உயர் திணையில் ஆண்பாலுக்கும் பெண் பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் வரும் போது பால் எவ்வாறு அறியப்படுகிறது?**

**பொதுப்பெயரில் பால்பாகுபாடு அறிதல்:**

தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் தொடர்களில் வரும் போது அவற்றின் வினைமுற்றைப் பொறுத்தே பால் அறியப்படுகிறது.

**எ.கா :**
- தங்கமணி பாடி**னான்**
- தங்கமணி பாடி**னாள்**

**4. அ∴றிணை எழுவாயில் பால் எவ்வாறு அறியப்படுகிறது?**

**அ∴றிணையில் பால் பாகுபாடு :**

- அ∴றிணை எழுவாயில் ஆண், பெண் பகுப்பு முறை மரபில் இருந்தாலும் வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லை.
- எனவே, ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன் பால், பலவின் பால் என்பன அறியப்படுகின்றன.

**எ.கா :**
- காளை உழு**தது**
- பசு பால் தந்**தது**

**5. உயர்திணை மற்றும் அ∴றிணைப் பன்மைப் பெயரில் எண் பாகுபாட்டினை உணர்த்துபவை எவை?**

**எண் பாகுபாடு :**

- தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்று வருகின்றன.

**எ.கா :** இரண்டு மனிதர்கள்.

- அஃறிணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.

**எ.கா :** பத்துத் தேங்காய்

- தமிழில் அஃறிணைப் பன்மைக்னெத் தனி வினைமுற்றுகள் இல்லை. ஆனால் ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயிலேயே வெளிப்படுகிறது.

**எ.கா :**
- ஒரு மரம் வீழ்ந்தது; பத்து மரம் வீழ்ந்தது.

**6. இடப்பாகுபாடு என்றால் என்ன?**

**மூவகை :**

இடம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

**இடப்பாகுபாடு :**

- பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும்.
- பேசுபவன், கேட்பவன், பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படுகிறது.



www.kalviexpress.in

7. **தமிழ் நடைக் கையேடு என்பது ஒரு மொழியின் இலக்கணம் குறித்து கூறுவதென்ன?**

- ஒரு மொழியில் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருளையும் வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே ஆகும்.
- இந்த நான்கையும் உள்ளடக்கியதே ஒரு மொழியின் இலக்கணம் என்று தமிழ் நடைக் கையேடு குறிப்பிடுகிறது.

## கற்பவை கற்றபின்

1. **இடப்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப்பகுதியிலிருந்து சான்று காட்டுக**

**இருவகை :**

தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மை பன்மை என இரு வகை உண்டு.

i) **உளப்பாட்டு தன்மைப் பன்மை :**

பேசுவர் (தன்மை), முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்து கொண்டு பேசுவது 'உளப்பாட்டுத் தன்மைப் பன்மை' ஆகும்.

**எ.கா :-** நாம் முயற்சி செய்வோம் (உளப்பாட்டுத் தன்மை பன்மை)

→ இத்தொடரில் நாம் என்பது தன்மையையும், முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.

ii) **உளப்படுத்தாத தன்மைப் பன்மை :**

பேசுவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மை பன்மையில் பேசுவது 'உளப்படுத்தாத தன்மைப் பன்மை' ஆகும்.

**எ.கா :-** நாங்கள் முயற்சி செய்வோம் (உளப்படுத்தாத் தன்மைப் பன்மை)

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **தமிழில் திணைப்பாகுபாடு ------------ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது**

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு
இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு **விடை: ஈ) பொருட் குறிப்பு**

2. **உயர் திணை என்மனார் மக்கட் சுட்டே**
**அஃறிணை என்மனார் அவரல பிறவே - இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் ------------**

அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

**விடை: இ) தொல்காப்பியம்**

3. **யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே ------------**

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை
இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

**விடை: ஆ) உயர்திணை, அஃறிணை**

4. **பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| அ) | அவன் அவள் அவர் | 1. | உளப்படுத்தாத் தன்மை பன்மை |
| ஆ) | நாங்கள் முயற்சி செய்வோம் | 2. | உளப்பாட்டுத் தன்மைப் பன்மை |
| இ) | நாம் முயற்சி செய்வோம் | 3. | தன்மைப் பன்மைப் பெயர்கள் |
| ஈ) | நாங்கள், நாம் | 4. | பதிலீடு பெயர்கள் |

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1
இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2 **விடை: அ) 4, 1, 2, 3**

**5. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன எவை?**

மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவுவன மொழியின் அடிப்படைப் பண்புகளான

➢ திணை ➢ பால் ➢ எண் ➢ இடம் ⟶ ஆகியவை ஆகும்.

**6. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெற்று வருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

➢ இரண்டு மனிதர்கள் வந்தனர்.

➢ நான்கு விளையாட்டு வீரர்கள் வெற்றி பெற்றனர்.

## II. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**I. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரிய மேலாளருக்கு கடிதம் எழுதுக.**

### விண்ணப்பக் கடிதம்

**அனுப்புநர்**

**இரா. செம்பியன் மாதேவி,**
**10. வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,**
**அஅஅ.**

**பெறுநர்**

**உயர்திரு. மின்வாரிய மேலாளர் அவர்கள்,**
**மின் வாரிய அலுவலகம்,**
**அஅஅ.**

**ஐயா,**

**பொருள்:** அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்ய வேண்டி.

வணக்கம். நான் மேற்கண்ட முகவரியில் கடந்த பத்து ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எங்கள் குடியிருப்புப் பகுதியில் ஏறத்தாழ நூற்றிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

கடந்த இரு நாட்களாக எங்கள் பகுதியில் புயல் தாக்கத்தினால் வீட்டின் கூரைகளும், தடுப்புச்சுவர்களும் இடிந்து விட்டன. மேலும் மின் இணைப்புக் கம்பிகளும் அறுந்து கிடக்கின்றன. அவ்வழியில் செல்லும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் கால்நடைகளுக்கு ஆபத்து ஏற்படும் முன், முன்னெச்சரிக்கையாக அறுந்து கிடக்கும் மின் கம்பிகளைச் சரி செய்து உதவும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் .

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
இரா. செம்பியன் மாதேவி.


அஅஅ,
....|....|...2019.

**உறை மேல் முகவரி:**

| | |
|---|---|
| பெறுநர் | அ.தலை |
| உயர்திரு. மின்வாரிய மேலாளர் அவர்கள்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>அஅஅ. | |

# மொழியை ஆள்வோம்

**I. சான்றோர் சித்திரம் :**



## வினாக்கள்

**1. 19-ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சம் எது?**

தாது வருடப் பஞ்சம் (1876 - 1878)

**2. 'நீயே புருஷ மேரு.........' என்ற பாடலை இயற்றி யார் யாரைப் பெருமைப்படுத்தினர்?**

'நீயே புருஷ மேரு' என்ற பாடலை இயற்றி கோபால கிருஷ்ண பாரதியார் நீதிபதி மாயூரம் வேதநாயகம் அவர்களைப் பெருமைப்படுத்தினார்.

**3. இப்பத்தியில் இடம்பெற்றுள்ள வினையாலணையும் பெயர்கள் இரண்டனை எடுத்தெழுதுக.**

**வினையாலணையும் பெயர்கள் :-**
- பெயர் பெற்றவர்.
- இயற்றியவர்.

**4. தமிழின் முதல் நாவலை இயற்றியவர் யார்?**

தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர் மாயூரம் வேதநாயகம் ஆவார்.

**5. நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்? என்று கூறியவர் யார்?**

நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப்பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்? என்று வேதநாயகம் பிள்ளையிடம் அவரது தாயார் கூறினார்.

**II. மொழி பெயர்ப்புப் பகுதியை படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக.**

1. environemntal → சுற்றுச்சூழல்
2. devasation → பேரழிவு
3. deforestation → காடுகள் அழிப்பு
4. beloved → உயிரினும் இனிய
5. founded → தோற்றுவித்தார்
6. thirty years → முப்பது ஆண்டுகள்
7. women → பெண்கள்
8. Plant trees → மரங்களை நடுதல்
9. food → உணவு
10. fuel → எரிபொருள்
11. soil erosion → மண் அரிப்பு
12. desertification → பாலைவனமாதல்

13. democracy → மக்களாட்சி
14. democratic election → மக்களவைத் தேர்தல்
15. generation → தலைமுறையினர்
11. parliament → நாடாளுமன்றம்
12. minister of environment → சுற்றுச்சூழல் அமைச்சர்
13. guiding kenyan women → கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி
14. tens of thousands → பல்லாயிரக்கணக்கான
15. social forestry schemes → சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்

## II. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

**எ.கா! விலை, விளை, விழை**

**கார் பருவத்தில் நன்றாக விளைந்ததால் தானியங்களின் விலை குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள விழைவதாக அரசு அறிவித்தது.**

1. **தலை, தளை, தழை**

தோட்டத்தில் பசுமையாக முளைத்திருந்த **தழை**களை இரண்டு மூன்று **தளை**களாக்கித் **தலை**யில் வைத்து சுமந்து சென்றேன்.

2. **கலை, களை, கழை**

தம் வறுமையைக் **களை**ய **கழை**க்கூத்தாடி கயிற்றில் ஏறிப் பல **கலை**களை நிகழ்த்தினான்.

3. **அலை, அளை, அழை**

உறவினர்களை **அழை**த்துக்கொண்டு கட**லலை**யைக் காணச் செல்லும் வழித்தடத்தில் **அளை**களைக் கண்டேன்.

## IV. இலக்கிய நயம் பாராட்டுக

***வெட்டியடிக்குது மின்னல் - கடல்***
***வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;***
***கொட்டி யிடிக்குது மேகம் - கூ***
***கூவென்று விண்ணைக் குடையுது காற்று***
***சட்டச்சட சட்டச்சட டட்டா - என்று***
***தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்***
***எட்டுத்திசையும் இடிய - மழை***
***எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!***

***- பாரதியார்***

**முன்னுரை :**

மக்களிடையே விடுதலை உணர்வுகளை விதைத்து, அவர்களை வீறு கொண்டு எழச்செய்தவர் மகாகவி பாரதியார்.

***'பைந்தமிழ்த் தேர்ப்பாகன் அவனொரு***
***செந்தமிழ்த் தேனீ சிந்துக்குத் தந்தை'***

→ என்றெல்லாம் பாவேந்தரால் பாராட்டப்பட்டவர்.
பாட்டுக்கொரு புலவனாம் பாரதி எழுதிய இச்செய்யுளின் இலக்கிய நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து :**

மின்னிக் கொண்டு மின்னல் வருவதனால் கடல் பொங்கி எழுந்து தன் அலைகளால் விண்ணை இடிக்கிறதாம். கார் மேங்கள் சூழ்ந்து கொண்டு இடியோசை எழுப்புவதால் காற்று பலமாகச் சுழன்று வீசி விண்ணையும் குடைந்து கொண்டு செல்கிறதாம். தாளம் கொட்டுவது போன்று இடியின் சத்தம் வானமெங்கும் கேட்கிறது. உடனே எட்டுத்திசைகளிலும் இடியும் மின்னலும் தோன்றி கார்மேகத்தினை மழையாகப் பொழியச் செய்து விட்டது.

**மையக் கருத்து :**

விண்ணை இடிக்குமளவிற்கு மின்னலும், விண்ணைக் குடையுமளவிற்கு பலமான காற்றும், வானமே தாளம் போட்டுக் கொண்டு இடியை வரவழைத்ததால் எட்டுத் திசையெங்கிலும் மழை கொட்டித் தீர்த்ததாகக் கவிஞர் பாடியுள்ளார்.

**தொடை நயம் :**

i) **எதுகைத் தொடை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும், முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகைத்தொடை.

**எ.கா:**

| **அடி எதுகை** | **சீர் எதுகை** |
|---|---|
| வெட்டியடிக்குது | சட்டச்சட - சட்டச்சட |
| கொட்டியிடிக்குது | |
| சட்டச்சட | |
| எட்டுத்திசையும் | |

ii) **மோனைத் தொடை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை

**எ.கா:**

**சீர் மோனை**

| | | |
|---|---|---|
| **வெட்டி** | - | **வீரத்திரை** |
| **கொட்டி** | - | **கூவென்று** |
| **எட்டுத்திசை** | - | **எங்ஙணம்** |
| **சட்டச்சட** | - | **சட்டச்சட** |

iii) **இயைபுத் தொடை :**

அடிதோறும் கடைசி எழுத்தோ அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபுத் தொடை.

எ.கா:-

இடிக்**குது**
குடை**யிது**
கனைக்**குது**

**அணி நயம் :**

எ.கா:-

***'கடல் வீரத் திரை கொண்டு விண்ணை யிடிக்குது'***

→ என்கிறார் கவிஞர். மழை வருவதற்கு முன் இடிமின்னல் வந்தவுடன் கடல் தன் வலிமைமிக்க அலைகளைக் கொண்டு பொங்கி எழுவது விண்ணையும் சென்று இடிப்பது போல் மேலே உயரமாக எழுவதாக உயர்வாகக் கூறியுள்ளதால் இப்பாடலில் **'உயர்வு நவிற்சி அணி'** பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :**

எ.கா:-

***'சட்டச்சட சட்டச்சட டட்டா -என்று***
***தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்'***

→ என்ற வரிகளில் தனிச் சொல் பெற்று வருவதால் இப்பாடல் **'சிந்துப்பா'** வகையைச் சேர்ந்ததாகும். **செப்பலோசை** பெற்று வந்துள்ளது. சந்த நயமிக்க சொற்களைக் கையாண்டிருப்பதால் இப்பாடலை இரகாத்தோடும் தாளத்தோடும் இசையமைத்துப் பாடுவதற்கு ஏற்புடைய பாடலாகத் திகழ்கிறது.

**சுவை நயம் :**

எ.கா:

***'கடல் வீரத் திரை கொண்டு விண்ணை யிடிக்குது***
***- என்றும்***
***கூ கூவென்று விண்ணைக் குடையுது காற்று'***
***- என்றும் கவிஞர்***

மழை வருவதற்கு அறிகுறிகளான இடிக்க மின்னலினால் கடலும் காற்றும் பெறும் மாற்றத்தையும், பின்பு மழையின் நிகழ்வையும் பற்றிக் கூறும் வரிகளே நம் மனதினுள் மகிழ்ச்சியை விதைத்து விடுகின்றன. எனவே, இப்பாடல் **'உவகைச் சுவை'** நிரம்பி வந்துள்ளது.

**தலைப்பு :**

எட்டுத்திசையும் இடிய வரும் மழை!

**முடிவுரை :**

***'நயமான சொற்களில் கவி வடித்தல்***
***கலையாகக் கற்களில் சிலை வடித்தல்'***

→ என்பதற்கேற்ப இப்பாடலில் தொடைநயம், அணிநயம், சந்தநயம், சுவைநயம் போன்ற அனைத்து நயங்களும் நிரம்பப் பெற்று இக்கவிதையினைக் கவிஞர் படைத்துள்ளதால் தமிழன்னையின் அணிக்கு இப்பாடல் மேலும் அழகு சேர்க்கிறது.

## II. கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக.

**பத்தியாக மாற்றுதல் :**

வருகின்ற அக்டோபர் 2 ம் நாளன்று காலை 10 மணியளவில் சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கத்தில் வைத்து 'பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்' நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியின் போது

www.kalviexpress.in www.kalviexpress.in



முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து இடம் பெறும். செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளரான திருமதி. அரசி அவர்கள் வரவேற்புரையும் இயற்கை வேளாண் உழவர் திரு. அமுதன் அவர்கள் முன்னிலையையும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. இமயவரம்பன் அவர்கள் தலைமையுரையும் வழங்க இருக்கிறார்கள். இக்கருத்தரங்கில் முனைவர். செங்குட்டுவன் அவர்கள் 'இயற்கை சீற்றங்களும் - பருவகால மாற்றங்களும் என்ற தலைப்பிலும்', திரு. முகிலன் அவர்கள் 'பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும்' என்ற தலைப்பிலும், திருமதி. பாத்திமா அவர்கள் 'நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல்' என்ற தலைப்பிலும், திரு. வின்சென்ட் அவர்கள் 'பேரிடர் காலங்களில் செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும்' என்ற தலைப்பிலும் உரையாற்ற இருக்கிறார்கள். பசுமைப்படை மாணவர் தலைவரான பர்வீன் அவர்கள் நன்றியுரை வழங்குவார்கள். இறுதியில் நாட்டுப்பண் இசைத்து இக்கருத்தரங்கம் நிறைவு செய்யப்படுகிறது.

## மொழியோடு விளையாடு

### I. புதிர்க்கேற்ற விடையை அறிக:

அ) *அடைமழை பெய்த அடுத்த நாள்*
*படைபடையாய் வந்ததாம்*
*பரங்கி நாட்டு விமானம்*
*எதிரி சுடாமலேயே*
*இறகொடிந்து இறந்ததாம் - என்ன?* **விடை : ஈசல்**

அ) *தண்ணீரும் மழையும் இல்லாமல்*
*பயிர் பச்சையாய் இருக்கிறது*
*பாக்கு வெற்றிலை போடாமல்*
*வாய் சிவப்பாய் இருக்கிறது? - என்ன?* **விடை : கிளி**

### II. எண்ணங்களை எழுத்தாக்குக

நம்மைச் சுற்றிலும் இயற்கையே நமக்குக் காப்பரண்களாக அமைந்துள்ளன. அனைத்து தட்பவெப்பநிலையில் இயற்கையே நம்மைக் காத்து வந்தன. இன்றோ நாம் இயற்கையைப் பராமரிக்கத் தவறியதாலும் இயற்கையைச் சீரழித்ததாலும் தட்ப வெப்ப நிலையில் ஏற்பட்ட அதீத மாற்றத்தால் உலகம் வெப்பமயமாகி விட்டது. உலகில் பசுமைக்குடில் வாயுக்கள் பெருக பெருக உலகம் வெப்பமாகி பனிப்பிரதேசங்கள் உருகிக் கொண்டிருக்கின்றன. உருகுவது பனிமட்டுமல்ல நம் உயிரும் தான் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.





www.kalviexpress.in www.kalviexpress.in

**III. மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும் போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிக்காக உங்கள் பள்ளி தலைமையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

## கடிதம்

**அனுப்புநர்**

**பா. சித்தார்த்தன்,**
**25. அழகிய கூத்தர் தெரு,**
**அஅஅ.**

**பெறுநர்**

**உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,**
**அரசு மேல்நிலைப்பள்ளி,**
**அஅஅ.**

**ஐயா,**

**பொருள்:** மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ய வேண்டி,

வணக்கம். நான் தங்களது பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வருகிறேன். இன்னும் ஓரிரு மாதங்களில் நம் ஊரில் அடைமழைக்காலம் தொடங்கி விடும். அத்தகைய மழைக் காலங்களில் மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியவனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும் போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்கால பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றினை நம் பள்ளி 12 ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்ந்தெடுத்து வைத்துள்ளோம். நாட்டுப்புற இசை, நாடகம், ஓரங்க நாடகம், கிராமிய நடனம் மூலமாக மேற்கண்ட கருத்துகளை வலியுறுத்த உள்ளோம். எனவே, அந்நிகழ்ச்சியை நம்பள்ளி கலையரங்கில் வைத்து நிகழ்த்துவதற்கான இசைவினைத் தர வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
மாணவன்,
பா. சித்தார்த்தன்.

அஅஅ,
....|....|...2019.

**உறை மேல் முகவரி:**

| | |
|---|---|
| பெறுநர்<br>உயர்திரு. தலைமையாசிரியர் அவர்கள்,<br>அரசு மேல்நிலைப் பள்ளி,<br>அஅஅ. | அ.தலை |

# நிற்க அதற்குத் தக

I. **அது ஒரு மழைக்காலம், அதிகளவு மழையினால் வெள்ளம் வரக்கூடிய நிலை குறித்து அரசு அறிவிப்பு வெளியாகிறது. அரசின் துண்டறிக்கை உங்கள் கைகளில்**

**குறிப்புகளைப் படித்த நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?**

- மழைக்காலத்தில், அணைக்கட்டிலிருந்து தண்ணீர் திறந்து விடும் நேரத்தை முன்கூட்டியே அறிந்து வைத்துக்கொண்டு மக்களை ஆற்றுக்குள் செல்ல விடாமல் எச்சரிக்கையைப் பரப்புவேன்.
- உபரிநீர் வடியும் வாய்க்கால்களைச் சென்று அவ்வப்போது கண்காணிப்பேன்.
- செடிகள் போன்ற ஏதேனும் தண்ணீரை வடிய விடாமல் அடைத்துள்ளதா என்பதை அறிந்து கொள்வேன்.
- அவ்வாறு ஏதேனும் தடை ஏற்பட்டு இருந்தால் அந்தத் துறையின் அரசு அலுவலர்களின் உதவியை நாடுவேன்.
- கழிவுநீர்ப் பாதைகள் கல், மண்ணால் அடைத்து தேங்கி விடாமல் இருக்க முன்னெச்சரிக்கையான சுகாதார அலுவலர்களின் உதவியோடு சுகாதாரம் பேணுவேன்.
- அறுந்த மின்கம்பிகளையோ, சரிந்து கிடக்கும் மரங்களையோ வழியில் கண்டால், அந்தந்த துறை ஊழியர்களிடம் தகவல் தெரிவிப்பேன். அப்பகுதியில் சிவப்பு துணியைக் கட்டி வைத்து மக்களுக்கு எச்சரிக்கை அளிப்பேன்.
- வெள்ளம் ஏற்பட்டால் அரசோ தனி நிருவாகமோ முகாம் அமைப்பதற்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்வேன்.
- மருத்துவ முகாம் நடைபெற ஆவண செய்வேன்.
- மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, தண்ணீர், தங்கும் இடம் இவற்றிற்கான ஏற்பாடுகளைத் தொண்டு நிறுவனங்களோடு இணைந்து கரம் கொடுப்பேன்.
- வெள்ளத்தால் மக்களிடையே நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை என் வகுப்புத் தோழர்களோடு இணைந்து செயலாற்றுவேன்.

## II. படிப்போம் பயன்படுத்துவோம் (தொடர் வண்டி நிலையம்)

| | |
|---|---|
| Platform | நடைமேடை |
| Train Track | இருப்புப்பாதை |
| Railway Signal | தொடர்வண்டி வழிக்குறி |
| Ticket Inspector | பயணச்சீட்டு ஆய்வர் |
| Level Crossing | இருப்புப்பாதையைக் கடக்குமிடம் |
| Metro Train | மாநகரத் தொடர்வண்டி |

☺ ☺ ☺ ☺ ☺



பண்பாடு

# சுற்றத்தார் கண்ணே உள

**இயல்: 3**

| | | | |
|---|---|---|---|
| உரைநடை | : தமிழர் குடும்ப முறை | இலக்கணம் | : பொருள் மயக்கம் |
| செய்யுள் | : விருந்தினர் இல்லம் கம்பராமாயணம் | வாழ்வியல் | : திருக்குறள் |
| துணைப்பாடம் | : உரிமைத்தாகம் | | |

உரைநடை

## 3. தமிழர் குடும்ப முறை

- பக்தவத்சல பாரதி

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

#### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை.......

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

**விடை: ஆ) திருமணமும் குடும்பமும்**

2. 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே' - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது

அ) தனிக்குடும்ப முறை ஆ) விரிந்த குடும்ப முறை

இ) தாய்வழிச் சமூகமுறை ஈ) தந்தை வழிச் சமூகமுறை

**விடை: ஈ) தந்தை வழிச் சமூகமுறை**

#### அகநிலை வினாக்கள்

1. 2010-இல் காலாண்டிதழில் வெளிவந்த கட்டுரையின் சுருக்கமான 'தமிழர் குடும்ப முறை' என்ற தொகுப்பினை எழுதியவர் ___________

அ) ஜலாலுத்தீன் ரூமி ஆ) பூமணி இ) பக்தவத்சல பாரதி ஈ) கி.ரா

**விடை: இ) பக்தவத்சல பாரதி**

2. சமூகத்தின் அடிப்படை அலகு ___________

அ) குடும்பம் ஆ) வருமானம் இ) உழைப்பு ஈ) பெரியோர்

**விடை: அ) குடும்பம்**

3. 'குடும்பம்' எனும் சொல் முதன் முதலில் காணப்படும் இலக்கியம் ___________

அ) திருக்குறள் ஆ) தொல்காப்பியம்

இ) நற்றிணை ஈ) புறநானூறு

**விடை: அ) திருக்குறள்**

4. 'குடும்பு' எனும் சொல்லின் பொருள் ___________

அ) திருமணம் ஆ) வீடு இ) மனை ஈ) கூடிவாழுதல்

**விடை: ஈ) கூடிவாழுதல்**

5. 'இல்', 'மனை' - ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடும் நூல் ___________
அ) நன்னூல் ஆ) திருக்குறள் இ) தொல்காப்பியம் ஈ) தண்டியலங்காரம்
**விடை: இ) தொல்காப்பியம்**

6. புறநானூறு குறிப்பிடும் தற்காலிகத் தங்குமிடம் ___________
அ) தம்மனை ஆ) நும்மனை இ) நுந்தை மனை ஈ) புக்கில்
**விடை: அ) புக்கில்**

7. 'மனையோன்' - என்னும் சொல் பயின்று வரும் பாடல்கள் ___________
அ) சங்கப்பாடல்கள் ஆ) நீதி நூல்கள் இ) அறநூல்கள் ஈ) பழமொழி
**விடை: அ) சங்கப்பாடல்கள்**

8. வாழ்க்கைச் சுழற்சியில் பல வடிவங்களில் நிலைமாற்றம் பெறும் நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் ___________
அ) மனை ஆ) இல் இ) திருமணம் ஈ) மணந்தகம்
**விடை: இ) திருமணம்**

9. இல்லற வாழ்வின் தொடக்கக்கட்டமே ___________ எனப்படுகிறது
அ) நுந்தை மனை ஆ) மணந்தகம் இ) தன்மனை ஈ) மனையோர்
**விடை: ஆ) மணந்தகம்**

10. இளந்தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி ___________ உரியது
அ) நற்றாய்க்கு ஆ) செவிலிக்கு இ) தோழிக்கு ஈ) தந்தைக்கு
**விடை: ஆ) செவிலிக்கு**

11. தாய்வழி குலத் தொடர்ச்சிக்குச் சான்று தரும் சேர நாட்டு மருமக்கள் தாய முறை பற்றிக் கூறும் நூல் ___________
அ) புறநானூறு ஆ) தொல்காப்பியம் இ) கலித்தொகை ஈ) பதிற்றுப்பத்து
**விடை: ஈ) பதிற்றுப்பத்து**

12. 'என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்' என்னும் பாடல்வரி இடம் பெற்ற நூல் ___________
அ) கலித்தொகை ஆ) புறநானூறு இ) அகநானூறு ஈ) தொல்காப்பியம்
**விடை: அ) கலித்தொகை**

13. தாய் வழிச் சொத்துக்கள் பெண்டிருக்கே போய்ச் சேர்ந்தது என்பதைக் கூறும் ஒரு மருதத்திணைப் பாடல் இடம் பெற்ற நூல் ___________
அ) கலித்தொகை ஆ) நற்றிணை இ) குறுந்தொகை ஈ) நன்னூல்
**விடை: அ) குறுந்தொகை**

14. மணமான பின் தலைவியைத் தலைவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்த போது அவனுடைய தாய் தலைவிக்குச் செய்யும் நோன்பு ___________
அ) மஞ்சள் நீராட்டல் ஆ) சிலம்புகழி இ) காரடையான் ஈ) பூச்சூட்டுதல்
**விடை: ஆ) சிலம்புகழி**

15. மணமக்களின் வாழ்விடம் 'கணவன் அகம்' என்பதை உறுதிப்படுத்தும்

*'நுன்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்*
*எம்மனை வதுவை நல்மணம் கழிக'*

**- என்ற பாடல் இடம் பெற்ற நூல்**

அ) நற்றிணை ஆ) ஐங்குறுநூறு இ) கலித்தொகை ஈ) புறநானூறு
**விடை: ஆ) ஐங்குறுநூறு**



www.kalviexpress.in

**16. 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே' எனக் கூறும் நூல் ________**
அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) கலித்தொகை ஈ) ஐங்குறுநூறு
**விடை: அ) குறுந்தொகை**

**17. எளிய நெருக்குமான குடும்பம் எனப்படுவது ________**
அ) தனிக்குடும்பம் ஆ) விரிந்த குடும்பம்
இ) தாய்வழிக் குடும்பம் ஈ) தந்தை வழிக் குடும்பம்
**விடை: அ) தனிக்குடும்பம்**

**18. கூற்று 1 : இன்றைய தொழிற்சங்கத்தில் தனிக்குடும்பம் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது**
**கூற்று 2 : ஆதிக்குடிகளிடம் தனிக்குடும்ப முறை முக்கியமாக இருப்பதை இனவரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன**
அ) கூற்றுகள் இரண்டும் தவறு ஆ) கூற்று 1 மட்டும் சரி
இ) கூற்று 2 தவறு ஈ) கூற்று 1, 2 இரண்டும் சரி
**விடை: ஈ) கூற்று 1, 2 இரண்டும் சரி**

**19. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த முறை ________**
அ) தனிக்குடும்பம் ஆ) நேர்வழி விரிந்த குடும்பம்
இ) தாய வழி முறை ஈ) தந்தை வழிக் குடும்பம்
**விடை: ஆ) நேர்வழி விரிந்த குடும்பம்**

**20. சங்க காலத்தில் குடும்ப அமைப்பில் ஒவ்வொரு ஆயத்திலும் பொறுப்பேற்றிருந்தவர் ________**
அ) நற்றாய் ஆ) செவிலித்தாய் இ) தோழி ஈ) தேர்ப்பாகன்
**விடை: ஆ) செவிலித்தாய்**

**21. சங்கச் சமூகம் அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது**
அ) குடும்பம் ஆ) கூட்டுக்குடும்பம்
இ) தனிக்குடும்பம் ஈ) தந்தைவழிக் குடும்பம் **விடை: அ) குடும்பம்**

**22. ஓட்டனுக்கு முந்தைய தலைமுறை ________**
அ) சேயோன் ஆ) பூட்டன் இ) பாட்டன் ஈ) பரன்
**விடை: அ) சேயோன்**

**23. கொள்ளுப் பெயர்த்தியின் மகள் ________**
அ) பெயர்த்தி ஆ) எள்ளுப் பெயர்த்தி இ) பரை ஈ) பூட்டி
**விடை: ஆ) எள்ளுப் பெயர்த்தி**

**24. தமிழ்ச் சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை முன்னெடுத்து எழுதி வருபவர் ________.**
அ) பூமணி ஆ) நெல்லையப்பர்
இ) பூ.மாணிக்க வாசகர் ஈ) பக்தவத்சல பாரதி
**விடை: ஈ) பக்தவத்சல பாரதி**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. புக்கில், தன்மனை - சிறு குறிப்பு எழுதுக.**
**புக்கில் :**
தற்காலிகத் தங்குமிடத்தைப் புறநானூறு 'புக்கில்' எனக் குறிப்பிடுகிறது

**தன்மனை :**

திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, தனியாக வாழுமிடம் தன்மனை என வழங்கப்பட்டுள்ளது.

## அகநிலை வினாக்கள்

1. **குடும்பம் பற்றி சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுவது யாது?**

**தமிழ்பண்பாட்டின் செழுமை :**

தொன்மைக் காலத்திலேயே மேம்பட்ட குடும்ப அமைப்பை உருவாக்கியிருந்த தமிழ்ப்பண்பாட்டின் செழுமை, சங்க இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகிறது.

2. **மனித சமூகத்தின் அடிப்படை அலகு எது? ஏன்?**

**அடிப்படை அலகு - குடும்பம் :**

- மனித சமூகமானது குடும்பம் எனத் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது.
- ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.

3. **'நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல' - என்ற பக்தவத்சல பாரதி குறிப்பது எதனை? ஏன்?**

**குடும்பம் - திருமணம் :**

குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே ஆகும்.

**நாணயத்தின் இரண்டு பக்கங்கள் :**

எனவே, நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.

4. **'குடும்பம்' - என்ற சொல் சங்க இலக்கியத்தில் எவ்வாறு கையாளப்பட்டுள்ளது.**

**சங்க இலக்கியத்தில் :**

- சங்க இலக்கியத்தில் 'குடும்பை' 'குடும்பு', 'கடும்பு' ஆகிய சொற்கள் குடும்ப அமைப்போடு தொடர்புடையவை.
- 'குடும்பை' என்ற சொல் இருபது இடங்களில் பயின்று வருகிறது.

**கூடி வாழ்தல் :**

குடும்பு' எனனும் சொல் 'கூடி வாழுதல்' என்று பொருள்படுகிறது.

**குடும்பம் :**

'குடும்பு என்னும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்த்துப் பொருண்மை விரிவாக்கமாகக் 'குடும்பம்' என்ற சொல் அமைந்தது.

5. **குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டும் சங்க இலக்கியச் சொற்கள் யாவை?**

**சங்க இலக்கியச் சொற்கள் :**

- இல்
- மனை
- குரம்பை
- புலப்பில்
- முன்றில்
- குடில்
- கூரை
- வரைப்பு
- முற்றம்
- நகர்
- மாடம்

முதலிய சொற்கள் குடும்பங்களின் வாழ்விடங்களில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டுகின்றன.

6. **மனை என்பது வாழ்விடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக இருப்பதற்குச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் சான்றுகள் யாவை?**

**சங்க இலக்கியங்களில் மனை எனும் சொல் :**

- நம்மனை
- தம்மனை
- வறுமனை
- எம்மனை
- இம்மனை
- கடிமனை

- ➢ உம்மனை ➢ நின்மனை ➢ வளமனை
- ➢ நுந்தைமனை ➢ நன்மனை ➢ தாய்மனை

எனச் சங்க இலக்கியங்களில் ‘மனை’ என்னும் சொல் பல இடங்களில் பயின்று வருகிறது.

**7. சங்க காலத்தில் தந்தை வழிக்குடும்பமுறை காணப்பட்ட சமூகக் களங்கள் யாவை?**

**சமூகக் களங்கள் :**

சங்க காலத்தில் தந்தை வழிக் குடும்ப முறை மிகவும் வலுவான, ஒரு பரவலான முறையாக இருந்துள்ளதைப்

- ➢ பொருள் வழிப்பிரிவு
- ➢ போர்
- ➢ வாழ்வியல் சடங்குகள்
- ➢ குடும்பம்
- ➢ திருமணம்

- என்ற பல்வேறு களங்களில் காண இயலும்.

**8. இளமகவு நிலைக் குடும்பங்களின் காட்சிகளைச் சங்க இலக்கியம் எவ்வாறு படம் பிடித்துக் காட்டுகிறது?**

**இளமகவு நிலைக் குடும்பக் காட்சி :**

*‘மறியிடைப் படுத்த மாண்பிணை போல்’*

- ஐங்குறுநூறு

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர் என்பதை அறியலாம்.

இவ்வாறு இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சியை ஐங்குறுநூறு தெளிவுபடுத்துகிறது.

**9. ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் கூறும் குடும்ப முறையை விளக்குக.**

**விரிந்த குடும்ப முறை :**

கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த ‘நேர்வழி விரிந்த குடும்ப முறையை’ ஒக்கூர் மாசாத்தியாரின் புறநானூற்றுப் பாடல் கூறுகிறது.

**10. இல்வாழ்வின் பயனாகச் சங்க கால மக்கள் எண்ணியது குறித்தெழுதுக.**

**இல்வாழ்வின் பயன் :**

- ➢ இல்லற வாழ்வின் இறுதிக்காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து,
- ➢ அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து,
- ➢ தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் எனச் சங்க கால மக்கள் எண்ணினார்கள்.

**11. தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதமான குடும்ப அமைப்பு முறையை விளக்குக.**

**சங்கச் சமூகம் :**

- ➢ சங்க இலக்கியங்கள் காட்டும் சங்கச் சமூகம் ’குடும்பம்’ என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது.

**இன்றைய சமூகம் :**

- ➢ இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் மற்றும் தந்தை வழிக் குடும்ப அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருக்கிறது.

**12. பக்தவத்சல பாரதி எழுதிய நூல்கள் யாவை?**

**நூல்கள் :**

- இலக்கிய மானிடவியல்
- பண்பாட்டு மானிடவியல்
- தமிழர் மானிடவியல்
- தமிழகப் பழங்குடிகள்
- பாணர் இனவரைவியல்
- வரலாற்று மானிடவியல்
- தமிழர் உணவு
- திராவிட மானிடவியல்

உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் - எவ்வாறு?**

**விரிந்த குடும்பம் :**

- கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்வது விரிந்த குடும்ப முறை எனப்படும்.
- சங்க கால குடும்ப அமைப்பில் முதல் நிலை உறவினர்களை இனம் காண முடிகிறது.
- நற்றாய், செவிலித்தாய், செவிலித்தாயின் மகளாகிய தோழி போன்றோர் குடும்ப அமைப்பில் முதன்மைப்பங்கு பெறுகின்றனர்.

**இல்வாழ்வின் பயன் :**

- இல்லற வாழ்வின் இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயன் என்று சங்க கால மக்கள் எண்ணினர்.

**சங்கச் சமூகம் :**

- சங்க இலக்கியங்கள் காட்டும் சங்கச் சமூகம் 'குடும்பம்' என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது.

**இன்றைய சமூகத்தில் கூட்டுக் குடும்பம் :**

- பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம் என்ற அலகைக் கொண்டு அமைந்துள்ளது.

- பரன் – பரை,
- சேயோன் – சேயோள்,
- ஓட்டன் – ஓட்டி,
- பூட்டன் – பூட்டி,
- பாட்டன் – பாட்டி,
- தந்தை – தாய்
- கணவன் – மனைவி
- மகன் – மகள்
- பெயரன் – பெயர்த்தி
- கொள்ளுப் பெயரன் – கொள்ளுப் பெயர்த்தி,
- எள்ளுப் பெயரன் – எள்ளுப் பெயர்த்தி

- என்ற கூட்டுக் குடும்ப அமைப்பில் அமைந்த உறவுமுறைகளே தமிழர் பரம்பரை ஆகின்றது.
இத்தகைய கூட்டுக் குடும்ப அமைப்பு முறையே தமிழ்ச் சமூகத்தின் அடையாளப் பெருமிதமாகும்.

2. **தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?**

**நான் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் :**

- எனது ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பேன்.
- வீண் வம்புகளைத் தவிர்த்து பெற்றோர் வாழ்வதற்கு அமைதியான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
- எனக்கு நன்மை தராத தேவையற்ற காரியங்களில் ஈடுபட மாட்டேன்.
- இன்றியமையாத பொருட்களை மட்டும் வாங்கி வீண் செலவுகளைக் குறைத்துக் கொள்வேன்.
- குறைந்த அளவில் செலவு செய்து விட்டு அதிக அளவில் சேமிப்பு செய்வேன்.
- வேலையினை முடித்து விட்டுத் தாயும் தந்தையும் வீட்டிற்கு வரும் வரை அதிக கவனமுடன் வீட்டைப் பராமரிப்பேன்.
- பெற்றோர்களுக்கு அதிக வேலைப்பளுவைக் கொடுக்காமல் என்னால் இயன்ற வேலைகளை நானே செய்து முடிப்பேன்.
- வீட்டிலுள்ள சகோதர சகோதரிகளையும் செல்லப் பிராணிகளையும் அன்போடும் கருணையோடும் கவனித்துக் கொள்வேன்.
- பெற்றோர்கள் வீடு திரும்பும் வரை, என் வீட்டைச் சுற்றிலும் நிகழும் நிகழ்வுகளைக் கண்காணித்துக் கொண்டு எச்சரிக்கையாகவே இருப்பேன்.
- மின் சாதனப் பொருட்களைக் கவனமாகக் கையாள்வேன்.
- ஒட்டு மொத்த குடும்பத்தின் நலனில் விழிப்புணர்வுடன் செயல்படுவேன்.
- எனக்குரிய கடமைகளைச் செவ்வனே ஆற்றி, என் குடும்பத்தில் அமைதி காப்பேன்.

## அகநிலை வினாக்கள்

1. **வாழிடம் குறித்து சங்க இலக்கியத்தில் பயன்படுத்திய சொற்களை ஆராய்க.**

**குடும்ப வாழ்விடங்கள் :**

- இல்
- மனை
- குரம்பை
- புலப்பில்
- முன்றில்
- குடில்
- கூரை
- வரைப்பு
- முற்றம்
- நகர்
- மாடம்

**மருதத் திணைப் பாடலின் சான்று**

அகநானூற்று மருதத்திணைப் பாடல் ஒன்றில் மகளிர், ‘தம்மனை’ என மனைவியின் இல்லத்தையும் ‘நும்மனை’ என கணவனின் இல்லத்தையும் பிரித்துப் பேசும் போக்கினைக் காண முடிகிறது.

**புக்கில் :**

தற்காலிகத் தங்குமிடத்தைப் புறநானூறு ‘புக்கில்’ எனக் குறிப்பிடுகிறது.

**தன்மனை :**

திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து, வாழுமிடம் ‘தன்மனை’ என வழங்கப்படுகிறது.

**‘மனை’ - என்னும் சொல் :**

- நம்மனை
- தம்மனை
- வறுமனை
- எம்மனை
- இம்மனை
- கடிமனை
- உம்மனை
- நின்மனை
- வளமனை
- நுந்தைமனை
- நன்மனை
- தாய்மனை

எனச் சங்க இலக்கியங்களில் ‘மனை’ என்னும் சொல் பல இடங்களில் பயின்று வருகிறது.

www.kalviexpress.in www.kalviexpress.in


**வாழிடத்தை குறிக்கும் முதன்மைச் சொல் :-**

- 'மனையோள்' - என்னும் சொல் சங்கப் பாடல்களில் பயின்று வரும் சொல்லாகும்.
- இதன் மூலம், 'மனை' என்பது வாழிடத்தைக் குறிக்கும் முதன்மைச் சொல்லாக உள்ளதை அறியலாம்.

**2. 'மணந்தகம்' - பற்றிக் குறிப்பெழுதுக**

**குடும்பத்தின் தொடக்கம் :**

- குடும்பம் உயிரிகளைப் போன்றே தோன்றுகிறது; வளர்கிறது; பல கட்டங்களைக் கடக்கிறது.
- இத்தகைய நீண்ட பாதையில் குடும்பத்தின் தொடக்கம் திருமணமே.

**மணந்தகம் :**

- மணம் புரிந்த கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லற வாழ்வில் ஈடுபடக்கூடிய தொடக்கக் கட்டமே 'மணந்தகம்' எனப்படுகிறது.
- முதல் குழந்தை பிறக்கும் வரை உள்ள காலகட்டத்தை இந்நிலை குறிக்கிறது.
- தனிக் குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

**முதன்மை பெற்றிருத்தல் :**

- இளம் தம்பதியினருக்கு ஏற்ற அறிவுரை கூறி நெறிப்படுத்தும் பணி செவிலிக்குரியது என்று கூறும் தொல்காப்பிய அடிகள் மூலம் 'மணந்தகம்' என்னும் குடும்ப அமைப்பு முதன்மை பெற்றிருந்ததை அறிய முடிகிறது.

**3. சங்க காலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டும் சான்றுகள் யாவை?**

**தாய்வழிச் சமூக நிலை :**

- சங்க காலத்தில் தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது.

**பதிற்றுப்பத்து :–**

- பதிற்றுப்பத்து கூறும் சேரநாட்டு மருமக்கள் தாய முறை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**புறநானூறு :**

*''சிறுவர் தாயே பேரிற் பெண்டே''*
*''செம்முது பெண்டின் காதலஞ்சிறா அன்''*
*''வானரைக் கூந்தல் முதியோள் சிறுவன்''*
*''முளரி மருங்கின் முதியோள் சிறுவன் ''*

**கலித்தொகை :**

என் மகள் ஒருத்தியும் பிறள் மகள் ஒருவனும் - (கலி. பாலை)

- முதலான தொடர்களில் 'இவளது மகன்' என்றே கூறப்பட்டது. இவனது மகன் எனக் கூறப்படவில்லை.
- இவை அனைத்தும் சங்க காலத்தில் காணப்பட்ட தாய்வழிச் சமூகத்தின் நிலையைக் காட்டுகின்றன.

**4. தந்தை வழிக் குடும்பம் பற்றி விளக்குக**

**ஆண் மையச் சமூக முறை :**

- தாய் வழி முறை வளர்ந்த சங்க காலத்திலேயே ஆண்மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி விட்டதையும் காண முடிகிறது.
- ஆண்மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் வாழ வேண்டும்.

**சிலம்புகழி நோன்பு :**

- மணமான பின் தலைவன் அவனுடைய இல்லத்திற்குத் தலைவியை அழைத்து வந்த போது அவனுடைய தாய் தலைவிக்குச் சிலம்புகழி நோன்பு செய்திருக்கிறாள்.
- இதன் வழி மணமக்களின் வாழ்விடம் 'கணவன் அகம்' என்பதை அறியலாம்.


www.kalviexpress.in www.kalviexpress.in

**தந்தை வழிச் சமூகம்**

- ***'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே'*** என்ற குறுந்தொகைப் பாடல் மூலம் பெண் தன் கணவனை முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது.
- சங்க காலத்தில் தந்தை வழிச் சமூகமுறை மிகவும் வலுவான முறையாக இருந்துள்ளதைப் பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் எனப் பல்வேறு சமூகக் களங்களில் காண முடிகிறது.

**5. 'தனிக் குடும்பம் - ஒரு தொல் வடிவமாகவே இருந்து வருகிறது' என்பதைப் பற்றி ஆராய்க?.**

**இளமகவு நிலைக் குடும்பங்கள் :**

*'மறியிடைப் படுத்த மாண்பிணை போல்'*

- ஐங்குறுநூறு

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் மூலம் மகனை நடுவணாகக் கொண்டு தலைவனும் தலைவியும் வாழ்ந்திருக்கின்றனர் என்பதை அறியலாம்.

- இவ்வாறு இளமகவுநிலைக் குடும்பங்களின் காட்சியை ஐங்குறுநூறு தெளிவுபடுத்துகிறது.

**தொடக்கநிலை / எளிய நெருக்கமான குடும்பம் :**

- தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை மற்றும் எளிய நெருக்கமான குடும்பம் எனப்படும்.

**தனிக்குடும்பம் :**

- சமூகப் படிமலர்ச்சியில் இறுதியாக ஏற்பட்டதே தனிக்குடும்பம்.
- இது இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.

**தனிக்குடும்பம் ஒரு தொல்வடிவமே !**

- பல ஆதிகுடிகளிடமே தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருந்ததை இனவரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.
- எனவே, தனிக்குடும்பம் ஒரு தொல் வடிவமாகவே இருந்து வருகிறது என்பதை அறியலாம்.

**6. விரிந்த குடும்ப முறை பற்றி நீ அறிந்த கருத்துகளைத் தொகுத்தெழுதுக**

**விரிந்த குடும்ப முறை :**

- கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்த வாழ்வது விரிந்த குடும்ப முறை எனப்படும்.
- சங்க கால குடும்ப அமைப்பில் முதல் நிலை உறவினர்களை இனம் காண முடிகிறது.

**இல்வாழ்வின் பயன் :**

- இல்லற வாழ்வின இறுதிக் காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் நிறைந்து, அறத்தினை விரும்பிய சுற்றத்தோடு சேர்ந்து, தலைவனும் தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயன் என்று சங்க கால மக்கள் எண்ணினர்.

**தொல்காப்பியம் :**

- விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தினைத் தொல்காப்பியம் பதிவு செய்கிறது.

**7. பக்தவத்சல பாரதி - குறிப்பெழுதுக :**

**பக்தவத்சல பாரதி :**

பக்தவத்சல பாரதி தமிழ்சமூகம், பண்பாடு சார்ந்த மானிடவியல் ஆய்வுகளை முன்னெடுத்து வருகிறார். பழங்குடிகள், நாடோடிகள் உள்ளிட்ட விளிம்புநிலைச் சமூகங்கள் பற்றிய ஆய்வில் இவருடைய பங்களிப்பு முக்கியமானது. இலக்கிய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல், தமிழர் மானிடவியல், தமிழகப் பழங்குடிகள், பாணர் இனவரைவியல், தமிழர் உணவு உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

## IV. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.**

**மனித சமூகத்தின் அடிப்படை அலகு :**

- மனித சமூகமானது குடும்பம் எனத் தொடங்கிக் குலம், கூட்டம், பெருங்குழு, சமூகம் என்ற அமைப்பு வரை விரிவு பெறுகிறது.
- ஆதலின் குடும்பமே மனித சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளது.

**குடும்பம் - திருமணம் :**

குடும்பம் என்னும் அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணமே ஆகும்.

**நாணயத்தின் இரண்டு பக்கங்கள் :**

எனவே, நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன.

**வாழிடம் :**

*“இரவுக் குறியே இல்லகத் துள்ளும்*
*மனையோர் கிளவி கேட்கும் வழியதுவே*
*மனையகம் புகாஅக் காலை யான”*

என்னும் தொல்காப்பியப் பொருளியல் நூற்பா ‘இல்’ ’மனை’ ஆகிய இரண்டு வாழிடங்களைக் குறிப்பிடுகிறது.

**தனிக் குடும்பம் :**

தாய், தந்தை, குழந்தை மூவருமுள்ள தனிக்குடும்பம் மிகவும் நெருக்கமானது என்பதால் இது தொடக்கநிலை மற்றும் எளிய நெருக்கமான குடும்பம் எனப்படும்.

**தனிக் குடும்பம் ஒரு தொல் வடிவமே :**

- பல ஆதிகுடிகளிடமே தனிக்குடும்ப முறை முக்கியமான குடும்ப முறையாக இருந்ததை இனவரைவியல் ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.
- எனவே, தனிக்குடும்பம் ஒரு தொல் வடிவமாகவே இருந்து வருகிறது என்பதை அறியலாம்.

**விரிந்த குடும்பம் :**

- கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்த வாழ்வது விரிந்த குடும்ப முறை எனப்படும்.
- சங்க கால குடும்ப அமைப்பில் முதல் நிலை உறவினர்களை இனம் காண முடிகிறது.
- நற்றாய், செவிலித்தாய், செவிலித்தாயின் மகளாகிய தோழி போன்றோர் குடும்ப அமைப்பில் முதன்மைப்பங்கு பெறுகின்றனர்.

**சங்கச் சமூகம் :**

- சங்க இலக்கியங்கள் காட்டும் சங்கச் சமூகம் ’குடும்பம்’ என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்தது.

**இன்றைய சமூகம் :**

- இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் மற்றும் தந்தை வழிக் குடும்ப அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருக்கிறது.

## கற்பவை கற்றபின்

**உரைநடை**

1. **கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்து உரை நிகழ்த்துக.**

**கூட்டுக்குடும்பம்:**

- ஒற்றுமை பெருகும்
- அன்பு பெருகும்
- பகிர்ந்து உண்ணும் பண்பு ஏற்படும்.
- விட்டுக் கொடுக்கும் தன்மை ஏற்படும்
- அனைவரின் நலன் பற்றிய கருத்து தோன்றும்.
- அனைவரிடமும் கனிவாக நடந்து கொள்வர்.
- பெரியோர்களை மதிக்கக் கற்றுக் கொள்வர்.
- உண்மை, அறம் போன்ற நல் செயல்களைத் தம் வீட்டிலுள்ளவர்களைக் கண்டு அறிந்து கொள்வர்.
- பண்பாடு, கலாச்சாரம், பழைமை, மரபு போற்றி வாழ்வர்.

**தனிக்குடும்பம்:**

- தான், தனது என்ற சுயநலமே மேலோங்கி இருக்கும்.
- பிறரைப் பற்றிய எண்ணம் தோன்றாது
- அன்பு காட்ட வேண்டிய அவசியம் ஏற்படாது.
- நினைக்கும் முன்னரே அனைத்தும் கிடைத்து விடுவதால் எளிய தோல்வியைக் கூட தாங்கிக் கொள்ள முடியாது.
- அனைவரிடமும் பழகுந்தன்மை ஏற்படாது.
- பெரியோர்களைப் பாரமாக நினைக்கும் தன்மை ஏற்படும்.

www.kalviexpress.in

**கவிதைப்பேழை**

# 3. செய்யுள் : விருந்தினர் இல்லம்

**- ஜலாலுத்தீன் ரூமி**

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது யாது?**

அ) வக்கிரம் ஆ) அவமானம்
இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்

**விடை: ஈ) இவை அனைத்தும்**

www.kalviexpress.in www.kalviexpress.in



## அகநிலை வினாக்கள்

1. **ஜலாலுத்தீன் ரூமி ___________ நாட்டைச் சேர்ந்தவர்**
அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) எகிப்து ஈ) ஆப்கானிஸ்தான்
**விடை: ஈ) ஆப்கானிஸ்தான்**

2. **ஜலாலுத்தீன் ரூமி பிறந்த ஆண்டு ___________**
அ) கி.பி. 1207 ஆ) கி.பி. 1507 இ) கி.பி. 1607 ஈ) கி.பி. 1107
**விடை: அ) கி.பி.1207**

3. **ஜலாலுத்தீன் ரூமியின் சூஃபி தத்துவப் படைப்பு நூல்**
அ) திவான் - ஈ ஆ) ஷம்ஸ் - ஈ - தப்ரீஸி
இ) மஸ்னவி ஈ) தாகங்கொண்ட மீனொன்று
**விடை: இ) மஸ்னவி**

4. **ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக் கவிதைகளின் தொகுப்பு ___________**
அ) திவான் - ஈ - ஷம்ஸ் - ஈ - தப்ரீஸி ஆ) மஸ்னவி
இ) கோல்மன் பார்க்ஸ் ஈ) தாகங் கொண்ட மீனொன்று
**விடை: ஆ) மஸ்னவி**

5. **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தவர் ___________**
அ) என். சத்தியமூர்த்தி ஆ) கோல்மன் பார்க்ஸ் இ) பக்தவச்சல பாரதி ஈ) பூமணி
**விடை: ஆ) கோல்மன் பார்க்ஸ்**

6. **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் சிலவற்றை என்.சத்தியமூர்த்தி மொழிபெயர்த்துள்ள மொழி ___________**
அ) தமிழ் ஆ) ஆங்கிலம் இ) பாரசீகம் ஈ) கிரேக்கம்
**விடை: அ) தமிழ்**

7. **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் சிலவற்றை என்.சத்தியமூர்த்தி தமிழில் மொழிபெயர்த்துள்ள தலைப்பு ___________**
அ) மஸ்னவி ஆ) கோல்மன் பார்க்ஸ்
இ) திவான் - ஈ - ஷம்ஸ் - ஈ - தப்ரீஸி ஈ) தாகங் கொண்ட மீனொன்று
**விடை: ஈ) தாகங்கொண்ட மீனொன்று**

8. **திவான் - ஈ - ஷம்ஸ் -ஈ- தப்ரீஸி என்ற புகழ்பெற்ற நூலைப் படைத்தவர் ___________**
அ) பக்தவத்சல பாரதி ஆ) பூமணி இ) என். சத்தியமூர்த்தி ஈ) ஜலாலுத்தீன் ரூமி
**விடை: ஈ) ஜலாலுத்தீன் ரூமி**

9. **ஜலாலுத்தீன் ரூமியின் கவிதைகளில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதை ___________**
அ) விருந்தினர் இல்லம் ஆ) அஞ்ஞாடி இ) பாரசீகக் கவிஞர் ஈ) மஸ்னவி
**விடை: அ) விருந்தினர் இல்லம்**

10. **மனித இருப்பில் ஒவ்வொரு காலையும் ஒரு ___________**
அ) யுகம் ஆ) விருந்தினர் இ) புது வரவு ஈ) எதிர்பாராத விருந்தினர்
**விடை: இ) புது வரவு**

11. **ஒவ்வொரு விருந்தினரையும் கௌரவமாக நடத்துவது ___________**
அ) எதிர்பாராத விருந்தாளியாக ஆ) புதுவரவாக
இ) வழிகாட்டியாக ஈ) புதியதோர் உவகைக்காக
**விடை: ஈ) புதியதோர் உவகைக்காக**



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



12. வருபவர் எவராயினும் ___________ செலுத்து
அ) புதுவரவு ஆ) விருந்து இ) நன்றி ஈ) விழிப்புணர்வு

**விடை: இ) நன்றி**

## II. குறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. எதிர்பாராத நினைவுகளை ஜலாலுதீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?**

நம் வாழ்வில் எதிர்பாராத நிகழ்வுகளான

- ஆனந்தம்
- மனச்சோர்வு
- அற்பத்தனம்
- விழிப்புணர்வு

போன்றவற்றை எதிர்பாரா விருந்தாளியென உருவகப்படுத்துகிறார் கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி.

### அகநிலை வினாக்கள்

**1. மனித வாழ்வை கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகிக்கிறார்?**

**விருந்தினர் இல்லம் :**

மனிதர் வாழ்வை ஒரு விருந்தினர் இல்லம் என்று உருவகிக்கிறார்.

**2. எவற்றையெல்லாம் வரவேற்று விருந்தோம்பு என்கிறார் கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி?**

**எதிர்பாராத விருந்தாளிகள் :**

நம் வாழ்வில் அவ்வப்போது நிகழும் எதிர்பாராத நிகழ்வுகளான ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு ஆகியவற்றை எதிர்பாராத விருந்தாளிகள் என்கிறார்.

**விருந்தோம்புக :**

எனவே இந்த எதிர்பாராத விருந்தாளிகளையெல்லாம் வரவேற்று விருந்தோம்பு என்கிறார் கவிஞர் ஜலாலுத்தீன் ரூமி

**3. எப்போது ஒவ்வொரு விருந்தினரையும் கௌரவமாக நடத்து என்கிறார் பாரசீகக் கவிஞர்?**

**புதியதோர் உவகைக்காக :**

நம்வாழ்வின்நிகழும்ஆனந்தம்,மனச்சோர்வு,அற்பத்தனம்,விழிப்புணர்வுபோன்றஎதிர்பாராதவிருந்தாளிகள் எல்லாம் துக்கங்களின் கூட்டமாக இருந்து கொண்டு, நம் வீட்டை மொத்தமாக வெறுமைப்படுத்தும் போது, அந்த ஒவ்வொரு விருந்தினரையும் நமக்கு வரப்போகின்ற புதியதோர் உவகைக்காகக் கௌரவமாக நடத்த வேண்டும் என்கிறார் பாரசீகக் கவிஞர்.

**4. எவற்றையெல்லாம் இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்?**

**இன்முகத்துடன் வரவேற்றல் :**

நம் வாழ்வில் சில பொழுது வந்து செல்லும் வக்கிரம், அவமானம், வஞ்சனை ஆகியவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

**5. வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டுமாம். ஏன்?**

**நன்றி செலுத்து :**

நம் வாழ்வில் அவ்வப்போது வந்து செல்லும்

- ஆனந்தம்
- மனச்சோர்வு
- அற்பத்தனம்
- விழிப்புணர்வு

போன்ற எதிர்பாராத விருந்தாளிகளாயினும் கஷ்டமான சூழ்நிலையில் நாம் எதிர்கொள்ளும்

- வக்கிரம்
- அவமானம்
- வஞ்சனை

போன்று வருபவர், வந்து செல்லும் நிகழ்வுகள் எதுவாயினும் நாம் நன்றி செலுத்த வேண்டும்.



www.kalviexpress.in www.kalviexpress.in

**வழிகாட்டி :**

ஏன்றால், அவை ஒவ்வொரு நிகழ்வுகளும் மிகவும் தொலைதூரத்திற்கு அப்பாலிருந்து நமக்கு வழிகாட்டியாக வந்தவை.

**பயன்பாடு :**

இன்பம், துன்பம், வேண்டியது, வேண்டாதது என்று எல்லாவற்றிலிருந்தும் நல்லவற்றை மட்டும் கற்றுக்கொள்ளும் பண்பாட்டை நம்மிடையே வளரச் செய்கின்றன.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. *'வருபவர் எவராயினும்
நன்றி செலுத்துக'* **- இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடஞ்சுட்டுதல் :**

ஜலாலுத்தீன் ரூமி இயற்றிய கவிதைகளைத் தமிழில் 'தாகங்கொண்ட மீனொன்று' என்ற தலைப்பில் என். சத்தியமூர்த்தி மொழிபெயர்த்துள்ளார். அத்தொகுப்பிலுள்ள 'விருந்தினர் இல்லம்' என்னும் கவிதையில்,

*'வருபவர் எவராயினும்*
*நன்றி செலுத்துக'*
→ என்கிறார் கவிஞர்

**பொருள் :**

நம் வாழ்வில் அவ்வப்போது வந்து செல்லும்

- ஆனந்தம்
- மனச்சோர்வு
- அற்பத்தனம்
- விழிப்புணர்வு

போன்ற எதிர்பாராத விருந்தாளிகளாயினும், சில சூழ்நிலைகளில் நாம் எதிர் கொள்ளும்

- வக்கிரம்
- அவமானம்
- வஞ்சனை

போன்று வருபவர் எவராயினும், வந்து செல்லும் நிகழ்வுகள் எதுவாயினும் நாம் நன்றி செலுத்த வேண்டும்.

**விளக்கம் :**

- மனித வாழ்வானது ஒரு விருந்தினர் இல்லம் போன்றது. ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு.
- ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு போன்றவை எதிர்பாராத விருந்தாளிகளாக அவ்வப்போது வந்து செல்லும்.
- இவை போன்ற எல்லாவற்றையும் வரவேற்று விருந்தோம்ப வேண்டும்.
- துக்கங்களின் கூட்டமாக அவையெல்லாம் இருந்து நம் வீட்டை மொத்தமாக வெறுமைப்படுத்தும் போதும், எதிர்பாராத விருந்தாளியாக வந்த ஒவ்வொரு விருந்தினரையும் நாம் கௌரவாக நடத்த வேண்டும்.
- புதியதோர் உவகைக்காக அவையெல்லாம் நம்மைத் தூசி தட்டித் தயார்படுத்தக்கூடும்.
- வக்கிரம், அவமானம், வஞ்சனை போன்றவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.
- இவைபோன்று வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டும்.
- ஏனெனில், நம் வாழ்வில் நல்லது எது? தீயது எது? என்பதை அறிந்து கொள்வதற்காக இந்த ஒவ்வொரு நிகழ்வுகளும் மிகவும் தொலை தூரத்திலிருந்து நமக்கு வழிகாட்டியாக வந்துள்ளன.

www.kalviexpress.in

## அகநிலை வினாக்கள்

**1. தொலைதூரத்திற்கு அப்பாலிருந்து நம் வாழ்விற்கு வழிகாட்டியாக அனுப்பட்டவை குறித்து, 'விருந்தினர் இல்லம்' என்னும் கவிதை கூறுவதைத் தொகுத்தெழுதுக**

**விருந்தினர் இல்லம் :**

மனித வாழ்வானது ஒரு விருந்தினர் இல்லம் போன்றது. ஒவ்வொரு காலையும் ஒரு புதுவரவு.

**எதிர்பாராத விருந்தாளி :**

- ஆனந்தம், மனச்சோர்வு, அற்பத்தனம், விழிப்புணர்வு போன்றவை எதிர்பாராத விருந்தாளிகளாக அவ்வப்போது வந்து செல்லும்.
- இவை போன்ற எல்லாவற்றையும் வரவேற்று விருந்தோம்ப வேண்டும்.

**கௌரவமாக நடத்தல் :**

- துக்கங்களின் கூட்டமாக அவையெல்லாம் இருந்து நம் வீட்டை மொத்தமாக வெறுமைப்படுத்தும் போதும், எதிர்பாராத விருந்தாளியாக வந்த ஒவ்வொரு விருந்தினரையும் நாம் கௌரவமாக நடத்த வேண்டும்.
- புதியதோர் உவகைக்காக அவையெல்லாம் நம்மைத் தூசி தட்டித் தயார்படுத்தக்கூடும்.

**இன்முகத்துடன் வரவேற்றல் :**

வக்கிரம், அவமானம், வஞ்சனை போன்றவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்க வேண்டும்.

**நன்றி செலுத்துதல் :**

இவையெல்லாம் வருபவர் எவராயினும் நன்றி செலுத்த வேண்டும்.

**வாழ்விற்கு வழிகாட்டி :**

ஏனெனில், நம் வாழ்வில் நல்லது எது? தீயது எது? என்பதை அறிந்து கொள்வதற்காக இந்த ஒவ்வொரு நிகழ்வுகளும் மிகவும் தொலை தூரத்திலிருந்து நமக்கு வழிகாட்டியாக வந்துள்ளன.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

1. புது வரவு → பண்புத் தொகை
2. வந்து → வினையெச்சம்
3. நடத்து → வினையெச்சம்
4. சென்று → வினையெச்சம்
5. வருபவர் → வினையாலணையும் பெயர்

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## அகநிலை வினாக்கள்

1) **வந்து** → வா(வ) + த்(ந்) + த் + உ

வா → பகுதி, வா - 'வ' எனக் குறுகியது விகாரம்

த் → சந்தி, த் - 'ந்' ஆனது விகாரம்

த் → இறந்த கால இடைநிலை

உ → வினையெச்ச விகுதி

2) **நடத்து** → நட + த் + த் + உ
நட → பகுதி
த் → சந்தி
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

3) **சென்று** → செல்(ன்) + ற் + உ
செல் → பகுதி, ல் - 'ன்' → ஆகத் திரிந்தது விகாரம்
ற் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

## VI. புணர்ச்சி விதி தருக.

### அகநிலை வினாக்கள்

1) **புது வரவு** → புதுமை + வரவு

i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி,

'மை' கெட்டது → புது~~மை~~ → புதுவரவு என்று புணர்ந்தது

2) **விழிப்பணர்வு** → விழிப்பு + உணர்வு

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' → என்ற விதிப்படி,

→ 'உ' நீங்கியது

பு = ப் + ~~உ~~ = விழிப் + ப் + உணர்வு

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி,

ப் + உ = 'பு' → ஆனது

= விழிப்புணர்வு = என்று புணர்ந்தது

3) **அப்பாலிருந்து** → அப்பால் + இருந்து

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி,

ல் + இ = 'லி' → ஆனது

= அப்பாலிருந்து = என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

1. **தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைகளில் உங்கள் மனம் கவர்ந்த சிலவற்றை வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

நாம் எதிர்பார்த்திராத ஒரு நாளில்
மீண்டும் சகோதரர்களாக ஒரே பயணத்தில்
சந்தித்துக் கொள்வோம்.
நம் வேட்கையும் நம் போராட்டமும்
நம் தேடலும் நம் இலட்சியமும்
ஒன்று சேர நம் இலக்கை
உறுதிப்படுத்தி பயணத்தின்
எல்லையை வந்தடையும்.

- மலாய் மொழி பெயர்ப்புக் கவிதை - கே. பாலமுருகன்.

கவிதைப்பேழை

# 3. செய்யுள் : கம்பராமாயணம்

- கம்பர்

## சொல்லும் பொருளும்

1. அமலன் → குற்றமற்றவனாகிய இராமன்
2. இளவல் → தம்பி
3. நளிர் கடல் → குளிர்ந்த கடல்
4. நுதல் → நெற்றி
5. நன்னுதலவள → அழகிய நெற்றியை உடைய சீதை
6. அனையாய் → போன்றவன்
7. கேள் → அண்ணி
8. கொழில் உரிமையின் உள்ளேன் →உன் ஏவலுக்கேற்ப பணிபுரிபவன்
9. துன்பு → துன்பம்
10. உன்னேல் → எண்ணாதே/ நினைக்காதே
11. இந்தனம் → விறகு
12. கார் அகில் → கரிய அகில் கட்டைகள்
13. தருப்பை → தருப்பை புற்கள்
14. திருத்தி → ஒழுங்குபட அடுக்கினான்
15. சிந்தினன் → தூவினான்
16. இயற்றி → அமைத்தான்
17. தெண் நீர் → நன்னீர்
18. தாதை → தன் தந்தையாகிய சடாயுவை
19. தடக்கை → பெரிய கை
20. சார்வான் → வந்தான்
21. நோற்கும் → தவமிருந்த
22. அன்னாட்கு → அந்த சவரிக்கு
23. இன்னுரை → அன்பான உரை
24. தீது → துன்பம்
25. மூலம் → பிறதொருவர் , இவனுக்கு முன்னே உள்ளோர்
26. ஆண்டு → அப்போது
27. ஏத்தி → புகழ்ந்து
28. கண்ணன் → கண்ணீர் வடித்தவர் (சவரி)
29. மாண்டது → அழிந்தது
30. மாயப்பாசம் → உலகப் பற்று
31. வரம்பு இல் → அளவற்ற
32. பூண்ட → மேற்கொண்டிருந்த
33. போயது → ஒழிந்தது
34. நல்க → கொடுக்க
35. தவா வலி → குறையாத வலிமை
36. தகா → வேண்டாத
37. தள்ளி → அழித்து
38. ஒத்தார் → ஒருங்கிருந்தார்கள் / ஒத்து இருந்தார்கள்
39. அவா → ஆசை
40. அனகன் → இராமன்
41. அரியும் வேந்து → வானரத் தலைவன் (சுக்ரீவன்)
42. உவா → அமாவாசை
43. கூடும் → இணைந்திருக்கிற
44. உடுபதி → சந்திரன்
45. இரவி → சூரியன்
46. பெற்றவர் → பகைவர்
47. உற்றவர் → நண்பர்கள்
48. கிளை → உறவினர்
49. துணைவன் → நண்பன்
50. ஆழியான் → ஆணைச் சக்கரத்தையுடைய இராமன்
51. அருள் சுரந்து → கருணை பொங்க

52. அன்று → அவ்வளவு காலம் வரை
53. வாள் → ஒளி பொருந்திய
54. எயிறு → பற்கள்
55. தாழ்கடல் → ஆழமான கடல்
56. செல்வம் → அரசாட்சி
57. நின்னதே → உனக்கே உரிமையாய்
58. குன்று → மலை
59. குன்று சூழ்வான் மகன் → மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகன் (சுக்ரீவன்)
60. அகன் → உள்ளம்
61. கானம் → காடு / வனம்
62. பொலிந்தான் → பெருமை பெறுகிறான்
63. நுந்தை → நும் தந்தை / உன் தந்தையாகிய தசரதன்

# நம்மை அளப்போம்

## I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. ‘உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்’ - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
**விடை: இ) இராமன், சுக்ரீவன்**

### அகநிலை வினாக்கள்

1. **பல்வேறு விதமான பண்புகளை அடிப்படையாகக் கொண்ட பாத்திரங்களால் படைக்கப்பட்டிருப்பது ________**
அ) உரிமைத்தாகம் ஆ) விருந்தினர் இல்லம் இ) அஞ்ஞாடி ஈ) கம்பராமாயணம்
**விடை: ஈ) கம்பராமாயணம்**

2. **அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டுபவர் ________**
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) இராமன் ஈ) சவரி
**விடை: இ) இராமன்**

3. **கிட்கிந்தா காண்டத்தில் இராமனுடன் நட்பு கொள்பவன் ________**
அ) சடாயு ஆ) சபரி இ) வீடணன் ஈ) சுக்ரீவன்
**விடை: ஈ) சுக்ரீவன்**

4. **இராமன் ஆரணிய காண்டத்தில் சந்திப்பது ________**
அ) சவரியை ஆ) குகனை இ) சுக்ரீவனை ஈ) வீடணனை
**விடை: அ) சவரியை**

5. **கம்பராமாயணத்திற்குக் கம்பர் சூட்டிய பெயர் ________**
அ) கம்பராமாயணம் ஆ) இராமாயணம் இ) இராமகாதை ஈ) இராமநாடகம்
**விடை: இ) இராமகாதை**

6. **கம்பனது கவிநலத்தின் காரணமாக இராமகாதை ________ என அழைக்கப்படுகிறது**
அ) கம்பராமாயணம் ஆ) இராமாயணம் இ) கம்ப நாடகம் ஈ) இராம நாடகம்
**விடை: அ) கம்பராமாயணம்**

7. **கம்பரது காலம் ____________**
   அ) கி.பி. 10 ஆம் நூற்றாண்டு ஆ) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு
   இ) கி.பி. 14 ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

**விடை: ஆ) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு**

8. **மக்கள் இலக்கியமாகப் போற்றப்படும் காப்பியம் ____________**
   அ) உரிமைத்தாகம் ஆ) அஞ்ஞாடி இ) கம்பராமாயணம் ஈ) யுத்த காண்டம்

**விடை: இ) கம்பராமாயணம்**

9. **'கவிச்சக்கரவர்த்தி' என்று போற்றப்படுவர் ____________**
   அ) பூமணி ஆ) பக்தவத்சல பாரதி இ) நக்கீரர் ஈ) கம்பர்

**விடை: ஈ) கம்பர்**

10. **தமிழர் நற்பண்பின் வளர்ச்சி என்பது ____________**
    அ) யாவரும் கேளிர் ஆ) 'சிறியோரை இகழ்தல் இலமே'
    இ) 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' ஈ) 'காக்கை குருவி எங்கள் ஜாதி'

**விடை: அ) யாவரும் கேளிர்**

11. **'சிறியோரை இகழ்தல் இலமே' - என்பது தமிழர் நற்பண்பின் ____________**
    அ) வளர்ச்சி ஆ) மலர்ச்சி இ) முதிர்ச்சி ஈ) தொடர்ச்சி

**விடை: ஆ) மலர்ச்சி**

12. **'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - என்பது தமிழர் உயிர்ப்பண்பின் ____________**
    அ) மலர்ச்சி ஆ) முதிர்ச்சி இ) தொடர்ச்சி ஈ) உயர்ச்சி

**விடை: ஆ) முதிர்ச்சி**

13. **'காக்கை குருவி எங்கள் ஜாதி' - என்பது ____________ தொடர்ச்சி**
    அ) தமிழ்ப்பண்பின் ஆ) பறவைப் பண்பின்
    இ) ஐந்தறிவுப் பண்பின் ஈ) பண்பாட்டுப் பண்பின்

**விடை: அ) தமிழ்ப்பண்பின்**

14. **மனிதனின் ஒட்டு மொத்த பண்பின் படிமமாகப் இராமனைப் படைத்திருக்கும் உயர்ச்சி பொருந்தியது ____________**
    அ) இளங்கோவின் காவியம் ஆ) கம்பனின் காவியம்
    இ) வள்ளுவரின் படைப்பு ஈ) ஒட்டக்கூத்தர் படைப்பு

**விடை: ஆ) கம்பனின் காவியம்**

15. **வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் இல்லாத அன்புடையவன் ____________**
    அ) குகன் ஆ) சுக்ரீவன் இ) இராமன் ஈ) இலக்குவன்

**விடை: இ) இராமன்**

16. **'எதிரியின் தம்பி' - எனக் குறிப்பிடப்படுபவன் ____________**
    அ) குகன் ஆ) சுக்ரீவன் இ) சவரி ஈ) வீடணன்

**விடை: ஈ) வீடணன்**

17. **பாறை உடலுக்குள் பஞ்சு உள்ளம் கொண்டவன் ____________**
    அ) இராமன் ஆ) இலக்குவன் இ) சுக்ரீவன் ஈ) குகன்

**விடை: ஈ) குகன்**

www.kalviexpress.in www.kalviexpress.in



18. குகனைத் தம் உடன்பிறப்பாக ஏற்றுக் கொண்டவன் ______
அ) இராமன் ஆ) இலக்குவன் இ) சுக்ரீவன் ஈ) சடாயு
**விடை: அ) இராமன்**

19. காட்டிற்கு செல்லும் இராமானுக்குக் கங்கையைக் கடக்க உதவியவன் ______
அ) சடாயு ஆ) சவரி இ) குகன் ஈ) அனுமன்
**விடை: இ) குகன்**

20. i) இராமன் குகனுடன் நட்பு கொள்வது அன்பிற்கு அடைக்கும் தாழ் இல்லை என்பதை நிறுவுகிறது
ii) வேடான குகனை இராமன் தன் உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கிறான்.
அ) (i) தவறு (ii) சரி ஆ) (i), (ii) இரண்டும் சரி
இ) (i) சரி (ii) தவறு ஈ) (i), (ii) இரண்டும் தவறு
**விடை: ஆ) (i), (ii) இரண்டும் சரி**

21. பரதன் 'எனக்கும் மூத்தோன்' - என்று ஏற்றுக் கொள்பவன் ______
அ) சடாயு ஆ) சுக்ரீவன் இ) அனுமன் ஈ) குகன்
**விடை: ஈ) குகன்**

22. 'என் உயிர் அனையாய் நீ' - யார் யாரிடம் கூறியது?
அ) சுக்ரீவன் இராமனிடம் ஆ) இராமன் சபரியிடம்
இ) இராமன் குகனிடம் ஈ) இலக்குவன் குகனிடம்
**விடை: இ) இராமன் குகனிடம்**

23. 'நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்' - என்று கூறியவன் ______
அ) குகன் ஆ) இராமன் இ) இலக்குவன் ஈ) அனுமன்
**விடை: ஆ) இராமன்**

24. 'இளவல் உன் இளையோன்' - இவ்வடியில் இளவல் யார்?
அ) இராமன் ஆ) இலக்குவன் இ) குகன் ஈ) சீதை
**விடை: ஆ) இலக்குவன்**

25. 'நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' - யார் யாரிடம் கூறியது?
அ) இலக்குவன் இராமனிடம் ஆ) சுக்ரீவன் இராமனிடம்
இ) இராமன் வீடணிடம் ஈ) இராமன் குகனிடம்
**விடை: ஈ) இராமன் குகனிடம்**

26. சடாயு உயிர் நீத்த படலம் இடம் பெறும் காண்டம் ______
அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரணிய காண்டம்
இ) கிட்கிந்தா காண்டம் ஈ) யுத்தக் காண்டம்
**விடை: ஆ) ஆரணிய காண்டம்**

27. இராமனை, சுக்ரீவனுடன் நட்புக் கொள்ளுமாறு செய்தவள் ______
அ) சீதை ஆ) சடாயு இ) சவரி ஈ) தாய்
**விடை: இ) சவரி**

28. இராமன், தன் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டியது ______
அ) குகனிடம் ஆ) சவரியிடம்
இ) சடாயுவிடம் ஈ) சுக்ரீவனிடம் **விடை: ஆ) சவரியிடம்**



www.kalviexpress.in www.kalviexpress.in

29. **இப்படியொருவர் இருந்தார் என்று பிறிதொருவரைக் காட்ட இயலாத நிலையிலுள்ள முதற்பொருளானவன் _____**
அ) குகன் ஆ) இலக்குவன் இ) வீடணன் ஈ) இராமன்
**விடை: ஈ) இராமன்**

30. **'தீது இன்று இருந்தனை போலும்' இவ்வடிகள் யார் யாரிடம் கூறியது?**
அ) இராமன் சவரியிடம் ஆ) இராமன் குகனிடம்
இ) இராமன் விபீடணிடம் ஈ) இராமன் சுக்ரீவனிடம்
**விடை: அ) இராமன் சவரியிடம்**

31. **'இழி அருவிக் கண்ணள்'- யார்?**
அ) சீதை ஆ) சவரி இ) கோசலை ஈ) கைகேயி
**விடை: ஆ) சவரி**

32. **இராம இலக்குவனுக்கு வேண்டியது கொண்டு வந்து விருந்து செய்வித்தது ____________**
அ) சவரி ஆ) குகன் இ) சுக்ரீவன் ஈ) வீடணன்
**விடை: அ) சவரி**

33. **'நட்பு கோட்படலம்' அமைந்துள்ள காண்டம் ____________**
அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரணிய காண்டம்
இ) யுத்த காண்டம் ஈ) கிட்கிந்தா காண்டம்
**விடை: ஈ) கிட்கிந்தா காண்டம்**

34. **கிட்கிந்தா நோக்கி இராமன் தேடி வந்தது ____________**
அ) சவரியை ஆ) இலக்குவனை இ) சடாயுவை ஈ) சீதையை
**விடை: ஈ) சீதையை**

35. **அனகனும் அரியும் வேந்தும் - என்று குறிப்பிடப்பட்டவர்கள் ____________**
அ) இராமன், இலக்குவன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) சுக்ரீவன், இராமன்
**விடை: இ) இராமன். சுக்ரீவன்**

36. **அவா முதலிய சிந்தைகளை அழித்தவன் ____________**
அ) இராமன் ஆ) சவரி இ) சுக்ரீவன் ஈ) இலக்குவன்
**விடை: அ) இராமன்**

37. **'என் காதல் சுற்றம் உன் சுற்றம்' - என்றவன்**
அ) இராமன் ஆ) இலக்குவன் இ) வீடணன் ஈ) சுக்ரீவன்
**விடை: அ) இராமன்**

38. **'நீ என் இன்உயிர்த் துணைவன்' - என்று குறிப்பிடப்பட்டவன் ____________**
அ) இராமன் ஆ) இலக்குவன் இ) வீடணன் ஈ) சுக்ரீவன்
**விடை: ஈ) சுக்ரீவன்**

39. **'வீடணன் அடைக்கலப் படலம்' - இடம் பெற்றுள்ள காண்டம் ____________**
அ) அயோத்தியா காண்டம் ஆ) ஆரணிய காண்டம்
இ) யுத்த காண்டம் ஈ) கிட்கிந்தா காண்டம்
**விடை: இ) யுத்த காண்டம்**

40. **இலங்கையை விட்டு வந்து இராமனிடம் அடைக்கலம் வேண்டியவன் ____________**
அ) சுக்ரீவன் ஆ) குகன் இ) வீடணன் ஈ) சடாயு
**விடை: இ)வீடணன்**

**41. 'தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே. தந்தேன்' என்றவன் ______________**
அ) இராமன் ஆ) இலக்குவன் இ) சுக்ரீவன் ஈ) அனுமன்
**விடை: அ) இராமன்**

**42. மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் சேர்ந்து உடன்பிறந்தவர்கள் ______________ ஆனோம்**
அ) ஐவர் ஆ) அறுவர் இ) எழுவர் ஈ) நால்வர்
**விடை: ஆ) அறுவர்**

**43. புகுதற்குரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி அனுப்பி புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறவர் ______________**
அ) இராமன் ஆ) இலக்குவன் இ) தயரதன் ஈ) ஜனகன்
**விடை: இ) தயரதன்**

**44.** **(அ) அளவற்ற காலம் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது - (1) குகன்**
**(அ) ஆணைச் சக்கரத்தையுடையவன் - (2) சடாயு**
**(இ) கழுகு வேந்தன் - (3) சவரி**
**(ஈ) வேடுவர் தலைவன் - (4) இராமன்**
அ) 1, 2, 3, 4 ஆ) 3, 4, 1. 2
இ) 4, 3, 2. 1 ஈ) 3, 4, 2. 1 **விடை: ஈ) 3, 4, 2. 1**

**45.** (i) **முன்பு உளெம் நாங்கள் - (1) எழுவர்**
(ii) **அன்பு உள இனி நாம் ஆவது - (2) அறுவர்**
(iii) **குன்று சூழ்வான் மகனொடு சேர்த்து ஆவது - (3) ஐவர்**
(iv) **அகன் அமர் காதல் ஐய நின்னோடு ஆவது - (4) நால்வர்**
அ) 2, 1, 4, 3 ஆ) 1, 2, 4. 3
இ) 4, 3, 2. 1 ஈ) 4, 3, 1. 2 **விடை: ஈ) 4, 3, 1. 2**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. நிலையாமை குறித்து. சவரி உரைக்கும் கருத்து யாது?**

**சவரி உரைக்கும் கருத்துகள் :**

**உலகப் பற்று அழிதல் :**

இவனுக்கு முன்னே இப்படியொருவர் இருந்தார் என்று பிறிதொருவரைக் காட்ட இயலாத நிலையிலுள்ள முழுமுதற்பொருளாகிய இராமனைக் கண்டதும் நிலையாமைத் தன்மையுடைய உலகப்பற்று அழிந்தது.

**தவம் பலித்தல் :**

மெய்பொருளாகிய இராமனைக் காணப்பெற்ற புண்ணியத்தால் அளவற்ற காலம் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது.

**பிறவி நீங்குதல் :**

- நிலைத்த தன்மையை உடைய இராமனின் அன்பைப் பெற்றதால் தீமையால் அல்லற்படும் பிறப்பு நீங்கியது. இவையே நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்துகள் ஆகும்.

**2. 'துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது?' என்ற இராமனின் கூற்று பின்வரும் இரு பழமொழிகளில் எதற்குப் பொருந்தும்?**

**அ. நிழலின் அருமை வெயிலில் தெரியும் ஆ. சிறு துரும்பும் பல்குத்த உதவும்**

**விடை :** நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

## அகநிலை வினாக்கள்

**1. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்கள் எத்தனை? அவை யாவை?**

கம்ப ராமாயணம் ஆறு காண்டங்களை உடையது

அவை,

- பால காண்டம்
- அயோத்தியா காண்டம்
- ஆரணிய காண்டம்
- கிட்கிந்தா காண்டம்
- சுந்தர காண்டம்
- யுத்த காண்டம்

**2. கம்பராமாயணம் - குறிப்பெழுதுக**

- இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.
- வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதிய இராமாயணத்தைத் தழுவிக் கம்பர் அதனைத் தமிழில் இயற்றினார்.
- பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என ஆறு காண்டங்களை உடையது.
- கம்பர் தாம் இயற்றிய நூலுக்கு 'இராமாவதாரம்' என்றே பெயரிட்டார்.
- கம்பனது கவிநலத்தின் காரணமாக இது கம்பராமாயணம் என்றழைக்கப்பட்டது.

**3. கம்பர் - பற்றிச் சிறுகுறிப்பு வரைக**

**கம்பர்**

- கம்பர் நாகை மாவட்டம் தேரழுந்தூரில் பிறந்தவர்.
- கம்பரின் தந்தையார் ஆதித்தன்
- இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தவர்.
- இவரைத் திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப வள்ளல் ஆதரித்தார்.
- கம்பரது காலம் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு
- கம்பராமாயணம், சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம் ஆகியன கம்பர் இயற்றிய நூல்கள் ஆகும்.
- சயங்கொண்டார், ஒட்டக்கூத்தர், புகழேந்தி ஆகியோர் இவரது சமகாலப் புலவராவர்.

**4. கவிச்சக்கரவர்த்திக் கம்பரைப் போற்றும் தொடர்கள் யாவை?**

**கம்பரைப் போற்றும் தொடர்கள் :**

- கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்.
- விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்.
- கல்வியிற் பெரியவர் கம்பர்.

**5. கம்பரைப் புலவர் பெருமக்கள் போற்றுவது யாங்ஙனம்?**

**கம்பரின் புகழ் :**

'யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்' என்று பாரதியார் கம்பரைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

**6. கம்பராமாயணத்தின் காப்பியச் சிறப்பு பற்றி எழுதுக?**

**காப்பியச் சிறப்பு :**

- பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை முழுமையாகப் பெற்றது.
- பொருள், அணி, நடை ஆகியவற்றால் சிறந்தது.
- கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை நிறைந்தது.
- சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப்பண்பாடும் மிளிர்ந்துள்ளது.

**7. தொல்காப்பிய நெறி நின்றவர் கம்பர் என்பதை நிறுவக**

**தொல்காப்பிய நெறி நின்றவர் :**

*'வடசொல் கிளவி வடஎழுத் தொரீஇ*
*எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'*

- தொல்-எச்சவியல்

- வட சொல்லைப் பயன்படுத்தும் போது போது வடஎழுத்தை நீக்கித் தமிழ்ப்படுத்த வேண்டும் என்னும் தொல்காப்பிய இலக்கணப்படி ராமன், ஹனுமன், லஷ்மணன், விபீஷணன் என்னும் வடமொழிப் பெயர்களை இராமன், அனுமன். இலக்குவன். வீடணன் என நெறிப்படுத்திய தமிழ் வேந்தர் கம்பரே!,
- வடமொழி எழுத்தையும் பிறமொழிக்கலப்பையும் தடுத்தவர் இவரே! எனவே தொல்காப்பிய நெறியில் நின்றவர் கம்பரே ஆவார்.

**8. கம்பனின் காவியம் குறித்த கால்டுவெல்லின் கருத்து யாது?**

**கால்டுவெல் கருத்து :**

உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்து விட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும், மீண்டும் அதனைப் புதுப்பித்து விடலாம் என்கிறார் கால்டுவெல்.

**9. 'இராமன் அனைத்து உயிர்களிடத்தும் பாகுபாடின்றி அன்பு காட்டுவன்' - என்பதை மெய்ப்பிக்க**

- வேடனான குகனிடமும்
- பறவையான சடாயிடமும்
- எளிய முதியவளான சவரியிடமும்
- வானரத் தலைவனான சுக்ரீவனிடமும்
- வானரத் தொண்டனான அனுமனிடமும்
- கரடி இனத் தலைவனான ஜாம்பவானிடமும்
- எதிரியின் தம்பியான வீடணனிடமும்

எந்த வித பாகுபாடின்றியும் எல்லைகள் அனைத்தையும் கடந்த அன்பினைக் காட்டுகிறார் இராமன்.

இவை மூலம் இராமன் அனைத்து உயிர்களிடத்தும் பாகுபாடின்றி அன்பு காட்டுபவன் என்பதை அறியலாம்.

**10. 'அன்பு உள, இனி, நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' யார் யாரிடம் கூறியது?**

- கம்பர் எழுதிய கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்திலுள்ள குகப் படலத்தில்,
- காட்டிற்குச் செல்லும் இராமன், சீதை, இலக்குவன் ஆகியோர் கங்கையைக் கடப்பதற்கு உதவி செய்யும் குகனின் அன்பு மிகுதி கண்டு இராமன், 'அன்பு உள இனி நாம் ஓர் ஐவர்கள் உளர் ஆனோம்' என்று குகனிடம் கூறுகிறார்.

**11. சடாயு எவ்வாறு உயிர் நீத்தது?**

- கழுகு வேந்தன் சடாயு, இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான்.
- பின் இராமனிடம் நடந்ததைக் கூறிவிட்டு இறந்து விடுகிறான்.

**12. ஆரணிய காண்டத்தில் காப்பியப் போக்கில் திருப்பத்தை ஏற்படுத்தியவள் யார்? எவ்வாறு?**

**சவரி :**

- காப்பியப் போக்கில் திருப்பத்தை ஏற்படுத்தியவள் சவரி.
- இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி.
- சீதையைத் தேடி வந்த இராமனை, சுக்ரீவனுடன் நட்பு கொள்ளுமாறு செய்ததால் காப்பியப் போக்கில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

**13. இராமன் சவரியிடம் பரிவுடன் கேட்டதென்ன?**

**இராமன் சவரியிடம் :**

- இராமன், சவரியிடம் இனிதாகப் பேசினான்.
- தன்னையே நினைத்துக் தவமிருந்த சவரியிடம், ‘இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?’ என்று பரிவுடன் கேட்டான்.

**14. ஆரணிய காண்டத்தில் இராம இலக்குவருக்கு விருந்து செய்வித்தவர் யாவர்?**

**சவரி :**

- ஆரணிய காண்டத்தில், சீதையைத் தேடி வந்த இராமனைக் கண்டதும் அன்பின் கனிவினால் அருவி இழிவது போலக் கண்ணீர் வடித்தாள் சவரி,
- இராம இலக்குவருக்கு வேண்டிய எல்லாம் கொண்டு வந்து விருந்து செய்வித்தாள்.
- அவர்களும் விருந்தை ஏற்றனர்.

**15. ‘குவால் அறம் நிறுத்தற்கு ஏற்ற**
**காலத்தின் கூட்டம் ஒத்தார்’**

**இராமன் சுக்ரீவனை நண்பனாக ஏற்றல் :**

இருள் போன்ற பகைவர்களை (அரக்கர்களை) அழித்து அறங்கள் அனைத்தையும் நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற உரிய காலம் போல் இராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்தார்கள்.

**16. இராமனும் சுக்ரீவனும் இணைந்து இருந்ததற்குக் கம்பர் கூறிய உவமை யாது?**

**சூரியன் - சந்திரன் :**

- ஆசையை அறவே அழித்த சிந்தையுடைய இராமனும்,
- வானரத் தலைவன் சுக்ரீவனும்,
- அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருந்தார்கள்.

**17. இலங்கையை விட்டு வீடணன் ஏன் வந்தான்?**

**இராமனிடம் அடைக்கலம் :**

- சீதையைக் கவர்ந்து வந்தது தவறென வீடணன், இராவணிடம் கூறுகிறான்.
- அவன் கூற்றை மதியாத இராவணன், வீடணனைக் கடிந்தான்.
- எனவே, வீடணன் இலங்கையை விட்டு, இராமன் இருக்குமிடம் வந்து அடைக்கலம் வேண்டினான்.

**18. புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான் தயரதன் என்று கூறக் காரணம் என்ன?**

**கானக வாழ்வு :**

புகுதற்கரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி தயரதன் இராமனை அனுப்பினார்.

**தயரதன் பெருமை பெறுதல் :**

செல்லும் வழியில் இராமனுக்கு உதவி செய்து, தம்பால் அன்பும் காட்டிய குகனையும், சுக்ரீவனையும், வீடணனையும் தன் உடன்பிறந்தவர்களாக இராமன் ஏற்றுக் கொண்டதால் இராமனின் தந்தையாகிய தயரதன் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான் என்று கூறுகிறார் கம்பர்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.**

**குகனோடு ஐவராதல் :**

- தயரதனின் புதல்வர்களான இராமன், பரதன், இலக்குவன், சத்ருக்கணன் ஆகிய நால்வரும் உடன்பிறந்தவர்களாக இருந்தனர்.
- பின்பு வேடுவர் தலைவன் குகனுடன் சேர்ந்து உடன்பிறந்தவர்கள் ஐவராயினர்.

**சுக்ரீவனோடு அறுவராதல் :**

கிட்கிந்தையில் சந்தித்த, மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான வானரத் தலைவன் சுக்ரீவனுடன் சேர்ந்து உடன்பிறந்தவர்கள் அறுவராயினர்.

**வீடணனோடு எழுவராதல் :**

இராவணன் சீதையைக் கடத்தி வந்த செயல் பிடிக்காத வீடணன் இலங்கையை விட்டு விட்டு உள்ளத்தில் அன்பு கொண்டு இராமனிடம் அடைக்கலம் வந்த அன்பனான வீடணனோடு சேர்ந்து உடன்பிறந்தவர்கள் எழுவராயினர்.

**தயரதன் பெருமை பெறுதல் :**

புகுதற்குரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி இராமனை அனுப்பிய தயரதன், இதனால் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான்.

---

**2. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக**

**சடாயுவைத் தந்தையாக ஏற்றல் :**

- கழுகு வேந்தன் சடாயு, இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான்.
- பின்பு, அங்கு வந்த இராமனிடம் நடந்ததைக் கூறிவிட்டு இறந்து விடுகிறான்.
- இராமன், தன் தந்தையின் நண்பனான கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் சடாயுவுக்கு இறுதிச் சடங்கு செய்கிறான்.

**சடாயுவுக்கு, இராமன் ஆற்றிய கடமைகள் :**

- 'எப்படிப்பட்ட சிறப்பான விறகுகள் இவை' என்று கண்டவர் வியக்கும்படியான கரிய அகில் கட்டைகளையும் சந்தன கட்டைகளையும் இராமன் கொண்டு வந்து வைத்தான்
- தேவையான அளவு தருப்பைப் புற்களையும் ஒழுங்குபட அடுக்கினான்.
- பூக்களையும் கொண்டு வந்து தூவினான்.
- மணலினால் மேடையைத் திருத்தமாக அமைத்தான். நன்னீரையும் எடுத்து வந்தான்.
- இறுதிச் சடங்கு செய்யப்படக்கூடிய மேடைக்குத் தன் தந்தையாகிய சடாயுவைப் பெரிய கைகளில் தூக்கிக் கொண்டு வந்தான்.

## அகநிலை வினாக்கள்

**1. இராமன் சவரியிடம் இனிதாகப் பேசியவற்றை உரையாடலாக எழுதுக.**

**இராமன் சவரியின் உரையாடல் :**

(இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி. இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டி இனிதாகப் பேசினான்)

**இராமன் :** *இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி
நலமுடன் இருந்தாய் அல்லவா?*

(சவரி, இராமனைக் கண்டதும் அன்பின் கனிவினால் அருவி இழிவது போலக் கண்ணீர் வடித்தாள்)

**சவரி :** *என் பொய்யான உலகப் பற்று அழிந்தது ;
அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த
தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது.*

*வேண்டிய எல்லாம் கொண்டு வந்துள்ளேன்
விருந்தை ஏற்றருள்க!*

(இராம இலக்குவர் சவரியின் விருந்தை ஏற்றனர்)

www.kalviexpress.in www.kalviexpress.in



**2. இராமனுடன் சுக்ரீவன் இணைந்திருக்கும் காட்சியைக் கம்பர் எவ்வாறு உவமிக்கிறார்?**

**அறம் நிலைபெற ஏற்ற காலம் :**

குறையாத வலிமையும் வேண்டாத இருளையும் போன்ற பகைவர்களை (அரக்கர்களை) அழித்து, அறங்கள் அனைத்தையும் நிலைபெறச் செய்வதற்கு ஏற்ற காலம் போல் இராமனும் சுக்ரீவனும் ஒருங்கிருந்தார்கள்.

**சந்திரனையும் சூரியனையும் ஒத்து இருத்தல் :**

ஆசையை அழித்த சிந்தையுடைய இராமனும், வானரத் தலைவனான சுக்ரீவனும் அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும் சூரியனையும் போல ஒத்து இருந்தார்கள்.

**3. இராமன் சுக்ரீவனிடம் கூறிய செய்திகளைச் சுருக்கி எழுதுக**

**நீ என் இன்னுயிர்த் தலைவன் :**

- இராமன் சுக்ரீவனிடம் 'இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்;
- தீயவராக இருப்பினும் கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்;
- உன் உறவினர் என் உறவினர்;
- அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்;
  நீ, என் இனிய உயிர் நண்பன்' என்றான்

**4. இலங்கை அரசை வீடணனுக்கு உரிமையாக்குவேன் என்று இராமன் கூறிய செய்திகளைத் தொகுத்தெழுதுக**

ஆணைச் சக்கரத்தையுடைய இராமன் உள்ளத்தில் கருணை பொங்க வீடணனிடம், 'ஒளிபொருந்திய பற்களை உடைய அரக்கர் வாழ்வதும் ஆழமான கடல் நடுவே உள்ளதுமான இலங்கை அரசாட்சி, ஏழேழாகிய பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமோ அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன் என்று கூறினான்.

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக :**

**பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலை :**

**முன்னுரை :**

வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் இராமனின் அன்பிற்கு இல்லை. தந்தை தாய் மீதான அன்பு, உடன் பிறப்பியம் ஆகிய எல்லைகளைக் கடந்த அன்புடன் விரிவுப்படுத்துகிறான் இராமன்.

**குகனுடன் உடன்பிறப்பான உறவு நிலை :**

துன்பம் என்று ஒன்று இருந்தால் தானே இன்பம் என்பது புலப்படும். துன்பத்திற்குப் பின் இன்பம் உறுதியாக உண்டு. நமக்கிடையே இப்போது இப்பிரிவு நேர்கிறது என்று எண்ணாதே. இது வரை நாங்கள் நால்வரே உடன்பிறந்தவர் என்றிருந்தோம். உறவு என்பது எங்கள் நால்வரோடு நின்றுவிட வில்லை. இப்போது உன்னையும் சேர்த்து நாம் ஐவர் ஆகின்றோம் - என்று கூறுவதிலிருந்து வேடுவர் தலைவரான குகனுடன் இராமன் கொண்ட உடன்பிறந்தவன் என்ற உறவு நிலை விளங்குகிறது.

**சடாயுவிடம் தந்தை மகன் உறவு நிலை :**

- கழுகு வேந்தன் சடாயு, இராவணன் சீதையைச் சிறையெடுத்த போது தடுத்துச் சண்டையிட்டுக் காயப்படுகிறான்.
- பின்பு, அங்கு வந்த இராமனிடம் நடந்ததைக் கூறிவிட்டு இறந்து விடுகிறான்.
- இராமன், தன் தந்தையின் நண்பனான கழுகு வேந்தனையும் தன் தந்தையாகவே கருதி, மகன் நிலையில் சடாயுவுக்கு இறுதிச் சடங்கு செய்கிறான்.



www.kalviexpress.in www.kalviexpress.in

இதன் மூலம் தந்தை மகனான உறவு நிலையில் கழுகு வேந்தரான சடாயுவைப் போற்றுவது விளங்குகிறது.

**சவரியிடம் - தாயுடனான உறவு நிலை :**

- இராமனிடம் மிகுதியான அன்பையும் பக்தியையும் கொண்டவள் சவரி
- இராமன் சவரியிடம் இனிதாகப் பேசினான்.
- தன்னையே நினைத்துத் தவமிருந்த சவரியிடம், 'இவ்வளவு காலம் நீ துன்பம் ஏதுமின்றி நலமுடன் இருந்தாய் அல்லவா?' என்று பரிவுடன் கேட்டான்.

இவ்வாறு இராமன், அன்பளாகிய சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான்.

**சுக்ரீவனை - உயிர் நண்பனாக ஏற்றல் :**

இராமன் சுக்ரீவனிடம் 'இனி நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? விண்ணிலும் மண்ணிலும் உள்ள உன் பகைவர் என் பகைவர்; தீயவராக இருப்பினும் கூட உன் நண்பர்கள் என் நண்பர்கள்; உன் உறவினர் என் உறவினர்; அன்பு மிகுந்த என் சுற்றத்தினர் உன் சுற்றத்தினர்; நீ, என் இனிய உயிர் நண்பன்' என்றான்

- குகனை அடுத்து வானரத் தலைவனான சுக்ரீவனையும் தம் ஆறாவது உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொள்கிறார் இராமன்.

**வீடணனை - உடன்பிறப்பாக ஏற்றல் :**

இராவணன் சீதையைக் கடத்தி வந்த செயல் பிடிக்காத வீடணன் இலங்கையை விட்டு விட்டு உள்ளத்தில் அன்பு கொண்டு இராமனிடம் அடைக்கலம் வந்த அன்பனான வீடணனோடு சேர்ந்து உடன்பிறந்தவர்கள் எழுவராயினர்.

**முடிவுரை :**

'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி: 'சிறியோரை இகழ்தல் இலமே' என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி; காக்கை குருவி எங்கள் ஜாதி என்பது அத்தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி. கம்பனின் காவியம் இராமனை இப்பண்பின் படிமமாகப் படைத்திருப்பது உயர்ச்சி.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. உளது → இடைக்குறை
2. மாதவம் → உரிச்சொற்றொடர்
3. தாழ்கடல் → வினைத்தொகை
4. செற்றவர் → வினையாலணையும் பெயர்
5. நுந்தை → நும் தந்தை என்பதன் மரூஉ மொழி

### அகநிலை வினாக்கள்

1. என்னுயிர் → ஆறாம் வேற்றுமைத் தொகை
2. நன்னுதல் → பண்புத் தொகை
3. நின்கேள் → நான்காம் வேற்றுமைத் தொகை
4. தெண்நீர் → பண்புத் தொகை
5. தடக்கை → உரிச்சொற்றொடர்
6. குவித்து → வினையெச்சம்
7. திருத்தி → வினையெச்சம்
8. இயற்றி → வினையெச்சம்

9. இன்னுரை → பண்புத் தொகை
10. இருந்தனை → முன்னிலை ஒருமை வினைமுற்று
11. அருவிக்கண்ணள் → உவமைத்தொகை
12. மாயப்பாசம் → உருவகம்
13. பூண்ட → பெயரெச்சம்
14. விருந்து → ஆகுபெயர்
15. தவா வலி → ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
16. தகா இருள் → ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
17. இருள் பகை → உவமைத் தொகை
18. அறுத்த → பெயரெச்சம்
19. அனகனும் அரியும் வேந்தும் → எண்ணும்மை
20. செற்றவர் → வினையாலணையும் பெயர்
21. உற்றவர் → வினையாலணையும் பெயர்
22. நோக்கி → வினையெச்சம்
23. எயிற்று அரக்கர் → இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
24. பொலிந்தான் → படர்க்கை ஒருமை வினைமுற்று.

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **தந்தனன்** → தா(த) + த்(ந்) + த் + அன் + அன்

த → பகுதி (த எனக் குறுகியது விகாரம்);
த் → சந்தி (ந் ஆனது விகாரம்)
த் → இறந்த கால இடைநிலை;
அன் → சாரியை
அன் → படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி

2) **பொலிந்தான்** → பொலி + த்(ந்) + த் + ஆன்

பொலி → பகுதி
த் → சந்தி (ந் ஆனது விகாரம்)
த் → இறந்த கால இடைநிலை
ஆன் → ஆண்பால் வினைமுற்று விகுதி

## அகநிலை வினாக்கள்

1) **நேர்வான்** → நேர் + வ் + ஆன்
நேர் → பகுதி
வ் → எதிர்கால இடைநிலை
ஆன் → ஆண்பால் வினைமுற்று விகுதி

2) **அனையாய்** → அனை + ய் + ஆய்
அனை → பகுதி
ய் → உடம்படுமெய் சந்தி
ஆய் → முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

3) **குவிந்து** → குவி + த்(ந்) + த் + உ
குவி → பகுதி
த் → சந்தி, த் 'ந்' ஆனது விகாரம்
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

4) **திருத்தி** → திருத்து + இ
திருத்து → பகுதி
இ → வினையெச்ச விகுதி

5) **சிந்தினன்** → சிந்து + இன் + அன்
சிந்து → பகுதி
இன் → இறந்த கால இடைநிலை
அன் → ஆண்பால் வினைமுற்று விகுதி

6) **இயற்றி** → இயற்று + இ
இயற்று → பகுதி
இ → வினையெச்ச விகுதி

7) **எடுத்து** → எடு + த் + த் + உ
எடு → பகுதி
த் → சந்தி
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

8) **சார்வான்** → சார் + வ் + ஆன்
சார் → பகுதி
வ் → எதிர்கால இடைநிலை
ஆன் → ஆண்பால் வினைமுற்ற விகுதி

9. **நின்று** → நில்(ன்) + ற் + உ
நில் → பகுதி; ல் - 'ன்' ஆனது விகாரம்
ற் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

10. **நினைந்து** → நினை + த்(ந்) + த் + உ
நினை → பகுதி
த் → சந்தி; த் - 'ந்' ஆனது விகாரம்
த் → இறந்த இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

11. **இருந்தனை** → இரு+த்(ந்)+த்+அன்+ஐ
இரு → பகுதி
த் → சந்தி, 'த்'-'ந்'→ஆனது விகாரம்
த் → இறந்தகால இடைநிலை
அன் → சாரியை
ஐ → முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

12. **ஏந்தி** → ஏந்து + இ
ஏந்து → பகுதி
இ → வினையெச்ச விகுதி

13. **அழுது** → அழு + த் + உ
அழு → பகுதி
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

14. **மாண்டது** → மாள்(ண்) + ட் + அ + து
மாள் → பகுதி, 'ள்' - 'ண்' → ஆனது விகாரம்
ட் → இறந்த கால இடைநிலை
அ → சாரியை
து → ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

15. **வந்தது** → வா(வ)+த்(ந்)+த்+அ +து
வா → பகுதி, 'வா' - 'வ' → எனக் குறுகியது விகாரம்
த் → சந்தி, 'த்' - 'ந்' →ஆனது விகாரம்
த் → இறந்த கால இடைநிலை
அ → சாரியை
து → ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

16. **பூண்ட** → பூண் + ட் + அ
பூண் → பகுதி
ட் → இறந்த கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

17. **வேண்டிய** → வேண்டு + இ(ன்)+ய்+அ
வேண்டு → பகுதி
இ(ன்) → இறந்த கால இடைநிலை, 'ன்' - புணர்ந்து கெட்டது விகாரம்
ய் → உடம்படுமெய் சந்தி
அ → பெயரெச்ச விகுதி

18. **செய்து** → செய் + த் + உ
செய் → பகுதி
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

19. **இருந்த** → இரு + த்(ந்) + த் + அ
இரு → பகுதி
த் → சந்தி, த் - 'ந்' - ஆனது விகாரம்
த் → இறந்த கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

20. **அறுத்த** → அறு + த் + த் + அ
அறு → பகுதி
த் → சந்தி
த் → இறந்த கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

21. **வந்து** → வா(வ) + த்(ந்) + த் + உ
வா → பகுதி, வா - 'வ' எனக் → குறுகியது விகாரம்
த் → சந்தி (த்-ந் ஆனது விகாரம்)
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

22. **உரைப்பது** → உரை + ப் + ப் + அ + து
உரை → பகுதி
ப் → சந்தி
ப் → எதிர் கால இடைநிலை
அ → சாரியை
து → ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

23. **நோக்கி** → நோக்கு + இ
நோக்கு → பகுதி
இ → வினையெச்ச விகுதி

24. **நின்ற** → நில்(ன்) + ற் + அ
நில் → பகுதி, 'ல்' - 'ன்' ஆனது விகாரம்
ற் → இறந்த கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

25. **தந்தேன்** → தா(த) + த்(ந்) + த் + ஏன்
தா → பகுதி, தா - 'த' எனக் குறுகியது விகாரம்
த் → சந்தி, த் - 'ந்' → ஆனது விகாரம்
த் → இறந்த கால இடைநிலை
ஏன் → தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

**26. சூழ்வான்** → சூழ் + வ் + ஆன்
சூழ் → பகுதி
வ் → எதிர்கால இடைநிலை
ஆன் → ஆண் பால் வினைமுற்று விகுதி

**27. தந்து** → தா(த) + த்(ந்) + த் + உ
தாப → பகுதி, தா - 'த' எனக் குறுகியது விகாரம்
த் → சந்தி, 'த்' - 'ந்' → ஆனது விகாரம்
த் → இறந்த கால இடைநிலை
உ → பெயரெச்ச விகுதி

## IV. புணர்ச்சி விதி தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **அருங்கானம்** → அருமை + கானம்

i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி 'மை' கெட்டது
→ அருமை
→ அரு + கானம்

ii) 'இனமிகல்' → என்ற விதிப்படி
→ 'க்' ற்கு இனமான 'ங்' மிகுந்தது
→ அருங்கானம்
= என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

1) **உன்னுடையது** → உன் + உடையது

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி
ன் + உ = னு → ஆனது
= உன்னுடையது
= என்று புணர்ந்தது

2) **அருவிக் கண்ணள்** → அருவி + கண்ணள்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' → என்ற விதிப்படி
'க்' - மிகுந்தது
= அருவிக்கண்ணள்
= என்று புணர்ந்தது

3) **வானிடை** → வான் + இடை

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி
'ன் + இ' = 'னி' ஆனது
= வானிடை
= என்று புணர்ந்தது

4) **இலங்கைச் செல்வம்** → இலங்கை + செல்வம்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' → என்ற விதிப்படி
'ச்' - மிகுந்தது
= இலங்கைச் செல்வம்
= என்று புணர்ந்தது

5) **எம்முழை** → எம் + உழை

i) 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' → என்ற விதிப்படி
'ம்' - இரட்டித்தது
= எம் + ம் + உழை

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி
'ம்' + உ = 'மு' → ஆனது
= எம்முழை → என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் மனம் கவர்ந்த கம்பராமாயணப் பாத்திரம் எது? ஏன்? வகுப்பறையில் உரையாடுக.**

நளன் : தமயந்தி! நேற்று நம் தமிழாசிரியர் வகுப்பில் நடத்திய கம்பராமாயணம் பற்றிய நினைவில் இன்று வரை என் கண்முன்னே அனைத்து கதாப்பாத்திரங்களும் மின்னி மறைகின்றன.

தமயந்தி : கம்பராமாயணம் அவ்வளவு பிடிக்குமா?

நளன் : கம்பராமாயணம் கதையில் உன் மனம் கவர்ந்த கதாப்பாத்திரம் எது?

தமயந்தி : எனக்கு எல்லோரையும் பிடித்துள்ளது. அவரவர் கதாப்பாத்திரத்தில் ஏற்புடையதாகவே இருந்தனர். ஆமாம். உனக்கு?

நளன் : எனக்கு குகன் மிகவும் பிடித்துள்ளது

தமயந்தி : ஏன்?

நளன் : வனவாசத்தின் போது இராமனுக்கு உதவி செய்தவர்களில் குகன், சடாயு போன்ற கதாப்பாத்திரங்களே எனக்குச் சிறப்பாகத் தோன்றுகிறது

தமயந்தி : எப்படிச் சொல்கிறாய்?

நளன் : குகன் இராமனிடம் எந்தவிதப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் அவன்மீது தீராத அன்பு கொண்டிருந்தான். அவனுடன் இருந்து கொண்டு செய்வதையே வேண்டுகோளாய் வைத்தாய். அவன் கங்கையாற்றின் மறுபுறம் சென்றதும் பிரிந்து போகும் போது மிகவும் வருந்தினான்.

தமயந்தி : ஏன்? மற்றவர்களும் உதவினார்களே!

நளன் : சுக்ரீவன் உதவி செய்தது வாலியிடம் இருந்த அரசாட்சியைப் பெறுவதற்காகவே வீடணன் இராமனுக்குச் செய்த உதவிக்குத் தான் இலங்காபுரி ஆட்சியைப் பெற்றுக் கொண்டானே!

தமயந்தி : ம்ம். சரிதான். அப்போ.... சடாயு

நளன் : தான் ஒரு பறவை என்றிருந்திருந்தும் சீதையின் அபயக் குரலைக் கேட்டதும் இராவணைனை எதிர்த்துத் தன் அலகால் சண்டையிட்டுக் கடைசியில் தன் உயிரையே இழந்தான். அவனும் இராமனிடம் பிரதிபலனை எதிர்பார்க்கவில்லை. எனவே தான் இராமன் தன் தந்தையாவே பாவித்து ஈமச்சடங்குகளைச் செய்தான்.

தமயந்தி : ஆனால், இராமன் உன் போல் நினைக்கவில்லை. அவர்கள் அனைவரையும் தன் சகோதரர்களாகவே தான் ஏற்றுக் கொண்டார்.

www.kalviexpress.in www.kalviexpress.in



விரிவானம்

# 3. துணைப்பாடம் : உரிமைத் தாகம்

- பூமணி

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

அ. உரிமைத்தாகம் - 1. பாரசீகக் கவிஞர்
ஆ. அஞ்ஞாடி - 2.பூமணி
இ. ஜலாலுத்தீன் ரூமி - 3. பக்தவச்சல பாரதி
ஈ. தமிழர் குடும்ப முறை - 4. சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

**விடை: இ) 2, 4, 1, 3**

### அகநிலை வினாக்கள்

1. நிலத்துடனான உறவு __________ உறவையும் வலுப்படுத்துகிறது

அ) விவசாய ஆ) வேளாண் இ) குடும்ப ஈ) நாட்டு

**விடை: இ) குடும்ப**

2. மனிதர்கள் நில உரிமை, நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு __________ கொண்டிருக்கிறார்கள்

அ) பண்பாடாகவே ஆ) விவசாயமாகவே இ) நிலமாகவே ஈ) தெய்வமாகவே

**விடை: அ) பண்பாடாகவே**

3. 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்னும் ஔவையாரின் புறப்பாட்டு நினைவூட்டுவது __________

அ) பழம் பண்பாட்டு மரபை ஆ) பழம் குடும்ப உறவை
இ) பழந்தமிழ் பெண்களின் நிலையை ஈ) பழந்தமிழ் ஆண்களின் நிலையை

**விடை: அ) பழம் பண்பாட்டு மரபை**

4. 'பூமணி சிறுகதைகள்' - என்னும் தொகுப்பில் உள்ள சிறுகதை __________

அ) முதல்கல் ஆ) உரிமைத்தாகம் இ) அஞ்ஞாடி ஈ) கருவேலம்பூக்கள்

**விடை: ஆ) உரிமைத் தாகம்**

5. கரிசல் எழுத்தாளர்களில் ஒருவர் __________

அ) பூமணி ஆ) அஞ்ஞாடி இ) பக்தவத்சல பாரதி ஈ) நெல்லையப்பர்

**விடை: அ) பூமணி**

6. பூமணி-யின் இயற்பெயர் __________

அ) பூ. மணியன் ஆ) பூ. மணிராஜன் இ) பூ. மணிவாசகன் ஈ) பூ. மாணிக்கவாசகர்

**விடை: ஈ) பூ. மாணிக்கவாசகர்**



www.kalviexpress.in www.kalviexpress.in

7. **பூமணி அவர்கள் தமிழ்நாடு அரசிடம் துணைப்பதிவாளராகப் பணியாற்றிய துறை ________**
அ) நீதித் துறை ஆ) சட்டம் ஒழுங்குத் துறை
இ) கூட்டுறவுத் துறை ஈ) கல்வித்துறை
**விடை: இ) கூட்டுறவுத் துறை**

8. **அறுப்பு, வயிறுகள், நீதி, நொறுங்கல்கள் ஆகியவை பூமணியின் ________ தொகுப்புகள்**
அ) கவிதைத் ஆ) புதினம் இ) திரைப்படத் ஈ) சிறுகதைத்
**விடை: ஈ) சிறுகதைத்**

9. **வெக்கை, பிறகு, அஞ்ஞாடி, கொம்மை உள்ளிட்ட புதினங்களை எழுதியவர் ________**
அ) பூமணி ஆ) பக்தவத்சல பாரதி
இ) சிற்பி பாலசுப்பிரமணியம் ஈ) நெல்லையப்பர் **விடை: அ) பூமணி**

10. **பூமணி இயக்கியுள்ள திரைப்படம் ________**
அ) அஞ்ஞாடி ஆ) கருவேலம்பூக்கள் இ) நொறுங்கல்கள் ஈ) கொம்மை
**விடை: ஆ) கருவேலம்பூக்கள்**

11. **2014-இல் சாகித்ய அகாதெமியின் விருது பெற்ற பூமணியின் புதினம் ________**
அ) அஞ்ஞாடி ஆ) கருவேலம்பூக்கள் இ) வெக்கை ஈ) பிறகு
**விடை: அ) அஞ்ஞாடி**

## II. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **'உரிமைத் தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்........ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.**

**முன்னுரை :**

மேலக்காட்டில் புன்செய்யின் ஒரு பகுதியை நம்பிக்கை கிரையம் எழுதிக் கொடுத்து இருக்கிறானாம். உங்கள் தம்பி என்று முத்தையனிடம் அவன் மனைவி மூக்கம்மாள் கூறினாள். மூத்தையனுக்கு மனசு துருதுருத்தது.

**நம்பிக்கை கிரையம் :**

மேலூர் பங்காரு சாமியிடம் இருநூறு ரூபாய் வாங்கியதைத் திருப்பிக் கொடுக்க முடியாததால் நம்பிக்கை கிரையம் எழுதிக் கொடுத்துள்ளான் தம்பி வெள்ளைச் சாமி. இது நடந்து ஆறு மாதத்திற்கு மேலானது. இப்போது முழு பணத்தையும் கட்டவில்லையென்றால் புன்செய்யில் பங்காரு சாமி விதை விதைத்துக் கொள்வேன் என்று கூறிவிட்டார்.

**பாகம் பிரித்ததோடு மனதும் பிரிந்தது :**

முத்தையனுக்குத் தம்பி வெள்ளைச்சாமி மீது பெரிய அளவில் கோபமில்லை என்றாலும் பங்கு பாகம் பிரிக்கும் போது அவன் பேசிய 'நீ எனக்கு அண்ணனாக்கும்' என்ற வார்த்தைகள் மனதையும் பிரித்து விட்டது. தந்தை இறந்த நாளிலிருந்து தோளில் சுமந்து வளர்ந்த கதையெல்லாம் நினைத்துப் பார்த்து பார்த்து மனம் கசந்து போயிருந்தது.

**ஒதுங்கி விட்ட அண்ணன் :**

முத்தையனும் மூக்கம்மாளும் வெள்ளைச் சாமி பேசிய வார்த்தைகளும், திருமணத்திற்குப் பின் அவன் நடந்து கொண்ட செயல்களும் பிடிக்காததால் ஒதுங்கி விட்டனர்.

**உறவினர்களிடம் உதவி கேட்டல் :**

அண்ணனுடன் ஏற்பட்ட மனக்கசப்பை மனதிற்குள் வைத்திருந்ததால் அவனைத் தவிர மற்ற உறவினர்களிடம் எல்லாம் சென்று உதவி கேட்டுப் பார்த்தான். ஆளுக்கொரு காரணம் சொல்லி மறுத்து விட்டனர்.

**யாரும் முன்வரவில்லை :**

உறவினர்களிடமும் உதவி கிடைக்காததால் நிலத்தை மீட்க முடியாமல் தவித்தான் வெள்ளைச் சாமி. கடைசியில் நிலம் பங்காரு சாமியிடம் போனது. பங்காரு சாமியின் ஆட்கள் வந்து நிலத்தை உழுது கொண்டிருந்தனர். இதைக் கண்ட அண்ணன் முத்தையனும் உறவினர்களும் மனதிற்குள் வருத்தப்பட்டு விட்டு அந்த இடத்தை விட்டு நகன்றனர்.

**ஊரை விட்டே செல்லும் நிலை :**

தனக்கென்று இருந்த நிலமும் பறிபோனதால், தனக்காக வந்து பங்காருசாமியிடம் நியாயம் கேட்பதறகு ஆளில்லாது போனதால் மனம் நொந்து விட்டான் வெள்ளைச் சாமி. தன் நிலத்தில் வேறு ஒருவரின் செயலைக் காணப் பொறுக்காமல், கடைசியில் தன் மனைவியின் ஊருக்கே வீட்டைக்காலி செய்து விட்டுச் சென்று விட்டான்.

**முடிவுரை :**

அண்ணனுடன் ஏற்பட்ட பகையால் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் போனார்கள். அண்ணனின் பேச்சை மதிக்காததால் சண்டையிட்டுக் கொண்டு பிரித்த நிலம் அவன் கையை விட்டுப் போனது. கடைசியில் முன்னேறுவதற்கும் பிழைப்பதற்கும் வழியின்றி சம்பந்தகாரரின் ஊருக்கே செல்லும் அவலநிலை ஏற்பட்டது.

**2. துணைப் பாடப் பகுதியிலுள்ள பேச்சு வழக்குச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் :**

- அனயம் → நிறைவானது
- கீழத்தார் → புன்செய்யின் ஒரு பகுதி
- கொடவாங்கல் → கொடுக்கல் வாங்கல்
- தெகஞ்சத → முடிந்ததை
- ரோசி → உரசுதல்
- வெதப்பெட்டி → விதைப்பெட்டி
- வேண்டாற → வேண்டாத
- குறுக்கம் → சிறிய நிலப்பரப்பு
- நம்பிக்கை கெரையம் → நம்பிக்கை கிரையம்
- கோழி கூப்பிட → விடியற்காலையில்
- எந்திரிச்சு → எழுந்து
- எளவட்டம் → இளவட்டம்
- வெதப்பு → விதைப்பு
- எச்செளந்தவன் → ஏழை எளியவன்
- கொராமுனுசு → கிராம நிர்வாக அலுவலர்
- திருணை → திண்ணை
- பிஞ்சை → புன்செய்
- வாந்தக்கமாக → இணக்கமாக
- வெள்ளங்காட்டி → விடியற்காலை
- திருகை → மாவு அரைக்கும் கல்
- கடகம் → ஓலைப்பெட்டி
- ஒங்க → உங்கள்
- எந்திரிச்சு → எழுந்து
- கருது → கதிர்
- மொகம் → முகம்
- முந்தா நாளு → நேற்றைக்கு முந்தைய நாள்

## கற்பவை கற்றபின்

**1. "நமது நிலமே நமது அடையாளம்" - இக்கூற்றை விவாதிக்க.**

- தமிழர்களின் வாழ்வில் நிலமானது ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளது.
- நிலத்தைச் சார்ந்தே மனிதனின் வாழ்க்கை நலமும் அமைந்தது.
- நிலத்தினை அடிப்படையாக வைத்தே தமிழர் வாழ்வை அகம், புறம் என்ற பொருளிலக்கணம் அமைத்தனர்.

- நிலத்தைச் சீர் செய்து தொடங்கிய தொழில் முதலே அவனது அனைத்திலும் நிலத்தோடு மரபு வழியான தொடர்புண்டு.
- நிலபுலங்களின் அளவை வைத்தே மனிதரை மதித்தனர்.
- தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் வாழ வைக்கும் முதலீடாகவே நிலத்தை கருதினர்.
- நிலத்திருந்தே அந்தந்த மனிதனுக்குரிய பண்பாடு, பாரம்பரியம், கலாச்சாரம் தோன்றியது.
- அவற்றைப் பாதுகாப்பதையே தமிழனின் தலையாயக் கடமையெனக் கருதி வாழ்கிறான்.

## இனிக்கும் இலக்கணம்

# 3. துணைப்பாடம் : பொருள் மயக்கம்

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக

#### அகநிலை வினாக்கள்

1. சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் ________ வேறுபாடு ஏற்படுகின்றன

அ) சொல் ஆ) எழுத்து இ) பொருள் ஈ) மரபு

**விடை: இ) பொருள்**

2. i) வல்லின மெய்களாலும் பொருள் வேறுபாடு ஏற்படும்

ii) காற்புள்ளியை இடம் மாற்றி இட்டாலும் முழுமையான ஒரே பொருளைத் தந்து விடும்

அ) (i) மட்டும் சரி (ii) தவறு ஆ) (i), (ii) இரண்டும் சரி

இ) (i), (ii) இரண்டும் தவறு ஈ) (i) தவறு (ii) மட்டும் சரி

**விடை: அ) (i) மட்டும் சரி (ii) தவறு**

3. கூற்று 1 : நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இடாமல் எழுதினாலே பொருள் மயக்கம் ஏற்படாது

கூற்று 2 : இடைச் சொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள் ஆகியற்றை சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் வேறுபாடு தோன்றாது

அ) கூற்று (1), (2) இரண்டும் சரி ஆ) கூற்று (1) சரி கூற்று (2) தவறு

இ) கூற்று (1) தவறு, (2) சரி ஈ) கூற்று (1), (2) இரண்டும் தவறு

**விடை: ஈ) கூற்று (1), (2) இரண்டும் தவறு**

4. அ) அவன்பால் கொண்டு சென்றான் - 1) அவனிடம் பெற்று மகிழ்ந்தான்

ஆ) அவன் பால்கொண்டு சென்றான் - 2) அவன் கண்ணைப் பெற்று மகிழ்ந்தான்

இ) அவன்கண் பெற்று மகிழ்ந்தான் - 3) அவனிடம் கொண்டு சென்றான்

ஈ) அவன்கண் பெற்று மகிழ்ந்தான் - 4) அவன் பாலைக்கொண்டு சென்றான்

அ) 4, 3. 2. 1 ஆ) 1, 2. 4. 3 இ) 3, 1. 4. 2 ஈ) 3, 4. 1. 2

**விடை: ஈ) 3, 4. 1. 2**

**5. எது சரியானது?**

அ) அளக்கும்படி வேண்டினான் - அளக்குமாறு வேண்டினான்

ஆ) அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது - அதன் மூலப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டது

இ) அவன் கூடக் கொடுத்தான் - அவனும் கொடுத்தான்

ஈ) அன்று முதல் அமைச்சர் வந்தார் - அன்றிலிருந்து அமைச்சர் வந்தார்

**விடை:** அ) அளக்கும்படி வேண்டினான் - அளக்குமாறு வேண்டினான்

**6. முழுமையான பொருளை உணர்த்தும் தொடர் அது?**

அ) இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்

ஆ) பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்

இ) காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்

ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்

**விடை: ஈ) இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்**

**7. எது தவறானது?**

அ) பண்புத் தொகையைப் பிரித்து எழுதக்கூடாது

ஆ) வினைத் தொகையைப் பிரித்து எழுதக்கூடாது

இ) உடம்படுமெய்களைப் பிரித்துத்தான் எழுத வேண்டும்

ஈ) இசைச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்

**விடை: இ) உடம்படுமெய்களைப் பிரித்துத்தான் எழுத வேண்டும்**

**8. எது தவறு?**

அ) அலை கடல் ஆ) செங் கடல் இ) அணங்குகொல் ஈ) ஈக்கள்

**விடை: ஆ) செங் கடல்**

**9. கீழ்க்கண்டவற்றுள் நேரிணைச் சொற்கள் எது?**

அ) மேடு பள்ளம் ஆ) உற்றார் உறவினர் இ) சீரும் சிறப்பும் ஈ) உயர்வு தாழ்வு

**விடை: இ) சீரும் சிறப்பும்**

**10. பிழையான சொற்றொடர் எது?**

அ) கோவலன் மதுரைக்குச் சென்றது ஆ) குதிரையும் யானையும் வேகமாக ஓடின.

இ) சென்னையிலிருந்து நேற்று வந்தான். ஈ) அவன் வெண்மதியிடம் பேசினான்

**விடை: அ) கோவலன் மதுரைக்குச் சென்றது**

**11. சரியான தொடர் எது?**

அ) அவன் அல்லன் ஆ) அவள் அல்லள் இ) அவர் அல்லர் ஈ) நாய்கள் அன்று

**விடை: ஈ) நாய்கள் அன்று**

**12. சரியான தொடர் எது?**

அ) நடு சென்டரில் நின்றான் ஆ) நடுமத்தியில் நின்றான்

இ) நடுவில் நின்றான் ஈ) நடுமையத்தில் நின்றான்

**விடை: இ) நடுவில் நின்றான்**

**13. 'அது' - என்னும் வேற்றுமை உருபு __________ உரியது**

அ) பலவின்பாலுக்கு ஆ) அஃறிணைக்கு இ) உயர் திணைக்கு ஈ) தன்மைக்கு

**விடை: இ) அஃறிணைக்கு**

## II. குறுவினா

### அகநிலை வினாக்கள்

**1. படிப்போர்க்கும் கேட்போருக்கும் பொருள் குழப்பத்தை ஏற்படுத்தி விடுவது எது?**

**பொருள் மயக்கம் ஏற்படல் :**

எழுதும் போதோ பேசும் போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும் தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவதும் படிப்போர்க்கும் கேட்போர்க்கும் பொருள் குழப்பத்தை ஏற்படுத்தி விடுகிறது.

**2. இடைவெளி விட்டு எழுதுவதால் பொருள் மாறுபடும் என்பதற்குச் சான்றுகள் தருக.**

**சான்றுகள் :**

1) எம் மொழி யார்க்கும் எளிது - எம்மொழியார்க்கும் எளிது.
2) அப் பாவின் நலங் காண்க - அப்பாவின் நலங்காண்க.
3) ஐந்து மாடிவீடு - ஐந்துமாடி வீடு
4) அன்று முதல் பாடம் கற்றோம் - அன்று முதல்பாடம் கற்றோம்

**3. வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளைச் சான்றுகள் மூலம் விளக்குக.**

**வல்லின மெய்களால் பொருள் வேறுபடுதல் :**

1) பிட்டு தின்றான் ⟶ பிட்டு என்னும் உணவைத் தின்றான்
   பிட்டுத் தின்றான் ⟶ சிறிதளவு எடுத்துத் தின்றான்
2) உள்ளக்கருத்து ⟶ உள்ளத்தில் ஏற்பட்ட கருத்து.
   உள்ள கருத்து ⟶ பாடலில் உள்ள கருத்து
3) ஈட்டிக் கொண்டு வந்தான் ⟶ பொருள் சேர்த்துக் கொண்டு சம்பாதித்துக் கொண்டு வந்தான்
   ஈட்டி கொண்டு வந்தான் ⟶ ஈட்டி என்ற கருவியைக் கொண்டு வந்தான்.

**4. இரு வேறு பொருள் உணர்த்தும் சொல்லுருபுகளைத் தொடரில் அமைத்து எழுதுக**

**சொல்லுருபுகள் :**

தொடரில் அமைந்துள்ள சொல்லுருபைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும் போது இரு வேறு பொருள் உணர்த்துகிறது.

**எ.கா :** வீட்டிலிருந்து சென்றான் ⟶ தன் வீட்டிலிருந்து கிளம்பிச் சென்றான்
வீட்டில் இருந்து சென்றான் ⟶ வீட்டில் இருந்து விட்டுச் சென்றான்

**5. சொற்களை மாற்றி எழுதும் போது ஏற்படும் பொருட்குழப்பத்தை எழுதுக**

**பொருட் குழப்பம் :**

'ஆண்டு தோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்'

⟶ இத்தொடரில் தி.ஜானகிராமன் ஆண்டு தோறும் மறைந்தார் என்னும் தவறான பொருள் அமையும்படி பொருட்பிழையுடன் வந்துள்ளது.

**சரியான தொடரமைப்பு:** "மறைந்த தி, ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்"

**6. எவ்வாறு தொடர் எழுதப் பழகுதல் வேண்டும்?**

**சாலச் சிறந்தது :**

திணை, பால், எண், இடம், காலம் முதலிய பிழைகள் ஏற்படா வண்ணம் தொடர் எழுதப் பழகுதல் சாலச் சிறந்தது.

**7. 'அது' என்னும் வேற்றுமை உருபைப் பிழையின்றி எவ்வாறு பயன்படுதத வேண்டும்?**

**'அது' - வேற்றுமை உருபு :**

- 'அது' - என்னும் வேற்றுமை உருபு அஃறிணைக்கு உரியது.

**எ.கா :** எனது வீடு, அரசரது மாளிகை

- வரும் சொல் உயர்திணையாயின் 'அது' என்னும் உருபினைப் பயன்படுத்தக் கூடாது

**எ.கா :** எனது மகன், அரசரது மகன் ⟶ என்றெழுதக் கூடாது.

**8. சுடுதண்ணீர் என்று எழுதுவது சரியா?**

- சுடு தண்ணீர் என்று எழுதுவது தவறு.
- தண்ணீர் ⟶ குளிர்ந்த நீர், சூடும் குளிருமாக நீர் எப்படி இருக்க முடியும்?
- எனவே, வெம்மையான நீரை 'வெந்நீர்' என்றே எழுத வேண்டும்.

## III. சிறு வினா

### அகநிலை வினாக்கள்

**1. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடர்களை அமைக்க**

**விடும், தன், தான், பற்றி, முன், முதல், பால், கண், படி, மூலம், கூட :**

**விடும்**

*தன்தவற்றினை உணர்ந்துவிடுவானாயின் நன்று*

*தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று*

**தன்**

*பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்*

*பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்*

**தான்**

*கண்ணன்தான் எழுதுவதாகச் சொன்னான்*

*கண்ணன் தான் எழுதுவதாகச் சொன்னான்*

**பற்றி**

*குகன் இராமனைப்பற்றிக் கூறினான்*

*குகன் இராமனைப் பற்றிக் கூறினான்*

**முன்**

*சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்*

*சில குறைகளை மக்கள் முன் வைத்தனர்*

**முதல்**

*அன்று முதல் அமைச்சர் வந்தார்*

*அன்று முதல்அமைச்சர் வந்தார்*

**பால்**

*அவன்பால் கொண்டு சென்றான்*

*அவன் பால்கொண்டு சென்றான்*

**கண்**

*அவன்கண் பெற்று மகிழ்ந்தான்*

*அவன் கண்பெற்று மகிழ்ந்தான்*

**படி**

*அளக்கும்படி வேண்டினான்*

*அளக்கும் படி வேண்டினான்*

**மூலம்**

*அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது*

*அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது*

**கூட**

*அவன்கூடத் கொடுத்தான்*

*அவன் கூடக் கொடுத்தான்*

**2. எந்தெந்த சொற்களையெல்லாம் பிரித்து எழுதக் கூடாது? சான்றுகள் தருக.**

1) பண்புத் தொகையைப் பிரித்து எழுதக் கூடாது.

**எ.கா: செங்கடல்**

2) பெயர்ச் சொல், வினைச் சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் இடைச்சொற்களைப் பிரித்து எழுதக்கூடாது.

**எ.கா: அணங்கு சொல்**

3) இடைச்சொல்லுடன் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.
**எ.கா: பேசியபடி பணம் கொடுத்தான்**
4) உடம்படுமெய்களைச் சேர்த்துதான் எழுதுதல் வேண்டும்.
**எ.கா: மணியடித்துச் சென்றான்**
5) பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.
**எ.கா: ஈக்கள் மொய்த்தன**
6) இரட்டைக் கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.
**எ.கா: படபடவெனச் சிறகை அடித்தது.**
7) சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவற்றை சேர்த்தே எழுத வேண்டும்
**எ.கா: சுடர் + ஆழி = சுடராழி.**
8) உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும் போது சேர்த்தே எழுத வேண்டும்
**எ.கா: கடிமணம்.**
9) உம்மைத்தொகைச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.
**எ.கா: உற்றாருறவினர்.**
10) நேரிணைச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.
**எ.கா: சீரும் சிறப்பும்.**
11) எதிரிணைச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.
**எ.கா: மேடு பள்ளம்.**

**3. பொருட்பிழையைத் தவிர்க்கச் சில குறிப்புகள் தருக?**

**பொருட்பிழையைத் தவிர்க்கச் சில குறிப்புகள் :**

- ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.
- சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.
- மரபுச் சொற்களைக் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும் (யானை - கன்று; குதிரை - கனைக்கும்)
- இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.
- எழுதியதை மீளப் படித்துப் பார்த்துப் பிழையிருப்பின் திருத்தலும் கடமையாகும்.

www.kalviexpress.in

## கற்பவை கற்றபின்

**1. தொடர்களைப் பொருள் மயக்கமின்றி எழுத வழிகாட்டும் உரைநடை நெறிகளைப் பின்பற்றி ஐந்து தொடர்களை எழுதுக.**

- மதியழகன் காலையில் எழுந்ததும் காளையுடன் வயலுக்குச் சென்றான்.
- பள்ளியின் சுவரில் இருந்த பல்லி அடிக்கடி ஒலித்துக் கொண்டே இருந்தது.
- வாழைத் தோட்டத்தின் வழியாகச் சென்ற வாலைக் குமரிகள் வாளை மீனை வாங்கி வந்தனர்.
- மரத்தை அரம் கொண்டு அறுத்து வேலை செய்யும் இராமன் பிறருக்கு உதவி செய்து அறத்தோடு வாழும் பண்பாளன்.
- சோலையில் பூத்த மலர்களின் மணம் வீசியதும் என் மனம் மயங்கியது.

# இலக்கணத் தேர்ச்சி கொள்

## புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. பொருள் குழப்பமின்றி எழுதுவதற்குரிய காரணங்களுள் பொருந்துவதைத் தேர்க.**

அ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விடாமல் எழுதுதல்.
ஆ) தேவையற்ற இடங்களில் இடைவெளி விட்டு எழுதுதல்.
இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்.
ஈ) வல்லின மெய்களைத் தேவையான இடங்களில் இடாமல் எழுதுதல்

**விடை: இ) நிறுத்தக் குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல்**

**2. வல்லினம் மிகும், மிகாத் தொடர்களின் பொருளறிந்து பொருத்துக**

அ) பாலை பாடினான் - 1. தேரை என்னும் உயிரினம் பார்த்தான்
ஆ) பாலைப் பாடினான் - 2. தேரினைப் பார்த்தான்
இ) தேரை பார்த்தான் - 3. பாலினைப் பாடினான்
ஈ) தேரைப் பார்த்தான் - 4. பாலைத் திணை பாடினான்

அ) 4, 1, 3, 2 ஆ) 2, 3, 1, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 1, 3

**விடை: இ) 4, 3, 1, 2**

**3. வேறொரு பொருள் அமையுமாறு சொற்களைச் சேர்த்துத் தொடரமைக்க.**
**மாணவர்கள் வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.**

மாணவர்கள்வரிசையில் நின்று அறிவியல் கண்காட்சியைக் கண்டனர்.

**4. கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இரு வேறு தொடரமைக்க.**

எ.கா :

- **முன்**
  - அவன் முன்வந்து கூறினான்
  - அவன்முன் வந்து கூறினான்
- **தானே**
  - அவன்தானே செய்து விட்டான்
  - அவன் தானே செய்து விட்டான்
- **கொண்டு**
  - அவன்கொண்டு கொடுத்தான்
  - அவன் கொண்டு கொடுத்தான்
- **விட்டான்**
  - மீன்களைப் பிடித்துவிட்டான்
  - மீன்களைப் பிடித்து விட்டான்

**5. காற்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.**

**காற்புள்ளியும் பொருள் மயக்கமும் :**

- அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.
  → இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும் போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது.
- அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.
  → இத்தொடரில் அந்தப் பெண்ணின் அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள் வேறுபடுகிறது.

6. **சல சல, கல கல, விம்மி விம்மி, இவற்றில் இரட்டைக் கிளவித் தொடர்களை எழுதி. அவற்றை எழுதும் முறையைக் கூறுக.**

**எழுதும் முறை :**

இரட்டைக் கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.

எ.கா :

- சலசலவெனச் சாரல் அடித்தது.
- கலகல என்று கலா சிரித்தாள்
- குழந்தை விம்மிவிம்மி அழுதது.

---

7. **திருவளர்ச் செல்வன், திருவளர் செல்வன் - இயற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?**

**சரியான தொடர் :**

திருவளர் செல்வன்

**இலக்கண விதி :**

வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகாது.

## மொழியை ஆள்வோம்

**I. சான்றோர் சித்திரம் :**



**பரிதிமாற்கலைஞர் (1870 - 1903)**

## I. வினாக்கள்

1. **இலக்கணக் குறிப்பு தருக**

அ) எழுவாய் ⟶ முன்னிலை ஒருமை வினைமுற்று

அ) செயப்படுபொருள் ⟶ வினைத்தொகை

---

2. **பின்வரும் தொடர்களை வினையாலணையும் பெயர் அமைந்த தொடர்களாக மாற்றுக.**

**அ) பரிதிமாற் கலைஞர் 'திராவிட சாஸ்திரி' என்று சி.வை. தாமோதரனால் போற்றப்பட்டார்.**

திராவிட சாஸ்திரி என்று சி.வை. தாமோதரனால் போற்றப்பட்டவர் பரிதிமாற் கலைஞர்

**ஆ) பரிதிமாற் கலைஞர் நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலை இயற்றினார்.**

நாடகவியல் என்னும் நாடக இலக்கண நூலை இயற்றியவர் பரிதிமாற்கலைஞர்.

---

3. **கலவைத் தொடராக மாற்றுக**

**அ)**
- **எப்.ஏ. தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.**
- **பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித்தொகை பெற்றார்.**

விடை : எப்.ஏ. தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பாஸ்கர சேதுபதி மன்னரிடம் உதவித் தொகை பெற்றார்.

**ஆ)**
- **தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்**

➢ **தங்கப் பதக்கத்தையும் பரிசாகப் பெற்றார்**

விடை : தமிழிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் பல்கலைக்கழக அளவில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்றார்.

4. **அ) களவழி நாற்பது என்ற நூலைத் தழுவி, பரிதிமாற்கலைஞர் எழுதிய நூல் எது?**

மானவிஜயம்

**ஆ) ஜி.யு.போப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பரிதிமாற்கலைஞரின் நூல் எது?**

தனிப்பாசுரத் தொகை

5. **சூரிய நாராயண சாஸ்திரி என்ற வடமொழிக்கேற்ற தமிழ்ப்பெயர் எது?**

பரிதிமாற் கலைஞர்

## கல்வியின் நோக்கம்

**II. தமிழாக்கம் தருக :**

மனித வளர்ச்சியின் அடிப்படையில் கல்வியின் நோக்கமானது ஒரு முடிவிற்கு வரும் வழிமுறை அல்ல. கல்வி என்பது அடிப்படை மனித உரிமை. அது மக்களுக்குப் பல பொருளாதார, சமூக மற்றும் அரசியல் கதவுகளைத் திறக்கும் திறவுகோல் ஆகும். இதனால் வருமானம் மற்றும் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கிறது. பொருளாதாரத்தில் பொதுவாகக் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில் அது, வாழ்க்கையில் சிறந்த வழிமுறைகளைப் பகுப்பாராய்கிறது. மக்களுக்குக் கல்வியூட்டுவது என்பது பொருளாதார மறுமதிப்பீடு இழப்பைத் தவிர, ஒரு தகுதியான இலக்காகவே அமையும்.

**III). இலக்கிய நயம் பாராட்டல்**

*பெற்றடுத்த தமிழ்த்தாயைப் பின்னால் தள்ளி*
*பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்க*
*ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்*
*உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?*
*கற்றுணர்ந்தே அதன் இனிமை காண்பாய் என்று*
*கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்*
*தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட*
*தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம்* **– நாமக்கல் கவிஞர்**

**முன்னுரை :-**

*‘கத்தியின்றி இரத்தமின்றி*
*யுத்தமொன்று வருகுது*
*சத்தியத்தின் நித்தியத்தை*
*நம்பும் யாரும் சேருவீர்’*

⟶ என்ற அகிம்சை வழியில் அறப்போர் புரிய நாளெல்லாம் கவிபுனைந்த நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை ஒரு காந்தியக் கவிஞர் எளிய சொற்களால் இதயங்களைக் கவர்ந்த இந்தச் சத்தியக் கவிஞனின் கவிதைகள், காந்தியமும் தேசியமும் கலந்த இன்சுவைக் கனிகளே. இப்பாடலில் உள்ள இலக்கிய நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து :**

தாய்மொழியாம் தமிழைப் புறம் தள்ளிவிட்டு பிறமொழியைப் போற்றிய பிழைகளை நீக்க, அன்புரையால் உலகத்தையே உலுங்க வைத்த தமிழ்மொழிக்கு இணையானது வேறில்லை. கம்பனது காவியத்தையும் வள்ளுவனின் குறளையும் கற்றுணர்ந்தாலே தமிழின் இனிமையை உணரலாம். அறியாமையை நீக்கி நம் அறிவுக் கண்ணைத் திறந்ததால் பாரதி ஓர் ஆசிரியன் என்பது உறுதியளிக்கிறது.

**மையக் கருத்து :**

தமிழ்மொழியை இழிவுபடுத்திய பிழையை நீக்கி அன்புரையால் உலகையே ஆண்டதால் தமிழ்மொழிக்கு நிகர் வேறில்லை. கம்பனோடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டி நம் அறிவுக்கண்ணைத் திறந்ததால் பாரதி ஓர் ஆசான் என்பது உறுதியாகிறது.

**தொடை நயம் :**

i) **எதுகை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை ஆகும்.

**எ.கா:** அடி எதுகை

பெற்றெடுத்த - ஊற்றெடுத்தே
கற்றுணர்ந்தே - தெற்றென

ii) **மோனை :**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை ஆகும்.

**எ.கா:** சீர் மோனை

**பெ**ற்றெடுத்த - **பி**றமொழி
**க**ற்றுணர்ந்தே - **க**ம்பனோடு
**தெ**ற்றென - **தெ**ய்வக் கவி

**அணிநயம் :**

**'தமிழ்த்தாய்'**

→ தமிழைத் தாயாக உருவகப்படுத்தியுள்ளதால், இப்பாடலில் 'உருவக அணி' பயின்று வந்துள்ளது.

**'உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ?**

→ தமிழ் மொழியின் சிறப்பையும் பெருமையும் கூறுவதால் இப்பாடலில் **'உயர்வு நவிற்சி அணி'** பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :**

**'பெற்றெடுத்த தமிழ்த்தாயை பின்னால் தள்ளி'**
**பிறமொழிக்குச் சிறப்பளித்த பிழையை / நீக்க**

→ இப்பாடலில் அடிதோறும் எட்டு சீர்களைப் பெற்று வந்துள்ளதாலும் பல ஈரசைச் சீர்களைப் பெற்று வந்துள்ளதாலும் இப்பாடல் **'எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்'** ஆகும்.

**சுவை நயம் :**

**'கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்**
**தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட**
**தெய்வக்கவி பாரதி ஓர் ஆசான் திண்ணம்'**

→ தமிழ்மொழியின் உயர்வையும், தமிழ்மொழியின் இனிமையை உணர கம்பனையும் வள்ளுவனையும் கற்க வேண்டுமென பெருமையாகக் கூறுவதால் இப்பாடலில் **'பெருமிதச் சுவை'** நிரம்பி வந்துள்ளது.

**தலைப்பு : 'பாரதி ஓர் ஆசான்'**

**முடிவுரை** : **'நயமான சொற்களில் கவி வடித்தல்**
**கலையாகக் கற்களில் சிலை வடித்தல்'**

→ என்பதற்கேற்ப கவிஞர் தன் கவிச்சோலையில் செதுக்கிய கவிதைச்சிலை கற்போரின் இதய அரியணையில் என்றும் வாழும் உயிருள்ள இலக்கியமாகின்றது.

www.kalviexpress.in www.kalviexpress.in



**IV). கவிதையைப் படித்தபின், அக்கவிதை கிளர்த்தும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வு உரை ஒன்றை எழுதுக.**

*எங்களுக்கும் ஓர் ஆறுண்டு*
*வெறுமணல் பரப்பாய் விரிந்துகிடக்க*
*ஓணான்கள் முட்டையிட*
*கள்ளிகள் பிழைத்திருக்க*
*பிள்ளைகள் விளையாட*
*பன்றிகள் மேய்ந்திருக்க*
*வானத்தில் மேகமுண்டு*
*சூரியனில் மழையுண்டு*
*காகமோ குருவியோ*
*நிழல் ஒதுங்க*
*ஆறெங்கும் முள்மரமுண்டு*
*எங்களுக்கும் ஓர் ஆறுண்டு*
*ஆற்றுக்கோர் ஊருண்டு*
*ஊருக்கோர் சனமுண்டு*
*வாழ்வைப்போல் ஒன்றுண்டு*
*- இளங்கோ கிருஷ்ணன்*

**விழிப்புணர்வு உரை :**

- மாதம் மும்மாரி பொழிந்து ஆறெல்லாம் வெள்ளம் கரைபுரண்டோடி ஏரி, குளம், வாய்க்கால் முழுமையும் நிரம்பி வழிந்த காலத்தில் ஆண்டுதோறும் முப்போகம் விளைந்தது.
- இன்றைய சூழலில் ஆற்றில் மணல் அள்ளியதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. பசுமைக்குடிலில் வாயுக்கள் பரவியதால் நம் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. ஓசோன் பாதிப்படைந்துள்ளதால் மழைவளம் குறைந்து விட்டது.
- இப்போது ஆறு என்றால் நம் கண்முன்னே தெரிவது வெறும் மணல் பரப்பே. அவ்விடம் ஓணான்கள் முட்டையிடும் பாலைவனமாக காட்சியளிக்கிறது. கள்ளிச் செடிகள் முளைத்திருக்கின்றன. பிள்ளைகள் விளையாடும் மைதானமாக உள்ளது. பன்றிகள் மேய்கின்றன.
- பறவைகள் தங்குவதற்குச் சோலைகள் இல்லாததால் ஆறுகளில் அடர்ந்து வளர்ந்திருக்கும் முள்மரங்களே வாழிடம் ஆகின்றன.
- இவ்வாறு தான் எங்களுக்கு ஆறு உள்ளது. அந்த ஆற்றுக்கு அருகில் உள்ள ஊர் என்ற ஒன்று உண்டு.
- அந்த ஊரிலும் மக்கள் என்ற கூட்டம் உண்டு. அவர்களுக்கு வாழ்வு போல ஒன்று உள்ளதே அன்றி அது வாழ்வில்லை.
- இளங்கோ கிருஷ்ணனின் இப்பாடல் இயற்கை வளங்களையெல்லாம் நாம் அழித்து விட்டதால் எற்பட்ட அவலநிலையைச் சுட்டி மனிதர் வாழ்வே இனி இல்லாத நிலை வருமென்று எச்சரிக்கை விடுக்கிறது.

**V). வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக**

1. **என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதியத் தலைமுறை மீதுதான்; அவர்கள் எல்லா பிரச்சனைகயையும் ஒரு சிங்கத்தை போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.**
   என்னுடைய நம்பிக்கை முழுவதுமே புதிய தலைமுறை மீது தான்; அவர்கள் எலலாப் பிரச்சினைகளையும் ஒரு சிங்கத்தைப் போல எதிர்கொண்டு தீர்ப்பார்கள்.
2. **எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.**
   எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறிச் செல்வதனைக் கண்டு ஒன்றும் செய்வதறியாது நம்பிக்கையின்றித் துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கைக் கொள்.
3. **நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தை பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்தக் கவனம் அறிவை பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படை தேவையாகும்.**
   நம் வாழ்க்கையின் தரம் நமது கவனத்தின் தரத்தைப் பொறுத்திருக்கிறது. புத்தகம் படிக்கும் பொழுது கூர்ந்த கவனம் அறிவைப் பெறுவதற்கும் வளர்ப்பதற்குமான அடிப்படைத் தேவையாகும்.
4. **மாணவர்கள் பெற்றோர்களை தமது நண்பர்களாக பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களை பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.**
   மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்பு கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்.



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in


5. **ஆசிரியரக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.**
ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றைத் தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றிப் பல நல்லவனவற்றைக் கற்றுக் கொடுக்கும்.

**IV. கீழ்க்காணும் பகுதியைப் படித்து அறிவிப்புப் பலகைக்கான செய்தியை உருவாக்குக.**

வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே – 5. 2019
திருச்சிராப்பள்ளி

**அறிவிப்புப் பலகை**

**வேர்களை விழுதுகள் சந்திக்கும் விழா, மே-5, 2019**

**இடம்** : அன்பு நகர், உறையூர், திருச்சிராப்பள்ளி

**நிகழ்ச்சி** : தங்கவேல் - பொன்னம்மாள் இணையரின் மூன்று தலைமுறை வழித்தோன்றல்கள் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சந்திக்கும் நிகழ்வு.
இந்நிகழ்ச்சியில் வெளிநாடுகளில் வசிக்கும் உறவினர்களான தங்கவேல் - பொன்னம்மாள் அவர்களின் மகன்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப்பேத்திகள் ஆகியோர் கலந்து கொண்டு பெரியோர்களிடம் வாழ்த்து பெறும் நிகழ்வு நடைபெற உள்ளது.

ஒருங்கிணைப்பாளர்,
கொள்ளுப் பேத்தி,
செல்வி. கண்மணி.

## மொழியோடு விளையாடு

**பட்டிமன்றம்**

1. **தலைப்பு: தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்களா? நண்பர்களா?**
**பங்கேற்பாளர்கள் : முருகன், முகில், வேலன்**

பட்டிமன்றத் தலைவர் (முருகன்) : வணக்கம். நம் பள்ளியின் இலக்கிய மன்ற விழாவில் கலந்து கொண்டு தனிமனித வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுபவர்கள் உறவினர்கள் என்ற தலைப்பில் முகில் அவர்களும், நண்பர்கள் என்ற தலைப்பில் வேலன் அவர்களும் பேச வந்துள்ளனர். எப்போதும் மனிதன் தனிமையானவன் அல்ல. அவனது பின்புலம் உறவினர் நண்பர்கள் போன்ற சமுதாயத்தால் கட்டுண்டே கிடக்கிறான். எனினும் தனிமனிதனின் வளர்ச்சிக்கு உதவுபவர்கள் பற்றிய உரையைக் கேட்போம். வாருங்கள் முகில். தொடங்குங்கள்!

முகில் : அவையோர் அனைவருக்கும் என் அன்பு வணக்கம். தலைவர் அவர்கள் கூறியபடி மனிதன் ஒருபோதும் தனித்து இல்லை. அவன் தன் ஒவ்வொரு சூழலிலும் உறவினர் என்ற சமுதாயத்தின் பிராணியாகவே உள்ளான்.

அடிச்சாலும் புடிச்சாலும் அண்ணன் தம்பி தான்“

தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை”

“தம்பியுடையான் படைக்கு அஞ்சான்” போன்ற பழமொழிகள் நம் அனுபவத்தால் பெறப்பட்டவை. நமது மகிழ்ச்சி மற்றும் துக்கத்தில் நம்முடன் ஒன்று சேர்ந்து


www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



இருப்பவர்கள் உறவினர் மட்டுமே. அதைப் பொறுத்தே அவனது வளர்ச்சியும் அமைகிறது. நன்றி!

முருகன் : அழகாகச் சொன்னீர்கள்! ஆம் உறவினர் இல்லையேல் நமக்குச் சமுதாயம் ஏது? அங்கீகாரம் ஏது? வாருங்கள் வேலன்! பதில் என்ன சொல்லப் போகிறீர்கள்?

வேலன் : பட்டிமன்றத் தலைவரையும் அவையோர்களையும் வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன். "உன் நண்பனைச் சொல் உன்னைச் சொல்கிறேன்" என்று தானே ஐயா கேட்பார்கள். எத்தகைய உறவினர் பழக்கத்தில் நாம் வாழ்ந்தாலும் நம் குணம் நம் சுற்றியுள்ள சூழலைப் பொறுத்தே அமைகிறது. நட்பு வட்டாரங்கள் மூலமாகவே ஒரு தனிமனிதன் தன் அறிவைப் பல துறைகளிலும் விரிவு செய்கிறான். தன் வருங்காலம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கிறான். நன்றி!

முருகன் : முகில், வேலன் ஆகிய இருவரின் வாதமும் ஏற்புடையதாகவே உள்ளது. ஒரு தனிமனிதன் வளர்ச்சிக்கு ஆரம்பகாலக் கட்டம் முதலே உறவினரும் இளமைக்காலம் தொடங்கியதும் நண்பர்களும் வழிநடத்த உதவுகிறார்கள். அனைவருக்கும் நன்றி!

## I. சுழிகுளம்

*நவமதி மேவிடமே*
*வசிகுற ளுடனட*
*மகுடன ருளடவி*
*திறனறி வருளுமே!*

**விளக்கம்**

புதிய ஒளிமிக்க அறிவினைப் பெற வேண்டுமென்றால், அறிவுச் சுரங்கமாக விளங்கும் திருக்குறளைக் கற்று அதன்வழி வாழ்க்கையை மேற்கொள்வாய்! மேலும். சிறந்த தலைவர்களின் வாழ்த்துகளையும் பெற்றுத் திறன்மிக்க பல்துறை அறிவினையும் பெறலாம்.

நவ மதி - புதுமையான ஒளிமயமான அறிவு

வசி - உயர்ந்த; மகுடன் - தலைவன்

அடவி - பெருகுதல்

www.kalviexpress.in

சுழி குளம்







www.kalviexpress.in www.kalviexpress.in

**II.** *பொதுமதி பலமேவு*

*துணிதரம் தரமே*

*மததவிர முதல*

*திரவிய நிரம்ப*




**விளக்கம்**


பல துறைகளிலும் பொது அறிவை வளர்த்துக் கொள். அது நல்லதொரு துணிச்சலைத் தரும். முனைப்பு தவிர்ந்தால் முதன்மைப் படுத்துப்படுவாய். செல்வமும் நிரப்பும.

மத(ம்) தவிர - முனைப்பு நீங்க

திரவியம் - செல்வம்

**VII. எண்ணங்களை எழுத்தாக்குக**

**இணையம் இணைந்தது இதயம் பிரிந்தது**



தொலைதூர உறவுகளையும் நட்புகளையும்
இணையத்தில் இணைத்த நாம்,
அருகிலுள்ள அன்பிற்குரியவர்களை
இதயத்தில் இணைக்க மறந்து விட்டோம்

உலகளாவிய செய்திகளை உள்ளங்கையில்
அடக்கிக்கொண்டு
வீடளாவிய செய்திகளைப் புறந்தள்ளி விட்டு விட்டோம்

நேரம் போனதே தெரியாமல் போனது
வலைப்பின்னலின் வரிசையில்
நேரமே போதாமல் போனது வீட்டின் வாசலில்
எந்திர வாழ்க்கையில் எந்திரங்களின் ஈர்ப்பில்
மனிதம் மறந்து நாமும் எந்திரமானோம்.

**IX. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.**

1. **மாறன் பேச்சுத் திறன் யார் வெல்ல முடியும்.**
   மாறனது பேச்சுத்திறனை யாரால் வெல்ல முடியும்?

2. **போட்டி வெற்றி பெற்றது கலைச்செல்வி, பாராட்டுகள் குவிந்தன**
   போட்டியில் வெற்றி பெற்றதால் கலைச்செல்விக்குப், பாராட்டுகள் குவிந்தன


3. **காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்**
   காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்

4. **அனைவர் அன்பு அழைத்தவன் துன்பம் தர யார் மனம் வரும்**
   அனைவரையும் அன்பால் அழைத்தவனுக்குத் துன்பம் தர யாருக்கு மனம் வரும்.

5. **சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்**
   சான்றோருக்கு மதிப்பு கொடுத்தால் வாழ்வில் உயரலாம்.

**X. செய்து கற்போம்**

**உங்கள் குடும்ப உறவு வழிமுறைகளைக் கொண்டு குடும்பமரம் வரைக.**



## XI. நிற்க அதற்குத் தக

| சூழல் | தவிர்க்க வேண்டிய ஆடம்பரச் செலவுகள் என நீவிர் கருதுவனவற்றில் பட்டியலிடுக | பொறுப்புள்ள மகனாக/மகளாக உங்கள் பெற்றோர்க்கு என்னென்ன உதவிகள் செய்வீர்கள்? |
|---|---|---|
| ➢ உங்கள் பெற்றோர் வேலைக்குச் செல்பவர்கள். அவர்களின் மாத ஊதியம் குடும்பச் செலவிற்கும் படிப்புச் செலவிற்கும் தாத்தா பாட்டியைக் கவனித்துக் கொள்வதற்கும் மட்டும் போதுமானதாக உள்ளது. இச்சூழலில் பொறுப்புள்ள ஒரு மகனாக / மகளாகப் பெற்றோர்க்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள்? | ➢ இரு சக்கர வாகனம் | ➢ பேருந்தில் மட்டுமே பயணம் செய்வது |
| | ➢ நான்கு சக்கர வாகனம் | ➢ தேவையான பொருட்களை மட்டும் வாங்குதல் |
| | ➢ உணவகத்திற்குச் செல்வது | ➢ கேளிக்கை நிகழ்ச்சிகளைத் தவிர்த்தல் |
| | ➢ மாதந்தோறும் திரையரங்கம் செல்வது | ➢ உயர் ரக திறன்பேசியை வாங்காமல் இருப்பது |
| | ➢ மாதந்தோறும் ஆடைகள் வாங்குவது | ➢ இளநிலைப் படிப்புகள் முடிந்தவுடன் பகுதி நேர வேலையில் இருந்து கொண்டே முதுநிலைப் படிப்புகள் படித்தல். |

## XII. படிப்போம் பயன்படுத்துவோம் (உணவகம்)

| | | | |
|---|---|---|---|
| Lobby | ஓய்வறை | Tips | சிற்றீகை |
| Checkout | வெளியேறுதல் | Minimeals | சிற்றுணவு |

www.kalviexpress.in

வாழ்வியல்



# 3. திருக்குறள்

- திருவள்ளுவர்

### சொல்லும் பொருளும்

1. முயல்வாருள் ⟶ முயற்சி உடையவர்கள்
2. வையம் ⟶ உலகம்
3. வான் ⟶ வானுலகம்
4. வைக்கப்படும் ⟶ மதிக்கப்படுவர்
5. செய்யாமல் ⟶ பிறருக்கு எந்த உதவியும் செய்யாதிருக்கும் போது
6. செய்த உதவி ⟶ தனக்குப் பிறர் செய்த உதவி
7. வானகம் ⟶ விண்ணுலகம்

www.kalviexpress.in www.kalviexpress.in



8. ஆற்றல் → கைம்மாறாகக் கொடுத்தல்
9. காலத்தில் → உரியகாலத்தில் / ஏற்ற காலத்தில்
10. நன்றி → உதவி
11. ஞாலம் → உலகம்
12. மாணப்பெரிது → மிகப் பெரிது
13. பயன்தூக்கார் → எந்தவொரு பயனையும் எதிர்பாராமல்
14. நயன் → உதவியின் அன்பை / உதவியின் அளவை
15. தூக்கின் → ஆராய்ந்து பார்த்தால்
16. தினை → தானியம்/ ஒரு சிறிய அளவு
17. பனை → நீண்ட மரம்/ ஒரு பேரளவு
18. நன்றல்லது → அவர் செய்த தீமை
19. அன்றே → அப்பொழுதே
20. உய்வுண்டாம் → தப்பிக்க வழியுண்டு
21. உய்வில்லை → தப்பிக்க வாய்ப்பில்லை
22. கொன்ற → உதவியை மறந்தவர்களுக்கு
23. படுபயன் → பெரும்பயன்
24. வெஃகி → நாணம் கொள்ளுதல்
25. பழிப்படுவ → பழியான நிலைமையை விடுவதற்கு
26. நடுவன்மை → நடுவு நிலைமைய விடுவதற்கு
27. வெஃகுதல் → நாணப்படும் செயல்கள/ பிறர் பொருள்களை விரும்புதல்
28. புலம் → ஐம்புலன்கள்
29. அஃகாமை → குறையாமலிருக்க வழி
30. வெஃகாமை → பிறர் பொருளை விரும்பாமை
31. விலைப்பொருட்டு → வருவாயின் பொருட்டு
32. செல் இடம் → செல்லுபடியாகும் மெலியவரிடம்
33. காக்கின் என் → காத்தால் என்ன?
34. காவாக்கால் → காக்காவிட்டால்
35. வெகுளி → சினம்
36. யார் மாட்டும் → யாரிடத்திலும்
37. தீய பிறத்தல் → தீமையான விளைவுகள்
38. நகை → முகமலர்ச்சி
39. உவகை → அகமகிழ்ச்சி
40. காக்கின் → காத்துக் கொள்ள விரும்பினால்
41. கொல்லும் → அழித்து விடும்
42. கொல்லி → அழிக்கும் தன்மையுடைய நெருப்பு
43. இனம் → சுற்றம்
44. ஏமம் → பாதுகாப்பு
45. புனை → தெப்பம்
46. நுண்ணிய → நுட்பமான
47. உண்மை அறிவு → இயல்பாக அமைந்த அறிவு
48. உலகத்து இயற்கை → உலக இயல்பு
49. திரு → செல்வம் உடையவர்
50. தெள்ளியார் → தெளிந்த அறிவுடையோர்

www.kalviexpress.in

## நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

**1. திருக்குறளில் அமைந்துள்ள பாவகை __________**

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா

இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) குறள் வெண்பா **விடை: ஈ) குறள் வெண்பா**

**2. திருக்குறள் __________ நூல்களுள் ஒன்று**

அ) பதினெண் மேல்கணக்கு ஆ) பதினெண் கீழ்க் கணக்கு

இ) பத்துப்பாட்டு ஈ) சிற்றிலக்கியம்

**விடை: ஆ) பதினெண்கீழ்க்கணக்கு**



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



3. **திருக்குறள் என்பது ________**
அ) ஆகு பெயர் ஆ) அடைமொழி
இ) அடையடுத்த கருவி ஆகுபெயர் ஈ) செல்வம் நிறைந்த நூல்
**விடை: இ) அடையடுத்த கருவி ஆகுபெயர்**

4. **உலகப் பொதுமுறை, அறவிலக்கியம், தமிழ்த் திருமறை என்றெல்லாம் போற்றப்படும் நூல் ________**
அ) திருக்குறள் ஆ) தேவாரம் இ) திருமந்திரம் ஈ) ஏலாதி
**விடை: அ) திருக்குறள்**

5. **ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் முதலிய உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் ________**
அ) புறநானூறு ஆ) தேவாரம் இ) தெய்வமணிமாலை ஈ) திருக்குறள்
**விடை: ஈ) திருக்குறள்**

6. **'ஆலும் வேலும் பல்லுக்குறுதி**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்ற பழமொழியில் நால், இரண்டு எனக் குறிக்கப்படுவன ________, ________**
அ) ஏலாதி, பழமொழி ஆ) நாலடியார், திருக்குறள்
இ) நான்மணிக்கடிகை, திரிகடுகம் ஈ) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு
**விடை: ஆ) நாலடியார், திருக்குறள்**

7. **'*பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்*'**
**- என்ற பழமொழியில் இரண்டு என்பது குறிப்பது ________**
அ) திருக்குறள் ஆ) திரிகடுகம் இ) ஏலாதி ஈ) சிறுபஞ்சமூலம்
**விடை: அ) திருக்குறள்**

8. **திருக்குறளுக்கு உரையெழுதியவர்களின் பட்டியலைக் குறிப்பிடுவது**
அ) திருவள்ளுவமாலை ஆ) திருக்குறள்
இ) பழமொழி நானூறு ஈ) பழம்பாடல் **விடை: ஈ) பழம்பாடல்**

9. **ஏட்டுச் சுவடியிலிருந்து திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு ________**
அ) 1912 ஆ) 1712 இ) 1812 ஈ) 1821
**விடை: இ) 1812**

10. **திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்து தஞ்சையில் வெளியிட்டவர் ________**
அ) ஞானப்பிரகாசர் ஆ) மாயூரம் வேதநாயகம் பிள்ளை
இ) பரிதிமாற் கலைஞர் ஈ) மீனாட்சி சுந்தரனார்
**விடை: ஈ) ஞானப்பிரகாசர்**

11. **'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) நாமக்கல் கவிஞர்
**விடை: அ) பாரதியார்**

12. **'*வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ்***
***வையகமே*' - என்று திருவள்ளுவரைப் போற்றிப் புகழ்ந்தவர் ________**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசனார் இ) கவிமணி ஈ) நாமக்கல்லார்
**விடை: ஆ) பாரதிதாசனார்**



www.kalviexpress.in www.kalviexpress.in

13. 'வெல்லாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்,
பொல்லாத தில்லை புரைதீர்த்த வாழ்வினி லேஅழைத்துச்
செல்லாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்
இல்லாத நிலை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே
**- என முப்பாலைப் போற்றிப் பாடியவர் __________**

அ) பாரதியார் ஆ) பாவேந்தர் பாரதிதாசன்
இ) உவமைக் கவிஞர் சுரதா ஈ) வாணிதாசன்

**விடை: ஆ) பாவேந்தர் பாரதிதாசன்**

14. **பொருட்பாலில் அதிகாரங்கள் __________**
அ) 38 ஆ) 70 இ) 25 ஈ) 9 **விடை: ஆ) 70**

15. **அறத்துப்பாலில் இயல்களின் எண்ணிக்கை __________**
அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 9 **விடை: ஆ) 4**

16. **இன்பத்துப்பால் அமைந்துள்ள இயல்கள் __________**
அ) பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்
ஆ) அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபியல்
இ) களவியல், கற்பியல்
ஈ) இல்லறவியல், துறவறவியல் **விடை: இ) களவியல், கற்பியல்**

17. **திருக்குறளில் அமைந்துள்ள மொத்த இயல்கள் __________**
அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 9 **விடை: இ) 133**

18. **திருக்குறளில் அமைந்துள்ள மொத்த அதிகாரங்கள் __________**
அ) 4 ஆ) 9 இ) 133 ஈ) 1330

**விடை: இ) 133**

19. **பாயிரவியலில் அமைந்துள்ள அதிகாரங்கள் __________**
அ) 04 ஆ) 20 இ) 13 ஈ) 01 **விடை: அ) 04**

20. **ஒழிபியலிலுள்ள அதிகாரங்கள் __________**
அ) 25 ஆ) 32 இ) 13 ஈ) 07 **விடை: இ) 13**

21. **தமிழ்நாடு அரசு 133 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையை நிறுவிய இடம்**
அ) கன்னியாகுமரி ஆ) நாமக்கல் இ) திருநெல்வேலி ஈ) சென்னை

**விடை: அ) கன்னியாகுமரி**

22. **திருவள்ளுவர் பல்கலைக்கழகம் இருப்பது __________**
அ) நெல்லை ஆ) கன்னியாகுமரி இ) வேலூர் ஈ) திருச்சி

**விடை: இ) வேலூர்**

23. **செய்யாமல் செய்த உதவிக்கு ஈடாகாதது __________**
அ) விண்ணுலகம் ஆ) மண்ணுலகம்
இ) உலகம் ஈ) விண்ணுலகமும் மண்ணுலகமும்

**விடை: ஈ) விண்ணுலகமும் மண்ணுலகமும்**

24. **ஒரு சிறிய அளவு உதவி எனினும் அதை நாம் போற்ற வேண்டிய அளவு __________**
அ) தினையளவு ஆ) பனையளவு இ) பணையளவு ஈ) திணையளவு

**விடை: ஆ) பனையளவு**

**25. நன்றல்லதை __________ மறப்பது நன்று**

அ) அன்றே ஆ) பிறகு இ) மறுநாள் ஈ) ஒரு நாளில்

**விடை: அ) அன்றே**

**26. நடுவன்மை நாணுபவர் __________ செய்யார்**

அ) பழியில்லா செயல்களைச் ஆ) நல்ல செயல்களைச்

இ) பழியான செயல்களைச் ஈ) நன்மை தரும் செயல்களைச்

**விடை: இ) பழியான செயல்களைச்**

**27. தாம் வறியர் என்ற காரணம் காட்டிப் பிறர் பொருளை விரும்புதலைச் செய்யாதவர்கள் __________**

அ) அறிவில் தெளிந்தோர் ஆ) உண்மை பேசுபவர்

இ) ஐம்புலன்களையும் வென்றவர்கள் ஈ) ஆசைப்படாதவர்கள்

**விடை: இ) ஐம்புலன்களையும் வென்றவர்கள்**

**28. தன் சினம் யாரிடம் செல்லும்படியாகும்? __________**

அ) வலியவரிடம் ஆ) மெலியவரிடம் இ) தீயவரிடம் ஈ) நண்பரிடம்

**விடை: ஆ) மெலியவரிடம்**

**29. சினத்தைக் காக்கா விட்டால் நம்மையே அழித்து விடுவது __________**

அ) சினம் ஆ) பொறாமை இ) ஆசை ஈ) பேராசை

**விடை: அ) சினம்**

**30. __________உடையோர் செல்வமுடையவராக இருப்பதில்லை**

அ) செல்வம் ஆ) தெளிந்த அறிவு இ) முதுமை ஈ) அரசு

**விடை: ஆ) தெளிந்த அறிவு**

## கற்பவை கற்றபின்

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. படத்துக்கு பொருத்தமான திருக்குறளைக் கண்டுபிடிக்க**



அ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

ஆ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

இ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

**விடை: இ) சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்**

**2. கடலின் பெரியது எது?**

அ) உற்ற காலத்தில் செய்த உதவி

ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி

இ) தினையளவு செய்த உதவி

**விடை: ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி**

**3. பின்வரும் நாலடியார் பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.**

*நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்*
*கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை*
*வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்*
*நினைப்ப வருவதொன் றில்*

அ) இரு வேறு உலகத்து இயற்கை; திருவேறு
தெள்ளியர் ஆதலும் வேறு

ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

இ) ஊழில் பெருவரி யாஉள மற்று ஒன்று
சூழினும் தான்முந்து உறும்

**விடை: ஆ) நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு**

**4. கீழ்க்காணும் புதுக்கவிதைக்குப் பொருந்தும் திருக்குறளைத் தேர்ந்தெடுக்க**

*உயர் அலுவலரின் வருகை
அலுவலகமே அல்லாடும்
அவருடைய சினம் அனைவரும் அறிந்ததே
கோப்புகள் விரைந்து முடிக்க
ஒழுங்கு செய்ய
நேரத்தில் இருக்க வேண்டும்
விரைகிறது மனம்
பரபரப்பும் மனவழுத்தமுமாய்
வண்டியை எடுக்கிறேன்
காலைக் கட்டிக் கொள்கிறது குழந்தை
'போ அந்தப் பக்கம்'
உதறிச் செல்கிறேன் குழந்தையை*

**விடை: ஆ) செல்இடத்துக் காப்பான் சினம் காப்பான் அல்இடத்துக்
காக்கின்என் காவாக்கால் என்?**

**5. இலக்கணக் குறிப்புத் தருக :**

அ) அன்பும் அறமும் → எண்ணும்மை
ஆ) நன்கலம் → பண்புத் தொகை
இ) மறத்தல் → தொழிற்பெயர்
ஈ) உலகு → ஆகுபெயர்

**6. பொருள் தருக :**

அ) வெகுளி → சினம்
ஆ) புணை → தெப்பம்
இ) ஏமம் → பாதுகாப்பு
ஈ) திரு → செல்வம்

**7. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?**

அ) செய்யாமல் செய்த உதவி
ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
இ) தினைத்துணை நன்றி
ஈ) செய்ந்நன்றி

**விடை: அ) செய்யாமல் செய்த உதவி**

**8. பகையும் உளவோ பிற? - பொருள் கூறுக.**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட வேறு பகை இல்லை.

**9. செல்லிடத்து → புணர்ச்சி விதி கூறுக**

செல்லிடத்து → செல் + இடத்து

i) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும் → என்ற விதிப்படி
'ல்' - இரட்டித்தது

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி
= ல் + இ = 'லி' → ஆனது
= செல்லிடத்து → என்று புணர்ந்தது

10. **பொருத்துக**

| சொற்கள் | | பொருந்துவது | விடைகள் |
|---|---|---|---|
| அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | - | சேர்ந்தாரைக் கொல்லி | **தெய்வத்துள் வைக்கப்படும்** |
| அ) பயன்தூக்கார் செய்த உதவி | - | ஞாலத்தின் மாணப் பெரிது | **நன்மை கடலின் பெரிது** |
| இ) சினம் | - | தெய்வத்துள் வைக்கப்படும் | **சேர்ந்தாரைக் கொல்லி** |
| ஈ) காலத்தினாற் செய்த நன்றி | - | நன்மை கடலின் பெரிது | **ஞாலத்தின் மாணப் பெரிது** |

**அ) 4, 3, 2, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 1, 2, 3, 4 ஈ) 2, 3, 4, 1**

**விடை: (ஆ) 3, 4, 1, 2**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் யாரைச் சுட்டுகிறார்?**

**முயல்வாருள் எல்லாம் தலை :**
அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவரை முயல்வாருள் எல்லாம் தலை என வள்ளுவர் சுட்டுகிறார்.

2. **ஞாலத்தின் பெரியது எது?**

**ஞாலத்தின் பெரியது :**
உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும்.

3. **மறக்கக்கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?**

**மறக்கக் கூடாதது :**
ஒருவர் நமக்குச் செய்த நன்மையை (உதவியை) மறக்கக் கூடாது.
**மறக்கக் கூடியது :**
பிறர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

4. **செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?**

**செல்வம் இருப்பதற்கான வழி :**
பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலே ஒருவருடைய செல்வம் இருப்பதற்கான வழி ஆகும்.

5. **சினத்தை ஏன் காக்க வேண்டும்?**

**சினத்தை காக்க வேண்டும் :**
ஒருவர் தன்னைத்தான் காத்துக் கொள்ள விரும்பினால், சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்து விடும்.

### அகநிலை வினாக்கள்

1. **தெய்வத்திற்கு இணையாக மதிக்கப்படுபவர் யார்?**

**தெய்வத்திற்கு இணை :**
உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவர், வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவர்.



www.kalviexpress.in

2. **யாருக்கு உய்வில்லை?**

**உய்வில்லை :**

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும். ஒருவர் செய்த உதவியை மறந்துவிட்டவர்க்கு உய்வே இல்லை.

3. **நடுவண்மை நாணுபவர் எத்தகையவர்?**

**நடுவண்மை நாணுபவர் :**

நடவுநிலைமையை விட்டுவிட நாணம் கொள்ளும் பண்பாளர்கள் பெரும்பயன் கிடைப்பினும். பிறர் பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

4. **ஐம்புலன்களையும் வென்றவரின் செயல் யாது?**

**ஐம்புலன்களையும் வென்றவர் :**

ஐம்புலன்களையும் வென்ற தெளிவுடையோர், தாம் வறியர் என்ற காரணத்தைக் காட்டிப் பிறர் பொருளை விரும்புதலைச் செய்ய மாட்டார்.

5. **'ஊன் தருவார் இல்' - எப்போது?**

**ஊன் விற்பவர் யாரும் இருக்க மாட்டார் :**

உலகத்தார் புலால் தின்னும் பொருட்டு உயிர்களைக் கொல்பவர்கள் இல்லையாயின், வருவாயின் பொருட்டு ஊன் விற்பவர் யாரும் இருக்க மாட்டார்.

6. **சினம் காப்பவர் என்பவர் யார்?**

**சினம் காப்பவர் :**

தன் சினம் செல்லுபடியாகும் மெலியவரிடத்தில், சினம் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர் ஆவர்.

7. **ஏமப் புணையைச் சுட்டழிப்பது எது?**

**ஏமப் புணையைச் சுட்டழிப்பது :**

ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தைச் சுட்டழிக்கும் நெருப்பு சினம் ஆகும்.

8. **ஒருவருக்கு மேலோங்கித் தோன்றும் அறிவு எது?**

**மேலோங்கித் தோன்றுவது :**

ஒருவர் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றிருந்தாலும், அவருக்கு இயல்பாக உள்ளதாகும் அறிவே மேலோங்கித் தோன்றும்.

9. **இரு வேறு வகைப்பட்ட உலகத்து இயல்புகள் யாவை?**

**உலக இயல்பு :**

உலக இயல்பு இரு வகைப்படும்.

i) செல்வம் உடையவர் அறிவுடையவராக இருப்பதில்லை.

ii) தெளிந்த அறிவுடையோர் செல்வமுடையவராக இருப்பதில்லை.

## III. சிறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. ***'அன்பும், அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது'***

**இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக,**

→ .இக்குறட்பாவில் பயின்று வரும் அணி **நிரல்நிறை அணி**

**அணி இலக்கணம் :**

நிரல் → வரிசை ; நிறை → நிறுத்தல்

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும். அதாவது சில சொற்களை நிறுத்தி, அவற்றோடு பொருள் தொடர்புடைய வேறு சொற்களை அடுத்த வரிசையில் நிறுத்திப் பொருத்தமாக இணைத்துப் பொருள் காண்பதாகும்.

**'நிரல் நிறுத்து இயற்றுதல் நிரல் நிறை அணியே'**

**விளக்கம் :**

அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

**அணிப் பொருத்தம் :**

இக்குறளில் அன்பு, அறன் என்பற்றை வரிசையாக நிறுத்தி அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்து, பொருள் கொள்ளுமாறு அமைக்கப் பெற்றுள்ளதால், நிரல் நிறை அணிக்குப் பொருந்தியுள்ளது.

---

**2. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக :**

**அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவம் :**

- அன்பும் அறமும் உடையதாக இல்வாழ்க்கை விளங்குமானால், அதுவே வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

*'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது'*

- அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்பவர், முயற்சிச் சிறப்புடையோரை விட மேம்பட்டவர் ஆவார்.
- உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவர். வானுலகத்தில் உள்ள தெய்வத்துக்கு இணையாக மதிக்கப்படுவார்.

*'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்''*

---

**3. எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது? - குறள் வழி விளக்குக.**

**வையகமும் வானகமும் ஈடாகாது :**

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

*'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்ற லரிது''*

**உலகை விடப் பெரியது :**

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும்.

**கடலை விடப் பெரியது :**

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

**பனையளவாகக் கொள்வர் :**

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

**4. சினத்தால் வரும் கேட்டினை கூறுக.**

**சினத்தால் வரும் கேடுகள் :**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட நமக்கு வேறு பகை இல்லை.

**தன்னையே கொல்லும் சினம் :**

ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் காத்துக்கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

*'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்'*

**ஏமப் புணையைச் சுடும் :**

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

*'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்'*

**5. கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.**

*சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்*

**- இக்குறளில் பயின்று வரும் ஏகதேச உருவக அணியின் இலக்கணம்**

**அணியின் இலக்கணம் :**

பாடலில் உருவகம் செய்யும் இரு பொருள்களில் ஒன்றனை மட்டும் உருவகம் செய்து விட்டு அதனொடு தொடர்புடைய மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

**விளக்கம் :**

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்னும் பாதுகாப்புத் தெப்பதையும் சுட்டழிக்கும்.

**அணிப் பொருத்தம் :**

இப்பாடலில், சினதததை நெருப்பாக உருவகம் செய்த வள்ளுவர், வாழ்க்கையைத் தெப்பத்திற்கு உருவகம் செய்யாமல் விட்டு விட்டார். எனவே, 'ஏகதேச உருவக அணி' பயின்று வந்துள்ளது.

## அகநிலை வினாக்கள்

**1. மறத்தல் பற்றியும், மறத்தலால் ஏற்படும் கேடு பற்றியும் விளக்குக.**

**மறத்தல் :**

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

*'நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று'*

**மறத்தலால் ஏற்படும் கேடு :**

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும். ஒருவர் செய்த உதவியை மறந்து விட்டவர்க்கு உய்வே இல்லை.

*'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு'*

**2. 'வெஃகாமை பற்றி நும் பாடப்பகுதியில் வள்ளுவர் விளக்கும் கருத்துகள் யாவை?**

**நடுவன்மை நாணுபவர் :**

நடுவுநிலைமையை விட்டு விட நாணம் கொள்ளும் பண்பாளர்கள் பெரும்பயன் கிடைப்பினும். பிறர் பொருளைக் கவரும் பழியான செயல்களைச் செய்யார்.

**ஐம்புலன்களையும் வென்றவர் :**

ஐம்புலன்களையும் வென்ற தெளிவுடையோர், தாம் வறியர் என்ற காரணத்தைக் காட்டிப் பிறர் பொருளை விரும்புதலைச் செய்ய மாட்டார்.

**செல்வம் குறையாமலிருக்க வழி :**

ஒருவருடைய செல்வம் குறையாமலிருக்க வழி எது என்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாதிருத்தலாகும்.

*'அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை*
*வேண்டும் பிறன்கைப் பொருள்'*

---

**3. உண்மையில் சினம் காப்பவர் யார்?**
**சினத்தை ஏன் மறந்து விட வேண்டும்?**

**உண்மையில் சினம் காப்பவர் :**

தன் சினம் செல்லும்படியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர்; செல்லும்படியாகாத வலியவரிடத்தில், காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

**சினத்தை மறக்க வேண்டும் :**

தீமையான விளைவுகள் சினத்தாலேயே ஏற்படும் என்பதால் யாரிடத்திலும் சினம் கொள்ளாமல் அதை மறந்து விட வேண்டும்.

*'மறத்தல் வெகுளியை யார்மாட்டும் ; தீய*
*பிறத்தல் அதனான் வரும்'*

---

**4. 'ஊழ்' பற்றிய வள்ளுவரின் கருத்துகள் யாவை?**

**இயல்பான அறிவே மேலோங்கும் :**

ஒருவர் நுட்பமான நூல் பலவற்றைக் கற்றிருந்தாலும், அவருக்கு இயல்பாக உள்ளதாகும் அறிவே மேலாங்கித் தோன்றும்

*'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்*
*உண்மை அறிவே மிகும்'*

**உலக இயல்பு :**

உலக இயல்பு இரு வேறு வகைப்படும் ; செல்வம் உடையவர் அறிவுடையவராக இருப்பதில்லை ; தெளிந்த அறிவுடையோர் செல்வமுடையவராக இருப்பதில்லை.

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.**

**செய்நன்றியறிதலே அறம் :**

**முன்னுரை :**

'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டித் குறுகத் தறித்த குறள்' என்று ஔவையாரால் போற்றப்பட்ட வாயுறை வாழ்த்தில் அறத்துப் பால் இல்லறவியலில் 11வது அதிகாரமாக 'செய்நன்றி அறிதல்' அமைந்துள்ளது.

ஏழு சீர்கள் கொண்ட இரண்டே அடிகளில் செய்ந்நன்றியறிதலே நம் வாழ்விற்கு அறம் என்பதை வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர்.

**வையகமும் வானகமும் ஈடாகாது :**

தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது.

*'செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்*
*வானகமும் ஆற்ற லரிது'*

**உலகை விடப் பெரியது :**

உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும், அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும்.

**கடலை விடப் பெரியது :**

இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரிதாகும்.

**பனையளவாகக் போற்றுவர் :**

ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

**நன்றியை மறக்கக் கூடாது :**

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

*'நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்லது*
*அன்றே மறப்பது நன்று'*

**நன்றியை மறந்தவர்க்கு உய்வில்லை :**

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும். ஒருவர் செய்த உதவியை மறந்து விட்டவர்க்கு உய்வே இல்லை.

*'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை*
*செய்ந்நன்றி கொன்ற மகற்கு'*

**முடிவுரை :**

இவ்வாறாக ஒருவர் நமக்குச் செய்த நன்றியின் அளவையும் மதிப்பையும் விளக்கி, செய்த நன்றியை மறக்கக்கூடாது என்று அறிவுறுத்தியும் மறந்து விட்டவருக்கு வாழ்வில் உய்வே இல்லை என்று எச்சரிக்கையும் செய்கிறார். எனவே, செய்நன்றியறிதலே நம் வாழ்விற்கு மிகச் சிறந்த அறம் என்பதை வாயுறை வாழ்த்து வலியுறுத்துகிறது.

**2. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் - இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க.**

**சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் :**

**முன்னுரை :**

'இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே' ⟶ என்று பாவேந்தர் போற்றிப் பாடிய முப்பாலில் அறத்துப் பால் துறவறவியலில் 31-வது அதிகாரமாக 'வெகுளாமை' அமைந்துள்ளது. இரண்டு அடிகளில் உலகையே அளந்த முப்பாலானது சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் என்று அறிவுறுத்துகிறது.

**உண்மையில் சினம் காப்பவர் :**

தன் சினம் செல்லும்படியாகும் மெலியவரிடத்தில் கொள்ளாமல் காப்பவரே உண்மையில் சினம் காப்பவர்; செல்லும்படியாகாத வலியவரிடத்தில், காத்தால் என்ன? காக்காவிட்டால் என்ன?

**சினத்தை மறக்க வேண்டும் :**

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தைவிட நமக்கு வேறு பகை இல்லை.

*'மறத்தல் வெகுளியை யார்மாட்டும் ; தீய*
*பிறத்தல் அதனான் வரும்'*

**வேறு பகை இல்லை :**

முகமலர்ச்சியையும் அகமகிழ்சியையும் கொல்கின்ற சினததைவிட நமக்கு வேறு பகை இல்லை.

**தன்னையே கொல்லும் சினம் :**

ஒருவர் தன்னைத்தான் காத்துக்கொள்ள விரும்பினால், சினம் வாராமல் காத்துக்கொள்ள வேண்டும்; காக்காவிட்டால், சினம் நம்மையே அழித்துவிடும்.

*'தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால்*
*தன்னையே கொல்லும் சினம்'*

**ஏமப் புணையைச் சுடும் :**

சினம், தன்னைச் சேர்ந்தவரையும் அழிக்கும் நெருப்பு. அது ஒருவரது சுற்றம் என்றும் பாதுகாப்புத் தெப்பத்தையும் சுட்டழிக்கும்.

*'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும்*
*ஏமப் புணையைச் சுடும்'*

**முடிவுரை :**

சினத்தால் கேடுகள் ஏற்படுவதால் அதை நாம் காத்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் அது நம்மையும் நம் வாழ்வையும் அழித்து விடும். தீயவற்றை மறந்து விட்டு சினத்தை அடக்கிக் காத்துக் கொண்டால் அது நம் வாழ்வை மேன்மைப்படுத்தும் என்று முப்பால் அறிவுறுத்துகிறது.

## V. இலக்கணக் குறிப்பு தருக

### அகநிலை வினாக்கள்

**எண்ணும்மை :**
- அன்பும் அறனும்
- பண்பும் பயனும்
- வையகமும் வானகமும்
- நகையும் உவகையும்

**வினையாலணையும் பெயர் :**
- வாழ்பவன்
- பயன் தூக்கார்
- கொள்வர்
- ஊன் தருவார்
- தெள்ளியர்

**தொழிற் பெயர் :**
- வெஃகுதல்
- மறத்தல்

- மறத்தல் ⟶ எதிர்மறைத் தொழிற்பெயர்
- செய்த நன்றி ⟶ பெயரெச்சம்
- செய்யார் ⟶ எதிர்மறை வினையாலணையும் பெயர்
- கொல்லாது ⟶ எதிர்மறைத் தொழிற்பெயர்
- உலகு ⟶ ஆகுபெயர்
- செல் இடத்து ⟶ வினைத்தொகை
- சினம் காப்பான் ⟶ இரண்டாம் வேற்றுமைத் தொகை
- சினம் காக்க ⟶ இரண்டாம் வேற்றுமைத் தொகை
- ஏமப்புணை ⟶ உருவகம்

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### அகநிலை வினாக்கள்

1) **செய்த** ⟶ செய் + த் + அ

செய் ⟶ பகுதி

த் ⟶ இறந்த கால இடைநிலை

அ ⟶ பெயரெச்ச விகுதி

4) **கொன்ற** ⟶ கொல்(ன்) + ற் + அ

கொல் ⟶ பகுதி ; ல் - 'ன்' ⟶ ஆனது விகாரம்

ற் ⟶ இறந்த கால இடைநிலை

அ ⟶ பெயரெச்ச விகுதி

2) **கொள்வர்** ⟶ கொள் + வ் + அர்

கொள் ⟶ பகுதி

வ் ⟶ எதிர் கால இடைநிலை

அர் ⟶ பலர்பால் வினைமுற்று விகுதி

2) **கொள்வர்** ⟶ கொள் + வ் + அர்

கொள் ⟶ பகுதி

வ் ⟶ எதிர் கால இடைநிலை

அர் ⟶ பலர்பால் வினைமுற்று விகுதி

3) **மறப்பது** ⟶ மற + ப் + ப் + அ + து

ப் ⟶ சந்தி

மற ⟶ பகுதி ;

ப் ⟶ எதிர் கால இடைநிலை

அ ⟶ சாரியை

து ⟶ ஒன்றன் பால் வினைமுற்று விகுதி

5) **வென்ற** ⟶ வெல்(ன்) + ற் + அ

வெல் ⟶ பகுதி ; ல் - 'ன்' ⟶ ஆனது விகாரம்

ற் ⟶ இறந்த கால இடைநிலை

அ ⟶ பெயரெச்ச விகுதி

## VII. புணர்ச்சி விதி தருக

### அகநிலை வினாக்கள்

1) **திணைத்துணை** ⟶ திணை + துணை

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி

⟶ த் - மிகுந்தது ⟶ திணைத்துணை ⟶ என்று புணர்ந்தது

2) **நன்றன்று** ⟶ நன்று + அன்று

i) 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'உ' நீங்கியது

⟶ ற் + ~~உ~~ ⟶ நன்ற் + அன்று

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி ⟶ என்ற விதிப்படி

⟶ ற் + அ = ற ஆனது

⟶ நன்றன்று ⟶ என்று புணர்ந்தது



www.kalviexpress.in

3) **நன்றல்லது** ⟶ நன்று + அல்லது

i) 'உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'உ' - நீங்கியது

⟶ று = ற் + உ̸ ⟶ நன்ற் + அல்லது

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ 'ற் + அ = 'ற' ஆனது

⟶ நன்றல்லது ⟶ என்று புணர்ந்தது

4) **உய்வுண்டாம்** ⟶ உய்வு + உண்டாம்

i) 'முற்றும் அற்று ஒரோ வழி' ⟶ என்ற விதிப்படி

⟶ 'உ' - நீங்கியது ⟶ வு = வ் + உ̸

⟶ உய்வ் + உ ண்டாம் ⟶ என்று புணர்ந்தது

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ 'வ்' + உ = 'வு' ஆனது

⟶ உய்வுண்டாம் ⟶ என்று புணர்ந்தது

5) **உய்வில்லை** ⟶ உய்வு + இல்லை

i) 'முற்றும் அற்று ஒரோ வழி' ⟶ என்ற விதிப்படி

⟶ 'உ' - நீங்கியது ⟶ வு = வ் + உ̸

⟶ உய்வ் + இல்லை

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ 'வ்' + இ = 'வி' ஆனது

⟶ உய்வில்லை ⟶ என்று புணர்ந்தது

6) **யாதெனின்** ⟶ யாது + எனின்

i) "உயிர் வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'உ' - நீங்கியது ⟶ து = த் + உ̸

⟶ யாத் + எனின்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ 'த்' + எ = 'தெ' ஆனது

⟶ யாதெனின் ⟶ என்று புணர்ந்தது

7) **ஏமப்புனை** ⟶ ஏமம் + புணை

i) "மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'ம்' - நீங்கியது ⟶ ஏமம̸்

⟶ ஏம + புணை

ii) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'ப்' - மிகுந்தது

⟶ ஏமப்புணை ⟶ என்று புணர்ந்தது




கல்வி

**இயல்: 4**

# செல்வத்துள் எல்லாம் தலை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உரைநடை | : | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | துணைப்பாடம் | : | பாதுகாப்பாய் ஒரு பயணம் |
| செய்யுள் | : | இதில் வெற்றிபெற இடையீடு, புறநானூறு | இலக்கணம் | : | பா இயற்றப் பழகலாம் |

உரைநடை

## 4. பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள்

- உ.வே.சாமிநாதர்

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க**

அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு

இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி **விடை: இ) கடுக்காய்**

**2. 'குழி மாற்று' எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?**

அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை

**விடை: ஆ) கணிதம்**

### அகநிலை வினாக்கள்

**1. உ.வே.சா – இன் சிறப்புப் பெயர் ________**

அ) தமிழ் வேந்தன் ஆ) இலக்கியச் செம்மல்

இ) தமிழ்த் தாத்தா ஈ) தமிழ் நாவலர் **விடை: இ) தமிழ்த் தாத்தா**

**2. 'புலமைப் பெருங்கடல்' என்று அழைக்கப்படுபவர் ________**

அ) வாணிதாசன் ஆ) கம்பர் இ) சுரதா ஈ) உ.வே.சா

**விடை: ஈ) உ.வே.சா**

**3. 'மகாமகோபாத்தியாய', 'திராவிட வித்தியா பூஷணம்', 'தாகஷணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களுக்குச் சொந்தக்காரர் ________**

அ) பேராசிரியர் அ.கா.பெருமாள் ஆ) மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்

இ) நாவலர் சோமசுந்தரனார் ஈ) உ.வே.சாமிநாதர்

**விடை: அ) உ.வே.சாமிநாதர்**

**4. கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர் ________**

அ) உ.வே.சாமிநாதர் ஆ) மா.இராசமாணிக்கனார்

இ) வ.சுப.மாணிக்கம் ஈ) நாவலர் சோமசுந்தர பாரதியார்

**விடை: அ) உ.வே.சாமிநாதர்**

www.kalviexpress.in www.kalviexpress.in



5. **உ.வே.சா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் 'டாக்டர்' பட்டம் பெற்ற ஆண்டு ________**
அ) 1932 ஆ) 1935 இ) 1936 ஈ) 1939
**விடை: அ) 1932**

6. **வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் உ.வே.சாமிநாதரின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ள இடம் ____**
அ) பாரதியார் பல்கலைக்கழகம் ஆ) சென்னை மாநிலக் கல்லூரி
இ) சென்னை கிறிட்டியன் கல்லூரி ஈ) கும்பகோணம் அரசு கலைக் கல்லூரி
**விடை: ஆ) சென்னை மாநிலக் கல்லூரி**

7. **உ.வே.சா நூலகம் அமைந்துள்ள இடம் ________**
அ) சென்னை - மயிலாப்பூர் ஆ) சென்னை - தாம்பரம்
இ) சென்னை - திருவான்மியூர் ஈ) சென்னை - ஆழ்வார்பேட்டை
**விடை: இ) சென்னை - திருவான்மியூர்**

8. **மில்டன் எழுதிய சுவர்க்க நீக்கம் என்ற நூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ________**
அ) மா.இராசமாணிக்கனார் ஆ) ப. சுப்பிரமணியனார்
இ) நாவலர் சோம சுந்தர பாரதியார் ஈ) நாராயணசுவாமி
**விடை: ஆ) ப.சுப்பிரமணியனார்**

9. **திருநெல்வேலி தெற்குத் தெரு கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 4 வருடங்கள் படித்தவர்________**
அ) வெள்ளக்கால் ப. சுப்பிரமணியனார் ஆ) வ.சுப. மாணிக்கம்
இ) நாவலர் சோமசுந்தர பாரதியார் ஈ) வேங்கடசாமி
**விடை: அ) வெள்ளக்கால் ப.சுப்பிரமணியனார்**

10. **மௌனகுருவிடம் கல்வி பயின்றவர்________**
அ) ப.சுப்பிரமணியனார் ஆ) மா.இராசமாணிக்கனார்
இ) வேங்கடசாமி ஈ) நாராயண சாமி
**விடை: ஆ) மா.இராசமாணிக்கனார்**

11. **பின்னத்தூர் அருகிலுள்ள கிருஷ்ணாபுரம் முத்துராமபாரதி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இலவசமாகப் படித்தவர் ________**
அ) வேங்கடசாமி ஆ) மா.இராசமாணிக்கனார்
இ) வ.சுப.மாணிக்கம் ஈ) நாராயணசாமி **விடை: ஈ) நாராயணசாமி**

12. **நற்றிணை நூலின் உரையாசிரியர் ________**
அ) வ.சுப. மாணிக்கம் ஆ) வேங்கடசாமி
இ) பின்னத்தூர் நாராயண சாமி ஈ) ப. சுப்பிரமணியனார்
**விடை: இ) பின்னத்தூர் நாராயணசாமி**

13. **எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர் ________**
அ) நாவலர் சோம சுந்தர பாரதியார் ஆ) வ.சுப.மாணிக்கம்
இ) வேங்கடசாமி ஈ) நாராயணசாமி
**விடை: அ) நாவலர் சோமசுந்தர பாரதியார்**

14. **சிலப்பதிகார உரையாசிரியர் ________**
அ) வேங்கடசாமி ஆ) நாராயணசாமி
இ) சோம சுந்தர பாரதியார் ஈ) ப.சுப்பிரமணியனார்
**விடை: அ) வேங்கடசாமி**



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



**15. வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றவர் ________**

அ) நாராயணசாமி  ஆ) வேங்கடசாமி

இ) சோம சுந்தர பாரதியார்  ஈ) ப.சுப்பிரமணியனார்

**விடை: ஆ) வேங்கடசாமி**

**16. மதுரைப் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த டாக்டர் வ.சுப. மாணிக்கம் கல்வி பயின்றது ________**

அ) வல்லம் குருசாமி வாத்தியார் திண்ணைப்பள்ளி

ஆ) எட்டயபுரம் திண்ணைப் பள்ளிக்கூடம்

இ) திருநெல்வேலி கணபதியார் திண்ணைப் பள்ளிக்கூடம்

ஈ) மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம்

**விடை: ஈ) மகிபாலன்பட்டி நடேசனார் திண்ணைப் பள்ளிக்கூடம்**

**17. '*மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்*' எனக் கூறும் நூல் ________**

அ) சிந்தாமணி  ஆ) மணிமேகலை  இ) புறநானூறு  ஈ) தமிழ்விடுதூது

**விடை: ஈ) தமிழ்விடுதூது**

**18. 'ஐயண் டெய்தி மையாடி அறிந்தார் கலைகள்' எனக் கூறுவது ________**

அ) தமிழ்விடுதூது  ஆ) சிந்தாமணி  இ) சிலப்பதிகாரம்  ஈ) மணிமேகலை

**விடை: ஆ) சிந்தாமணி**

**19. ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர் ________**

அ) திண்ணை  ஆ) மேடை  இ) பள்ளி  ஈ) மன்றம்

**விடை: இ) பள்ளி**

**20. உபாத்தியாருக்குப் பிரிதியாகச் சில சமயங்களில் வைக்கப்படுவது ________முறை**

அ) கணக்குப்பிள்ளை  ஆ) சட்டாம்பிள்ளை

இ) உபாத்தியாயர் பிள்ளை  ஈ) தலைகீழ்ப் பாடம்

**விடை: ஆ) சட்டாம் பிள்ளை**

**21. மைதடவி ஏட்டினை வாசிக்கத் தொடங்குவதனால் அக்ஷராப்பியாசத்தை________ என்றும் சொல்வார்கள்**

அ) முறை வைப்பு  ஆ) சட்டாம் பிள்ளை  இ) கல்விப் பயிற்சி  ஈ) மையாடல் விழா

**விடை: ஈ) மையாடல் விழா**

**22. இரட்டைத் துளையுள்ள ஏடுகளில் ஒரு துளையில் செப்புக் கம்பி அல்லது மூங்கிற் குச்சியைச் செருகிக் கட்டுவதற்குப் பெயர்________**

அ) பேனாக்கத்தி  ஆ) நாராசம்  இ) மடக்கெழுத்தாணி  ஈ) குண்டெழுத்தாணி

**விடை: ஆ) நாராசம்**

**23. ஒரு பக்கத்தில் இரண்டு கத்தியும் ஒரு பக்கம் இரண்டு எழுத்தாணியும் உள்ளவை ________**

அ) மடக்கெழுத்தாணி  ஆ) வாரெழுத்தாணி

இ) குண்டெழுத்தாணி  ஈ) பேனாக்கத்தி

**விடை: அ) மடக்கெழுத்தாணி**

**24. சுவடிகளை வைப்பதற்கும் எடுத்துச் செல்வதற்கும் உபயோகப்படும் கருவிக்கு பெயர் ________**

அ) தூக்கு / அசை  ஆ) பாடம் / ஏடு

இ) எழுத்தாணி / அசை  ஈ) வாதம்/ தூக்கு

**விடை: அ) தூக்கு / அசை**

**25. காலையில் ஐந்து மணிக்குப் பள்ளிக்கூடத்திற்கு முதலில் வருபவனை ________ என்று சொல்வர்**

அ) சட்டாம் பிள்ளை  ஆ) தலைமாணாக்கன்

இ) வேத்தான்  ஈ) கணக்கு பிள்ளை

**விடை: இ) வேத்தான்**



www.kalviexpress.in www.kalviexpress.in

26. **கல்வியின் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிவது __________**

அ) ஈட்டல் பிரிவு ஆ) தூதுப் பிரிவு இ) ஓதற்பிரிவு ஈ) ஒற்றர் பிரிவு

**விடை: இ) ஓதற்பிரிவு**

27. **ஓதற் பிரிவு பற்றிக் கூறும் இலக்கண நூல் __________**

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) வீரசோழியம்

**விடை: இ) தொல்காப்பியம்**

28. **ஓதற் பிரிவிற்குரிய கால எல்லை __________**

அ) மூன்று ஆண்டுகள் ஆ) ஐந்து ஆண்டுகள் இ) ஓர் ஆண்டு ஈ) இரண்டு ஆண்டுகள்

**விடை: அ) மூன்று ஆண்டுகள்**

29. **தமிழ்க் கல்லூரியாகவும் வடமொழிக் கல்லூரியாகவும் விளங்கிய மடங்கள் __________, __________**

அ) மதுரை மடம், காஞ்சிமடம் ஆ) காஞ்சிமடம், திருச்சி மடம்

இ) திருவாடுதுறை மடம், தருமபுரம் மடம் ஈ) திருவையாறு மடம், தருமபுரம் மடம்

**விடை: இ) திருவாடுதுறை மடம், தருமபுரம் மடம்**

30. **பிற தேசத்து மாணாக்கர்கள் வந்து தஞ்சை சர்வசிவ பண்டிதரென்பாரிடத்தில் கற்று சென்ற காலம் __________**

அ) முதல் இராஜராஜ சோழன் காலம் ஆ) இரண்டாம் இராஜராஜ சோழன் காலம்

இ) இராசேந்திரன் காலம் ஈ) புலிகேசியின் காலம்

**விடை: அ) முதல் இராஜராஜ சோழன் காலம்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?**

**மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் :**

தமிழில்,

- நிகண்டு
- நன்னூல்
- காரிகை
- தண்டியலங்காரம்
- நீதிநூல்கள்

**கணிதத்தில்,**

- கீழ்வாயிலக்கம்
- மேல்வாயிலக்கம்
- குழிமாற்று

### அகநிலை வினாக்கள்

1. **குருகுலம் பற்றி எழுதுக**

**குருகுலம்**

நம்நாட்டில் மிகப்பழுங்காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதை 'குருகுலம்' என்பர்.

- 'கணக்காயரென்பது' உபாத்தியாயருக்குப்பெயர்
- 'கணக்கு' என்பது நூலின் பெயர்

2. **மன்றம் எவ்வாறு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது?**

**மன்றம் :**

- ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தினடியில் மேடையொன்று அமைக்கப்பட்டிருக்கும்.
- அதனை 'மன்றம்' என்னும் 'அம்பலம்' என்றும் கூறுவர்.

**திண்ணைப் பள்ளி :**

- மன்றமென்பது மரத்தடியில் உள்ள திண்ணையே.
- அதுவே பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது

3. **'பாடசாலைகளுக்கும் மடங்களுக்கும் பள்ளியென்னும் பெயர் வழங்கக் காரணம் என்ன?**

**பள்ளி :**

- மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின.
- பல இடங்களில் மடங்களில் பாடசாலைகள் உண்டாயின.
- பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர்.
- எனவே, பாடசாலை, மடங்கள் என்ற வேறுபாடின்றி ஒன்றாகவே கருதப்பட்டதால் பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கப்பட்டது.

4. **'மையாடல்' - பற்றி எழுதுக**

**மையாடல் :**

- சுவடிகளிலுள்ள எழுத்துகள் செவ்வனே தெரிவதற்காகச் சுவடியில்,
    - வசம்பு • மஞ்சள் • மணத்தக்காளி • இலைச்சாறு அல்லது ஊமத்தையிலைச்சாறு
    - மாவிலைக்கரி • தர்ப்பைக்கரி முதலியவற்றைக் கூட்டிச் செய்த மையை அதில் தடவுவார்கள்.
- அந்த மை எழுத்துகளை விளக்கமாகக் காட்டுவதோடு கண்ணுக்கும் குளிர்ச்சியைத் தரும்.
- எனவே, மை தடவிப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்குவதால் அக்ஷராப்பியத்தை 'மையாடல் விழா' என்று சொல்வர்.

5. **வரியெழுத்தின் உறுப்புகள் யாவை?**

**வரியெழுத்தின் உறுப்புகள்**

- புள்ளி
- கால்
- கொம்பு
- விலங்கு

6. **எளிதில் ஞாபகப்படுத்திக் கொள்ளும் வகையில் செய்யுட்கள் எவ்வாறு அமைந்திருந்தன?**

- சிறுவர்கள் படிக்கும் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் என்பவை அகராதி வரிசையில் அமைந்தமை அவர்களின் ஞாபகத்தில் எளிதில் பதிவதன் பொருட்டேயாகும்.
- அந்தாதி முறையைக் கொண்டும்,
- எதுகை, மோனைகளைக் கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

7. **அக்காலத்தில் எழுதுவதற்குப் பயன்பட்ட சுவடிகள் யாவை?**

**சுவடிகள் :**

- பனையேடு (பனையோலை)
- சீதாள பத்திரம் (தாழை மடல்)

8. **எழுத்தாணிகளின் பேதங்கள் யாவை?**

**எழுத்தாணிகள் :**

- ஓலையில் எழுதுவதற்குரிய எழுத்தாணியில் பல பேதங்கள் உண்டு
- எழுத்தாணியை ஊசியென்றும் கூறுவர்.

**வகைகள் :**

- மடக்கெழுத்தாணி,
- வாரெழுத்தாணி,
- குண்டெழுத்தாணி என மூவகைப்படும்.

**9. வாதம் புரிதல் பற்றி மதுரைக்காஞ்சி உணர்த்துவன யாவை?**

**வாதம் புரிதல் :**

- கல்வியில் வாதம் செய்தல் நம்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் இருந்தது.
- மிகச்சிறந்த நூற்பயிற்சியுடையவர்கள் அரசவைகளில் வாதுபுரிந்து தம் கல்வித் திறமையை நிலைநாட்டுவர்
- அதன் பொருட்டு அவர்கள் கொடிகட்டியிருப்பரென்று மதுரைக்காஞ்சி முதலிய நூல்களால் அறியலாம்.

**10. சாந்துணையும் கற்றல் பற்றி வள்ளுவர் விதிப்பது யாது?**

**சாந்துணையும் கற்றல் :**

- பல நூல்களையும் பள்ளிக்கூடத்தில் பயின்றதோடு நில்லாமல் வாழ்நாள் முழுவதும் நம்நாட்டார் படித்து வந்தனர்.
- '**என் ஒருவன் சாந்துணையும் கல்லாத வாறு!** என்ற குறளினால் திருவள்ளுவர், ஒருவன் இறக்குமளவும் படிக்கவேண்டுமென்பதை விதிக்கிறார்.
- பள்ளிக்கூடத்தில் கற்கும் காலம் கடந்த பின்பும் எங்கெங்கே கலைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இருந்தார்களோ, அங்கெங்கே சென்று தாம் முன்பு கல்லாதவற்றைக் கற்று வந்தார்கள்.

**11. உ.வே.சாமிநாதர் பெற்ற பட்டங்கள் யாவை?**

**பட்டங்கள் :**

- 'மகாமகோபாத்தியாய' ➢ 'திராவிட வித்தியா பூஷணம்' ➢ 'தாகஷிணாத்திய கலாநிதி'

**12. உ.வே.சாமிநாருக்கு நாம் செய்த சிறப்புகள் யாவை?**

**திருவுருவச்சிலை :**

- சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் உ.வே.சாமிநாதரின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

**நூலகம் :**

- சென்னையில் திருவான்மியூரில் உ.வே.சா பெயரால் உ.வே.சா நூலகம் அமைந்துள்ளது.

**13. மாணவர்களின் ஞாபகசக்தியை விருத்தி செய்ய உபாத்தியாயர் செய்தது என்ன?**

**ஞாபகசக்தி விருத்தியாக :**

- ஒவ்வொரு நாளும் பாடங்கள் முடிந்தவுடன் பிள்ளைகளை வீட்டுக்கு அனுப்பும் போது அவர்களது ஞாபகசக்தியை விருத்தி செய்ய, ஒவ்வொருவருக்கும் பூ, மிருகம், பட்சி, ஊர் இவற்றின் பெயர்களில் வகைக்கு ஒவ்வொன்றை உபாத்தியாயர் சொல்லி அனுப்புவார்.
- மாணவர்கள் அந்தப் பெயர்களை மறுநாள் மறவாமல் வந்து சொல்ல வேண்டும்.

**14. 'வேத்தான்' - எனப்படுபவன் யார்?**

**வேத்தான் :**

- பள்ளிக்கூடத்திலே காலையில் ஐந்து மணிக்கே வந்து விட வேண்டும்.
- எனவே, பிள்ளைகள் பெரியவர்களை அழைத்து வருவதே வழக்கம்.
- முதலில் வருபவனை 'வேத்தான்' என்பர்.
- 'வேத்தான்' என்றால் மற்றவர்களை விட வேறான தனிப்பெருமை உடையவன் என்று பொருள்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. நீங்கள் ஆசிரியரானால் மாணக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்?**

**அன்பினால் அடக்குதல் :**

- முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இன்றி ஆசிரியர்கள் மாணக்கர்களை அன்பினால் நெறிப்படுத்தியதைப் போல்,

நான் ஆசிரியரானால், அன்பின் வழியிலேயே அறக்கருத்துகளைப் போதிப்பேன்.

- இன்சொல் கலந்த கண்டிப்புடன் செயல்பட்டு, மாணக்கர்களுக்கு மரியாதை கலந்த பயத்தை உண்டாக்குவேன். அதனால் மாணவர்கள் மறந்தும் தவறு புரியாத நிலை ஏற்படும்.
- மாணவர்கள் தவறு செய்யாமல் இருப்பதற்கும், தவறு செய்தால் அதைத் திருத்திக் கொள்ளும் வகையிலும் பல நடைமுறை வழக்கங்களை மென்மையாக எடுத்துக்கூறி புரிய வைப்பேன்.

---

**2. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.**

**எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் :**

**மணலில் எழுதுதல் :**

- பிள்ளைகள் முதலில் மணலில் எழுதிப் பழகுவார்கள். அதனால் எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.
- உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.

**கையெழுத்து :**

எழுத்துகள் ஒன்றோடொன்று படாமல் வரிகோணாமல் பழைய காலத்தில் எழுதி வந்தார்கள்.

**எழுத்தின் அளவு :**

இப்போது அச்சுப்புத்தகங்களின் அளவில் எவ்வளவு வேறுபாடுகள் உண்டோ அவ்வளவு பனையோலைச் சுவடிகளிலும் உண்டு.

**ஏடெழுதும் வழக்கம் :**

- ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துக்களாக இருபது முப்பது வரி வரையில் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன.
- நாம் இக்காலத்தில் காகிதத்தில் எழுதுவதைப் போன்ற வேகத்தோடும் ஏட்டில் எழுதுவதுண்டு.

**எழுத்தின் வடிவம் :**

- எழுத்துகளின் உருவங்கள் பல காலமாக மாறாமல் இருந்து வந்தன.
- புள்ளி, கால், கொம்பு, விலங்கு முதலியவை வரியெழுத்தின் உறுப்புகள்
- பெரியயோர்கள் பழக்கி வந்த பழக்கத்தால் பல நூறு வருஷங்களாகியும் எழுதும் வழக்கத்தில் பெரிய மாறுபாடுகள் ஏற்படவில்லை.

## அகநிலை வினாக்கள்

**1. உ.வே.சா. சிறு குறிப்பு வரைக**

**உ.வே.சாமிநாதர் :**

'தமிழ்த் தாத்தா' என அழைக்கப்பெற்ற உ.வே.சா இணையற்ற ஆசிரியர்; புலமைப் பெருங்கடல்; சிறந்த எழுத்தாளர்; பதிப்பாசிரியர்; பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடித் தேடி அச்சில் பதிப்பிக்க அரும்பாடுபட்டவர். 'மகாமகோபாத்தியாய', 'திராவிட வித்தியா பூஷணம்', தாஷிணாத்திய கலாநிதி' உள்ளிட்ட பட்டங்களைப் பெற்றுள்ளவர்; கும்பகோணம் அரசு கலைக்கல்லூரியிலும் சென்னை மாநிலக் கல்லூரியிலும் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியவர். 1932இல் சென்னைப் பல்கலைக்கழகத்தினால் 'டாக்டர்' பட்டம் பெற்ற பெருமைக்குரியவர். அவரது திருவுருவச் சிலை, சென்னை மாநிலக் கல்லூரியில் வங்கக்கடலை நோக்கி நிற்கும் வண்ணம் நிறுவப்பட்டுள்ளது. சென்னையில் திருவான்மியூரில் இவர் பெயரால் உ.வே.சா நூலகம் அமைந்துள்ளது.

2. **'உயிர் மீட்சி' என்ற இலக்கிய கட்டுரையில் எடுத்தாளப்பட்டுள்ள கல்வி சார்ந்த அக்காலச் சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்களை எடுத்தெழுதுக.**

**தமிழ்ச் சொற்கள் :**

- உபாத்தியாயர் ⟶ ஆசிரியர்
- வித்தியாரம்பம் ⟶ கல்வித் தொடக்கம்
- வித்தியாப்பியாசம் ⟶ கல்விப் பயிற்சி
- அகஷராப்பியாசம் ⟶ எழுத்துப் பயிற்சி
- கீழ்வாயிலக்கம் ⟶ பின்ன எண்ணின் கீழ்த்தொகை
- மேல்வாயிலக்கம் ⟶ பின்ன எண்ணின் மேல்தொகை
- குழிமாற்று ⟶ பெருக்கல் வாய்பாடு
- சீதாள பத்திரம் ⟶ தாழை மடல்
- நவத்வீபம் ⟶ வங்காளத்தில் உள்ள ஓர் ஊர்.

3. **அக்காலத்தில் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்ட நூல்களைப் பட்டியலிடுக**

**கற்பிக்கப்பட்ட நூல்கள் :**

- கதைப்பாடல்கள் மாணவர்களுக்குக் கற்பித்த நூற்களைப் பட்டியலிடுகின்றன.
- இவை பெரும்பாலும் நீதி நூல்கள். (ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி) நிகண்டுகளை மனப்பாடம் செய்யும் மாணவனுக்கு மதிப்பிருந்தது.
- வியாபாரம் செய்வதற்கும் கோவிலில் பணி செய்வதற்கும் ஏற்றவாறமைத்த கணிதமுறை கட்டாயமாகக் கற்பிக்கப்பட்டதைக் கதைப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.
- கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று, நெல் இலக்கம் முதலிய வாய்பாடுகளைக் கட்டாயம் மனப்பாடம் செய்ய வேண்டும்.
- இதற்காகப் பிரபவாதி சுவடி என்ற புத்தகம் கூட இருந்தது.

4. **'வித்தியாரம்பம்' - குறித்து எழுதுக**

**ஐந்தாம் பிராயம் :**

- முதன் முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.

**விசேட நாள் :**

- பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும்.

**வித்தியாரம்பம் :**

- ஏட்டின் மீது மஞ்சள் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள்.
- உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான்.

5. **ஓதற்பிரிவு பற்றித் தொல்காப்பியம் கூறுவது யாது?**

**ஓதற்பிரிவு :**

**கற்றல் - கற்பித்தல் - வாதம்புரிதல் :**

- இல்லறம் நடத்தும் காலத்தில் கூட, வேற்று நாட்டிற்குச் சென்று தம்முடைய கல்வியைக் கற்பித்தும் வாதம் புரிந்து வென்றும் தாம் முன்பு அறியாதவற்றைக் கற்றும் வந்தனர்.

**தொல்காப்பியம் :**

- இலக்கண நூலான தொல்காப்பியத்திலும் பிறவற்றிலும் இங்ஙனம் பிரியும் காலம் ஓதற்பிரிவென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

**கால எல்லை :**

- ஓதற்பிரிவின் கால எல்லை மூன்று வருடங்கள் என அந்நூல்கள் விதிக்கின்றன.

## IV. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **பண்டைக் காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.**

**பண்டைக் காலத்தில் கற்றல் - கற்பித்தல் முறைகள் :**

**முன்னுரை :**

- கல்வியும் அதன் நோக்கமும் கல்விக்கூட அமைப்பும் கற்பிக்கும் முறைகளும் காலந்தோறும் இலக்கியங்களில் தடங்களாகப் பதிவு பெற்றிருக்கின்றன.

**குருகுலம் :**

- நம் நாட்டில் மிகப் பழைய காலத்தில் உபாத்தியாயருடைய வீடே பள்ளிக்கூடமாக இருந்தது. அதைக் '**குருகுலம்**' என்பர்.
- கணக்காயரென்பது உபாத்தியாயருக்குப் பெயர்.

**மன்றங்கள் :**

- மன்றமென்பது, ஊர்தோறும் பொதுவான இடத்தில் ஒரு பெரிய மரத்தடியில் உள்ள திண்ணையே.
- அதுவே, பிறகு திண்ணைப் பள்ளிக்கூடமாக மாறியது.

**பள்ளிகள் :**

- மரத்தடியில் இருந்த பள்ளிக்கூடங்கள் நாளடைவில் சிறு குடிசைகளாக மாறின.
- பல இடங்களில் மடங்களில் பாடசாலைகள் உண்டாயின.
- பள்ளியென்னும் சொல் ஜைன மடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் பொதுவான பெயர்.
- எனவே, பாடசாலை, மடங்கள் என்ற வேறுபாடின்றி ஒன்றாகவே கருதப்பட்டதால் பள்ளியென்னும் பெயர் இரண்டிற்கும் பொதுவாக வழங்கப்பட்டது.

**வித்தியாரம்பம் :**

**அ) ஐந்தாம் பிராயம் :**

- முதன் முதலில் ஐந்தாம் பிராயத்தில் வித்தியாப்பியாசம் செய்யும் பொழுது தாய் தந்தையர் பிள்ளைகளை ஆசிரியர்களிடம் அடைக்கலமாகக் கொடுத்து வந்தார்கள்.

**ஆ) விசேட நாள் :**

- பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் வைக்கும் காலம் ஒரு பெரிய விசேட நாளாகக் கொண்டாடப் பெறும்.

**இ) வித்தியாரம்பம் :**

- ஏட்டின் மீது மஞ்சள் பூசிப் பூசித்துப் பையனிடம் கொடுத்து வாசிக்கச் செய்வார்கள்.
- உபாத்தியாயர் நெடுங்கணக்கைச் சொல்லிக் கொடுக்க, மாணாக்கன் அதனைப் பின்பற்றிச் சொல்லுவான்.

**எழுத்துப் பயிற்சி :**

- உபாத்தியாயர் முதலில் தரையில் எழுத அதன் மேல் பிள்ளைகள் விளம்புவார்கள். பிறகு தாமே எழுதி எழுதிப் பழகுவார்கள்.
- அதனால் அவர்களுடைய எழுத்துகள் வரிசையாகவும் நன்றாகவும் அமையும்.

**மனனப் பயிற்சி :**

- அக்காலத்தில் கற்பிக்கப்படும் நூல்களெல்லாம் பிள்ளைகளுக்கு மனனமாக இருக்கும் .

தமிழில்

• நிகண்டு • நன்னூல் • காரிகை • தண்டியலங்காரம் • நீதி நூல்கள்
→ முதலியன பாடமாக இருக்கும்.

கணிதத்தில்

- கீழ்வாயிலக்கம் • மேல்வாயிலக்கம் • குழிமாற்று • நெல் இலக்கம்

→ முதலிய வாய்பாடுகள் பாடமாக இருக்கும்

➢ 'தலைகீழ்ப் பாடம்' என்ற முறையும் அக்காலத்தில் காணப்பட்டது.

**ஞாபகத்தில் அமைய :**

➢ சிறுவர்கள் படிக்கும் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் என்பவை அகராதி வரிசையில் அமைந்தமை மாணாக்கர்களின் ஞாபகத்தில் அவை பதிவதன் பொருட்டேயாகும்.

➢ இவ்வாறே அந்தாதி முறையைக் கொண்டும், எதுகை மோனைகளைக் கொண்டும் செய்யுட்களை ஞாபகப்படுத்திக் கொள்வார்கள்.

**ஏடெழுதும் வழக்கம் :**

➢ ஒரு பக்கத்தில் மிக நுண்ணிய எழுத்துகள் எழுதுவதற்குரிய மெல்லிய எழுத்தாணிகள் இருந்தன.

➢ ஆசிரியர்கள் ஒவ்வொரு நாளும் அவர்களைத் தனித்தனியே ஏடுகளில் தாம் மேலே எழுதி அதைப் போல் எழுதி வரச் சொல்வார்கள்.

➢ இதற்குச் சட்டமென்று பெயர்.

**முடிவுரை :**

➢ முற்காலத்தில் கொடிய தண்டனைகளின்றி ஆசிரியர்கள் மாணாக்கர்களை அன்பினால் வழிப்படுத்தி வந்தனர். ஆசிரியர்கள் மீது இருந்த மரியாதை கலந்த பயம் மாணாக்கர்களை மறந்தும் கூட தவறுகளைப் புரியாத நிலையை ஏற்படுத்தியது.

## கற்பவை கற்றபின்

**1. 'மனனம் செய்தல்' - இன்றைய கல்வி நிலையிலும் குறிப்பிடத்தக்க ஒரு கூறு. இது பற்றிப் பத்து கருத்துகளை முன் வைக்க.**

➢ இன்றைய கல்வியில் 'மனனம்' என்பது ஒரு திறமையாகவே மதிப்பிடப்படுகிறது.

➢ மதிப்பெண் பெறுதல் ரீதியான பாணியில் மாணவர்களை வளரச் செய்கிறது.

➢ புரிந்து கொண்டு மனனம் செய்யாமல் புரியாதவற்றையுமே மனனம் செய்தல் தவறு

➢ மனனம் செய்வதால் வாழ்வியலோடு ஒப்பீடு செய்யும் தன்மை குறைகிறது.

➢ சிந்தனை வளம் குறைகிறது.

➢ பிறவற்றோடு தொடர்புபடுத்திப்பார்க்கும் ஆற்றல் குறைகிறது.

➢ புதிய கண்டுபிடிப்புகளுக்குப் புரியாமல் படிக்கும் மனனம் செய்யும் முறை தடையாகிறது.

➢ இன்றைய கல்வியில் மட்டுமல்ல அக்கால குருகுலக் கல்வியிலும் மனனம் முறை இருந்தது.

➢ அது தன்னைச் சுற்றியுள்ள சூழல்களைக் கூறி தாம் படிக்க வேண்டிய கருத்தை நினைவில் இருத்துவதாக இருந்தது.

➢ மனனம் செய்யும் திறமை மூலம் குறைந்த நேரத்தில் அதிக பாடங்களைப் படித்து விட முடியும்.

# 4. செய்யுள் : இதில் வெற்றி பெற

- சுரதா

## சொல்லும் பொருளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | விண் → வானம் | | 5. | விழுப்புண் → போர்க்களத்தில் பகை வீரர்களோடு போரிடும் போது ஏற்படுவது | |
| 2. | வெண்மதி → நிலவு | | 6. | கீர்த்தி → புகழ் | |
| 3. | செங்கதிர் → சூரியன் | | 7. | எருவினிலே → மாட்டின் சாணம் இடப்பட்ட வயலில் | |
| 4. | முகில் → மேகம் | | 8. | அந்தி → மாலை | |

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

#### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **சுரதா நடத்திய கவிதை இதழ்**
அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
**விடை: ஆ) காவியம்**

2. **'விண்வேறு ; விண்வெளியில் இயங்கு கின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;' - தொடர் தரும் முழுமையான பொருள்:**
அ) விண்ணும் வெண்மதியும் வேறு வேறு ஆ) விண்வெளியும் செங்கதிரும் வேறு வேறு
இ) வெண்மதியும் முகிலும் வேறு வேறு
ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு
**விடை: ஈ) விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் அனைத்தும் வேறு வேறு**

#### அகநிலை வினாக்கள்

1. **'இதில் வெற்றி பெற' - என்ற கவிதை இடம்பெற்றுள்ள சுரதாவின் கவிதைத் தொகுப்பு ________**
அ) தேன்மழை ஆ) துறைமுகம் இ) அமுதும் தேனும் ஈ) மங்கையர்க்கரசி
**விடை: ஆ) துறைமுகம்**

2. **'உவமைக் கவிஞர்' என்று சிறப்பிக்கப்படுவர் ________**
அ) இராசகோபாலன் ஆ) கனகசுப்புரத்தினம்
இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஈ) நாமக்கல் வெ.இராமலிங்கனார்
**விடை: அ) இராசகோபாலன்**

3. **இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலக்கிய ஏடுகளை நடத்தியவர் ________**
அ) சுரதா ஆ) பூமணி இ) உ.வே.சாமிநாதர் ஈ) சி.மணி
**விடை: அ) சுரதா**

4. **தேன்மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதம் தேனும் உள்ளிட்ட பல நூல்களை எழுதியவர் __________**
அ) சி.மணி ஆ) சுப்புரத்தினதாசன் இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்
**விடை: ஆ) சுப்புரத்தினதாசன்**

5. **தமிழக அரசின் கலைமாமாணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இராசராசன் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர் __________**
அ) சி.மணி ஆ) சுரதா இ) அப்துல் ரகுமான் ஈ) தாராபாரதி
**விடை: ஆ) சுரதா**

6. **பாவேந்தர் பாரதிதாசனாரின் தலைமாணக்கர் __________**
அ) வாணிதாசன் ஆ) தாராபாரதி இ) அப்துல்ரகுமான் ஈ) சுரதா
**விடை: ஈ) சுரதா**

7. **கூற்று 1 : தமிழக இயலிசை நாடக மன்றம் வழங்கிடும் கலைமாமணிப்பட்டம் பெற்றவர் சுரதா**
**கூற்று 2 : சுரதாவின் 'தேன்மழை' என்ற நூல் தமிழக அரசின் தமிழ்வளர்ச்சித்துறைப் பரிசைப் பெற்றுள்ளது**
அ) கூற்று 1 மட்டும் சரி ஆ) கூற்று 1, 2 இரண்டும் சரி
இ) கூற்று 2 மட்டும் சரி ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு
**விடை: ஆ) கூற்று 1, 2 இரண்டும் சரி**

8. **தமிழக அரசு வழங்கிய பாவேந்தர் நினைவுப் பரிசினைப் பெற்ற முதற் பாவலர் __________**
அ) பாரதியார் ஆ) சோம சுந்தர பாரதியார்
இ) சுரதா ஈ) வாணிதாசன் **விடை: இ) சுரதா**

9. **'இரட்டைக் கிளவிபோல் இணைந்தே வாழுங்கள்**
**பிரிந்தால் பொருளில்லை'**
**→ என்று மணமக்களை வாழ்த்திப்பாடி, உவமை மரபில் புதுமைகளைச் சேர்த்தவர் __________**
அ) சி. மணி ஆ) பாரதியார்
இ) பாவேந்தர் பாரதிதாசர் ஈ) சுரதா **விடை: ஈ) சுரதா**

10. **அடியின் கீழே அடியிருந்தால் __________ வரும்**
அ) அசை ஆ) சீர் இ) தொடை ஈ) தளை
**விடை: இ) தொடை**

11. **யாப்பில் வந்தடங்கும் வார்த்தைகளே __________ ஆகும்**
அ) வசனம் ஆ) உரைநடை இ) அடி ஈ) கவிதை
**விடை: ஈ) கவிதை**

12. **சீர்களில் காய்க்கும் காய்கள் __________, __________**
அ) கத்தரிக்காய், அவரைக்காய் ஆ) மாங்காய், தேங்காய்
இ) தேமாங்காய், புளிமாங்காய் ஈ) பாகற்காய், பூசணிக்காய்
**விடை: இ) தேமாங்காய், புளிமாங்காய்**

13. **நல்ல புலவர்களின் பாடல்களில் தங்குவது __________**
அ) கீர்த்தி ஆ) தளை இ) அடி ஈ) வசனம்
**விடை: அ) கீர்த்தி**

14. **வெள்ளைப்பாட்டின் இறுதிச்சீர் __________ தரும்**
அ) நாள் ஆ) மலர் இ) காசு ஈ) பிறப்பு
**விடை: இ) காசு**

15. **சிறந்த கேள்வி எழுப்புவதால் __________ விளையும்**
அ) பயிர்கள் ஆ) குளிர் இ) அறம் பொருள்கள் ஈ) ஆராய்ச்சி
**விடை: ஈ) ஆராய்ச்சி**

## II. குறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. வசனம், கவிதை வேறுபாடு தருக**

**வசனம் :**

எதுகை, மோனை, அடியளவு போன்ற எந்த வரையறையுமின்றி, பொருள் செறிந்த சொற்களைச் சேர்த்து அமைப்பது வசனம்.

**கவிதை :**

யாப்பின் உறுப்புகளை அசை, சீர், தளை, அடி, தொடை, பா இவையெல்லாம் அடங்கியுள்ள சொற்களைச் சேர்த்து அமைப்பது கவிதை.

### அகநிலை வினாக்கள்

**1. புலவர்களின் பாடல்களில் கீர்த்தி தங்கும் - எப்போது?**

**கீர்த்தி :**

யாப்பிலக்கணப் பிழையின்றி அமைந்த பாடல்களினால் புலவர்களுக்குப் புகழ் கிடைக்கும்.

**2. தமிழ்க்கவிதை இந்தநாளில் எவ்வாறு அமைய வேண்டும்?**

**தமிழ்க்கவிதை :**

சாமானிய மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான சொற்களால் தமிழ்க்கவிதை இந்த நாளில் அமைய வேண்டும்.

**3. நம் உள்ளத்தில் அறம் பொருள்கள் எப்போது விளையும்?**

**அறம்பொருள் விளையும் :**

நம் முன்னோர்களைப் போல, எழுத்துகளை எண்ணி அவற்றின் யாப்பிலக்கணங்களை நுட்பமாகக் கற்று வந்தால் நம் உள்ளத்தில் அறம்பொருள்கள் விளையும்.

## III. சிறு வினா

### அகநிலை வினாக்கள்

**1. உவமைக் கவிஞர் சுரதா பற்றி குறிப்பெழுதுக**

**விளக்கம் :**

- உவமைக்கவிஞர் என்று சிறப்பிக்கப்படும் ‘சுரதா’வின் இயற்பெயர் இராசகோபாலன்.
- அப்பெயரைப் பாரதிதாசன் மீது கொண்ட பற்றுதலால் சுப்புரத்தினதாசன் என்று மாற்றி, அதன் சுருக்கமான சுரதா என்னும் பெயரில் மரபுக் கவிதைகள் எழுதினார்.
- முழுக்க முழுக்கக் கவிதைகளையே கொண்ட காவியம் என்ற இதழை நடத்தியதோடு இலக்கியம், விண்மீன், ஊர்வலம் போன்ற இலக்கிய ஏடுகளையும் நடத்தியுள்ளார்.
- தேன்மழை, துறைமுகம், மங்கையர்க்கரசி, அமுதும் தேனும் உள்ளிட்ட பல நூல்களைப் படைத்துள்ளார்.
- இவர் தமிழக அரசின் கலைமாமணி விருது, பாரதிதாசன் விருது, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றவர்.

**2. எவையெல்லாம் வேறு வேறானவை என்று உவமைக்கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?**

**வேறு வேறானவை :**

- விண், விண்வெளியில் உள்ள வெண்மதி, செங்கதிர், முகில் வேறு வேறானவை.
- மண், மண்ணோடு கலந்திருக்கும் மணல், பனித்துளி, மழை வேறு வேறானவை.

- புண், விழுப்புண், புகழ், செல்வாக்கு வேறுவேறானவை
- கண், கல்வி, கவிதை, உரைநடை வேறுவேறானவை.

**3. விண்வேறு; விண்வெளியில் இயங்குகின்ற வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு ; மண்ணோடு கலந்திருக்கும் மணல் வேறு; பனித்துளியும் மழையும் வேறு**
**→ இப்பாடலில் அமைந்துள்ள தொடை நயங்களை எடுத்தெழுதுக**

**தொடை நயங்கள் :**

**(i) எதுகைத் தொடை :**

- அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒன்றி வருவது எதுகை.

**எ.கா :**

**அடி எதுகை**

- வி**ண்**வேறு - ம**ண்**வேறு

**சீர் எதுகை**

- வி**ண்**வேறு - வி**ண்**வெளி - வெ**ண்**மதி
- ம**ண்**வேறு - ம**ண்**ணோடு

**(ii) மோனைத் தொடை :**

சீர்தோறும் அல்லது அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை.

**எ.கா :**

**சீர் மோனை**

- **வி**ண்வேறு - **வி**ண்வெளி
- **ம**ண்வேறு - **ம**ண்ணோடு - **ம**ணல்வேறு

**(iii) இயைபுத் தொடை :**

அடிதோறும் கடைசி அசையோ, சீரோ, எழுத்தோ ஒன்றி வருவது இயைபுத் தொடை.

**எ.கா :**

- முகிலும் **வேறு**
- மழையும் **வேறு**

**(iv) முரண் தொடை :**

பாடலில் எதிர்ச்சொற்கள் பெற்று வருவது முரண் தொடை

**எ.கா :**

- விண் × மண்
- வெண்மதி × செங்கதிர்

www.kalviexpress.in

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.**

- சொற்களில் அமைந்துள்ள எழுத்துகளை அலகிட்டால் நேரசை, நிரையசை என்ற அசைகள் வரும்.
- அசைகளின் சேர்க்கையால் உருவாகும் சீர்களானது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என்று வரும்.
- நிலைமொழியின் ஈற்றுச்சீரையும் வருமொழியின் முதல்சீரையும் தொடர்புபடுத்தும் தளையானது நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத் தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாவஞ்சித்தளை என வரும்.

- தளைகள் தொடர்ந்து அமைந்தால் குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற ஐவகை அடிகளும் வரும்.
- அடிகளை அடுத்தடுத்து அமைத்துக் கொண்டால் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை என்ற தொடைகள் பயின்று வரும்.
- தொடைகள் நன்றாக அமையப் பெற்றால் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால்வகைப் பாக்கள் வரும்.

⟶ இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு தான் கவிதை எழுதத் தொடங்க வேண்டும்.

## V. இலக்கணக் குறிப்பு தருக.

### அகநிலை வினாக்கள்

1. வெண்மதி, செங்கதிர் ⟶ பண்புத் தொகை
2. வெண்மதியும் செங்கதிரும் முகிலும்
   பனித்துளியும் மழையும்
   கவிநடையும் உரைநடையும்
   தேமாவும் புளிமாவும் ⟶ எண்ணும்மை
3. இயங்குகின்ற, சேர்க்கின்ற,
   வார்க்கின்ற, பூத்த ⟶ பெயரெச்சம்
4. நல்ல புலவர்கள் ⟶ குறிப்பு பெயரெச்சம்
5. சொல்லுகின்றோம் ⟶ தன்மை பன்மை வினைமுற்று
6. சென்றே ⟶ ஏகார விகாரம்
7. காய்க்கும், காணும் ⟶ படர்க்கை ஒருமை வினைமுற்று
8. கல்விக் கண் ⟶ உருவகம்
9. கற்றார் ⟶ வினையாலணையும் பெயர்
10. எதுகை மோனை ⟶ உம்மைத்தொகை

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### அகநிலை வினாக்கள்

1) **இயங்குகின்ற** ⟶ இயங்கு + கின்று + அ
   - இயங்கு ⟶ பகுதி
   - கின்று ⟶ நிகழ்கால இடைநிலை
   - அ ⟶ பெயரெச்ச விகுதி

2) **சொல்லுகின்றோம்** ⟶ சொல்லு + கின்று + ஓம்
   - சொல்லு ⟶ பகுதி
   - இன்று ⟶ நிகழ்கால இடைநிலை
   - ஓம் ⟶ தன்மை பன்மை வினைமுற்று விகுதி

3) **தங்கும்** ⟶ தங்கு+ உம்
   - தங்கு ⟶ பகுதி
   - உம் ⟶ பெயரெச்ச விகுதி

4) **கற்று** ⟶ கல்(ற்) + ற் + உ
   - கல் ⟶ பகுதி;-‘ல்’ ‘ற்’ ⟶ஆனது விகாரம்
   - ற் ⟶ இறந்த கால இடைநிலை
   - உ ⟶ வினையெச்ச விகுதி

5) **மிஞ்சும்** ⟶ மிஞ்சு + உம்
மிஞ்சு ⟶ பகுதி
உம் ⟶ பெயரெச்ச விகுதி

## VII. புணர்ச்சி விதி தருக.

### அகநிலை வினாக்கள்

1) **வெண்மதி** ⟶ வெண்மை + மதி
i) 'ஈறுபோதல்' ⟶ என்ற விதிப்படி,
'மை' கெட்டது ⟶ வெண்~~மை~~ ⟹
வெண்மதி என்று புணர்ந்தது

2) **செங்கதிர்** ⟶ செம்மை + கதிர்
i) ஈறுபோதல்
⟶ என்ற விதிப்படி 'மை' நீங்கியது
⟶ செம்~~மை~~
⟶ செம் + கதிர்
ii) 'முன்னின்ற மெய் திரிதல்'
⟶ என்ற விதிப்படி
⟶ 'ம்' - 'ங்' ⟶ ஆனது
⟶ செங்கதிர் என்று புணர்ந்தது

3) **கல்விக்கண்** ⟶ கல்வி + கண்
i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி
⟶ 'க்' மிகுந்தது ⟹ கல்விக்கண்
என்று புணர்ந்தது

4) **அரும்பென்றும்** ⟶ அரும்பு + என்றும்
i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'
⟶ என்ற விதிப்படி
⟶ 'உ' நீங்கியது
⟶ பு = ப் + ~~உ~~
⟶ அரும்ப் + என்றும்
ii) 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ப் + எ = 'பெ' ஆனது
⟶ அரும்பென்றும்
⟶ என்று புணர்ந்தது

5) **கவியெழுத** ⟶ கவி + எழுத
i) 'இ ஈ ஐ வழி யவ்வும்'
⟶ என்ற விதிப்படி
⟶ 'ய்' - உடம்படுமெய் தோன்றியது
⟶ கவி + ய் + எழுத
ii) 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ய் + எ = 'யெ' ⟶ ஆனது
⟶ கவியெழுத ⟹ என்று புணர்ந்தது

6) **புகழெங்கே** ⟶ புகழ் + எங்கே
i) 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'
⟶ என்ற விதிப்படி
⟶ ழ்+ எ = 'ழெ' ஆனது
⟶ புகழெங்கே ⟹ என்று புணர்ந்தது

7) **சிறப்பெங்கே** ⟶ சிறப்பு + எங்கே
i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'
⟶ என்ற விதிப்படி
⟶ 'உ' - நீங்கியது
⟶ பு = ப் + ~~உ~~
⟶ சிறப் + ப் + எங்கே
ii) 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ப் + எ = 'பெ' ⟶ ஆனது
⟶ சிறப்பெங்கே
⟶ என்று புணர்ந்தது

www.kalviexpress.in

## கற்பவை கற்றபின்

**1. பேச்சு வழக்கில் பயன்படுத்துகின்ற உவமைச்சொற்களைத் தொகுக்க. இவை கருத்தை வெளிப்படுத்துவதற்கு எவ்வளவு பயன்படுகின்றன என்பது குறித்து குழுவாக உரையாடுக.**

மணிமேகலை : நாம்பேச்சுவழக்கில்சிலநேரங்களில்உவமைச்சொற்களைப்பயன்படுத்துகிறோமே! அவை எதற்குப் பயன்படுகின்றன என்று தெரியுமா கண்ணகி.

கண்ணகி : ஆம் தெரியும். ஒரு செய்தியைத் தெரிவிக்க மிக நீண்ட தொடரைப் பயன்படுத்திப் புரிய வைப்பதற்குப்பதில் உவமைச் சொற்களைப் பயன்படுத்துகிறோம்.

தத்தை : ஓ ஓ.... சுருக்கமாகவோ, குறியீடாகவோ பயன்படுத்துவதற்கு உதவுமோ?

மணிமேகலை : ஆம்! சரியாகச் சொன்னாய்!

கண்ணகி : நீண்ட நாள் காத்திருந்து கிடைக்காமல் போனதற்கு 'இலவு காத்த கிளி போல' என்போம்.

தத்தை : பொய்யாக நாம் அழுவது போல் நடிப்பதற்கு 'நீலிக் கண்ணீர்' என்றும் 'முதலைக் கண்ணீர்' என்றும் கூறுவர்.

செய்யுள்

# 4. இடையீடு

- சி.மணி

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | புழுங்குதல் | → | கோபத்தால் வெம்புதல் |
| 2. | பொறி | → | எலிகளைப் பிடிக்க உதவும் கூண்டு |
| 3. | வால்மீன் (வால் + மீன்) | → | வால் நட்சத்திரம் / தூமகேது / வால்வெள்ளி |
| 4. | கனி | → | பழம் |

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

**1. 'இடையீடு' - என்ற கவிதை இடம்பெற்றுள்ள சி.மணியின் கவிதைத் தொகுப்பு ____________**

அ) நடை ஆ) இதுவரை இ) வரும்போகும் ஈ) யாப்பும் கவிதையும்

**விடை: ஆ) இதுவரை**

**2. 1959 ஆம் ஆண்டு முதல் சி.மணியின் கவிதைகள் தொடர்ந்து வெளிவந்த இதழ் ____________**

அ) எழுத்து ஆ) நடை இ) இதுவரை ஈ) ஒளிச்சேர்க்கை

**விடை: அ) எழுத்து**

3. (i) **'நடை' என்னும் சிறுகதை நடத்தியவர் சி.மணி**
(ii) **'யாப்பும் கவிதையும்' என்ற நூலும், 'வரும் போகும்', 'ஒளிச்சேர்க்கை' ஆகிய கவிதைத் தொகுப்புகளும் சி. மணியின் படைப்புகள்**

அ) (i), (ii) இரண்டும் தவறு ஆ) (i) மட்டும் தவறு
இ) (i), (ii) இரண்டும் சரி ஈ) (ii) மட்டும் சரி

**விடை: இ) (i), (ii) இரண்டும் சரி**

4. **'தாவோ தே ஜிங்' என்ற சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழி பெயர்த்தவர் ___________**

அ) சி.மணி ஆ) சுரதா
இ) உ.வே.சாமிநாதர் ஈ) இராமலிங்க அடிகள் **விடை: அ) சி.மணி**

5. **வே. மாலி, செல்வம் என்ற புனைபெயர்களில் நூல்களை எழுதியவர் ___________**

அ) பூமணி ஆ) தாராபாரதி இ) சி.மணி ஈ) தமிழ்நதி

**விடை: இ) சி.மணி**

6. **சொல்ல விரும்பியதெல்லாம் ___________ வருவதில்லை**

அ) சொல்லில் ஆ) பேச்சில் இ) உணர்வில் ஈ) வாழ்வில்

**விடை: அ) சொல்லில்**

7. **எலிக்குப் பொறி வைத்தால் ___________விழுவதுண்டு**

அ) புலியும் ஆ) பூனையும் இ) விரலும் ஈ) புறாவும்

**விடை: இ) விரலும்**

8. **வானுக்கு விளக்கடித்தது ___________**

அ) நிலவு ஆ) செங்கதிர் இ) வால்மீன் ஈ) மின்னல்

**விடை: இ) வால்மீன்**

9. **'சுவைப்போன் பசியை,**
**சுவைமுடிச்சைச் சார்ந்தது'**
**⟶ இதில் 'சுவைப்போன்' என்று குறிப்பிடப்பட்டவன்**

அ) அரசன் ஆ) ஆசிரியர் இ) கவிதை எழுதுபவன் ஈ) வாசகன்

**விடை: ஈ) வாசகன்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **இடையீடு - எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?**

**இடையீடு :**

சி.மணியின் 'இடையீடு' என்ற கவிதையானது, கவிதை பற்றிய
- எண்ணம்
- வெளியீடு
- கேட்டல்

⟶ஆகியவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது

## அகநிலை வினாக்கள்

**1. கவிதை சார்ந்த எண்ணம் பற்றி சி.மணி குறியீடாகக் குறிப்பது எதனை?**

**கவிதை சார்ந்த எண்ணம் :**

- கவிஞன் தான் சொல்ல விரும்பிய எல்லாவற்றையும் தம் கவிதை குறிப்பிடுவதில்லை.
- கவிதை பற்றிய எண்ணத்தில் பல மாற்றங்களும் பல ஏமாற்றங்களும் நிகழ்வதுண்டு.

**2. கவிதை வெளிப்படுத்தும் வெளியீடு குறித்து சி.மணி குறிப்பிடுவது எது?**

**வெளியீடு :**

- கவிஞன் தான் வெளிப்படுத்தக் கருதிய பொருளைக் கவிதை உணர்த்தாமலும் போகலாம். வேறொரு பொருளையும் அது உணர்த்தலாம்.
- கவிஞனின் மனக்குறிப்பை வெளியிடும் கவிதையானது சில நேரங்களில் வெற்றியையும் தோல்வியையும் கூடச் சந்திக்கலாம்.

**3. கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை குறித்து சி.மணி குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

**வாசகன் - கேட்டல் :**

- கவிஞனின் கருத்தை வாசகன் புரிந்து கொள்வதிலும் சில நேரம் சிக்கல் ஏற்பட்டு விடும்.
- கவிதையின் இனிமையானது கவிதையில் மட்டுமல்ல; அதை உள்வாங்கும் வாசகனின் ஆர்வத்தையும், இரசிக்கும் தன்மையையும் சார்ந்தது.

**4. சி.பழனிச்சாமி என்ற சி.மணி பெற்றுள்ள விருதுகள் யாவை?**

**விருதுகள் :**

- விளக்கு இலக்கிய விருது
- தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக விருது
- ஆசான் கவிதை விருது
- கவிஞர் சிற்பி விருது

**5. 'இடையீடு' என்ற கவிதை எதைக் கொண்டு அமைந்துள்ளது?**

**'இடையீடு' :**

- 'இடையீடு' என்ற கவிதையானது குறியீடுகளைக் கொண்டு அமைந்துள்ளது.
- அதனால் பன்முகப் பொருள் கொண்டது.

## III. சிறு வினா

## புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'மூன்றான காலம் போல் ஒன்று' - எவை? ஏன்? விளக்குக.**

**'மூன்றான காலம் போல் ஒன்று' :**

- எண்ணம் • வெளியீடு • கேட்டல்

⟶ ஆகியவற்றை குறியீடாகக் குறிப்பிடுகிறது

**ஏனென்றால்.....**

- கவிஞரின் கவிதை சார்ந்த எண்ணம்,
- கவிதை வெளிப்படுத்தும் மனக்கருத்தின் வெளியீடு
- எழுதப்பட்ட கவிதையை உள்வாங்கும் வாசகனின் மனநிலை

  ⟶ ஆகிய இம்மூன்றும் எப்போதும் ஒன்றல்ல.
- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்கள் போல, எண்ணம், வெளியீடு, கேட்டல் ஆகியன கவிதை பற்றிய குறியீடு ஆகும்.



www.kalviexpress.in

- மூன்று வகை என்பதில் மட்டுமே ஒற்றுமை காணப்படுகிறது.
- மூன்று காலங்களும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் வெவ்வேறு பொருளை உணர்த்துவதைப் போல, இம்மூன்று குறியீடுகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் வெவ்வேறு பொருளையும் உணர்த்துகின்றன.

## அகநிலை வினாக்கள்

**1. சி.பழனிச்சாமி என்ற சி.மணியினைப் பற்றிக் குறிப்பெழுதுக**

**சி. மணி :**

- 1959 ஆம் ஆண்டு முதல் **'எழுத்து'** இதழில் சி.மணியின் கவிதைகள் தொடர்ந்து வெளிவந்தன.
- இவர் **'நடை'** என்னும் சிற்றிதழையும் நடத்தியவர். இவர் படைத்த இலக்கணம் பற்றிய **'யாப்பும் கவிதையும்'** என்னும் நூலும். **'வரும் போகும்' 'ஒளிச்சேர்க்கை'** ஆகிய கவிதைத் தொகுப்புகளும் குறிப்பிடத்தக்கவை.
- ஆங்கிலப்பேராசிரியரான இவர் **'தாவோ தேஜிங்'** எனும் சீன மெய்யியல் நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- இவர் புதுக்கவிதையில் அங்கதத்தை மிகுதியாகப் பயன்படுத்தியவர்.
- இருத்தலின் வெறுமையை சிரிப்பும் கசப்புமாகச் சொன்னவர்.
- **விளக்கு இலக்கிய விருது, தஞ்சைத் தமிழ் பல்கலைக்ககழக விருது, ஆசான் கவிதை விருது, கவிஞர் சிற்பி விருது** ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.
- **வே.மாலி, செல்வம்** என்ற புனைபெயர்களிலும் எழுதியுள்ளார்.

**2. இடையீடு கவிதையின் மூலம் சி.மணி உணர்த்த விரும்பும் குறியீடுகள் யாவை?**

**இடையீடு கவிதை உணர்த்தும் குறியீடுகள் :**

(i) **கவிதை சார்ந்த எண்ணம்**
- கவிஞன் தான் சொல்ல விரும்பிய எல்லாவற்றையும் தம் கவிதை குறிப்பிடுவதில்லை.
- கவிதை பற்றிய எண்ணத்தில் பல மாற்றங்களும் பல ஏமாற்றங்களும் நிகழ்வதுண்டு.

(ii) **கவிதையின் வெளியீடு**
- கவிஞன் தான் வெளிப்படுத்தக் கருதிய பொருள்களைக் கவிதை உணர்த்தாமலும் போகலாம். வேறொரு பொருளையும் அது உணர்த்தலாம்.
- கவிஞனின் மனக்குறிப்பை வெளியிடும் கவிதையானது சில நேரங்களில் வெற்றியையும் தோல்வியையும் கூடச் சந்திக்கலாம்.

(iii) **வாசகனின் மனநிலை**
- கவிஞனின் கருத்தை வாசகன் புரிந்து கொள்வதிலும் சில நேரம் சிக்கல் ஏற்பட்டு விடும்.
- கவிதையின் இனிமையானது கவிதையில் மட்டுமல்ல; அதை உள்வாங்கும் வாசகனின் ஆர்வத்தையும், இரசிக்கும் தன்மையையும் சார்ந்தது.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

## அகநிலை வினாக்கள்

1. வரைய → பெயரெச்சம்
2. பொறி வைத்தால் → இரண்டாம் வேற்றுமைத் தொகை
3. நீர் தேடி → இரண்டாம் வேற்றுமைத் தொகை
4. கேட்டல் → தொழிற்பெயர்

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### அகநிலை வினாக்கள்

**1) தவறிய** → தவறு + இ(ன்) + ய் + அ

தவறு → பகுதி

இ(ன்) → இறந்த கால இடைநிலை, 'ன்' - புணர்ந்து கெட்டது விகாரம்

ய் → உடம்படுமெய்சந்தி

அ → பெயரெச்ச விகுதி

**2) சுவைப்போன்** → சுவை + ப் + ப் + ஓன்

சுவை → பகுதி

ப் → சந்தி

ப் → எதிர்கால இடைநிலை

ஓன் → படர்க்கை ஒருமை வினைமுற்று விகுதி

**3) கேட்டல்** → கேள்(ட்) + ட் + அல்

கேள் → பகுதி; ள் - 'ட்' → ஆனது விகாரம்

ட் → சாரியை

அல் → தொழிற்பெயர் விகுதி

**4) வரைய** → வரை + ய் + அ

வரை → பகுதி

ய் → உடம்படு மெய் சந்தி

அ → பெயரெச்ச விகுதி

**5) விரும்பிய** → விரும்பு + இ(ன்) + ய் + அ

விரும்பு → பகுதி

இ(ன்) → இறந்த கால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது விகாரம்

ய் → உடம்படுமெய் சந்தி

அ → பெயரெச்ச விகுதி

## IV. புணர்ச்சி விதி தருக.

### அகநிலை வினாக்கள்

**1) பலவுண்டு** → பல + உண்டு

i) 'ஏனைய உயிர்வழி வவ்வும்' → என்ற விதிப்படி

→ 'வ்' - உடம்படுமெய் தோன்றியது

→ பல + வ் + உண்டு

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி

→ வ் + உ = 'வு' ஆனது

→ பலவுண்டு

→ என்று புணர்ந்தது

**2) விழுவதுண்டு** → விழுவது + உண்டு

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' → என்ற விதிப்படி,

→ 'உ' நீங்கியது

→ து = த் + ~~உ~~

→ விழுவ + த் + உண்டு

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி

→ த் + உ = 'து'

→ விழுவதுண்டு

→ என்று புணர்ந்தது

3) **விளக்கடிக்கும்** ⟶ விளக்கு + அடிக்கும்

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி,

⟶ 'உ' நீங்கியது

⟶ கு = க் + உ̸

⟶ விளக் + க் + அடிக்கும்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ க் + அ = 'க' ⟶ ஆனது

⟶ விளக்கடிக்கும்

⟶ என்று புணர்ந்தது

---

4) **மட்டுமில்லை** ⟶ மட்டும் + இல்லை

i) 'உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ ம் + இ = 'மி' ஆனது

⟶ மட்டுமில்லை ⟹ என்று புணர்ந்தது

---

5) **ஒன்றல்ல** ⟶ ஒன்று + அல்ல

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி,

⟶ 'உ' நீங்கியது

⟶ று = ற் + உ̸

⟶ ஒன்ற் + அல்ல

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ ற் + அ = 'ற' ⟶ ஆனது

⟶ ஒன்றல்ல

⟶ என்று புணர்ந்தது

---

6) **ஒன்றறென்றால்** ⟶ ஒன்று + என்றால்

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி,

⟶ 'உ' நீங்கியது

⟶ று = ற் + உ̸

⟶ ஒன் + ற் + என்றால்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி

⟶ ற் + அ = 'றெ' ⟶ ஆனது

⟶ ஒன்றெென்றால்

⟶ என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

1. **இதழ்களில் வெளிவந்துள்ள கவிதைகளில் இரண்டினைத் திரட்டி வகுப்பறையில் படித்துக் காட்டி அவை கவிஞனின் மனநிலையை எவ்விதம் வெளிப்படுத்துகின்றன என்பதை விளக்கவும்.**

**பக்தி என்னும் முக்தி**

உள்ளம் என்னும் சிப்பியில்
பக்தி எனும் ஒருதுளி விழுகையில்தான்
அது இறைவனை அலங்கரிக்கும்
நல் முத்தாகிறது.
முக்திக்கும் அதுவே வித்தாகிறது.

– "இறை நம்பிக்கை" என்ற கவிஞனின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.

**இதயம்**

பாலைவனத்தில் இருப்பதனால்
தாகம் தவிர்க்க
ஒட்டகத்திற்கு மூன்று இரைப்பைகளாம்
ஒன்றில் தீர்ந்தால் இன்னொன்றிலிருந்து
எடுத்துக் கொள்ளுமாம்.
இறைவா! நீ ஒரு கஞ்சன்
எனக்கு மட்டும் ஒரு இதயமாக
என் தாகத்தை தீர்க்க இன்னும் சில
இதயங்களைக் கொடு!

– இதில் கவிஞனின் அறிவியல் அறிவையும், வாழ்க்கையின் தத்துவத்தையும் விளக்கும் மனநிலையையும் காணலாம்.

**செய்யுள்**

# 4. புறநானூறு

**- ஔவையார்**

## சொல்லும் பொருளும்

| | |
|---|---|
| 1. வாயிலோயே → வாயில் காப்போனே | 12. வரிசைக்கு வருந்தும் → கவிதையின் சிறப்பறிந்து பரிசளிக்க வேண்டுமே என நினைத்து வருந்தும் தன்மை |
| 2. வள்ளியோர் → வள்ளல்கள் | 13. பரிசல் வாழ்க்கை → பரிசினை எதிர்பார்த்து வாழும் புலவர்களின் வாழ்நிலை |
| 3. வயங்குமொழி → விளங்கும் சொற்கள் | 14. கடுமான் → ஓடும் குதிரையை உடைய தோன்றல் |
| 4. வித்தி → விதைத்து | 15. மாய்ந்தென → மாய்ந்து விடவில்லை |

www.kalviexpress.in www.kalviexpress.in



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | உள்ளியது | → | நினைத்தது | 16. | சுருக்கினெம் | → | சுருக்கிட்டு கட்டிக் கொண்டோம் |
| 6. | உரன் | → | வலிமை | 17. | மரங்கொல் | → | மரம் வெட்டும் |
| 7. | வறுந்தலை | → | வெறுமையான இடம் | 18. | கைவல் | → | தொழிலில் வல்ல |
| 8. | காவினெம் | → | கட்டிக்கொள்ளுதல் | 19. | சிறாஅர் | → | பிள்ளைகள் |
| 9. | கலன் | → | யாழ் | 20. | காட்டகத்து | → | காட்டுக்குள் |
| 10. | கலப்பை | → | கருவிகளைவைக்கும்பை | 21. | செலினும் | → | சென்றாலும் |
| 11. | மழு | → | கோடரி | 22. | சோறு | → | உணவு |

# நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**10. ‘காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை’ - இத்தொடரின் ‘கலன்’ உணர்த்தும் பொருள் ________**

அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

**விடை: இ) இசைக்கருவி**

### அகநிலை வினாக்கள்

**1. ஔவையாரின் பாடலுக்குப் பரிசில் தராமல் காலம் நீட்டித்தவர் ________**

அ) பாரி ஆ) பேகன் இ) அதியமான் ஈ) ஓரி

**விடை: இ) அதியமான்**

**2. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ________**

அ) புறநானூறு ஆ) இடையீடு இ) இதில் வெற்றிபெற ஈ) கம்பராமாயணம்

**விடை: அ) புறநானூறு**

**3. புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்படும் நூல் ________**

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) பரிபாடல்

**விடை: ஆ) புறநானூறு**

**4. அதியமானின் பகைமன்னனிடம் தூது சென்றவர் ________**

அ) இளவெயினி ஆ) வெள்ளி வீதியார் இ) ஔவையார் ஈ) காக்கைபாடினி

**விடை: இ) ஔவையார்**

**5. அதியமானின் அரசவைப் புலவராக இருந்தவர் ________**

அ) ஔவையார் ஆ) காக்கைபாடினி இ) வெள்ளி வீதியார் ஈ) குறமகள் இளவெயினி

**விடை: அ) ஔவையார்**

**6. புறநானூற்றில் ஔவையார் பாடிய பாடல்கள் ________**

அ) 33 ஆ) 4 இ) 15 ஈ) 7

**விடை: அ) 33**



www.kalviexpress.in www.kalviexpress.in

7. ஔவையாரின் சங்கப்பாடல்களின் மொத்தம் ________

அ) 33 ஆ) 59 இ) 15 ஈ) 7 **விடை: அ) 59**

8. உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளம் உள்ளவர்கள் ________

அ) அரசர்கள் ஆ) நாடகக் கலைஞர்கள்

இ) வள்ளல்கள் ஈ) புலவர்கள் **விடை: ஈ) புலவர்கள்**

9. வள்ளியோர் செவி முதல் வயங்கு மொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
→ இதில் அமைந்துள்ள நயங்கள் ________

அ) அடிமோனை, சீர் எதுகை ஆ) முரண், அந்தாதி

இ) இயைபு, முரண் ஈ) அடி எதுகை, சீர் மோனை

**விடை: ஈ) அடி எதுகை, சீர் மோனை**

10. கடையெழு வள்ளல்களுள் ஒருவன் ________

அ) நெடுஞ்சேரலாதன் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்

இ) அதியமான் நெடுமான் அஞ்சி ஈ) கர்ணன்

**விடை: இ) அதியமான் நெடுமான் அஞ்சி**

11. ஔவையின் புறநானூற்றுப் பாடலில் பரிசிலர்க்குக் கூறப்படும் உவமை________

அ) தச்சன் ஆ) சிறுவர் இ) கல்வி ஈ) புலவர்

**விடை: ஆ) சிறுவர்**

12. போகும் திசைக்குக் காட்டினையும் உணவுக்குக் காட்டில் உள்ள மரங்களையும் உவமை காட்டிப் பாடியவர் ________

அ) கபிலர் ஆ) பரணர் இ) நக்கீரர் ஈ) ஔவையார்

**விடை: ஈ) ஔவையார்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' - யார்க்கு?**

**எத்திசையிலும் உணவு கிடைக்கும் :**

கலைத்தொழில் வல்ல புலவர்கள் இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு தவறாமல் கிடைக்கும்.

### அகநிலை வினாக்கள்

1. **பாடாண் திணை - குறிப்பு வரைக**

**பாடாண் திணை :**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

2. **பரிசில் துறை பற்றி எழுதுக**

**பரிசில் துறை :**

கல்வியில் வல்ல புலவர்கள் பரிசு வேண்டி மன்னர்கள் மற்றும் வள்ளல்களின் வாயிலில் நிற்பது பற்றிக் கூறுவது பரிசில் துறையாகும்.



www.kalviexpress.in

**3. புறநானூற்றுப் பாடல்களில் ஔவையார் எடுத்துக்காட்டும் உவமைகள் யாவை?**

**உவமைகள் :**

- பரிசிலர்க்குச் சிறுவரும்
- கல்விக்குக் கோடரியும்
- போகும் திசைக்குக் காடும்
- உணவுக்குக் காட்டில் உள்ள மரங்களும்

⟶ உவமைகளாகும்

---

**4. 'எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே'**
**⟶ இப்பாடலடிகள் யார் யாரிடம் கூறியது?**

'எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே'

⟶ இப்பாடலடிகள் ஔவையார், அதியமானின் வாயில் காப்போனிடம் கூறியது.

---

**5. சங்ககாலத்தின் காலக்கண்ணாடியாக விளங்குவது புறநானூறு ஏன்?**

**காலக் கண்ணாடி :**

புறநானூறானது, சங்ககாலத் தமிழரின் போர், வீரம், நாகரீகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை விளக்கமாக எடுத்துக்காட்டுவதால் அக்காலத்தின் காலக்கண்ணாடியாகத் திகழ்கிறது.

## III. சிறு வினா

### புத்தக புறநிலை வினாக்கள்

**1. வாயிலோயே எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.**

**பாடாண் திணைக்கு உரியது :**

- வாயிலோயே எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில், ஔவையார் வாயிற்காவலனிடம், புலவர்களாகிய எங்களைப் போன்றவர்களின் வாழ்நிலையானது, வள்ளல்களை அணுகி அவர் தம் செவிகளிலே அறிவார்ந்த சொற்களைத் துணிச்சலுடன் விதைத்துத் தாம் எண்ணியதை முடிக்கும் வலிமையுடையது.
- இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்து விடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகவில்லை. எங்களை அறிந்து பரிசில் தரப் பல பேர் உள்ளனர்.

⟶ இவ்வாறு கூறுவதிலிருந்து புலவர்களின் அறிவு வலிமையும், வள்ளல்களின் கொடைத்தன்மையும் வெளிப்படுவதால் இப்பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை அறியலாம்.

### அகநிலை வினாக்கள்

**1. புறநானூறு - பற்றிக் குறிப்பு வரைக**

**புறநானூறு :**

புறநானூறு, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது புறப்பொருள் பற்றியது; புறம், புறப்பாட்டு எனவும் அழைக்கப்படுகிறது. தமிழரின் போர், வீரம், நாகரீகம், பண்பாடு, நெறிப்பட்ட வாழ்க்கை முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைக்கிறது.

---

**2. ஔவையார் - பற்றிக் குறிப்பெழுதுக**

**ஔவையார் :**

அதியமானிடம் நட்பு பாராட்டிய ஔவை அவருக்காகத் தூது சென்றவர்; அரசவைப் புலவராக இருந்து அரும்பணியாற்றியவர்; இவர் பாடியதாக அகநானூற்றில் 4, குறுந்தொகையில் 15, நற்றிணையில் 7, புறநானூற்றில் 33 என 59 பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

www.kalviexpress.in www.kalviexpress.in


**3. பாடாண் திணையைச் சான்று காட்டி விளக்குக.**

**பாடாண் திணை :**

ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**எ.கா:**

*'எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே'*

**நூல்** : புறநானூறு

**ஆசிரியர் :** ஔவையார்

**பாடல் விளக்கம்**

பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே! விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ? (அவனை நம்பித்தான் இவ்வுலகில் வறுமை நிலையில் உள்ளோர் வாழ்கின்றனர் என்னும் நினைப்புப் போலும்) இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகவில்லை (எங்களை அறிந்து பரிசில் தரப் பல பேர் உள்ளனர்.) ஆகவே, எம் யாழினை எடுத்துக் கொண்டோம்; கருவிப்பையையும் சுருக்கிட்டுக் கட்டிக் கொண்டோம். மரம் வெட்டும் தச்சனின் தொழில் வல்ல பிள்ளைகள், கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு ஏதாவது ஒரு மரம் கிடைக்காமலா போகும்? அது போல, கலைத்தொழில் வல்ல எங்களுக்கும் இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிட்டும்.

**திணைப் பொருத்தம் :**

இப்பாடலில் நினைத்ததைச் சாதிக்கும் புலவர்களின் வலிமையும், வள்ளல்களின் கொடைத்தன்மையும் வெளிப்படுவதால் பாடாண் திணைக்குப் பொருத்தமாயிற்று.

---

**2. பரிசில் துறையைச் சான்று காட்டி விளக்குக.**

**பரிசில் துறை :**

கல்வியில் வல்ல புலவர்கள் பரிசு வேண்டி மன்னர்கள் மற்றும் வள்ளல்களின் வாயிலில் நிற்பது பற்றிக் கூறுவது பரிசில் துறையாகும்.

**எ.கா:**

*'எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே'*

**நூல்** : புறநானூறு

**ஆசிரியர் :** ஔவையார்

**பாடல் விளக்கம்**

பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே! விரைந்து ஓடும் குதிரையைக் கொண்ட நெடுமான் அஞ்சி, தன்னுடைய தகுதியை அறியானோ? (அவனை நம்பித்தான் இவ்வுலகில் வறுமை நிலையில் உள்ளோர் வாழ்கின்றனர் என்னும் நினைப்புப் போலும்) இவ்வுலகில், அறிவும் புகழும் உடையோர் இன்னும் மாய்ந்துவிடவில்லை. இந்த உலகமும் வெற்றிடமாகவில்லை. (எங்களை அறிந்து பரிசில் தரப் பல பேர் உள்ளனர்.) ஆகவே, எம் யாழினை எடுத்துக் கொண்டோம்; கருவிப்பையையும் சுருக்கிட்டுக் கட்டிக் கொண்டோம். மரம் வெட்டும் தச்சனின் தொழில் வல்ல பிள்ளைகள், கோடரியுடன் காட்டுக்குச் சென்றால் அவர்கள் வெட்டுவதற்கு ஏதாவது ஒரு மரம் கிடைக்காமலா போகும்? அது போல, கலைத்தொழில் வல்ல எங்களுக்கும் இவ்வுலகில் எத்திசையில் சென்றாலும் அத்திசையில் உணவு, தவறாமல் கிட்டும்.

**துறைப் பொருத்தம் :**

பரிசிலர்க்கு வாயிலை அடைக்காத காவலனே! என்று ஔவையார் வாயிற்காவலனை விளித்துக் கூறுவது பரிசில் துறைக்குப் பொருந்தி வந்துள்ளது.


www.kalviexpress.in www.kalviexpress.in

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. வயங்குமொழி → வினைத்தொகை
2. அடையா → ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. அறிவும் புகழும் → எண்ணும்மை
4. சிறாஅர் → இசைநிறை அளபெடை

### அகநிலை வினாக்கள்

1. வாயிலோயே! → விளித்தொடர்
2. உரனுடை → இரண்டாம் வேற்றுமைத் தொகை
3. உலகமும் → முற்றும்மை
4. காட்டகத்து → ஐந்தாம் வேற்றுமைத் தொகை
5. வித்தி → வினையெச்சம்

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக

### அகநிலை வினாக்கள்

1) **வித்தி** → வித்து + இ

வித்து → பகுதி

இ → வினையெச்ச விகுதி

2) **வருந்தும்** → வருந்து + உம்

வருந்து→ பகுதி

உம் → பெயரெச்ச விகுதி

## VI. புணர்ச்சி விதி தருக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **எத்திசை** → எ + திசை

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்' → என்ற விதிப்படி

→ 'த்' → மிகுந்தது

→ எத்திசை

→ என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

1) **உரனுடை** → உரன் + உடை

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி

→ ன் + உ → 'னு' ஆனது

→ உரனுடை ⇒ என்று புணர்ந்தது

www.kalviexpress.in www.kalviexpress.in



**2) மழுவுடை** → மழு + உடை

i) 'ஏனைய உயிர்வழி வவ்வும்' → என்ற விதிப்படி

→ 'வ்' - உடம்படுமெய் தோன்றியது

→ மழு+ வ் + உடை

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி

→ வ் + உ = 'வு' → ஆனது

→ மழுவுடை ⇒ என்று புணர்ந்தது

**3) காட்டகத்து** → காடு + அகத்து

i) 'நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள் டற ஒற்று இரட்டும் → என்ற விதிப்படி

→ 'ட்' - இரட்டித்தது

→ காட்டு + அகத்து

ii) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' → என்ற விதிப்படி

→ 'உ' - நீங்கியது

→ டு = ட் + ~~உ~~ ⇒ காட்ட் + அகத்து

iii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' → என்ற விதிப்படி

→ ட் + அ = 'ட' ஆனது

→ காட்டகத்து ⇒ என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

**1. கல்வியின் சிறப்பை உணர்த்தும் திருக்குறள், நாலடியார் பாடல்களைத் திரட்டி வகுப்பறையில் உரையாடுக.**

**திருக்குறள்**

**கல்வி**

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

**கல்வி பற்றிய நாலடியார் பாடல்:**

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு" (131)



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



## துணைப்பாடம்

# 4. பாதுகாப்பாய் ஒரு பயணம்

## பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

1. **சாலைப் போக்குவரத்து உதவிக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் __________**





அ) 100 ஆ) 101 இ) 103 ஈ) 108 **விடை: இ) 103**


2. **இரு சக்கர வாகனத்தில் __________மட்டுமே பயணம் செய்ய வேண்டும்**


அ) இருவர் ஆ) மூவர் இ) நால்வர் ஈ) ஐவர்

**விடை: அ) இருவர்**

3. **குறுகிய பாலம் உள்ளது என்பதைக் குறிக்கும் குறியீடு __________**

அ)  ஆ)  இ)  ஈ) 


**விடை: அ)** 

4.  **இந்தக் குறியீடு குறிப்பிடுவது __________**

அ) வலதுபுறம் திரும்புக ஆ) இடதுபுறம் திரும்புக

இ) நேராகச் செல்லுக ஈ) திரும்பிச் செல்லுக

**விடை: இ) நேராகச் செல்லுக**

5.  **இந்தக் குறியீடு குறிப்பிடுவது __________**



அ) நிறுத்தாதே ஆ) எடைக்கட்டுப்பாடு

இ) இருவழிகளிலும் அனுமதியில்லை ஈ) வாகனம் நிறுத்த அனுமதியில்லை

**விடை: ஈ) வாகனம் நிறுத்த அனுமதியில்லை**

### அகநிலை வினாக்கள்

## II. வினாக்கள்

1. **சாலை விதிகளுக்கான குறியீடுகள் எப்போது ஏற்படுத்தப்பட்டன?**

➢ பாரிஸ் நகரத்தில் 1909 ஆம் ஆண்டு நடந்த முதல் 'பன்னாட்டுச் சாலை அமைப்பு' மாநாட்டில் ஒரு பொதுவான சாலைவிதி வேண்டும் என்னும் உடன்படிக்கை ஏற்பட்டது.



www.kalviexpress.in www.kalviexpress.in

- பல மொழிகளில் எழுதப்படும் அறிவுப் பலகைகளை விட மொழிவேறுபாடற்ற குறியீடுகள் எளிதில் மக்களுக்குப் புரியும் என்பதற்காக இவை உருவாக்கப்பட்டன.

**2. சாலை விதிகளைக் குறிப்பிடும் குறியீடுகளின் பிரிவுகள் யாவை?**

**குறியீடுகளின் பிரிவுகள் :**

- அபாய முன்னறிவிப்பு
- முக்கியத்துவத்தைச் சுட்டும் குறியீடுகள்
- தடை செய்யப்பட்டதைத் தெரிவிக்கும் குறியீடுகள்
- கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய குறியீடுகள்
- சிறப்பு அறிவிப்புக் குறியீடுகள்
- திசை காட்டும் குறியீடுகள்

**3. மோட்டார் வாகனச் சட்டம் 2017 - குறிப்பிடுவன யாவை?**

- 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்கினாலோ விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை கிடைக்கும்.
- ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஊர்தியை இயக்கினால் ரூ.5000/- தண்டத்தொகையோ மூன்று மாதச் சிறைத் தண்டனையோ அல்லது இரண்டுமோ கிடைக்கும்.
- அபாயகரமான முறையில் ஊர்தியை ஓட்டினால் ரூ.5000/- தண்டத்தொகை பெறப்படும்.
- மது குடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் ரூ.10,000/- தண்டத்தொகை கட்ட நேரும்.
- மிகுவேகமாக ஊர்தியை இயக்கினால் ரூ. 5000/- தண்டத்தொகை கட்ட நேரும்.
- இருவருக்கு மேல் இரண்டு சக்கர ஊர்தியில் பயணித்தால் ரூ. 2000/- தண்டத்தொகையுடன் மூன்று மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் நீக்கம் செய்யப்படும்.
- தலைக்கவசம் அணியாமல் இருசக்கர ஊர்தியை இயக்கினால் ரூ. 1000/- தண்டத்தொகையுடன் மூன்று மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் நீக்கம் செய்யப்படும்.
- ஊர்திகளுக்குக் காப்பீடு இல்லாமல் இயக்கினால் ரூ. 2000/–தண்டத்தொகை செலுத்த நேரும்.

## நம்மை அளப்போம்

### III. நெடுவினா

### புத்தக புறநிலை வினாக்கள்

**1. ‘சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு’ - இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

**சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு**

**முன்னுரை :**

மனித வாழ்வு பயணங்களால் நிறைந்தது. அன்றாட வாழ்வில் சாலைகளில் தான் நாம் அதிகமாகப் பயணம் செய்கிறோம். சாலையில் பாதுகாப்பாகப் பயணம் செய்வதற்கு விதிமுறைகள் உள்ளன. அவற்றை அறிந்து கொண்டால் விபத்துகளைத் தவிர்க்கலாம்.

**மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் :**

பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களுக்குச் சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை நாம் ஏற்படுத்த வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் கவனமுடன் பயணம் செய்வர்.

**உயிரின் மதிப்பைப் புரிய வைத்தல் :**

பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினால் தான் சாலையில் விளையாடுவது, கவனிக்காமல் திடீரென்று சாலையைக் கடப்பது, சாலையின் நடுவே செல்வது, சாலையை அடைத்துக் கொண்டு செல்வது, முன்பு செல்லும் வாகனத்தைப் பிடித்துக் கொண்டு மிதிவண்டியில் செல்வது, பேருந்தில் படிக்கட்டில் தொங்கிக்கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில்

www.kalviexpress.in www.kalviexpress.in



ஈடுபட மாட்டார்கள். மாணவர்கள் விபத்துகளில் தங்கள் உயிரையும் உடலுறுப்புகளையும் இழப்பது அவர்களின் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரிய இழப்பு என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

**ஒழுங்கீனச் செயல்களைத் தடுத்தல் :**

இருசக்கர வாகனத்தில் இரண்டு பேருக்கு மேல் செல்வது, தலைக்கவசம் அணியாமல் செல்வது, கைபேசியில் பேசிக்கொண்டே செல்வது. போட்டி. பந்தயம் என்று பொதுவழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவது, காதணி கேட்பிகள் பொருத்திக் கொண்டு வாகனம் ஓட்டுவது, மது குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது போன்ற ஒழுங்கீனச் செயல்களைத் தவிர்த்தாலே விபத்துகளின் எண்ணிக்கை குறைந்து விடும்.

**'அவசரம்' என்ற நோயைத் தடுத்தல் :**

'அவசரம்' என்ற பெயரில் ஏற்படும் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவு, போதிய பயிற்சியின்மை, தட்பவெப்பநிலை, இயந்திரக் கோளாறு, மிகுதியான ஆட்களையோ சரக்குகளையோ ஏற்றிச் செல்வது, தொடர்வண்டி இருப்புப்பாதைகளைக் கவனிக்காமல் கடப்பது போன்றவற்றில் தமக்கும் பிறர்க்கும் ஆபத்து ஏற்படும் என்பதைப் புரிய வைத்தாலே விபத்துகளின் விழுக்காடு குறைத்து விடும்.

**குறியீடுகளைப் பயன்படுத்துதல் :**

சாலையில் இடம் பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன.

(i) உத்தரவுக் குறியீடுகள்
(ii) எச்சரிக்கை குறியீடுகள்
(iii) தகவல் குறியீடுகள்

→ என்ற மூவகைக் குறியீடுகளையும் நாம் கண்டுணர்ந்து அவற்றைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும்பொழுது விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும்.

**முடிவுரை :**

சாலை விதிகளைத் தெரிந்து கொள்வதும் பிறருக்குச் சொல்வதும் விழிப்புணர்வு கொள்வதும் ஒரு வகைக் கல்விதான். இதனை உணர்ந்து ஒவ்வொருவரும் செயல்பட்டால் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியும். அப்போது **'சாலை விபத்தில்லாத தமிழ்நாடு'** என்ற கூற்று நனவாகும்.

## கற்பவை கற்றபின்

**1. சாலை பாதுகாப்பினை வலியுறுத்தும் முழக்கத் தொடர்கள் அடங்கிய பதாகைகள் சிலவற்றை உருவாக்கிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.**

"சாலைவிதிகளை மதிப்போம்
சமானமற்ற உயிரைக் காப்போம்"

"பயணங்கள் முடிவல்ல...
நம் வாழ்வின் தொடக்கமே..."

"உயிருக்கு விலையில்லை - ஆனால்
காத்திருக்கும் உறவுகளுண்டு"

"விபத்தில்லா பயணத்திற்குத் தேவை
வழியில் கவனம்"

"அரசு தரும் விலையில்லா பொருள்களுக்கு
வரிசையில் பொறுமையாக நிற்கும் நாம் ஏன்
இறைவன் தந்த விலையில்லா உடலுக்காக
வரிசையில் பொறுமையாக நிற்கக்கூடாது?"



www.kalviexpress.in www.kalviexpress.in

## இலக்கணம்

# 4. பா இயற்றப் பழகலாம்

## பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

1. **சங்கம் மருவிய காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த யாப்பு ________**
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
**விடை: அ) வெண்பா**

2. **நீதி இலக்கியங்கள் பெரும்பாலும் ________ வடிவத்திலேயே தோன்றின**
அ) வஞ்சிப்பா ஆ) கலிப்பா இ) ஆசிரியப்பா ஈ) வெண்பா
**விடை: ஈ) வெண்பா**

3. **வெண்பாவை ________ என்றும் அழைப்பர்**
அ) வஞ்சிப்பா ஆ) கலிப்பா இ) வன்பா ஈ) மென்பா
**விடை: இ) வன்பா**

4. **சொல்லுதலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது**
அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
**விடை: ஆ) வெண்பா**

5. **வெண்பாவின் ஓசை ________**
அ) அகவலோசை ஆ) துள்ளலோசை இ) தூங்கலோசை ஈ) செப்பலோசை
**விடை: ஈ) செப்பலோசை**

6. **வெண்டளையால் அமைவது ________**
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
**விடை: ஆ) வெண்பா**

7. **தளைத்தல் என்பதற்குக் ________, ________ என்று பொருள்**
அ) பிரித்தல், சேர்த்தல் ஆ) கட்டுதல், பிணித்தல் இ) வாழ்த்துதல், வைதல் ஈ) வைத்தல், எடுத்தல்
**விடை: ஆ) கட்டுதல், பிணித்தல்**

8. **மா, விளம் என்னும் இரண்டும் ________ சீர்கள்**
அ) ஓரசைச் ஆ) ஈரசைச் இ) மூவசைச் ஈ) நாலசைச்
**விடை: ஆ) ஈரசைச்**

9. **வெண்பாவில், முதற்சீர் மாச்சீர் என்றால் வரும் சீரின் முதல் அசை ________**
அ) நேர் ஆ) நிரை இ) விளம் ஈ) காய்
**விடை: ஆ) நிரை**

10. **வெண்பாவில், முதற்சீர் விளச்சீர் அல்லது காய்ச்சீர் என்றால் வரும் சீரின் முதல் அசை ________**
அ) நேர் ஆ) நேர்பு இ) நிரை ஈ) நிரைபு
**விடை: அ) நேர்**

11. **'ஓரசைச் சீர்' என்பவை __________, __________**
அ) நாள், மலர் ஆ) காசு, பிறப்பு இ) நாள், காசு ஈ) மலர், பிறப்பு
**விடை: அ) நாள், மலர்**

12. **குற்றியலுகர ஓசையோடு முடியும் சீர்கள் __________, __________**
அ) நாள், மலர் ஆ) காசு, பிறப்பு இ) நாள், காசு ஈ) மலர், பிறப்பு
**விடை: ஆ) காசு, பிறப்பு**

13. **வெண்பாவில், ஈற்று அயற்சீரின் மாச்சீர் என்றால் __________ (அ) __________ வாய்பாடு வரும்**
அ) மலர், பிறப்பு ஆ) நாள், காசு இ) காசு, பிறப்பு ஈ) நாள், பிறப்பு
**விடை: அ) மலர், பிறப்பு**

14. **வெண்பாவில், ஈற்று அயற்சீரானது விளச்சீர், காய்ச்சீர் எனில் ________ (அ) __________ வாய்பாடு வரும்**
அ) மலர், பிறப்பு ஆ) நாள், காசு இ) காசு, பிறப்பு ஈ) நாள், பிறப்பு
**விடை: அ) நாள், காசு**

15. **பதின்மூன்றடிக்கும் மேற்பட்ட அடிகள் பெற்று வருவது __________**
அ) இன்னிசை வெண்பா ஆ) நேரிசை வெண்பா
இ) பஃறொடை வெண்பா ஈ) கலி வெண்பா **விடை: ஈ) கலிவெண்பா**

16. **நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும் பெற்று வருவது __________**
அ) மூன்றடி வெண்பா ஆ) நான்கடி வெண்பா
இ) இரண்டடி வெண்பா ஈ) பதின்மூன்றடிக்கு மேல் வருவது
**விடை: ஆ) நான்கடி வெண்பா**

17. **இரண்டாமடியில் தனிச்சீரில்லாமல் நான்கு சீரோடு நான்கடிகளில் அமைவது __________**
அ) குறள் வெண்பா ஆ) நேரிசை வெண்பா
இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா
**விடை: இ) இன்னிசை வெண்பா**

## II. குறுவினா

### அகநிலை வினாக்கள்

1. **வன்பா என்று அழைக்கப்படுவது எது? ஏன்?**
**வன்பா :**
- வன்பா என்றழைக்கப்படுவது வெண்பா
- ஏனைய பாக்களை விட வரையறுத்த இலக்கணக் கட்டுக்கோப்பு உடையது வெண்பா. எனவே இது, வன்பா என்றழைக்கப்படுகிறது.

2. **வெண்பாவின் தளை எது? அது எத்தனை வகைப்படும்?**
**வெண்பா :**
- வெண்பாவின் தளை வெண்டளை
- (i) இயற்சீர் வெண்டளை
  (ii) வெண்சீர் வெண்டளை
  → என இரண்டு வகைப்படும்

3. **வெண்பாவிற்கான எளிய தளை இலக்கணம் யாது?**
**தளை இலக்கணம் :**
- மா முன் நிரை
- விளம் முன் நேர்
- காய் முன் நேர்

**4. வெண்பாவின் ஈற்றுச் சீர் எவ்வாறு அமையும்?**

**ஈற்றுச் சீர்**

- வெண்பாவின் ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடு ஒன்றினைப் பெற்று முடியும்.

## III. சிறுவினா

### அகநிலை வினாக்கள்

**1. வெண்பாவின் வகைகளுக்குரிய அடிவரையறை குறித்து எழுதுக.**

**வெண்பா :**

இரண்டடி முதல் பன்னிரண்டடி வரை உடையது.

- இரண்டடி வெண்பா - குறள் வெண்பா
- மூன்றடி வெண்பா - நேரிசை, இன்னிசைச் சிந்தியல் வெண்பா
- நான்கடி வெண்பா - நேரிசை வெண்பாவும், இன்னிசை வெண்பாவும்
- நான்கடி முதல் பன்னிரண்டடி வரை - பஃறொடை வெண்பா
- பதின்மூன்றடி முதல் அதற்கும் மேற்பட்ட அடிகள் வரை - கலிவெண்பா

**2. வெண்பாவின் இலக்கணம் யாது?**

**வெண்பாவின் இலக்கணம் :**

- இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை பிறழாது பா அமைய வேண்டும்.
- ஈற்றடி முச்சீராகவும் ஏனையவை நாற்சீராகவும் இருக்கும்.
- ஈரசைச்சீர்கள் மாச்சீரும் விளச்சீரும் (தேமா, புளிமா, கூவிளம், கருவிளம்) மூவசைச்சீரில் காய்ச்சீரும் (தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய்) வரும்.
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு ஆகிய வாய்பாடுகளுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

**3. நேரிசை வெண்பா விளக்குக**

**நேரிசை வெண்பா :**

- வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டாவது அடியில் தனிச்சீர் பெற்று நான்கடியில் அமைவது நேரிசை வெண்பா எனப்படும்.
- முதல் இரண்டடியும் தனிச் சொல்லும் ஓரெதுகையாகவும், பின் இரண்டடியும் ஓரெதுகையாகவும் வரும். நான்கடியும் ஓரெதுகையாகவும் வரும்.

**எ.கா :**

*எட்டெடை செம்பில் இரண்டெடை ஈயமிடில்*
*திட்டமாய் வெண்கலமாம் சேர்ந்துருக்கில் - இட்டமுடன்*
*ஓரெழு செம்பில் ஒரு மூன்று துத்தமிடில்*
*பாரறியப் பித்தளையாம் பார்.*

**4. இன்னிசை வெண்பா - விளக்குக**

**இன்னிசை வெண்பா :**

- வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று, இரண்டாவது அடியில் தனிச்சீரில்லாமல் நான்கு சீர்களோடு வரும்.
- நான்கு அடிகள் பெற்று வரும்.
- நான்கடிகளும் ஒரே எதுகை பெற்ற ஒரு விகற்ப இன்னிசை வெண்பா எனப்படும்

**எ.கா :**

*இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்*
*தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்*
*எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து*

## மாணவர்களுக்கான பயிற்சி

1. **நல்லார் புகழும் நலம் பெறலும் அல்லாமல்**
**பல்லோர் இகழும் பழிபெறலும் - எல்லாம்**

**வழக்கத்தால் அல்ல வகைபெறும்நம் நட்பாம்**
**பழக்கத்தால் வாய்ப்பதுதான் பார் -(நாள்)**

- நல்/லார் ⟶ தேமா, புக/ழும் ⟶ புளிமா = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- புக/ழும் ⟶ புளிமா, நலம்/பெற/லும் ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- நலம்/பெற/லும் ⟶ கருவிளங்காய், அல்/லா/மல் ⟶ தேமாங்காய் = காய் முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- அல்/லா/மல் ⟶ தேமாங்காய், பல்/லோர் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- பல்/லோர் ⟶ தேமா, இக/ழும் ⟶ கருவிளம் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- இக/ழும் ⟶ புளிமா, பழி/பெற/லும் ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- பழி/பெற/லும் ⟶ கருவிளங்காய், எல்/லாம் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- எல்/லாம் ⟶ தேமா, வழக்/கத்/தால் ⟶ புளிமாங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- வழக்/கத்/தால் ⟶ புளிமாங்காய், அல்/ல ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- அல்/ல ⟶ தேமா, வகை/பெறும்/நம் ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- வகை/பெறும்/நம் ⟶ கருவிளங்காய், நட்/பாம் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- நட்/பாம் ⟶ தேமா, பழக்/கத்/தால் ⟶ புளிமாங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- பழக்/கத்/தால் ⟶ புளிமாங்காய், வாய்ப்/பது/தான் ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- வாய்ப்/பது/தான் ⟶ கூவிளங்காய், பார் ⟶ நாள் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை

2. **அல்லும் பகலும் அயரா(து) உழைத்திடின்**
**நல்ல மதிப்பெண்கள் நாம்பெறலாம் - இல்லை**
**படியேன் எனத்திரிந்தால் பாக்குமரம் போலே**
**நெடிதவையில் நிற்பாய் நினை - (மலர்)**

- அல்/லும் ⟶ தேமா, பக/லும் ⟶ புளிமா = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- பக/லும் ⟶ புளிமா, அய/ரா(து) ⟶ புளிமா = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- அய/ரா(து) ⟶ புளிமா, உழைத்/திடின் ⟶ கருவிளம் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- உழைத்/திடின் ⟶ கருவிளம், நல்/ல ⟶ தேமா = விளம்முன் நேர்வந்த இயற்சீர் வெண்டளை.
- நல்/ல ⟶ தேமா, மதிப்/பெண்/கள் ⟶ புளிமாங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- மதிப்/பெண்/கள் ⟶ புளிமாங்காய், நாம்/பெற/லாம் ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- நாம்/பெற/லாம் ⟶ கூவிளங்காய், இல்/லை ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- இல்/லை ⟶ தேமா, படி/யேன் ⟶ புளிமா = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- படி/யேன் ⟶ புளிமா, எனத்/திரிந்/தால் ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- எனத்/திரிந்/தால் ⟶ கருவிளங்காய், பாக்/கும/ரம் ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- பாக்/கும/ரம் ⟶ கூவிளங்காய், போ/லே ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை

- போ/லே ⟶ தேமா, நெடி/தவை/யில் ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.
- நெடி/தவை/யில் ⟶ கருவிளங்காய், நிற்/பாய் - தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- நிற்/பாய் ⟶ தேமா, நினை/மலர் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை.

**3. கற்பிப்ப தோடு கலைத்திறனைக் கண்டறிந்து**
**பொற்புடனே வாழப் புரிந்திடுதல் - நற்பெருமை**

**ஆசான் முதற்கடமை ஆகும் இமைக்கடமை**
**கூசாமல் கண்காத்தல் கூறு** - **(காசு)**

- கற்/பிப்/ப ⟶ தேமாங்காய், தோ/டு ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- தோ/டு ⟶ தேமா, கலைத்/திற/னைக் ⟶ புளிமாங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- கலைத்/திற/னைக் ⟶ புளிமாங்காய், கண்/டறிந்/து ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- கண்/டறிந்/து ⟶ கூவிளங்காய், பொற்/புட/னே ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- பொற்/புட/னே ⟶ கூவிளங்காய், வா/ழப் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- வா/ழப் ⟶ தேமா, புரிந்/திடு/தல் ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- புரிந்/திடு/தல் ⟶ கருவிளங்காய், நற்/பெரு/மை ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- நற்/பெரு/மை ⟶ கூவிளங்காய், ஆ/சான் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- ஆ/சான் ⟶ தேமா, முதற்/கட/மை ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- முதற்/கட/மை ⟶ கருவிளங்காய், ஆ/கும் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- ஆ/கும் ⟶ தேமா, இமைக்/கட/மை ⟶ கருவிளங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- இமைக்/கட/மை ⟶ கருவிளங்காய், கூ/சா/மல் ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- கூ/சா/மல் ⟶ தேமாங்காய், கண்/காத்/தல் ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- கண்/காத்/தல் ⟶ தேமாங்காய், கூறு ⟶ காசு = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை

**4. பெற்றோர் மகிழப் பெரியோர்கள் பாராட்டும்**
**வற்றாத நற்குணங்கள் வாய்ப்பதற்கும் - குற்ற மிலா**

**வாயால்சொன் னால்நன்மை வாய்க்காது செய்கையால்**
**ஓயாமல் நீயும் உணர்ந்து** - **(பிறப்பு)**

- பெற்/றோர் ⟶ தேமா, மகி/ழப் ⟶ புளிமா = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- மகி/ழப் ⟶ புளிமா, பெரி/யோர்/கள் ⟶ புளிமாங்காய் = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை
- பெரி/யோர்/கள் ⟶ புளிமாங்காய், பா/ராட்/டும் ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- பா/ராட்/டும் ⟶ தேமாங்காய், வற்/றா/த ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- வற்/றா/த ⟶ தேமாங்காய், நற்/குணங்/கள் ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- நற்/குணங்/கள் ⟶ கூவிளங்காய், வாய்ப்/பதற்/கும் ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை

- வாய்ப்/பதற்/கும் ⟶ கூவிளங்காய், குற்/றமி/லா ⟶ கூவிளங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- குற்/றமி/லா ⟶ கூவிளங்காய், வா/யால்/சொன் ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- வா/யால்/சொன் ⟶ தேமாங்காய், னால்/நன்/மை ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- னால்/நன்/மை ⟶ தேமாங்காய், வாய்க்/கா/து ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- வாய்க்/கா/து ⟶ தேமாங்காய், செய்/கை/யால் ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- செய்/கை/யால் ⟶ தேமாங்காய், ஓ/யா/மல் ⟶ தேமாங்காய் = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- ஓ/யா/மல் ⟶ தேமாங்காய், நீ/யும் ⟶ தேமா = காய்முன் நேர்வந்த வெண்சீர் வெண்டளை
- நீ/யும் ⟶ தேமா, உணர்ந்து ⟶ புளிமா = மாமுன் நிரைவந்த இயற்சீர் வெண்டளை

## பயிற்சிப் பகுதி

1. விண்ணின் மழைநீரை வீணாக்கா மல்தேக்கி
**மண்ணில்** சிறந்த மரம்நட்டுக் - கண்ணின்
மணிபோல் மொழிகாத்து மாநிலத்து வாழ்வாய்
நினைவெல்லாம் ஈடெறி நீ

2. முன்னாள் புரிவினைகள் முற்றும் தவறாமல்
**பின்னாள்** நமைவந்து பீடிக்கும் - அன்று
தினையிட்டால் இன்று தினைவிளையும் அன்றிப்
**பனையிட்டால்** வாய்க்கும் பனை.

3. உண்ணும் **உணவை** ஒருபோதும் கொட்டாதே
**மண்ணில்** பசியால் மடிபவர்கள் - விண்ணின்
கடவுளென உன்னைக் **கருதுவர்** அன்பாய்
இடுவதற்(கு) ஏது வழி எண்,

4. வேற்றுயிரால் **தொல்லை** விளையா திருப்பதற்(கு)
ஏற்றவண்ணம் **காவல்** இயற்றாமல் - ஆற்றலுறும்
**பெண்பால்** இனம்வருந்தப் பேரிடர்செய் கின்றாயே
நண்பா! சரியோ **சரியோ** நவில்?

## கற்பவை கற்றபின்

**1. கீழ்க்காணும் ஈற்றடிகளைக் கொண்டு நேரிசை (அ) இன்னிசை வெண்பா எழுதுக.**

அ) கல்வியே வாழும் உயிரின் விழிகளாம்
கல்வியே வீழும் உலகினை மீட்குமாம்
அன்றுமென் றென்றும் உயர்த்திடும் கல்வியை
என்றும் விரும்பியே கல்

அ) மூத்தோர் அறிவுரை என்றும் மறவாதே
சித்தரின் வாக்கிலும் உள்ளம் – நிறையுமே
வாழ்ந்திடும் வாழ்க்கை முறையிலே என்றும்
ஒழுக்கம் உயர்வு தரும்.

இ) மனமது சுத்தமானால் மந்திரம் வேண்டாம்
தினமும் உனையே அறிந்திட – வேண்டுமே
அண்ணல் மகாத்மா வழியில் நடந்தாலே
இன்னல் விலகி விடும்.

ஈ) ஏரின்றி மக்கள் வறுமை ஒழியாதே
நீரின்றி ஊன்உழல யாக்கை விரும்பாதே
பாரின்றி பல்லுயிரும் சீர்பெறல் காணா
உழவின்றி உய்யா உலகு.

உ) பார்போற்றும் பாரதி பாட்டில் விழித்தெழவே
கீதையின் சாரதி கீர்த்தி இயம்பிடவே
வள்ளுவனின் வானுயர் ஏற்றம் பெறவே
மொழியின் வழிய தறிவு

2. 'இயற்கை' என்னும் பொருண்மையில் வெண்பா எழுதுக:-

மண்ணுயிர் சீர்பெற்று என்றென்றும் பார்காக்க
வேண்டும் பசுமை வரம்.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **வெண்பாவிற்கு ஏற்ப அடுத்த சீர் என்னவாக அமைக்கலாம்? பொருத்தமான சீரினைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.**

| வெண்பா | சீர் | விடைகள் |
|---|---|---|
| அ) அன்பே __________ | (ஆர்வமாய் / தகளியாய்) | **தகளியாய்** |
| ஆ) வான்மழை __________ | (தூறலில் / பொழிந்திடின்) | **தூறலில்** |
| இ) கண்ணிரண்டும் __________ | (இலாதார் / இல்லார்) | **இல்லார்** |
| ஈ) வெண்ணிலவு__________ | (காய்கிறது / ஒளிர்கிறது) | **காய்கிறது** |
| உ) வெய்யோன்__________ | (காய்ந்திட / ஒளிர்ந்திட) | **ஒளிர்ந்திட** |

2. **மூன்றாவது சீர் அமைத்து எழுதுக**

| சீர் | மூன்றாவது சீர் |
|---|---|
| அ) கல்வி கரையில __________ | **கற்பவர்** |
| ஆ) கல்லாரே ஆயினும் __________ | **கற்றவர்** |
| இ) நல்லவை செய்யின் __________ | **அறமாகும்** |
| ஈ) அவமதிப்பும் ஆன்ற__________ | **பெருமையும்** |
| உ) உண்ணாது நோற்பார்__________ | **பெரியர்** |

3. **பொருத்துக**

| பொருத்துக | | விடைகள் |
|---|---|---|
| அ) மாச்சீர் | கருவிளம், கூவிளம் | **நாள், மலர்** |
| ஆ) காய்ச்சீர் | நாள், மலர் | **தேமாங்காய், புளிமாங்காய்** |
| இ) விளச்சீர் | தேமாங்காய், புளிமாங்காய் | **கருவிளம், கூவிளம்** |
| ஈ) ஓரசைச்சீர் | தேமா, புளிமா | **தேமா, புளிமா** |

4. **கீழுள்ள சொற்களை ஈற்றுச் சீராகக் கொண்டு குறள் வெண்பா / நேரிசை வெண்பா / இன்னிசை வெண்பா எழுத முயற்சி செய்யவும்.**

1. கடல் 2. வாள் 3. மழை 4. தேன் 5. மரம்

**குறள் வெண்பா :**

**1. கடல் :**

மலைவீழ் அருவியும் சாரலும் காண
அலையுதே உள்ளக் **கடல்**

**2. வாள் :**

எதிர்சென்று மன்னன் மணிமுடி பூண்சிரம்
தொட்டதே கூரிய **வாள்**

3. **மழை :**

கண்டதும் கண்ணீர் சொரிந்து பிரிவதனை
சொல்லாமல் சொல்லும் **மழை**

4. **தேன் :**

மலைமுகட்டுக் கூட்டில் மலர்தேடிச் சேர்த்த
அருமருந்தே மாமாலைத் **தேன்**

5. **மரம் :**

இன்னாத செய்தார்க்கும் தண்ணிழல் தந்தே
தலைமுறை காக்கும் **மரம்**

**5. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?**

➢ இயற்சீர் வெண்டளை ➢ வெண்சீர் வெண்டளை

**6. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?**

**ஒரு விகற்பம் :**

செய்யுளில் நான்கு அடிகளும் ஒரே எதுகை பெற்று வந்தால் அது ஒரு விகற்பம் ஆகும்.

**பல விகற்பம் :**

➢ செய்யுளில் முதலிரண்டு அடிகள் ஒரு எதுகையும், மற்ற இரு அடிகள் வேறொரு எதுகையும் பெற்று வருவது இரு விகற்பம் ஆகும்.

➢ செய்யுளில் முதலிரண்டு அடிகள் ஒரு எதுகையும், மற்ற இரு அடிகள் எதுகை பெறாமல் வேறுபட்டு வந்தால் அது மூவிகற்பம் ஆகும்.

⟶ இவ்வாறு செய்யுளில் வெவ்வேறு எதுகைகளைப் பெற்று வருவது பல விகற்பம் ஆகும்.

## மொழியை ஆள்வோம்



மறைமலையடிகள்
(1876–1950)

**I. சான்றோர் சித்திரம் :**

**வினாக்கள்:-**

**1. வன்தொடர்க் குற்றியலுகரத்திற்கான சான்று __________**

அ) அஃது ஆ) எனக்கு இ) தெரியாது

**விடை: ஆ) எனக்கு**

**2. 'ஞானசாகரம்' என்ற இதழை நடத்தியவர் யார்?** **விடை: மறைமலையடிகள்**

**3. பரிதிமாற்கலைஞருடனான நட்பு 'தனித்தமிழ்' மீதான அடிகளாரின் பற்றை மிகுதியாக்கியது. (வினாத்தொடராக மாற்றுக)**

யாருடனான நட்பு 'தனித்தமிழ்' மீதான அடிகளாரின் பற்றை மிகுதியாக்கியது?

**4. இந்நிகழ்வில் பரிதிமாற்கலைஞரையே வியக்க வைத்தவர் மறைமலையடிகள்**
**⟶ இத்தொடரில் அமைந்துள்ள வினையாலணையும் பெயரை எடுத்தெழுதுக**

வினையாலணையும் பெயர் ⟶ வைத்தவர்

**5. ஓர், அஃது என்ற சொற்கள் எந்த இடத்தில் அமையும்? சான்று தருக.**

➢ வருமொழியில் உயிரெழுத்து வரும் சொல்லுக்கு முன்பு மட்டுமே ஓர். அஃது என்ற சொற்கள் வரும்.

**எ.கா :** ஓர் அறிவுக்கடல்
அஃது எனக்குத் தெரியாது


www.kalviexpress.in

## II. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக :

**எ.கா :** நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
நம் மா**நி**லம் இந்த ஆண்டு வ**ற**ட்சியால் பாதிக்கப்பட்டது

1) எங்கள் ஊரில் நூலகக் கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது
**விடை:** எங்கள் ஊரில் நூலகக் கட்**ட**டம் கட்ட அ**ர**சு நிதி ஒதுக்கியது

2) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
**விடை:** ரங்கன் வெ**ண்**கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

3) மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.
**விடை:** **வா**னம் பார்த்த பூமியில் ப**ய**று வகைகள் பயிரிடப்படுகின்றன.

4) ஐப்பசி அடைமழையில் ஊருனி நிறைந்தது.
**விடை:** ஐப்பசி அடைமழையில் ஊரு**ணி** நிறைந்தது

5) இன்னிக்கு சாயங்காலம் கபடி போட்டி நடைபெறும்
**விடை:** **இன்று** சா**யு**ங்காலம் கபடி போட்டி நடைபெறும்

## III. தமிழாக்கம் தருக

### நூலக வசதி

சர்வதேச அளவில், இந்தியாவில் கல்வி மற்றும் சமூகத் தேவைகளால் நூலக வசதியில் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் காமன்வெல்த் தலைமையிலான மேலாதிக்கத்தையும் பிரிட்டிஷ் காலனிகளையும் இந்தியா வெறுமனே எதிர்க்கிறது. ஒரு சில நகரங்களால் மட்டுமே நூலகத்தை அதிகரிக்க செய்ய முடிகிறது. ஒரு சில நகரங்கள் மட்டுமே பெருமிதம் கொள்கிறது. இதில் கிராமப்புற மக்கள் முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள். பின்தங்கிய நாடுகளில் கூட காணப்படுகின்ற நூலக வசதி இங்கு முற்றிலும் புறக்கணிக்கப்படுகிறது. பின்தங்கிய பகுதிகளில் நூலகத்தின் வளர்ச்சி தாமதமாகிறது. பள்ளிகளின் எண்ணிக்கை மற்றும் எழுத்தறிவு விகிதம் உயர்ந்தால் மட்டுமே இந்தியாவில் புத்தகங்களை வாசிப்போர் எண்ணிக்கையும் உயரும். சில பகுதிகளில் புத்தகம் மற்றும் பத்திரிகைகள் வாங்குவதற்குக் கூட வழி இல்லை. போதுமான அளவிலான பொது நூலகம் மற்றும் வாசிப்பு அறை இல்லாத காரணத்தினால் வாசிக்கும் பழக்கம் மக்களிடையே குறைந்து காணப்படுகிறது. எனவே தான், மக்களில் பெரும்பாலோர் வாசிக்கும் பழக்கத்தினை வழக்கமாகக் கொண்டிருக்கவில்லை.

## IV. பின்வரும் பழமொழிகளை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக :

**அ) யானைக்கும் அடி சறுக்கும் :**

**பொருள் :**

தனக்குத் தான் அனைத்து அனுபவங்களும் தெரியுமே இது என்ன? இது சாதாரண ஒன்று தானே என்று எளிதாக நாம் நினைத்தது நமக்கு எதிர்பாராத பெரிய தீமையை ஏற்படுத்தி விடும்.

**வாழ்வியல் நிகழ்வு :**

என் நண்பன் இராமன் நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு பல பதக்கங்களையும் வென்றுள்ளான். ஏன் கடலில் கூட ஒரு முறை நீந்திச் சென்று திரும்பி வந்து சாதனை புரிந்துள்ளான்.

ஒரு முறை அவன் உறவினர்களோடு ஆற்றங்கரைக்குச் சென்றான். அப்போது ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு கரையிலுள்ளவர்களையும் அவர்களது உடைமைகளையும் அடித்துக் கொண்டு சென்றது. என் நண்பன் இராமன் தான் கடலிலேயே நீந்தியவன் என்ற நம்பிக்கையில் ஆற்றுக்குள் சென்று அனைவரையும் காப்பாற்றி விடலாம் என நினைத்தான். ஆனால் எதிர்பாராத விதமாக ஆற்று வெள்ளத்தில் இராமனும் அடித்துச் செல்லப்பட்டான். நீண்ட நேரத்திற்குப் பின்பே தீயணைப்புத் துறையினரால் காப்பாற்றப்பட்டான்.

அப்போது '**யானைக்கும் அடி சறுக்கும்**' என்ற பொன்மொழியை நான் நன்கு உணர்ந்து கொண்டேன்.

**ஆ)** ***தினை விதைத்தவன் தினை அறுப்பான்;***
***வினை விதைத்தவன் வினை அறுப்பான்***

**பொருள் :**

நாம் பிறர்க்கு நன்மை செய்தால் நமக்கும் நன்மையே கிடைக்கும். நாம் தீமை செய்தால் நமக்கும் தீமையே கிடைக்கும்.

**வாழ்வியல் நிகழ்வு :**

என நண்பன் வாசனின் அப்பா பெருந்தன்மையான குணமுடையவர். எல்லாரிடத்திலும் இயல்பாகப் பழகும் தன்மையுடையவர். நல்ல பழக்க வழக்கங்களையும் மன்னிக்கும் குணம், பொறுமை, மனிதநேயம் ஆகியவற்றையும் சிறு சிறு கதைகள், பொன்மொழிகள் மூலமாகத் தம் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுத்தே வளர்த்தார். இப்போது அவரின் பிள்ளைகளான என் நண்பரின் சகோதர சகோதரிகள் அரசின் பலதுறைகளிலும் மிக உயர்ந்த பதவியில் உள்ளனர்.

ஆனால், வாசனின் சித்தப்பாவோ முற்றிலும் மாறுபட்டவர். வாசனின் அப்பாவிற்குக் கிடைக்கும் மரியாதையும் புகழையும் கண்டு பொறாமைப்படுபவர். அதனால் அவர் பகைஉணர்ச்சியையும், பழிவாங்கும் குணம், தண்டிக்கும் குணம் போன்ற தீய பண்புகளைச் சொல்லிக் கொடுத்தே தம் பிள்ளைகளை வளர்த்தார். அவர்கள் இப்போதோ தினமும் காவல் நிலையம் சென்று கையெழுத்து போடும் குற்றவாளிகளாக உள்ளனர்.

வாசனின் குடும்பம் மூலம் **தினை விதைத்தவன் தினை அறுப்பான்** என்பதையும்

வாசனின் சித்தப்பா குடும்பம் மூலம் **வினை விதைத்தவன் வினை அறுப்பான்** என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

**இ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை :**

**பொருள் :**

நாம் எப்போதும் நம்மைச் சுற்றி உள்ளவர்களிடம் இருக்கும் குறைகளை மட்டுமே கண்டுபிடித்து அவற்றைப் பெரிதாக்கி சண்டையிட்டால் நம் நண்பர்களோ அல்லது உறவினர்களோ நம்மை விட்டு விலகி விடுவர்.

**வாழ்வியல் நிகழ்வு :**

என் அத்தை நிரஞ்சனா பெரிய குடும்பத்தில் வாழ்ந்து வந்தார். ஆனால் எப்போதும் தன்னைச் சுற்றி உள்ள உறவினர்களிடமும் அண்டை வீட்டாரிடமும் அவர்களது குறைகளைச் சுட்டிக் காட்டிச் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார். தினமும் இந்நிலை மிகவும் மோசமாகிக் கொண்டே போனதால் பக்கத்து வீட்டார்கள் இவரிடம் பேசுவதை நிறுத்தி விட்டனர். அந்தத் தெருவினரே இவரிடம் பேசுவதே கிடையாது. போகப் போக என் அத்தையின் பிள்ளைகளுக்கும் திருமணம் மற்றும் கல்வியின் காரணமாக வெளியூர், வெளிநாடு என்று பயணித்து விட்டனர்.

இப்போது அவரிடம் சென்று யாரும் பேசுவதோ பார்ப்பதோ கிடையாது. மாமாவின் மரணத்திற்குப் பிறகு ஆதரிக்க யாருமின்றி தனிமரமாகவே இருக்கிறார்.

தனது ஆதரவற்ற சூழ்நிலையில் என் அத்தை **'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை'** என்பதை உணர்ந்து கொண்டார்.

**குற்றம் பார்ப்பது → அத்தையின் குறை கூறும் மனநிலை**
**சுற்றம் இல்லை → தற்போது ஆதரவற்று இருப்பது**

**ஈ) எறும்பு ஊரக் கல்லும் தேயும் :**

**பொருள் :**

மிகச் சிறிய அளவிலான எடையுடைய எறும்பே பெருங்கூட்டமாக ஒரே இடத்தில் சென்றால் கல் கூட தேய்ந்து போய்விடும். நாம் சரியெனக் கருதிய ஒன்றைத் திரும்ப திரும்ப பிறரிடம் பதிவு செய்து கொண்டே இருந்தால் ஒரு காலக்கட்டத்தில் அவர்களின் மனதிலும் நம் கருத்து சரியென்று பதிவாகி விடும்.

**வாழ்வியல் நிகழ்வு :**

என் சித்தி சுடலிக்குப் பொறியியல் படிப்பு மீது நம்பிக்கை இல்லை. எனவே, தன் மகனின் பொறியியல் படிப்பு மீதான ஆசையைத் தவறு என்று புரிய வைக்க நினைத்தாள். தினமும் தன் திறன்பேசியில் தேடித்தேடிச் செய்திகளைச் சேகரித்தாள். அவனுடைய எதிர்காலத்தில் எந்தத் துறையில் மதிப்பு அதிகமாகும் என்பதை எடுத்துச் சொல்லிப் புரிய வைத்தாள். தக்க சான்றுகளோடு மெய்ப்பித்தாள். பொறியியல் துறை பற்றிய தனது சொந்த கருத்துகளை மகனிடம் தினமும் பதிவு செய்ய ஒரு காலக்கட்டத்தில் அவனுக்குப் பொறியியல் மீதான ஆசை குறைந்து போனது. பிறகு வேறு துறையைத் தேர்ந்தெடுத்து மிகக் குறைந்த செலவில் படித்து முடித்து விட்டு இப்போது தன் அலுவலகத்தில் உயர்ந்த பதவியில் உள்ளான்.

இந்நிகழ்விலிருந்து ‘எறும்பு ஊரக் கல்லும் தேயும்’ என்பதை உணரலாம்.

**எறும்பு ஊர்வது → சித்தியின் பிற துறை சார்ந்த கருத்துகள்**
**கல்லும் தேயும் → சித்தி மகனின் மனம் மாறியது**

**ஈ) ஊழி பெயரினும் தாம் பெயரார்**

**பொருள் :**
காலமாற்றம் எனப்படும் ஊழியால் மாற்றங்கள் ஏற்பட்டாலும் சிலர் தம்முடைய தன்மையில் மாற மாட்டார்கள்.

**வாழ்வியல் நிகழ்வு :**

என் மாமா வளவன் மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். பள்ளிப்படிப்பை மட்டுமே இலவசமாக முடித்தார். மற்ற மேல்படிப்புகளை படிக்க வைக்க அவரது தந்தையிடம் வசதி இல்லாததால் படிக்க வைக்க முடியவில்லை. என் மாமாவே முயன்று பல இடங்களில் இரவும் பகலும் வேலை செய்து பணம் சேர்த்து வைத்தார். அதன் பின்பு கல்லூரியில் சென்று படித்தார். முதுகலைப் படிப்பையும் பகுதி நேர வேலை பார்த்துக் கொண்டே படித்தும் வந்தார். அவரது கடின முயற்சியால் நன்கு படித்துப் போட்டித் தேர்வில் வெற்றி பெற்று முதன்மை கல்வி அலுவலர் ஆகி விட்டார். பின்பு அவரது குடும்பமே வீடு, நிலம் எல்லாம் சொந்தமாக வாங்கி வசதியாகி விட்டனர்.எனினும் அவரும் அவர் குடும்பமும் தனது தன்மை மாறாமல் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். எங்கள் ஊரில் கல்வி பயிலும் மிகவும் ஏழை மாணவர்களை அவரே தனது சொந்தச் செலவில் படிக்க வைக்கின்றார். அவரது தனிப்பட்ட செலவில் பல வசதிகளை அமைத்துத் தந்துள்ளார். இந்நிகழ்விலிருந்து ‘ஊழி பெயரினும் தாம் பெயரார்’ என்பதை உணரலாம்.

**IV. கீழ்க்காணும் பத்திகளைப் படித்து மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குக**

**மூன்றில் ஒரு பங்காகச் சுருக்குதல் :**

**திருந்தாப் படிவம் :**

இன்றைய வாழ்க்கைச்சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றத்தால் உடல் நிலையைக் கவனத்தில் கொள்ளாமல் இயந்திர வாழ்க்கை வாழ்கிறோம்.

உணவே மருந்து மருந்தே உணவு என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்த சமச்சீர் உணவை உண்ண வேண்டியது அவசியமாகும்.

உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. உணவை நன்றாக மென்று விழுங்குவதால் உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும். நம் எடை மற்றும் உயரத்தினை பொறுத்து உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் வேண்டும்.

தானியங்களும் காய்கறிகளும் பழங்களும் சேர்ந்த உணவு முறையே ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

**திருந்திய படிவம் :**

இன்றைய வாழ்க்கைச்சூழலில் ஓய்வின்மை, காலம் தவறிய உணவு, உணவுப் பழக்கவழக்க மாற்றத்தால் உடல் நிலையைக் கவனத்தில் கொள்ளாமல் இயந்திர வாழ்வை வாழ்கிறோம்.

புரதம், கொழுப்பு, மாவுச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்த சமச்சீர் உணவை உண்ண வேண்டியது அவசியமாகிறது.

உண்ட உணவு செரிமானமாவதற்கு 4 மணி நேரம் ஆகிறது. உணவை நன்றாக மென்று விழுங்குவதால் உமிழ்நீர் சுரந்து உணவுடன் உட்செல்லும்.

நமது எடை மற்றும் உயரத்தினைப் பொறுத்து உணவு முறையைத் தேர்ந்தெடுக்கவும் உடற்பயிற்சி செய்யவும் வேண்டும்.

தேவையான தானியங்களும் காய்கறிகளும் பழங்களும் சேர்ந்த உணவு முறையே ஆரோக்கியத்திற்கான சரியான தீர்வு.

மொத்த சொற்கள் $\longrightarrow 163$

திருந்தாப் படிவம் $\longrightarrow 64$ சொற்கள்

திருந்திய படிவம் $\longrightarrow \frac{163}{3} = 54$ சொற்கள்

## மொழியோடு விளையாடு

**I. மறைந்திருக்கும் சொற்களைக் கண்டுபிடி**


**விடைகள் :**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| போ | ஏ | யா | ழ் | சு | வி | ந | க | ரு | ஒ |
| க் | டு | பா | டு | தே | ல் | டை | வி | ர | ளி |
| கு | தி | ரை | பா | ச | க | மே | தை | ம் | ச் |
| வ | அ | வெ | வ | மி | பா | டை | வே | க | சே |
| ர | ன் | ற் | டி | த் | டா | ஔ | ங் | மு | ர் |
| த் | பு | றி | வ | தி | ண் | வை | கை | றை | க் |
| து | ரு | வ | ம் | ர | தி | ஓ | லை | து | கை |
| ம | ன | ன | ம் | ன் | ணை | ப | ய | ணி | த |
| கா | வ | ல | ர் | ஓ | த | ற் | பி | ரி | வு |

www.kalviexpress.in

## II. எண்ணங்களை எழுத்தாக்குக

### பல்துறை வேலைவாய்ப்புகள்



மேல்நிலைக்கல்வியில் நாம் தேர்ந்தெடுக்கும் பாடப்பிரிவானது நமது எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கிறது. பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்களுக்குப் பல துறைகளிலும் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைகள் உள்ளன. நமக்குப் பிடித்த துறையில் வேலையில் சேர்வதற்கான பயிற்சிகளையும் முயற்சிகளையும் செய்து சாதிக்க வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் ஒரு மருத்துவராகவோ, ஆசிரியராகவோ. காவல்துறை ஆணையராகவோ, பொறியாளராகவோ, மாவட்ட ஆட்சியாளராகவோ, அறிவியல் விஞ்ஞானியாகவோ மிளிரலாம்.

## III. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க

**எ.கா :**

**பலகை**
- → பலகையால் ஆன மேசையில் உண்டனர்
- → பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின

1. **தாமரை**
   - → தாமரை மலரைக் குளத்தில் கண்டேன்
   - → தா மரையைக் காட்டில் கண்டேன்

2. **கோவில்**
   - → கோவில் சென்று இறைவனை வணங்கினேன்
   - → கோ இல் சென்று மன்னரை வணங்கினேன்

3. **வெங்காயம்**
   **காயம் (உடல்)**
   - → வெங்காயத்தினை உணவினில் இட்டேன்
   - → வெம் காயத்திற்கு மருந்தினை உட்கொண்டேன்.
     (வெம்மையாக காயம் இருப்பதால் மருந்து உட்கொண்டேன்,

4. **தலைமை**
   - → தலைமை வகிக்க வேண்டும்
   - → தலை மையை வாங்க வேண்டும்

www.kalviexpress.in

# நிற்க அதற்குத் தக


I. **கீழ்க்கண்ட இடங்களில் உங்கள் செயல்பாடு எவ்வாறு இருக்கும்?**

| | |
|---|---|
| ➢ கூட்டம் நிரம்பிய பேருந்தில், நீங்கள் அமர்ந்திருக்க, உங்கள் அருகில் பெரியவர் ஒருவர் நிற்கிறார். | ➢ நான் எழுந்து நின்று கொண்டு, அந்தப் பெரியவருக்கு என் இருக்கையைக் கொடுப்பேன் |
| ➢ பள்ளியில் உங்களுடைய தோழர் பசியுடன் அமர்ந்திருக்கிறார். | ➢ நான் கொண்டு வந்த உணவினைத் தோழனோடு பகிர்ந்து உண்பேன் |
| ➢ கடற்கரையில் பெற்றோரிடமிருந்து வழிதவறிய சிறுமி கண்ணீர் விட்டுக் கலங்குகிறார். | ➢ அந்தச் சிறுமியை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைப்பேன். கடற்கரையிலுள்ள ஒலிபெருக்கியில் தகவலைத் தெரிவிக்கச் செய்வேன். |

II. **படிப்போம் பயன்படுத்துவோம் (வானூர்தி நிலையம்)**

| | | | |
|---|---|---|---|
| Arrival | வருகை | Passport | கடவுச்சீட்டு |
| Departure | புறப்பாடு | Visa | நுழைவு இசைவு |
| Conveyor Belt | ஊர்திப்பட்டை | Domestic Flight | உள்நாட்டு வானூர்தி |
| Take off | வானூர்தி கிளம்புதல் | | |

www.kalviexpress.in


புனித ஜார்ஜ் கோட்டையின் ஓவியம்.

நாகரிகம், தொழில், வணிகம்

**இயல்: 5**

# நாடென்ப நாட்டின் தலை

உரைநடை : மதராசப்பட்டினம்
செய்யுள் : தெய்வமணிமாலை
தேவாரம்
அகநானூறு

துணைப்பாடம் : தலைக்குளம்
இலக்கணம் : படிமம்

உரைநடை

# 5. மதராசப்பட்டினம்

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்.**

அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

**விடை: ஈ) அ, ஆ, இ - அனைத்தும்**

**2. கூற்று : இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்**
**காரணம் : கிழக்கிந்திய நிறுவனத்தின் வணிகம், துணி சார்ந்தாகவே இருந்தது.**

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று தவறு, காரணம் தவறு
ஈ) கூற்று சரி, காரணம் சரி

**விடை: ஈ) கூற்று சரி, காரணம் சரி**

**3. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| அ. | திருவல்லிக்கேணி ஆறு | 1. | மாவலிபுரச் செலவு |
| ஆ. | பக்கிங்காம் கால்வாய் | 2. | கல் கோடரி |
| இ. | பல்லாவரம் | 3. | அருங்காட்சியகம் |
| ஈ. | எழும்பூர் | 4. | கூவம் |

அ) 1, 2, 4, 3 ஆ) 4, 2, 1, 3 இ) 4, 1, 2, 3 ஈ) 2, 4, 3, 1

**விடை: இ) 4, 1, 2, 3**

### அகநிலை வினாக்கள்

**1. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படுவது ____________**

அ) கல்கத்தா ஆ) புதுதில்லி இ) சென்னை ஈ) பம்பாய்

**விடை: இ) சென்னை**

www.kalviexpress.in

2. **இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும் தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்வது ________**
அ) சென்னை ஆ) பெங்களூர் இ) பம்பாய் ஈ) கல்கத்தா
**விடை: அ) சென்னை**

3. **குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மனித நாகரிகத்தின் பழமையை ________ ஆண்டுகளுக்கு முற்பட்டது என நிறுவுகிறது**
அ) ஆயிரம் ஆ) இரண்டாயிரம் இ) ஐம்பதாயிரம் ஈ) ஒரு லட்சம்
**விடை: ஈ) ஒரு லட்சம்**

4. **சென்னையில் மனித நாகரீகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று ________**
அ) காவேரியாற்றுப்படுகை ஆ) திருவல்லிக்கேணியாற்றுப்படுகை
இ) புழலாற்றுப்படுகை ஈ) கொற்றலையாற்றுப்படுகை
**விடை: ஈ) கொற்றலையாற்றுப்படுகை**

5. **பல்லாவரத்தில் அகழாய்வுத் துறையால் கண்டுபிடிக்கப்பட்ட மானுட எச்சம் ________**
அ) முதுமக்கள் தாழிகள் ஆ) செப்பேடுகள்
இ) மட்பாண்டங்கள் ஈ) கல்கோடரி **விடை: ஈ) கல்கோடரி**

6. **கி.பி. 2ம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' என்னும் துறைமுகமாகச் சுட்டப்பட்ட பகுதி ________**
அ) திருவல்லிக்கேணி ஆ) புழல்
இ) மயிலாப்பூர் ஈ) கூடுவாஞ்சேரி
**விடை: இ) மயிலாப்பூர்**

7. **சென்னையில் கிடைத்தவற்றுள் பழமையான கல்வெட்டு ________ காலத்தைச் சார்ந்தது**
அ) முதலாம் மகேந்திரவர்மன் ஆ) நந்திவர்மன்
இ) சிம்ம விஷ்ணு ஈ) புலிகேசி
**விடை: அ) முதலாம் மகேந்திரவர்மன்**

8. **பக்கிங்காம் கால்வாயில் செய்த படகுபயணத்தை 'மாவலிபுரச் செலவு' என்னும் தலைப்பில் கவிதையாக்கியவர் ________**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) சோமசுந்தரபாரதியார் ஈ) சங்கரதாஸ்சுவாமிகள்
**விடை: ஆ) பாரதிதாசன்**

9. **கூவம் ஆறு ________ எனவும் அழைக்கப்பட்டது**
அ) பக்கிங்காம் கால்வாய் ஆ) திருவல்லிக்கேணி ஆறு
இ) புழல் ஆறு ஈ) அடையாறு
**விடை: ஆ) திருவல்லிக்கேணி ஆறு**

10. **செயிண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி ________**
அ) கருப்பர் நகரம் ஆ) விருந்தினர் மாளிகை
இ) வெள்ளையர் நகரம் ஈ) வணிகர் குடியிருப்பு
**விடை: இ) வெள்ளையர் நகரம்**

11. **பணியாளர்கள் மற்றும் வணிகர்களுக்காக செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு வெளியே அமைந்த குடியிருப்புகள் உள்ள பகுதி ________**
அ) வெள்ளையர் நகரம் ஆ) கருப்பர் நகரம்
இ) மாளிகை ஈ) வணிகர் காலணி
**விடை: ஆ) கருப்பர் நகரம்**

12. ‘வெள்ளையர் நகரம்’, ‘கருப்பர் நகரம்’ என்ற இரு பகுதிகளும் இணைந்த பகுதியே ____________ எனப்பட்டது
அ) எழும்பூர் ஆ) திருவல்லிக்கேணி
இ) மதராசப்பட்டினம் ஈ) வண்ணாரப்பேட்டை
**விடை: இ) மதராசப்பட்டினம்**

13. கூற்று 1 : வடசென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றழைக்கப்பட்டது
கூற்று 2 : தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றழைக்கப்பட்டது
அ) கூற்று 1, 2 இரண்டும் சரி ஆ) கூற்று 1 மட்டும் சரி
இ) கூற்று 2 மட்டும் சரி ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு
**விடை: இ) கூற்று 1, 2 இரண்டும் சரி**

14. ____________ ஆட்சிக்காலத்தை சென்னையின் பொற்காலம் என்பர்
அ) எலியேல் ஆ) தாமஸ்பிட் இ) ஜார்ஜ் ஈ) மவுண்டன்
**விடை: ஆ) தாமஸ்பிட்**

15. சென்னையில் ஐரோப்பிய முறைக்கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றிய காலம் ____________
அ) கி.பி 18 ம் நூற்றாண்டு ஆ) கி.பி 17 ஆம் நூற்றாண்டு
இ) கி.பி 19 ம் நூற்றாண்டு ஈ) கி.பி 16 ஆம் நூற்றாண்டு
**விடை: அ) கி.பி 18 ம் நூற்றாண்டு**

16. 1715 இல் ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளி ____________
அ) பிரசிடென்சி பள்ளி ஆ) இராணி மேரி கல்லூரி
இ) புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி ஈ) சென்னைக் கோட்டைக் கல்லூரி
**விடை: இ) புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி**

17. சென்னை பல்கலைக்கழகம் உருவான ஆண்டு ____________
அ) 1856 ஆ) 1857 இ) 1858 ஈ) 1859
**விடை: ஆ) 1857**

18. 1914 ல் தொடங்கப்பட்ட பெண் கல்வி வரலாற்றில் குறிப்பிடத்தக்க கல்வி நிறுவனம் ____________
அ) பச்சையப்பன் கல்லூரி ஆ) மாநிலக் கல்லூரி
இ) கிறித்துவக் கல்லூரி ஈ) இராணி மேரி கல்லூரி
**விடை: ஈ) இராணி மேரி கல்லூரி**

19. இந்தோ - சாரசனிக் கட்டடக் கலைப் பாணியில் 1768 இல் கட்டி முடிக்கப்பட்ட முதல் கட்டடம் ________
அ) சேப்பாக்கம் அரண்மனை ஆ) எழும்பூர் தொடர்வண்டி நிலையம்
இ) உயர்நீதி மன்றம் ஈ) ரிப்பன் கட்டிடம்
**விடை: அ) சேப்பாக்கம் அரண்மனை**

20. தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை அறிவதற்கான முதன்மைத் தரவுகள் பல பாதுகாக்கப்படுகின்ற இடம் ____________
அ) தமிழ்நாடு ஆவணக் காப்பகம் ஆ) ரிப்பன் கட்டடம்
இ) விக்டோரியோ அரங்கு ஈ) சேப்பாக்கம் அரண்மனை
**விடை: அ) தமிழ்நாடு ஆவணக் காப்பகம்**

21. இந்தியாவின் முதல் பொது நூலகம் ____________
அ) அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆ) தமிழாய்வு நூலகம்
இ) கன்னிமாரா நூலகம் ஈ) கீழ்த்திசை சுவடிகள் நூலகம்
**விடை: இ) கன்னிமாரா நூலகம்**

www.kalviexpress.in www.kalviexpress.in



**22. டிராம் வண்டிகள் இயக்கப்பட்ட நகர வீதி ______**

அ) கல்கத்தா ஆ) சென்னை இ) பம்பாய் ஈ) புதுடெல்லி

**விடை: ஆ) சென்னை**

**23. 2010 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய நூலகம் ______**

அ) அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆ) கன்னிமாரா நூலகம்

இ) தமிழாய்வு நூலகம் ஈ) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

**விடை: அ) அண்ணா நூற்றாண்டு நூலகம்**

**24. 1856- இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் ______**

அ) எழும்பூர் ஆ) இராயபுரம் இ) மத்திய சென்னை ஈ) பூவிருந்தவல்லி

**விடை: ஆ) இராயபுரம்**

**25. இந்திய திரைப்படத்துறையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய இடம் ______**

அ) மும்பை ஆ) கல்கத்தா இ) பெங்களூர் ஈ) சென்னை

**விடை: ஈ) சென்னை**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.**

**கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்**

காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869இல் உருவாக்கப்பட்ட இந்நூலகம் அரிய ஓலைச்சுவடிகள், தாள் சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

### அகநிலை வினாக்கள்

**1. சென்னையில் பழமையை நமக்கு உணர்த்துவன யாவை?**

**மானுட எச்சங்கள்**

- இந்திய அகழ்வாய்வுத் துறையினரால் பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடரி.
- கூடுவாஞ்சேரி, பல்லாவரம், புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல்பழங்கால மானுட எச்சங்கள் சென்னையின் பழமையை நமக்கு உணர்த்துகின்றன.

**2. சென்னை நகரத்திலுள்ள ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்கள் யாவை?**

**ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தலங்கள் :-**

- திருவொற்றியூர்
- திருவான்மியூர்
- மயிலாப்பூர்
- திருமுல்லைவாயில்

**3. வள்ளல் பச்சையப்பரின் நாட்குறிப்பிலுள்ள குறிப்பு யாது?**

**பச்சையப்பரின் நாட்குறிப்பு**

வள்ளல் பச்சையப்பர் கூவம் நதிக்கரையில் குளித்து விட்டு அருகில் உள்ள கோவிலில் வழிபட்டதாக, அவரது நாட்குறிப்பு குறிப்பிடுகிறது.

**4. பக்கிங்காம் கால்வாய் புதுச்சேரி வரை நீண்டிருந்தது என்பதைப் பாரதிதாசன் கவிதை வழி நிறுவுக.**

**மாவலிபுரச் செலவு :**

'மாவலிபுரச் செலவு' என்ற தம் கவிதையில் பாரதிதாசன், பக்கிங்காம் கால்வாயில் மயிலை சீனி. வேங்கடசாமி, ப.ஜீவானந்தம் உள்ளிட்ட நண்பர்களுடன் படகுப் பயணம் செய்யும் போது,

**'சென்னையில் ஒரு வாய்க்கால் புதுச்சேரி நகர் வரை நீளும்'**

⟶ என்று குறிப்பிட்டுள்ளார்.



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in


**5. சென்னை பகுதியில் 400 ஆண்டுகளுக்கு முன்னரே புகழ்பெற்ற கிராமங்களாக இருந்தன யாவை?**

**12-13 ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்றவை**

- சேத்துப்பட்டு
- நுங்கம்பாக்கம்
- வியாசர்பாடி
- மாதவரம்
- கோயம்பேடு
- தாம்பரம்

---

**6. குப்பம் நகரமாக மாற்றம் பெற்ற சென்னையின் வரலாற்றைக் கூறுவது எது?**

**குப்பம் நகரமான வரலாறு :**

கி.பி 1647-இல் எழுதப்பட்ட பத்திரம் ஒன்றில் ‘தொண்டைமண்டலத்துப் புழல் கோட்டத்து ஞாயிறு நாட்டுச் சென்னப்பட்டினம்’ என்ற குறிப்பின் மூலம் 400 ஆண்டுகளுக்கு முன் வங்கக் கரையோரம் சிறு குப்பமாக இருந்த சென்னை நகரமாக மாற்றம் பெற்ற வரலாற்றைக் கூறுகிறது.

---

**7. ஆங்கிலேயர் குடியேற்றத்துக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் எது?**

**ஆங்கிலேயர் குடியேற்றம் :**

மயிலாப்பூருக்கு வடக்கே சில குப்பங்கள் மட்டுமே இருந்த மணல்வெளியைக் கிழக்கிந்திய வணிக நிறுவனத்தின் அலுவலர் பிராசிஸ்டே ஆங்கிலேயர் குடியேற்றத்துக்கான இடமாகத் தேர்ந்தெடுத்தார்.

---

**8. இந்தோ - சாரசனிக் கட்டடக் கலை என்றால் என்ன?**

**இந்தோ - சாரசனிக் கட்டடக்கலை :**

- முகலாயக் கட்டடக் கலை
- பிரித்தானியக் கட்டடக்கலை
- இந்திய பாரம்பரியப் பாணி

⟶ ஆகியவற்றைக் கலந்து உருவாக்கப்படுவது

---

**9. தமிழ்ச்சமூகம் அறிவுத்துறையில் பெரும் பாய்ச்சலை மேற்கொண்ட காலகட்டம் எது?**

**அறிவுத் துறையில் தமிழ்ச்சமூகம் :**

- 19 ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த அச்சுப்பரவல்
- நாளிதழ் பெருக்கம்

⟶ ஆகியவை சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணை நின்றன

- இதுவே தமிழ்ச்சமூகம் அறிவுத்துறையில் பெரும்பாய்ச்சலை மேற்கொண்ட காலகட்டமாகும்.

---

**10. சென்னையின் அடையாளத்தைப் பேணுபவை யாவை?**

**சென்னையின் அடையாளம் பேணுபவை :**

- எழும்பூர் அருங்காட்சியகம்
- கோட்டை அருங்காட்சியகம்

---

**11. பழைய நூலகங்களில் ஒன்றான சென்னை இலக்கியச் சங்கம் குறித்து எழுதுக.**

**சென்னை இலக்கியச் சங்கம் :**

1812 இல் கோட்டைக் கல்லூரியின் இணைவாக உருவான இந்நூலகம், அரிய பல நூல்களைக் கொண்ட இந்தியாவின் பழைய நூலகங்களில் ஒன்று.

---

**12. கன்னிமாரா நூலகம் பற்றி எழுதுக.**

**கன்னிமாரா நூலகம் :**

1860 இல் அருங்காட்சியகத்தின் அங்கமாகத் தொடங்கப்பட்ட இந்நூலகம், இந்தியாவின் முதல் பொது நூலகமாகும்.


www.kalviexpress.in www.kalviexpress.in

**13. சென்னையில் காணப்படும் தமிழாய்வு நூலகங்களுள் முக்கியமானவை யாவை?**

**தமிழாய்வு நூலகங்கள் :**

சிறப்பு நிலையில் தமிழாய்வு நூல்களைக் கொண்ட

- உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகம்,
- ராஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்,
- மறைமலையடிகள் நூலகம்,
- செம்மொழித் தமிழாய்வு நூலகம்

→ போன்றவை முக்கியமானவை.

## II. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. சென்னை பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.**

**பண்பாட்டு அடையாளங்கள் :**

- தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
- கோட்டை அருங்காட்சியகம்
- சேப்பாக்கம் அரண்மனை
- தென்னகத் தொடர்வண்டி நிலையம்
- பொது அஞ்சல் அலுவலகம்
- சென்னைப் பல்கலைக்கழகம்
- விக்டோரியா அரங்கு
- எழும்பூர் அருங்காட்சியகம்
- கன்னிமாரா நூலகம்
- மத்தியத் தொடர்வண்டி நிலையம்
- எழும்பூர் தொடர்வண்டி நிலையம்
- உயர்நீதிமன்றம்
- ரிப்பன் கட்டடம்

→ போன்ற இந்திய சாராசனிக் கட்டடக்கலைப் பாணியில் கட்டப்பட்ட பல கட்டடங்கள் சென்னையின் பண்பாட்டு அடையாளங்களாக இன்றும் நிலைத்து நிற்கின்றன.

### அகநிலை வினாக்கள்

**2. சென்னை பகுதியானது மனித நாகரிகத்தின் பழமை என்பதற்கான சான்றுகளை எடுத்துக்காட்டுக**

**மனித நாகரீகத்தின் பழமை :**

- குடியம், அத்திரம்பாக்கம் பகுதிகளில் மேற்கொண்ட அகழாய்வானது, அப்பகுதியின் மனித நாகரீகத்தின் பழமையை ஒரு லட்சம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என நிறுவுகிறது.
- அங்குள்ள கொற்றவையாற்றுப் படுகை மனித நாகரீகத்தின் முதன்மையான களங்களில் ஒன்று.
- இந்திய அகழ்வாய்வுத் துறையால் பல்லாவரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்கோடரி, கூடுவாஞ்சேரி, புழல் போன்ற பகுதிகளில் இன்றும் கிடைக்கும் தொல்பழங்கால மானுட எச்சங்கள் இப்பகுதியின் பழமையை உணர்த்துகின்றன.
- மயிலாப்பூர், கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தாலமி என்பவரால் 'மல்லியர்பா' என்னும் துறைமுகமாகச் சுட்டப்பட்டுள்ளது.

**2. சென்னையில் அமைந்திருந்த நீர்நிலைகளும் வடிகால்களும் பற்றி எழுதுக.**

**நீர்நிலைகள் :**

- சென்னை, வட சென்னைக்குக் கொற்றவையாறு

- மத்திய சென்னைக்குக் கூவம்
- தென் சென்னைக்கு அடையாறு
- பாலாறு

**வடிகால்கள் :**

- இந்த நான்கு ஆறுகளையும் இணைக்கக்கூடிய பக்கிங்காம் கால்வாய்.
- காட்டன் கால்வாய்
- விருகம்பாக்கம் கால்வாய்
- ஓட்டேரி நல்லா என 18 பெரிய ஓடைகள்
- 540 க்கும் மேற்பட்ட சிறிய ஓடைகள்

⟶ என இயற்கையாய் அக்காலத்தில் வடிகால்களைப் பெற்றிருந்தது சென்னை நகரம்.

---

3. **சென்னை நகரம் உருவான வரலாறு குறித்தெழுதுக.**

**சென்னை - உருவாக்கம் :**

**மதராசப்பட்டினம் :**

- செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு உள்ளே வீடுகள் இருந்த பகுதி 'வெள்ளையர் நகரம்' என்றும், கோட்டைக்கு வெளியே பணியாளர்கள், வணிகர்களுக்காக அமைந்த குடியிருப்புகள் உள்ள பகுதி 'கருப்பர் நகரம்' என்றும் அழைக்கப்பட்டது.
- இவ்விரு பகுதிகளும் இணைந்த பகுதியே 'மதராசப்பட்டினம்' எனப்பட்டது.

**துணி வணிகம் :**

கீழக்கிந்திய நிறுவனம் பெரும்பாலும் துணி வணிகம் செய்ததால், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் நெசவாளர்கள் சென்னை நோக்கி வந்தனர்

**புதிய பகுதிகள் :**

அவர்களால் வண்ணாரப்பேட்டை, சிந்தாதிரிப் பேட்டை போன்ற புதிய பகுதிகள் தோன்றின.

**கிராமங்களை இணைத்தல் :**

எழும்பூர், திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் முதலிய கிராமங்கள் இணைக்கப்பட்டன.

**சென்னை உருவானது :**

- வட சென்னைப் பகுதிகள் மதராசப்பட்டினம் என்றும் தென்சென்னைப் பகுதிகள் சென்னைப்பட்டினம் என்றும் வழங்கப்பட்டது.
- ஆங்கிலேயர் இரண்டையும் இணைந்து உருவாக்கிய 'மதராஸ்' இன்று சென்னையாக உருவானது.

---

4. **சென்னையானது அறிவின் நகரமாகத் திகழக் காரணங்கள் யாவை?**

**அறிவின் நகரம் :**

**ஐரோப்பியக் முறைக் கல்வி :**

- 18 ஆம் நூற்றாண்டிலேயே சென்னையில் ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின.
- 1715 இல் உருவான 'புனித மேரி தேவாலய தர்மப்பள்ளி' ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும்.

**கல்வி நிறுவனங்கள் :**

- 1812 இல் சென்னைக் கோட்டைக் கல்லூரி

- 1837 இல் கிறித்தவக் கல்லூரி
- 1840 இல் பிரசிடென்சி பள்ளி
- 1857 இல் உருவான சென்னைப் பல்கலைக்கழகம்
- 1914 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட இராணி மேரி கல்லூரி
- ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட பச்சையப்பன் கல்லூரி

⟶ இவை போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் சென்னையின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றின.

**5. சென்னையின் தரைவழிப்போக்குவரத்து குறித்தெழுதுக.**

**தரைவழிப் போக்குவரத்து :**

- ஆங்கிலேயரின் குடியிருப்புகளை முன்னிட்டு பாதைகள் யாவும் சாலைகளாக மாறின.
- சென்னையில் அண்ணாசாலைக்கு அடுத்ததாக முக்கியமானது பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையாகும்.
- சென்னை நகர வீதிகளில் 'டிராம் வண்டிகள்' இயக்கப்பட்டன.

**தொடர் வண்டி நிலையம் :**

- 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
- அதைத் தொடர்ந்து, சென்னை மத்தியத் தொடர்வண்டி நிலையம், எழும்பூர் தொடர் வண்டி நிலையம் ஆகியவை உருவாகின.

**6. ஒரு நகரம் உலகப் புகழ்பெற்ற சிறந்த நகரமாக விளங்குவதற்கான தகுதிகள் யாவை?**

**உலகப் புகழ்பெற்ற சிறந்த நகரம் :**

- ஒரு நகரம் உலகப்புகழ் பெறுவதற்கு, அது தொன்மைச் சிறப்புடையதாக இருக்க வேண்டும்.
- தொழில் வளம் மிகுதியாகப் பெற்றிருக்க வேண்டும்.
- சிறந்த குடிமக்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- துறைமுக வசதியுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
- ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் தொடர்ந்து நடைபெற வேண்டும்.
- நவீன தொழில்நுட்ப வசதியுடன் மிளிர வேண்டும்.

**7. உலகப் புகழ்பெற்ற சிறந்த நகரமாக விளங்கும் சென்னை ஒரு நம்பிக்கை மையம் என்பதை நிறுவுக.**

**நம்பிக்கை மையம் :**

- சென்னையை மையமிட்டு உருவான தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் ஏற்படுத்திய நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகள் நகரின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றன.
- கணினி மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தி ஆகியவற்றில் சென்னை பெரும்பங்காற்றுகிறது.
- இந்திய அளவில் மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை வகிக்கிறது.
- மின்னணுப் பொருள்களை உருவாக்கும் மையமாகவும் திகழ்கிறது.

⟶ எனவே சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல நம்பிக்கை மையமாகும்.

## IV. நெடு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு' - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.**

**'ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு'**

**நான் வாழ்ந்த நகரம் ⟶ திருநெல்வேலி**

www.kalviexpress.in www.kalviexpress.in



**வாழ்வாதாரம் :**

இந்தியாவின் 12 புனித நதிகளுள் வற்றாத ஜீவநதியான திருநெல்வேலியில் பாயும் தாமிரபரணியும்' ஒன்று. பொதிகை மலையில் தோன்றிக் கடலோடு கலக்கும் தண்பொருநை ஆறு பற்றிய நாகரீகமே முதல் நாகரீகம் என்பர். தாமிரபரணியின் தொடக்கம் முதல் எல்லை வரை நீண்டிருந்த மாவட்டம் பின்பு திருநெல்வேலி, தூத்துக்குடி என இரண்டானது. மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவது தாமிரபரணியே.

**தொன்மை நாகரீகத்தின் பிறப்பிடம் :**

ஆதித்த நல்லூரில் நடந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட இரும்பு, வெண்கலப் பொருட்கள், மட்பாண்டங்கள், பொன், முதுமக்கள் தாழிகள் போன்ற பொருள்கள் தான் உலகிலேயே மிகத் தொன்மை வாய்ந்ததாகும்.

**பாரம்பரியம் :**

சைவ சித்தாந்தமும் கிருத்துவமும் தழைத்தோங்கிய பூமி இது. கல்வியில் சிறந்த பாளையங்கோட்டையானது 'தென்னகத்தின் ஆக்ஸ்போர்டு' என்று போற்றப்படுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றிலும் இம்மண்ணின் மைந்தர்களே முன்னோடிகளாவர். மூலிகைகளோடு தாமிரச்சத்து நிறைந்துள்ள தாமிரபரணி ஆற்று நீரின் சுவைக்கு ஈடு இணை எதுவுமில்லை. தமிழகத்தில் சாகித்ய அகாதெமி விருதுகளை அதிகமுறை வென்று இலக்கியத் துறையில் மாபெரும் சாதனை படைத்தவர்கள் திருநெல்வேலியைச் சார்ந்தவர்களே.

**நீர்த்தேக்கங்கள் :**

400 ஆண்டுகளுக்கு முன்பாக நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட அணைகளும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட அணைக்கட்டுகளும் தென் தமிழகத்தின் தொன்மையைப் பறைசாற்றுகிறது.

**பண்பாட்டு அடையாளங்கள் :**

வரலாற்றுச் சிறப்புடைய கோவில்களும் புண்ணிய தீர்த்தங்களும், அருவிகளும், பண்பாட்டு அடையாளங்களாக அமைந்துள்ளன. பாண்டியர்களின் முதல் தலைநகரான கொற்கை துறைமுகத்தில் விளைந்த முத்துகள் உலகப்புகழ் பெற்றவை. பன்னாட்டு வணிக ஏற்றுமதிக்குப் புகழ் பெற்ற நகரம் திருநெல்வேலிச் சீமையாகும்.

## கற்பவை கற்றபின்

**1. ஒரு திட்டமிட்ட பெருநகரம் உருவாவதற்கு நீவிர் தரும் பரிந்துரைகளை, ''கனவு நகரம்'' என்னும் தலைப்பில் ஒப்படைவாக உருவாக்குக.**

- காட்டு வளங்களை அழிக்கா வண்ணம் நான்கு வழிச்சாலை உருவாக்குதல்.
- உள்நாட்டு வணிகச் சந்தைக்கு இடவசதி ஏற்படுத்துதல்.
- புகைவண்டி நிலையம் அமைத்தல்
- நவீன தரமான கட்டடங்களுடன் பேருந்து நிலையம் ஏற்படுத்துதல்.
- சாலைகளை விரிவுபடுத்துதல்
- தொழிற்சாலைகள் அமைவதற்கு ஏற்ற இடத்தினைச் சிபாரிசு செய்தல்.
- மாவட்ட மக்களுக்கு எந்தவிதத் தீங்கும் பாதிப்பும் இல்லாத தொழிற்சாலைகள் அமைத்தல்.



www.kalviexpress.in www.kalviexpress.in

# 5. செய்யுள் : தெய்வமணிமாலை

- இராமலிங்க அடிகள்

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒருமையுடன் | → | ஒரு நெறிப்பட்ட மனத்துடன் |
| 2. | திருமலரடி | → | மலர் போன்ற இறைவனின் திருவடி |
| 3. | உத்தமர் | → | சான்றோர்கள் |
| 4. | உள் | → | அகம் / மனம் |
| 5. | புறம் | → | வெளியே |
| 6. | புறமொன்று பேசுவோர் | → | வஞ்சகர் |
| 7. | கலவாமை | → | நான் சேராமல் இருக்க வேண்டும் |
| 8. | பெருநெறி | → | சிறந்த வாழ்வியல் நெறி |
| 9. | மருவு | → | துறவுக்கு எதிரான |
| 10. | உனை | → | இறைவனை |
| 11. | மதி | → | அறிவு |
| 12. | கருணைநிதி | → | இறைவனின் அருளாகிய செல்வம் |
| 13. | தருமமிகு | → | அறம் செய்வார் நிறைந்திருக்கும் |
| 14. | தலம் | → | திருக்கோயில் |
| 15. | ஓங்கு | → | எழுந்தருளியிருக்கும் |
| 16. | தண்முகம் | → | குளிர்ந்த முகம் |
| 17. | துய்யமணி | → | தூய மாணிக்கமணி |
| 18. | சண்முகம் | → | ஆறுமுகம் |

www.kalviexpress.in

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

#### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **‘உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்’ - இத்தொடர் உணர்த்தும் பண்பு**

அ) நேர்மறைப் பண்பு ஆ) எதிர்மறைப் பண்பு

இ) முரண் பண்பு ஈ) இவை அனைத்தும்

**விடை: ஈ) இவை அனைத்தும்**

## அகநிலை வினாக்கள்

1. **ஆன்ம நேய, சமய ஒருமைப்பாட்டையும் ஒளிவழிபாட்டையும் உருவாக்கி வளர்த்தவர் ________**
அ) இராமலிங்க அடிகள் ஆ) திருஞானசம்பந்தர்
இ) பாரதியார் ஈ) சுந்தரர் **விடை: அ) இராமலிங்க அடிகள்**

2. **வள்ளலார் ஆன்மிக மையத்தை ஏற்படுத்திய இடம் ________**
அ) மருதூர் ஆ) சிற்றூர் இ) கடலூர் ஈ) வடலூர்
**விடை: ஈ) வடலூர்**

3. **வள்ளலாருக்குச் சிந்தனைகளின் ஊற்றுக்களமாக இருந்தது ________**
அ) சென்னை ஆ) கந்தகோட்டம் இ) வடலூர் ஈ) மயிலாப்பூர்
**விடை: ஆ) கந்த கோட்டம்**

4. **திருவருட்பாவிலுள்ள திருமுறைகள் ________**
அ) இரண்டு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) எட்டு
**விடை: இ) ஆறு**

5. **திருவருட்பாவில் ஐந்தாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள பாமாலை ________**
அ) மனுமுறை கண்ட வாசகம் ஆ) ஜீவகாருண்ய ஒழுக்கம்
இ) தெய்வமணிமாலை ஈ) தேவாரம்
**விடை: இ) தெய்வமணிமாலை**

6. **________ அருளை வேண்டி தெய்வமணிமாலை பாடப்பட்டது**
அ) அழகர்கோயில் அழகரின் ஆ) சுவாமிமலை முருகனின்
இ) கந்தகோட்டத்து முருகப்பெருமானின் ஈ) பழனிமலை முருகப் பெருமானின்
**விடை: இ) கந்தகோட்டத்து முருகப்பெருமானின்**

7. **பசிப்பிணி போக்கியவர் பிறந்த ஊர் ________**
அ) கடலூர் ஆ) மருதூர் இ) வடலூர் ஈ) பேளூர்
**விடை: ஆ) மருதூர்**

8. **ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடைய பாடல்கள் நிரம்பியது ________**
அ) தேவாரம் ஆ) திருவாசகம்
இ) திருவருட்பா ஈ) மனுமுறை கண்ட வாசகம்
**விடை: இ) திருவருட்பா**

9. **மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடை நூல்களை எழுதியவர் ________**
அ) திருஞான சம்பந்தர் ஆ) சுந்தரர்
இ) அப்பர் ஈ) இராமலிங்க அடிகள்
**விடை: ஈ) இராமலிங்க அடிகள்**

## II. குறு வினா

## புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **'தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்க கந்தவேளே' - தொடருக்குப் பதவுரை எழுதுக.**

**பதவுரை :**

அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையின் கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளே!

⟶ என்பது பொருள்

## அகநிலை வினாக்கள்

**1. அடிகளாரின் அரும்பெரும் தன்மைகள் யாவை?**

**இராமலிங்க அடிகளார் :**

- சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவர்
- பசிப்பிணி போக்கியவர்
- சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர்
- இம்மண்ணில் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும் உண்மைநெறி ஓங்கவும் உழைத்தவர்.
- வாடிய பயிரைக் கண்டபோது தாமும் வாடியவர்.

**2. இராமலிங்க அடிகள் இயற்றிய உரைநடை நூல்கள் யாவை?**

**உரைநடை நூல்கள் :**

- மனுமுறை கண்ட வாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**3. '*உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார் உறவுகலவாமை வேண்டும்*'**
**⟶ என்ற பாடலில் பயின்று வரும் தொடை நயங்களை எடுத்தெழுதுக.**

**தொடை நயம் :**

(i) **சீர் மோனை :**

**சீர் தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது சீர் மோனை**

**எ.கா :-**

**உ**ள்ளொன்று - **உ**றவுகள்

(ii) **இயைபுத் தொடை**

**அடிதோறும் கடைசி எழுத்தோ, அசையோ சீரோ ஒன்றி வருவது இயைபுத் தொடை.**

**எ.கா :**

**வேண்டும்**
**வேண்டும்**

(iii) **முரண் தொடை**

**பாடலில் எதிர்ச்சொற்கள் பயின்று வருவது முரண் தொடை**

**எ.கா :** உள் × புறம்

**4. அடிகளார் எது தன்னை அணுகாதிருக்க வேண்டுமென வேண்டுகிறார்?**

**அணுகாதிருக்க வேண்டும் :**

மதமான பேய் தன்னை அணுகாதிருக்க வேண்டுமென வேண்டுகிறார்.

5. **வள்ளலார் மறக்க வேண்டுவன மறவாதிருக்க வேண்டுவன யாவை?**

**மறக்க வேண்டுவது :**

துறவுக்கு எதிரான பெண்ணாசையைத் தன் மனம் மறக்க வேண்டுகிறார்.

**மறவாதிருக்க வேண்டுவது :**

என்றும் இறைவனை மறவாதிருக்க வேண்டுமென வேண்டுகிறார்.

6. **தான் எவ்வாறு இருக்க வேண்டுமென வள்ளலார் இறைவனிடம் வேண்டுகிறார்?**

**இறைவனிடம் வேண்டுவது :**

- மதியும்
- இறைவனின் கருணையாகிய நிதியும்
- நோயற்ற வாழ்வும்

→ உடையவனாகத் தான் இருக்க வேண்டுமென வேண்டுகிறார்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?**

**உத்தமர் உறவு :**

ஒரு நெறிப்பட்ட மனத்துடன் இறைவனது மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்களின் உறவு தனக்கு வேண்டும் என்கிறார் வள்ளலார்.

**வஞ்சகர் உறவு :**

தம் உள்ளத்தில் ஒன்றை நினைத்துக் கொண்டு புறத்தில் வேறொன்றாகப் பேசும் வஞ்சகர்களின் உறவு தனக்கு ஏற்படாமல் காக்குமாறு இறைவனிடம் வள்ளலார் வேண்டுகிறார்.

### அகநிலை வினாக்கள்

1. **கந்த கோட்டத்து முருகப்பெருமானிடம் வள்ளலார் தனக்கு வேண்டும் என்று வேண்டுவன யாவை?**

**வேண்டும் என வேண்டுவன :**

- ஒரு குறிப்பிட்ட மனத்துடன் இறைவனின் மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற சான்றோர்களின் உறவு வேண்டும்.
- பெருமை சான்ற இறைவனது புகழையே பேச வேண்டும்.
- சிறந்த வாழ்வியல் நெறிகளைப் பின்பற்ற வேண்டும்.
- என்றும் இறைவனை மறவாதிருக்க வேண்டும்.
- அறிவும் இறைவனின் கருணையான செல்வமும் வாழ்வும் உடையவனாக இருக்க வேண்டும்.

2. **கந்த கோட்டத்து இறைவனிடம் வள்ளலார் தனக்கு வேண்டாம் என வேண்டுவன யாவை?**

- தம் உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்களிடம் உறவு வேண்டாம்.
- பொய்,
- மதமான பேய்,
- பெண்ணாசை,

→ இவையெல்லாம் தனக்கு வேண்டாம் என இறைவனிடம் வேண்டுகிறார் வள்ளலார்.

**3. தெய்வமணிமாலை பற்றிக் குறிப்பெழுதுக**

**தெய்வமணிமாலை :**

- திருவருட்பா இயற்றியவர் இராமலிங்க அடிகளாார்.
- ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் தன்மையுடைய பாடல்கள் இவை.
- திருவருட்பா ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது
- ‘தெய்வமணிமாலை’ என்னும் பாமாலையானது திருவருட்பாலில் ஐந்தாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.
- சென்னை, கந்தகோட்டத்து முருகப்பெருமானின் அருளை வேண்டிப் பாடிய பாடல் தெய்வமணிமாலை.

**4. இராமலிங்க அடிகள் பற்றி எழுதுக**

**இராமலிங்க அடிகள் :**

- சிதம்பரத்தை அடுத்து மருதூரில் பிறந்தவர்.
- சமரச சன்மார்க்க நெறிகளை வகுத்தவர்
- பசிப்பிணி போக்கியவர்
- சிறுவயதிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர்
- இம்மண்ணில் ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்கவும் உண்மைநெறி ஓங்கவும் உழைத்தவர்.
- வாடிய பயிரைக் கண்டபோது தாமும் வாடியவர்.
- மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடை நூல்களை இயற்றியுள்ளார்.
- வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவினார்.
- அங்கே சோதிதரிசனப் புதுமையைப் புகுத்தினார்.
- அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல் இன்றும் பல்லோரது பசிப்பிணியைப் போக்கி வருகிறது.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. மலரடி → உவமைத் தொகை
2. மறவா → ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
3. வளர்தலம் → வினைத்தொகை

### அகநிலை வினாக்கள்

1. கலவாமை, பேசாதிருத்தல், பிடியாதிருத்தல் → எதிர்மறைத் தொழிற்பெயர்
2. கருணை நிதி → உருவகம்
3. தருமமிகு சென்னை → வினைத்தொகை
4. தண்முகம் → பண்புத் தொகை

## VI. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1) நினைக்கின்ற → நினை + க் + கின்று + அ**

நினை → பகுதி
க் → சந்தி
கின்று → நிகழ்கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

**2) வைத்து → வை + த் + த் + உ**

வை → பகுதி
த் → சந்தி
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

**3) பேசுவார்** → பேசு + வ் + ஆர்

பேசு → பகுதி
வ் → எதிர்கால இடைநிலை
ஆர் → பலர் பால் வினைமுற்று விகுதி.

### அகநிலை வினாக்கள்

**1) பெறும்** → பெறு + உம்

பெறு → பகுதி
உம் → பெயரெச்ச விகுதி

**2) பேச** → பேசு + அ

பேசு → பகுதி
அ → பெயரெச்ச விகுதி

**3) பிடித்து** → பிடி + த் + த் + உ

பிடி → பகுதி
த் → சந்தி
த் → இறந்த கால இடைநிலை
உ → வினையெச்ச விகுதி

**4) ஒழுக** → ஒழுகு + அ

ஒழுகு → பகுதி
அ → பெயரெச்ச விகுதி

**5) வாழ** → வாழ் + அ

வாழ் → பகுதி
அ → பெயரெச்ச விகுதி

www.kalviexpress.in

## VI. புணர்ச்சி விதி தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **உள்ளொன்று** ⟶ உள் + ஒன்று

i) 'தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்' ⟶ என்ற விதிப்படி
⟶ 'ள்' - இரட்டித்தது
⟶ உள்ள் + ஒன்று ⟶ ஆனது

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ள் + ஒ = 'ளொ' ஆனது
⟶ உள்ளொன்று
⟶ என்று புணர்ந்தது

2) **ஒருமையுடன்** ⟶ ஒருமை + உடன்

i) 'இ ஈ ஐ வழி யவ்வும்' ⟶ என்ற விதிப்படி
⟶ 'ய்' - உடம்படுமெய் தோன்றியது
⟶ ஒருமை + ய் + உடன்

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ய் + உ = 'யு' ஆனது
⟶ ஒருமையுடன்
⟶ என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

1) **மலரடி** ⟶ மலர் + அடி

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ர் + அ = 'ர' ஆனது
⟶ மலரடி ⟹ என்று புணர்ந்தது

2) **பிடித்தொழுக** ⟶ பிடித்து + ஒழுக

i) 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' ⟶ என்ற விதிப்படி
⟶ 'உ' நீங்கியது
⟶ து = த் + ~~உ~~
= பிடித் + த் + ஒழுக ⟶ ஆனது

ii) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ த் + ஒ = 'தொ' ஆனது
⟶ பிடித்தொழுக
⟶ என்று புணர்ந்தது

3) **நோயற்ற** ⟶ நோய் + அற்ற

i) 'உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' ⟶ என்ற விதிப்படி
⟶ ய் + அ = 'ய' ஆனது
⟶ நோயற்ற ⟹ என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

1. **தெய்வமணிமாலைப் பாடல் கருத்துகளுக்கு இணையான திருக்குறள்களைத் தொகுத்து எழுதுக.**

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"
" வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு"
" பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"
" பொறிவாயில் ஐந்தறிவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"
" தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"
" பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

www.kalviexpress.in www.kalviexpress.in



செய்யுள்

# 5. தேவாரம்

- திருஞான சம்பந்தர்

## சொல்லும் பொருளும்

1. மடநல்லார் → இளமை பொருந்திய பெண்கள்
2. மலிவிழா → விழாக்கள் நிறைந்த
3. கலிவிழா → எழுச்சி தரும் விழா
4. பலிவிழா → திசை தோறும் பூசையிடும் உத்திர விழா
5. ஒலிவிழா → ஆரவார விழா
6. வீதி → தெரு
7. மாமயிலை → பெரிய ஊரான திருமயிலை
8. கபாலீச்சரம் அமர்ந்தான் → கபாலீச்சரம் என்னும் கோவிலில் வீற்றிருக்கும் இறைவன்
9. பாடல் செய் → பூஜைகள் செய்யும்
10. காணாதே → காணாமல்
11. போதியோ → செல்வது முறை ஆகுமா?

## நம்மை அளப்போம்

### I. பலவுள் தெரிக

#### அகநிலை வினாக்கள்

1. **சைவ சமயத் திருமுறைகள்**
   அ) ஆறு ஆ) பத்து இ) பன்னிரண்டு ஈ) எட்டு
   **விடை: இ) பன்னிரண்டு**

2. **பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியவர் ____________**
   அ) திருமூலர் ஆ) திருஞானசம்பந்தர் இ) திருநாவுக்கரசர் ஈ) சுந்தரர்
   **விடை: ஆ) திருஞானசம்பந்தர்**

3. **இசைப் பாடல்களாகவே திகழ்பவை ____________ பாடல்கள்**
   அ) திருஞானசம்பந்தர் ஆ) திருநாவுக்கரசர்
   இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்
   **விடை: அ) திருஞானசம்பந்தர்**

4. **பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் ____________**
   அ) இராஜராஜ சோழன் ஆ) நாதமுனிகள்
   இ) நம்பியாண்டார் நம்பி ஈ) கூடலூர்க் கிழார்
   **விடை: இ) நம்பியாண்டார் நம்பி**



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



5. 4, 5, 6 திருமுறைகளைப் பாடியவர் ____________

அ) திருஞானசம்பந்தர் ஆ) திருநாவுக்கரசர் இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர்

**விடை: ஆ) திருநாவுக்கரசர்**

6. ஏழாம் திருமுறையைப் பாடியவர்

அ) திருஞானசம்பந்தர் ஆ) திருநாவுக்கரசர்

இ) சுந்தரர் ஈ) மாணிக்கவாசகர் **விடை: இ) சுந்தரர்**

7. ஒன்று முதல் ஏழு வரையுள்ள திருமுறைகளுக்குத் ____________ என்று பெயர்

அ) தேவாரம் ஆ) திருவாசகம் இ) திருவருட்பா ஈ) தெய்வமணிமாலை

**விடை: அ) தேவாரம்**

8. தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசைதத்துவம், சமயக் கோட்பாடுகள் அனைத்தும் விரவிக் கிடக்கும் பாடல்களைப் பாடியவர் ____________

அ) அப்பர் ஆ) சம்பந்தர் இ) சுந்தரர் ஈ) மணிவாசகர்

**விடை: ஆ) சம்பந்தர்**

9. பங்குனி உத்திர விழாவினைக் குறிப்பது ____________

அ) கலிவிழா ஆ) ஒலிவிழா இ) பலிவிழா ஈ) மலிவிழா

**விடை: இ) பலிவிழா**

10. திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் ____________

அ) திருமயிலை ஆ) திருவேங்கடம் இ) திருவொற்றியூர் ஈ) திருப்புவனம்

**விடை: அ) திருமயிலை**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **கலிவிழா, ஒளிவிழா - விளக்கம் தருக.**

**கலி விழா :**

- எழுச்சி தரும் விழா
- மக்களுக்கு எழுச்சி தரும் வகையில் உற்சாகமுடன் கொண்டாடப்படும் விழா

**ஒலி விழா**

- ஆரவார விழா
- மங்கல வாத்தியங்களின் ஒலி, வாழ்த்துப் பாடல்களின் இசை ஒலி போன்ற ஆரவாரங்களோடு களிப்புடன் கொண்டாடப்படும் விழா.

### அகநிலை வினாக்கள்

1. **சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடப்பன யாவை?**

**சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடப்பன :**

- சமுதாயத்தின் பொருளாதாரக் கலை பண்பாட்டு நிலைகள்
- தமிழுக்கு இருந்த உயர்நிலை
- இசை தத்துவம்
- சமயக் கோட்பாடுகள்



www.kalviexpress.in www.kalviexpress.in

**2. ஒலிவிழாக் காணாதே போதியோ? இதில் முறையாகாது என்று சம்பந்தர் கூறுவது யாது?**

**முறை ஆகுமோ? :-**

திருமயிலை கபாலீச்சரம் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழாவினைக் காணாமல் செல்வது முறை ஆகுமா? என்கிறார் சம்பந்தர்.

**3. திருமயிலை ஊர் எத்தகையது?**

**திருமயிலை**

இளம் பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை ஆகும்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. பங்குனி உத்திர திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞானசம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.**

**பங்குனி உத்திர திருவிழா :**

- இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடைய பெரிய ஊர் திருமயிலை.
- அங்கு எழுச்சி மிக்க விழாக்கள் நிகழும்.
- மயிலை கபாலீச்சரம் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திரமானது அன்று முதல் இன்று வரைக் கொண்டாடப்பட்டு வருகிறது.
- பங்குனி உத்திரமானது மங்கல வாத்தியம் மற்றும் இசையொலிகள் நிறைந்த ஆரவார விழாவாக நடைபெற்றது.

### அகநிலை வினாக்கள்

**1. திருமயிலாப்பூர் பதிகம் - குறிப்பெழுதுக**

**திருமயிலாப்பூர் பதிகம் :**

- திருமயிலாப்பூர் பதிகம் இரண்டாம் திருமுறையில் இடம்பெற்றுள்ளது.
- பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்களின் தொகுப்புகள்.
- இப்பாடல்கள் நம்பியாண்டார் நம்பி என்பவரால் தொகுக்கபபட்டுள்ளன.
- இப்பாடல்களுக்குத் தேவாரம் என்று பெயர்.
- சமுதாயத்தின் பொருளாதார கலை பண்பாட்டு நிலைகள், தமிழுக்கு இருந்த உயர்நிலை, இசை தத்துவம் சமயக் கோட்டுபாடுகள் அனைத்தும் சம்பந்தர் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.

**2. மயிலாப்பூர் பற்றிய தனிச்சிறப்புகள் யாவை?**

**மயிலாப்பூர் சிறப்புகள் :**

- மடலார்ந்து தெங்கின் மயிலை
- இருளகற்றும் சோதித் தொன்மயிலை
- கற்றார்கள் ஏத்தும் கபாலீச்சரம்
- கண்ணார் மயிலைக் கபாலீச்சரம்
- கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சரம்
- மாங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பூர்
- ஊர்திரை வேலை உலாவும் உயர்மயிலை

www.kalviexpress.in www.kalviexpress.in



3. **மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள் யாவை-**

**மயிலைப் பதிகத்தில் காணப்பெறும் விழாக்கள் :**

- ஐப்பசி - ஓண விழா
- கார்த்திகை - விளக்குத் திருவிழா
- மார்கழி - திருவாதிரை விழா
- தை - தைப்பூச விழா
- மாசி - கடலாட்டு விழா
- பங்குனி - பங்குனி உத்திர விழா

## IV. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?**

**சென்னையில் உள்ள மயிலாப்பூர்**

- பெரிய ஊரான திருமயிலையானது இளம்பெண்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாக்கள் நிறைந்த வீதிகளையுடையது.
- அங்கு எழுச்சி மிக்க விழாக்கள் கொண்டாடப்படுகிறது.
- கபாலீச்சரம் என்னும் கோவில் அமைந்துள்ளது.
- கபாலீச்சரம் கோவிலில் வீற்றிருக்கும் இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திரமானது ஆரவார விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

⟶ இவ்வாறு திருவிழாக்களால் எழும் ஆரவாரம் நிறைந்ததாக மயிலாப்பூர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**கந்தகோட்ட பகுதிகள்:**

- அறம் செய்வார்கள் நிறைந்திருக்கும் பகுதி
- ஒருமையான மனத்துடன் கந்தகோட்டத்து திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் கந்தவேளின் மலர் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்கள் நிறைந்த பகுதி.
- கந்த கோட்டத்து முருகப்பெருமான் குளிர்ந்த முகத்தோற்றத்தையுடைய தூய மாணிக்கமணியானவர்.
- ஆறுமுகங்களை உடைய தெய்வமாகிய மணியானவர்.

⟶ இவ்வாறு அறம் செய்பவர்கள், உத்தமர்கள் நிறைந்த பகுதி என்றும் அங்குள்ள இறைவன் குளிர்ந்த தன்மை, அருள், ஆறுமுகமானவர் என்றும் காட்சிப்படுத்தப்படுகிறது.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. மாமயிலை ⟶ உரிச்சொற்றொடர்

### அகநிலை வினாக்கள்

1. ஒலிவிழா ⟶ வினைத்தொகை
2. போதியோ ⟶ முன்னிலை ஒருமை வினைமுற்று
3. அமர்ந்தான் ⟶ படர்க்கை ஒருமை வினைமுற்று
4. கண்டான் ⟶ படர்க்கை ஒருமை வினைமுற்று
5. பாடல் செய் ⟶ இரண்டாம் வேற்றுமைத் தொகை



www.kalviexpress.in www.kalviexpress.in

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1) கண்டான்** ⟶ காண்(கண்) + ட் + ஆன்

காண் ⟶ பகுதி (கண் எனக் குறுகியது விகாரம்)

ட் ⟶ இறந்த கால இடைநிலை

ஆன் ⟶ ஆண்பால் வினைமுற்று விகுதி

**2) அமர்ந்தான்** ⟶ அமர் + த்(ந்) + த் + ஆன்

அமர் ⟶ பகுதி

த் ⟶ சந்தி (ந் ஆனது விகாரம்)

த் ⟶ இறந்தகால இடைநிலை

ஆன் ⟶ ஆண்பால் வினைமுற்று விகுதி

## IV. புணர்ச்சி விதி தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1) பூம்பாவாய்** ⟶ பூ + பாவாய்

i) 'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'ப்' - ற்கு இனமான 'ம்' - மிகுந்தது

⟶ பூம்பாவாய்

⟹ என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

**1) விழாப்பாடல்** ⟶ விழா + பாடல்

i) 'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்' ⟶ என்ற விதிப்படி

⟶ 'ப்' மிகுந்தது

⟶ விழாப்பாடல்

⟹ என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி நாளிதழ் ஒன்றின் செய்திப்பிரிவிற்கு அளிக்கும் வகையில் செய்தியாக எழுதுக.**

மார்ச் - 2019,
பாபநாசம்.

**சித்திரை விசுத் திருவிழா:**

- திருநெல்வேலியிலிருந்து 56 கி.மீ. தொலைவில் உள்ள பாபநாசத்தில் சித்திரை விசுத் திருவிழா

வெகுவிமர்சையாக நடைபெறும். சித்திரை மாதப்பிறப்பிற்குப் பத்து நாட்களுக்கு முன் உலகம்மை சமேத பாபநாசர் கோயிலில் திருவிழாவிற்கான கொடி ஏற்றப்படும்.

- அன்று தொடங்கி, தொடர்ந்து பத்து நாட்களுக்கு ஒவ்வொரு சமுதாய மண்டகப்படிதாரர்களால் திருவிழா நடத்தப்படும். திருவிழா சுவாமி அம்மாளின் வீதிஉலா புறப்பாடு மாலையில் நடைபெறும். அன்னம், ரிஷபம், வெட்டும் குதிரை, காமதேனு போன்ற ஒவ்வொரு வாகனத்திலும் ஒவ்வொரு நாட்களிலும் வீதிஉலா நடைபெறும். அதில் சிறப்பாக ஏழாம் திருநாள் அன்று நடராசர் சப்பரம் வீதி உலா வருவதைக் காலையில் 'வெள்ளை சாத்தி' என்றும் மாலையில் 'பச்சை சாத்தி' என்று அழைப்பர்.
- ஒன்பதாம் நாள் காலையில் ஊரின் நான்கு ரதவீதிகளிலும் சுற்றி வரும் தேர்த்திருவிழா சிறப்பாக இருக்கும். பத்தாம் நாள் காலையில் 'பூம்பல்லக்கில்' வீதி உலா நடைபெறும். அன்றிரவு தெப்பக்குளத்தில் தெப்பத்தில் சுவாமி அம்பாள் உலா நடைபெறும். அன்று இரவில், கைலாயத்தில் நடைபெற்ற சிவன் பார்வதியின் திருக்கல்யாணத்தைப் பார்க்க முடியாத அகத்தியருக்கு சுவாமியும் அம்பாளும் கல்யாண கோலத்தில் காட்சி கொடுப்பார்கள். இவ்வாறாகப் பத்து நாட்களும் திருவிழாக் கோலத்தில் தாமிரபரணிக்கரை மக்கள் வெள்ளத்தில் மிதக்கும்.

துணைப்பாடம்

# 5. அகநானூறு

- அம்மூவனார்

www.kalviexpress.in

## சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | வேட்டம் | → | மீன் பிடித்தல் |
| 2. | கழி | → | உப்பங்கழி |
| 3. | செறு | → | வயல் |
| 4. | கொள்ளை | → | விலை |
| 5. | என்றூழ் | → | சூரியனின் வெப்பம் |
| 6. | விடர் | → | மலைவெடிப்பு |
| 7. | கதழ்வு | → | விரைவு |
| 8. | உமணர் | → | உப்பு வணிகர் |
| 9. | எல்வளை | → | ஒளிரும் வளையல் |
| 10. | தெளிர்ப்ப | → | ஒலிப்ப |
| 11. | விளி அறி | → | குரல் கேட்ட |
| 12. | ஞமலி | → | நாய் |
| 13. | வெரீஇய | → | அஞ்சிய |
| 14. | மதர்கயல் | → | அழகிய மீன் |
| 15. | புனவன் | → | கானவன் |
| 16. | அள்ளல் | → | சேறு |
| 17. | பகடு | → | எருது |
| 18. | உழாஅது | → | உழவு செய்யாமலே |
| 19. | கதழ்கோல் | → | எருதுகளை விரட்டப் பயன்படுத்தும் தாழ்கோல் |
| 20. | நேரே | → | மாற்றாக |
| 21. | கடுக்கும் | → | தீயிட்டு எரிப்பர் |
| 22. | மாமூது | → | கரும்புகை |
| 23. | அழுந்திய | → | சிக்கிக்கொண்ட |
| 24. | சாகாட்டு | → | உப்பு ஏற்றிச் செல்லும் மாட்டு வண்டி |
| 25. | கைபூண் | → | வண்டியை மீட்க எருதே முயலுதல் |
| 26. | வருந்தி | → | துன்பப்பட்டு |
| 27. | உயிர்க்கும் | → | உதவி செய்தல் |
| 28. | நோயாகின்றே | → | நான் துன்புற்றேன் |

# நம்மை அளப்போம்

## I. பலவுள் தெரிக

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி

**விடை: இ) நாய்**

### அகநிலை வினாக்கள்

1. அ) பாடல் எண்ணிற்கு ஏற்பத் திணைகள் வரிசையாக வைத்துத் தொகுக்கப்பட்ட நூல் அகநானூறு
ஆ) எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று அகநானூறு
இ) நெய்தல் திணைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர் அம்மூவனார்
ஈ) அகநானூறு பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று
அ) அ, ஆ ⟶ சரி, இ, ஈ ⟶ தவறு ஆ) அ மட்டும் சரி
இ) அ, ஈ ⟶ சரி, அ, இ ⟶ தவறு ஈ) அ, ஆ, இ ⟶ சரி, ஈ ⟶ தவறு

**விடை: ஈ) அ, ஆ, இ ⟶ சரி, ஈ ⟶ தவறு**

2. எது சரியானது?
(i) அகநானூறு மூன்று பிரிவுகளை உடையது
(ii) அகப்பாடல்கள் மட்டுமே பாடியவர்களுள் ஒருவர் அம்மூவனார்
(iii) அம்மூவனாரின் பாடல்கள் அகநானூற்றில் மட்டுமே உள்ளது
அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும் இ) (iii) மட்டும் ஈ) அனைத்தும்

**விடை: ஈ) அனைத்தும்**

3. எது சரியானது?
(i) களிற்றியானை நிரை - 120 பாடல்கள்
(ii) மணிமிடை பவளம் - 180 பாடல்கள்
(iii) நித்திலக் கோவை - 100 பாடல்கள்
அ) (i) மட்டும் ஆ) (ii) மட்டும் இ) (iii) மட்டும் ஈ) அனைத்தும்

**விடை: ஈ) அனைத்தும்**

4. (1) குறிஞ்சி ⟶ 4, 14....
(2) முல்லை ⟶ 10, 20....
(3) மருதம் ⟶ 1, 3....
(4) நெய்தல் ⟶ 6, 16....
(5) பாலை ⟶ 2, 8....
அ) 1, 2, 3, 4, 5 ஆ) 5, 1, 4, 2, 3 இ) 5, 4, 3, 2, 1 ஈ) 5, 2, 1, 4, 3

**விடை: ஆ) 5, 1, 4, 2, 3**

5. அகநானூற்றுப் பாடலின் அடிவரையறை ______________
அ) 13 - 31 ஆ) 4 - 8 இ) 3 - 6 ஈ) 9 - 12

**விடை: அ) 13 - 31**

6. **அகநானூற்றைத் தொகுத்தவர் ____________**
அ) பன்னாடு தந்த மாறன் வழுதி
ஆ) மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர்
இ) பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
ஈ) கூடலூர் கிழார்
**விடை: ஆ) மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திர சன்மர்**

7. **அகநானூறைத் தொகுப்பித்தவன் ____________**
அ) உருத்திர சன்மர் ஆ) பாண்டியன் உக்கிரப்பெருவழுதி
இ) கூடலூர் கிழார் ஈ) மாந்தர்ஞ் சேரலிரும் பொறை
**விடை: ஆ) பாண்டியன் உக்கிரப்பெருவழுதி**

8. **அகநானூறின் வேறு பெயர் ________**
அ) அகவற்பா ஆ) நானூறுப்பாட்டு இ) சங்கப்பாட்டு ஈ) நெடுந்தொகை
**விடை: ஈ) நெடுந்தொகை**

9. **அகம் சார்ந்த அகநானூற்றுப் பாடலின் பாக்கள் ________**
அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா
**விடை: ஆ) ஆசிரியப்பா**

10. **கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதி ________**
அ) உப்பங்கழி ஆ) நெய்தல் நிலம் இ) சுனை நீர் ஈ) மீன் பிடித்தளம்
**விடை: அ) உப்பங்கழி**

11. **உப்பு படிவதற்கு ஏற்ற வகையில் பாத்தி அமைக்கப்பட்ட இடம் ________**
அ) உப்பங்கழி ஆ) உப்பளம் இ) மீன்பிடித்தளம் ஈ) துறைமுகம்
**விடை: ஆ) உப்பளம்**

12. **பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றவர்கள் ________**
அ) குறவர்கள் ஆ) ஆய்ச்சியர் இ) உழவர்கள் ஈ) உமணர்கள்
**விடை: ஈ) உமணர்கள்**

13. **உப்பு விளையும் களத்திற்கு ________ என்று பெயர்**
அ) கேணி ஆ) சுனை இ) கடல் ஈ) அளம்
**விடை: ஈ) அளம்**

14. **நெய்தல் நில மக்களின் தொழில்கள் ________, ________**
அ) தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் ஆ) நெல்லரிதல், களைபறித்தல்
இ) மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் ஈ) சூறையாடல், வழிப்பறி செய்தல்
**விடை: இ) மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல்**

15. **ஆண்களும் பெண்களும் வணிகம் செய்த செய்தியைப் புலப்படுத்துவன ________**
அ) தொல்காப்பியம் ஆ) சங்கப்பாடல்கள்
இ) திருக்குறள் ஈ) பதினெண்கீழ்க்கணக்குப்பாடல்கள்
**விடை: ஆ) சங்கப்பாடல்கள்**

## II. குறுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்' - இத்தொடரில் உள்ள முரண் நயத்தைக் குறிப்பிடுக.**

**'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்'**

**முரண் நயம் :**

பெருங்கடல் × சிறுகுடி

⟶ பரப்பளவில் பெரிய கடலில் மீன் வேட்டையாடுபவர்

⟶ நிலப்பரப்பில் சிறிய குடியில் வாழ்வர்.

### அகநிலை வினாக்கள்

**1. அகநானூறு எத்தனை பிரிவுகளை உடையது? அவை யாவை?**

**அகநானூறு**

மூன்று பிரிவுகளை உடையது

**மூன்று பிரிவுகள்**

- களிற்றியானை நிரை - 120 பாடல்கள்
- மணிமிடை பவளம் - 180 பாடல்கள்
- நித்திலக் கோவை - 100 பாடல்கள்

⟶ கொண்டுள்ளது

**2. அம்மூவனார் பற்றி எழுதுக**

**ஆம்மூவனார் :**

- நெய்தல் திணைப் பாடல்களைப் பாடுவதில் வல்லவர் அம்மூவனார்
- இவரது பாடல்கள் எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகியவற்றிலும் தொகுக்கப்பெற்றுள்ளன.

**3. பழங்காலத்தில் உற்பத்திப் பொருளாக விளங்கிய உப்பு குறித்து எழுதுக?**

**உப்பு :**

- பழங்காலத்தில் தமிழ்நாட்டில் சந்தைக்குரிய உற்பத்திப் பொருளாக உப்பு விளங்கியது.
- உப்பு விளையும் களத்திற்கு 'அளம்' என்று பெயர்.
- பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்குப் பண்டமாற்றாகப் பெற்றனர்.

**4. உப்பங்கழி குறித்து எழுதுக?**

**உப்பங்கழி**

- கடலுக்கு அருகில் மணல் திட்டுகளில் கடல்நீர் தேங்கியிருக்கும் பகுதிக்கு உப்பங்கழி எனப் பெயர்.
- கடல்நீரைப் பாத்திகளில் தேக்கி வெயிலில் ஆவியாக்கி உப்புப் படிவதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்ட இடத்தை உப்பளம் என்கிறோம்.
- ஆடை போல் படியும் இந்த உப்பைக் கூட்டிச் சேகரித்து, பக்குவப்படுத்தி விற்பனைக்கு அனுப்புவர்.

www.kalviexpress.in

5. **நெய்தல் திணை - விளக்குக**

**நெய்தல் திணை :**

(i) **முதற்பொருள்**

**நிலம்** : கடலும் கடல் சார்ந்த பகுதியும்

**பொழுது : பெரும்பொழுது** → கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

**சிறுபொழுது** → எற்பாடு

(ii) **கருப்பொருள்**

**தெய்வம்** → வருணன்

**மக்கள்** → பரதவர், பரத்தியர்

**பறை** → மீன் கோட்பறை

**தொழில்** → மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், உப்பு விற்றல்

(iii) **உரிப்பொருள்**

➢ இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

6. **தலைமகன் பாங்கற்கு உரைத்த கூற்றுத் துறை பற்றி விளக்குக**

**தலைமகன் பாங்கற்கு உரைத்த கூற்று**

➢ 'தலைவியைக் கண்டதால் ஏற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன்' என்று தலைமகன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறுவதாகும்.

## III. சிறு வினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. **'நெல்லின் நேரே வெண்கல உப்பு' - இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

**பண்டமாற்று வணிகம் :**

➢ 'பரதவர், உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர்.

➢ 'அந்த வெண்ணிறக் கல்உப்பை, உப்பு வணிகர் தங்களது வண்டியில் ஏற்றிச் செல்வர்.

➢ 'கோடைக் காலத்தின் வெப்பத்தால் பிளவுப்பட்ட குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்வர்.

**'நெல்லின் நேரே வெண்கல் உப்பு'**

➢ 'அம்மூவனாரின் அகநானூற்றுப் பாடலின் தலைவி, 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ' என்று கூவுகிறார்.

→ இத் தொடர் மூலம், பிற நிலங்களில் கிடைக்கும் பொருள்களை உமணர்கள் உப்பிற்கு பண்டமாற்றாகப் பெற்றனர் என்பதை அறியலாம்.

### அகநிலை வினாக்கள்

1. **அகநானூறுப் பாடலில் அம்மூவனார் உள்ளுறையைப் புனைந்துள்ளதை விளக்குக.**

**உள்ளுறை :**

➢ "வண்டியை இழுக்கும் எருதுகளின் துன்பத்தை தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதனால் எனக்கேற்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன்' என்று தலைவன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறினான்.

➢ 'எருதைத் தலைவனுக்கும் தந்தையைப் பாங்கனுக்கும் உப்பின் எடையால் எருது வருந்தும் நிலையைக் காதல் வருத்தத்திற்கும் உள்ளுறையாக வைத்துப் பாடல் புனையப்பட்டுள்ளது.

www.kalviexpress.in www.kalviexpress.in



**2. நெய்தல் திணையை அம்மூவனாரின் பாடல் வழி நிறுவுக.**

**நெய்தல் திணை**

(i) **முதற்பொருள்**

**நிலம்** : கடலும் கடல் சார்ந்த பகுதியும்

**பொழுது : பெரும்பொழுது** → கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்

**சிறுபொழுது** → எற்பாடு

(ii) **கருப்பொருள்**

**தெய்வம்** → வருணன்

**மக்கள்** → பரதவர், பரத்தியர்

**பறை** → மீன் கோட்பறை

**தொழில்** → மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல், உப்பு விற்றல்

(iii) **உரிப்பொருள்**

➢ இரங்கலும் இரங்கல் நிமித்தமும்

**எ.கா : 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்'**

**நூல் : அகநானூறு**

**ஆசிரியர் : அம்மூவனார்**

**பாடலின் பொருள் :**

➢ பரதவர், கடல்பரப்பில் மீன் வேட்டையாடுவர். உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர்.
➢ அந்த வெண்ணிறக் கல் உப்பை, உப்பு வணிகர் விற்பதற்காகத் தங்களது வண்டியில் ஏற்றிச் செல்வர்.
➢ கோடை காலத்தில், குன்றைக் கடந்து தொலைவிலுள்ள ஊர்களிலும் விற்பனை செய்வர்.
➢ அத்தகைய உமணர் ஒருவரின் மகள் 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!' என்று கூறினாள்.
➢ அவள் கூவியதைக் கேட்டு நாய் குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முன் போர் செய்வது போல் மருண்டன.
➢ கானவர் பழையபுனத்தைத் தீயிட்டு எரிப்பதால் உண்டாகும் கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் அப்பெண்ணின் தந்தை உப்பு ஏற்றிச் செல்லும் வண்டி சிக்கிக் கொண்டது.
➢ அவ்வண்டியைச் சேற்றிலிருந்து மீட்க முயன்ற எருதிற்கு அவள் தந்தை உதவினார்.
➢ அந்த எருது அடைந்த துன்பம் போல அவள் கண்களால் நான் துன்புற்றேன்.

**திணைப் பொருத்தம் :**

நெய்தல் நில மக்களின் தொழிலான உப்பு விற்றலை இப்பாடலின் தலைவியும் அவள் தந்தையும் மேற்கொள்வதால் நெய்தல் திணைக்குப் பொருத்தமானது.

---

**3. தலைவன் பாங்கற்கு உரைத்த கூற்றுத்துறையைச் சான்றுடன் விளக்குக**

**தலைமகன் பாங்கற்கு உரைத்த கூற்று**

தலைவியைக் கண்டதால் ஏற்பட்ட துன்பததை நீ போக்குவதற்கு உரியவன்' என்று தலைமகன் பாங்கனிடம் உள்ளுறுத்துக் கூறுவதாகும்.

**எ.கா : 'பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்'**

**நூல் : அகநானூறு**



www.kalviexpress.in www.kalviexpress.in

**ஆசிரியர் : அம்மூவனார்**

**பாடலின் பொருள் :**

- பரதவர், கடல்பரப்பில் மீன் வேட்டையாடுவர். உப்பளங்களில் உழவு செய்யாமலே உப்பு விளைவிப்பர்.
- அந்த வெண்ணிறக் கல் உப்பை, உப்பு வணிகர் விற்பதற்காகத் தங்களது வண்டியில் ஏற்றிச் செல்வர்.
- கோடை காலத்தில், குன்றைக் கடந்து தொலைவிலுள்ள ஊர்களிலும் விற்பனை செய்வர்.
- அத்தகைய உமணர் ஒருவரின் மகள் 'உப்புக்கு மாற்றாக நெல்லைத் தந்து உப்பினைப் பெற்றுக் கொள்ள வாரீரோ!' என்று கூறினாள்.
- அவள் கூவியதைக் கேட்டு நாய் குரைத்தது. அதனை எதிர்பாராத அப்பெண்ணின் கண்கள் இரண்டும் அச்சத்தால் மீன்கள் தம்முன் போர் செய்வது போல் மருண்டன.
- கானவர் பழையபுனத்தைத் தீயிட்டு எரிப்பதால் உண்டாகும் கரும்புகை போன்ற கருஞ்சேற்றில் அப்பெண்ணின் தந்தை உப்பு ஏற்றிச் செல்லும் வண்டி சிக்கிக் கொண்டது.
- அவ்வண்டியைச் சேற்றிலிருந்து மீட்க முயன்ற எருதிற்கு அவள் தந்தை உதவினார்.
- அந்த எருது அடைந்த துன்பம் போல அவள் கண்களால் நான் துன்புற்றேன்.

**திணைப் பொருத்தம் :**

'வண்டியை இழுக்கும்' எருதின் துன்பத்தைத் தலைவியின் தந்தை போக்கியது போல, தலைவியைக் கண்டதால் எனக்கேற்ப்பட்ட துன்பத்தை நீ போக்குவதற்கு உரியவன் என்று தலைவன் பாங்கனிடம் கூறுவதால் இத்துறைக்குப் பொருத்தமாயிற்று.

## IV. இலக்கணக் குறிப்பு தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1. பெருங்கடல் → பண்புத்தொகை
2. உழாஅது → செய்யுளிசை அளபெடை
3. வெரீஇய → சொல்லிசை அளபெடை

### அகநிலை வினாக்கள்

1. சிறுகுடி, வெண்கல்உப்பு → பண்புத்தொகை
2. வீசி → வினையெச்சம்
3. குரைப்ப → பெயரெச்சம்
4. அழுந்திய → பெயரெச்சம்
5. வாங்கும் தந்தை → பெயரெச்சம்
6. வருந்தி → வினையெச்சம்
7. நோயாகின்றேன் → தன்மை ஒருமை வினைமுற்று
8. விளியறி → இரண்டாம் வேற்றுமைத் தொகை

## V. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **செய்த** → செய் + த் + அ
செய் → பகுதி
த் → இறந்த கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

2) **சாற்றி** → சாற்று + இ
சாற்று → பகுதி
இ → வினையெச்ச விகுதி

### அகநிலை வினாக்கள்

1) **வீசி** → வீசு + இ
வீசு → பகுதி
இ → வினையெச்ச விகுதி

2) **குரைப்ப** → குரை + ப் + ப் + அ
குரை → பகுதி
ப் → சந்தி
ப் → எதிர்கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

3) **தெளிர்ப்ப** → தெளிர் + ப் + ப் + அ
தெளிர் → பகுதி
ப் → சந்தி
ப் → எதிர்கால இடைநிலை
அ → பெயரெச்ச விகுதி

4) **அழுந்திய** → அழுந்து + இ(ன்) + ய் + அ
அழுந்து → பகுதி
இன் → இறந்த கால இடைநிலை
'ன்' புணர்ந்து கெட்டது விகாரம்
ய் → உடம்படுமெய் சந்தி
அ → பெயரெச்ச விகுதி

5) **வாங்கும்** → வாங்கு + உம்
வாங்கு → பகுதி
உம் → பெயரெச்ச விகுதி

6) **வருந்தி** → வருந்து + இ
வருந்து → பகுதி
இ → வினையெச்ச விகுதி

## IV. புணர்ச்சி விதி தருக.

### புத்தகப் புறநிலை வினாக்கள்

1) **பெருங்கடல்** → பெருமை + கடல்
i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி
→ 'மை' கெட்டது
→ பெரு~~மை~~
→ பெரு + கடல்
ii) 'இனமிகல்' → என்ற விதிப்படி
→ 'க்' -ற்கு இனமான 'ங்' மிகுந்தது
→ பெருங்கடல்
→ என்று புணர்ந்தது

### அகநிலை வினாக்கள்

1) **சிறுகுடி** → சிறுமை + குடி
i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி
→ 'மை' கெட்டது
→ சிறு~~மை~~ → சிறுகுடி
→ என்று புணர்ந்தது

2) **வெண்கல்** → வெண்மை + கல்
i) 'ஈறுபோதல்' → என்ற விதிப்படி
→ 'மை' கெட்டது
→ வெண்~~மை~~
→ வெண் + கல் → வெண்கல்
→ என்று புணர்ந்தது

3) **விளியறி** ⟶ விளி + அறி

i) ‘இ ஈ ஐ வழி யவ்வும்’ ⟶ என்ற விதிப்படி

⟶ ‘ய்’ - உடம்படுமெய் தோன்றியது

⟶ விளி + ய் + அறி ⟶ ஆனது

ii) உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே’

⟶ என்ற விதிப்படி

⟶ ய் + அ = ‘ய’ ஆனது

⟶ விளியறி ⟹ என்று புணர்ந்தது

4) **வாங்குந்தந்தை** ⟶ வாங்கும் + தந்தை

i) ‘மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்’

⟶ என்ற விதிப்படி

⟶ ‘ம்’ - ஒற்று நீங்கியது

⟶வாங்கும்

⟶ வாங்கு+ தந்தை

ii) வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்’

⟶ என்ற விதிப்படி

⟶ ‘த்’ ற்கு இனமான ‘ந்’ ஆகத் திரிந்தது

⟶ வாங்குந் தந்தை

⟶ என்று புணர்ந்தது

## கற்பவை கற்றபின்

**1. தற்காலத்தில் வணிகத்தில் சிறந்து விளங்கும் மகளிர் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.**

**கனிகா டேக்ரிவால்:**

- 20 வயதிலேயே கேன்சர் பாதிப்புக்கு உள்ளான கனிகா சாதிக்க வேண்டும் என நினைத்து தொழில் துவங்கினார். அது சரியாகக் கைவராததால், இந்தியாவில் தனிநபர் விமானப்பயணம் இல்லையே என யோசித்து, ‘ஜெட்செட்கோ’ என்ற பெயரில் தனி நபர்களுக்கான ஜெட் விமானப் போக்குவரத்தை இணையம் மூலம் தொடங்கினார். தற்போது இந்தத் தொழிலில் முன்னணியில் இருக்கிறது இவரது நிறுவனம்.

**ஸ்மிருதி நாக்பால்:**

- 25 வயதாகும் இவரது கைவினைப்பொருட்கள் விற்பனை செய்யும் நிறுவனத்தின் பெயர் அடுல்யகலா. இவை அனைத்தும் காது கேளாத கலைஞர்களைக் கொண்டு வடிவமைக்கப்படுபவை. இந்தியா காது கேளாத மக்கள் அதிகம் உள்ள நாடு என்பதால், கற்பனை வளத்தோடு திறமையோடும் இருக்கும் அந்த மக்களைக் கண்டறிந்து வேலை கொடுக்கிறார்.

www.kalviexpress.in www.kalviexpress.in



துணைப்பாடம்

# 5. தலைக்குளம்

- தோப்பில் முகமது மீரான்

## நம்மை அளப்போம்

## பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

1. ‘ஒரு குட்டித்தீவின் வரைபடம்’ என்ற சிறுகதைத் தொகுப்பை எழுதியவர் ________

அ) தோப்பில் முகமது மீரான் ஆ) இராமலிங்க அடிகள்

இ) பாலச்சந்திரன் ஈ) நகுலன்

**விடை: அ) தோப்பில் முகமுது மீரான்**

2. கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டிணம் என்னும் சிற்றூரில் தோப்பில் முகமது மீரான் பிறந்த ஆண்டு ________

அ) 1940 ஆ) 1941 இ) 1944 ஈ) 1945

**விடை: இ) 1944**

3. எவை சரியானவை?

அ) தோப்பில் முகமது மீரான் தமிழிலும் மலையாளத்திலும் சிறுகதைகளைப் படைப்பவர்

ஆ) புதினம், சிறுகதை என்னும் பல்வேறு இலக்கியத் தளங்களில் இயங்கி வருபவர் தோப்பில் முகமது மீரான்

அ) அ மட்டும் சரி ஆ) ஆ மட்டும் சரி

இ) அ, ஆ மட்டும் சரி ஈ) அ, ஆ இரண்டும் சரி

**விடை: ஈ) அ, ஆ இரண்டும் சரி**

4. 1997 இல் சாகித்ய அகாதெமி விருது பெற்ற தோப்பில் முகமது மீரானின் புதினம் ________

அ) ஒரு குட்டித்தீவின் வரைபடம் ஆ) சாய்வு நாற்காலி

இ) துறைமுகம் ஈ) கூனன் தோப்பு

**விடை: ஆ) சாய்வு நாற்காலி**

5. தோப்பில் முகமது மீரானின் துறைமுகம், கூனன் தோப்பு ஆகிய படைப்புகள் பெற்றுள்ள விருது ________

அ) பாரதிதாசன் விருது ஆ) தமிழக அரசின் விருது

இ) மத்திய அரசின் விருது ஈ) பத்ம ஸ்ரீ விருது

**விடை: ஆ) தமிழக அரசின் விருது**

6. தம்முடைய வட்டார எழுத்திற்கு ‘கரிசல் இலக்கியம்’ என்று பெயரிட்டவர் ________

அ) புதுமைப் பித்தன் ஆ) ஜெயகாந்தன்

இ) தி. ஜானகிராமன் ஈ) கி. ராஜநாராயணன்

**விடை: ஈ) கி. ராஜநாராயணன்**



www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



## II. வினாக்கள்

**1. வட்டார வழக்கு குறித்தெழுதுக**

**வட்டார வழக்கு**

- தமிழ்மொழி ஒன்றேயாயினும் வட்டாரங்களுக்கென்று சிறப்பான தனி மொழிவழக்குகள் இருக்கின்றன.
- சென்னைத் தமிழ், கோவைத் தமிழ், நெல்லைத் தமிழ், குமரித்தமிழ் என்றெல்லாம் வேறுபட்டுத் தமிழ் வழங்குகின்றது.
- அவ்வட்டாரங்களின் பழக்கவழக்கங்கள், தொழில்கள், பழமொழிகள், சடங்குகள் சார்ந்தும் சொல் மாறுபாடுகள் இருக்கின்றன.

**2. வட்டார இலக்கியங்களில் புகழ்பெற்றவர்கள் யாவர்?**

**வட்டார இலக்கியங்கள்**

- புதுமைப்பித்தன் நெல்லைத் தமிழிலும்
- சண்முக சுந்தரம் கோவைத்தமிழிலும்
- ஜெயகாந்தன் சென்னை வட்டாரத் தமிழிலும்
- தி. ஜானகிராமன் தஞ்சைத் தமிழிலும்
- தோப்பில் முகமது மீரான் குமரித் தமிழிலும்
- கி.ராஜநாராயணன் கோவில்பட்டி வட்டாரத் தமிழிலும் எழுதிப் புகழ் பெற்றனர்.

**3. தோப்பில் முகமது மீரானின் தலைக்குளம் துணைப்பாடத்தில் காணப்படும் வட்டார வழக்குச் சொற்களை எழுதுக.**

| | | |
|---|---|---|
| **உம்மா** | - | அம்மா |
| **வாப்பா** | - | அப்பா |
| **ஏச்சு** | - | திட்டுதல் |
| **கடவு** | - | படித்துறை |
| **கன்னியார் கோணம்** | - | ஒரு வயற்காட்டின் பெயர் |
| **பாவாத்து** | - | துணி நெய்ய வேண்டிய நூலுக்குப் பசை கொடுப்பது |
| **சுள்ளைக்கு உள்ளிருந்து** | - | (செங்கல்) நெருப்புச் சுள்ளைக்கு உள்ளிருந்து |
| **அடிபற்றி இருக்கும்** | - | அடித்தரை தெரியும்படி இருக்கும் |
| **வேசாடையாக** | - | சற்றுக் கோபமாக |
| **அமானிதம்** | - | பாதுகாக்கப்பட் வேண்டிய விசயம் |
| **ஏலாவிலிருந்து** | - | பெரிய வயலில் இருந்து |
| **முக்கா மூண்டானி** | - | ஒரு அளவு |
| **புன்ன மூட்டடி** | - | புன்னை மரத்தின் நிழல் |



www.kalviexpress.in www.kalviexpress.in

## III. நெடுவினா

### புத்தகப் புறநிலை வினாக்கள்

**1. 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' - தலைக்குளம் கதையின்றி உங்கள் கருத்தை விவரிக்க?**

**முன்னுரை :**

கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கான ஏற்ற இடமாக இருந்து பின்னர், நகரமாக மாறியதைப் பற்றிய என் கருத்தினை மொழிகின்றேன்.

**கிராமங்களின் முகவரி :**

கிராமங்கள் என்றாலே நம் மனக்கண் முன் தோன்றுவது பச்சைபசேல் என்ற வயல்வெளிகள் அலைகள் மோதும் ஆறு, ஏரி, குளங்கள் பசுங்கிளிகள் பாடும் சோலைகள் பறவைகளின் ஒலியும் தண்ணீரின் நிறைவான வசதிகளும் அப்போதைய கிராமங்களின் முகவரியாக இருந்தன.

**இன்றைய தலைமுறையின் நகர மோகம் :**

இன்றைய தலைமுறையினர் நாகரிகத்தைப் பெரிதாகக் கருதி நகர்ப்புறங்களில் சென்று வேலை தேடி அங்கேயே குடியேறி விடுகின்றனர். கிராமப்புற வீட்டு அமைப்பு முறையை வெறுக்கின்றனர். இயற்கை சூழல் நிரம்பிய வாழிடத்தை வெறுத்து விட்டு செயற்கை சூழல்களால் மட்டுமே நிரம்பிய நகர்ப்புறத்தை நோக்கிச் செல்லும் மோகம் பெருகியுள்ளது.

**முகவரியை இழந்து வரும் கிராமம் :**

பெருவாரியான மக்கள் நகரம் நோக்கி நகர்ந்து விடுவதால் கிராமத்திலுள்ள வளத்தினைப் பேண முடியாமல் அழிந்து விடுகிறது. நகர்ப்புற வாழிடம் போன்ற அமைப்பையே கிராமமும் பெற வேண்டியுள்ளதால் இயற்கை விவசாய நிலங்களும் நீரூற்றுகளும் காடுகளும் அழிக்கப்படுகிறது. கிராமம் தனக்குரிய அத்தனை இயற்கை வளங்களையும் இழந்து அடுக்குமாடிக் கட்டடங்களாகவும் வணிக வளாகங்களாகவும் மட்டுமே காட்சியளிக்கிறது. காடு அழிந்ததால் மழைவளம் குன்றி நிலத்தடி நீர்மட்டம் குறைந்து. வறண்ட நிலங்கள் நிறைந்த பாலைவனமாகத் தற்போதைய கிராமங்கள் இருக்கின்றன.

**முடிவுரை :**

மக்கள் தொகைப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி, நகரமயமாதல், புலம்பெயர்வு, இளைய தலைமுறையினரின் மனப்பான்மை ஆகியவற்றின் விளைவாகக் கிராமங்கள், தங்கள் முகவரியை இழந்து வருகின்றன.

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் இருக்கும் ஊரைச் சிறப்புடன் வாழ ஏற்றதாய் மாற்ற மேற்கொள்ளும் வழிமுறைகளைத் தொகுக்க.**

- சாலை வசதிகளை மேம்படுத்த வேண்டும்.
- சுகாதாரத் துறையின் உதவியை நாடி நோய் வரும் முன் காத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்தல்.
- பாதாள சாக்கடை அமைத்தல்.
- சுகாதாரமான குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்தல்
- உள்ளூர்ச் சந்தைகள் அமைய ஏற்புடைய வளாகங்கள் அமைத்தல்.

www.kalviexpress.in www.kalviexpress.in


## இலக்கணம்

# 5. படிமம்

## பலவுள் தெரிக

### அகநிலை வினாக்கள்

1. **வெயில் மழைக்குச் சொரணையற்ற எருமை**
**குத்திட்ட பாறையாக நதிநீரில் கிடக்கும்**
**→ இது, ஒரு ________________ யைப் படிமப்படுத்திய கவிதை**
அ) காட்சி ஆ) கருத்து இ) ஓவியத்தை ஈ) பயனை
**விடை: அ) காட்சி**

2. **சங்க இலக்கியப் பாடல்களில் பல ________________ படிமங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன**
அ) உருவகங்கள் ஆ) உவமைகள் இ) அணிகள் ஈ) வினைகள்
**விடை: ஆ) உவமைகள்**

3. **உவமைகள், உள்ளுறை உவமைகள் தோறும் படிமங்களின் மிகுதியைக் காட்டுவன ________________**
அ) திருக்குறள் ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்
இ) சங்கப்பாடல்கள் ஈ) திருவாசகம் **விடை: இ) சங்கப்பாடல்கள்**

4. **உவமையிலும், உவமையின்றிப் பிறவற்றாலும் அமைவது ________________**
அ) படிவம் ஆ) மெய் இ) உருவகம் ஈ) அணி
**விடை: அ) படிவம்**

5. **கவிதையில், கருத்தையோ உணர்ச்சியையோ ஆழப்படுத்தப் பயன்படுவது __________**
அ) உருவகம் ஆ) உவமை இ) அணி ஈ) படிமம்
**விடை: ஈ) படிமம்**

6. **'வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப' → இப்பாடலில் அமைந்துள்ள படிமம் __________**
அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
**விடை: ஈ) உருப்படிமம்**

7. **உணவை எடுத்துச் செல்லும் துதிக்கை, மலைக்குகையில் நுழையும் பாம்பினைப் போல உள்ளதாகக் காட்சிப்படுத்தியமை __________ படிமம்**
அ) வினைப்படிமம் ஆ) பயன்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
**விடை: இ) மெய்ப்படிமம்**

8. **சங்க இலக்கியப் பாடல்களில் பெரும்பாலும் ________ வழியே சொல்ல வந்த கருத்தை மேலும் அழகுபடக் கூறுவர்**
அ) உருவகம் ஆ) உவமை இ) அணி ஈ) மெய்
**விடை: ஆ) உவமை**


www.kalviexpress.in www.kalviexpress.in

www.kalviexpress.in www.kalviexpress.in



**9. சங்க இலக்கியங்களில் பெரும்பாலும் _________ உவமைகளையே கையாண்டுள்ளன**

அ) காட்சிதரும் ஆ) காட்சிதராத இ) பயன் ஈ) உரு

**விடை: அ) காட்சிதரும்**

**10. படிமத்திற்குத் தோற்றுவாயாக இருப்பது _________**

அ) உவமை ஆ) உருவகம் இ) உவமைக்கோட்பாடு ஈ) அணியிலக்கணம்

**விடை: இ) உவமைக்கோட்பாடு**

**11. உவமை ஒன்றையே அணியாகக் கூறுவது _________**

அ) அகத்தியம் ஆ) நன்னூல் இ) தொல்காப்பியம் ஈ) தொன்னூல் விளக்கம்

**விடை: இ) தொல்காப்பியம்**

## அகநிலை வினாக்கள்

**1. படிமம் என்றால் என்ன?**

**படிமம் :**

- படிமம் என்றால் காட்சி என்பது பொருள்
- விளக்க வந்த ஒரு காட்சியையோ, கருத்தையோ காட்சிப்படுத்திக் காட்டுகிற உத்தி படிமம்.

**2. படிமத்தின் பணிகள் யாவை?**

**படிமத்தின் பணிகள் :**

- காட்சிக்குத் தெளிவு தருவது.
- கருத்தைக் காட்சிப்படுத்துவது

**3. படிமத்தை உருவாக்கப் பயன்படுவன யாவை?**

- உவமை
- உருவகம்
- சொல்லும் முறை

**4. படிமம் எத்தன்மையால் அமையும்?**

**படிமம் :**

படிமம் காட்சித்தன்மையால் மட்டுமே அமையும்.

**5. படிமம் எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

**படிமம் :**

- வினை
- பயன்
- மெய் (வடிவம்)
- உரு (நிறம்)

⟶ ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

**6. பயன் படிமம் - பற்றி எழுதுக**

**பயன் படிமம் :**

- பயன்களைக் காட்சிப்படுத்திக் கூறுவது பயன் உவமை.



www.kalviexpress.in www.kalviexpress.in

➢ *நோம் என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!*
*புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்*
*கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்கு*
*இனிய செய்தநம் காதலர்*
*இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!*

➢ இனிய செய்தல், இன்னா செய்தல் என்ற பயன்கள் (இனிய) நெருஞ்சிப்பூ, (இன்னா) முள் என்ற காட்சிப்பொருள்களால் படிமப்படுத்தியுள்ளது இக்கவிதை.

7. **உவமைகளை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம்?**

**உவமைகளின் வகை :**

i) காட்சி தருகிற உவமைகள்
ii) காட்சி தரா வெறும் உவமைகள்

⟶ என இரு பிரிவாக உவமைகளைப் பிரிக்கலாம்.

## கற்பவை கற்றபின்

1. **இரவும் பகலும்**
**எதிரெதிர் மோதிட**
**உடைந்த பகலின் துண்டுகள் - இக்கவிதையில் படிம உத்தி பயன்படுத்தப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுக.**

➢ பகல் முடிந்து இரவு தொடங்கும் சமயம் எதிரெதிரே ஒரு மையப்புள்ளியில் சந்தித்துச் செல்லும் போது பகல் முழுவதும் நீங்கி இரவு தொடங்குகிறது.

➢ பகலின் ஒளி ஆங்காங்கே வானில் சிதறி பின்பு முழுமையாக மங்கி இருள் தொடர்ந்து விடுகிறது. வானில் காணப்படும் சிறு சிறு ஒளிச்சிதறல்களை உடைந்த பகலின் துண்டுகள் என்று நிறத்தை படிம உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார்.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **படிமம் என்பதன் பொருள்**

அ) சொல் ஆ) செயல்
இ) காட்சி ஈ) ஒலி

**விடை: இ) காட்சி**

2. **'காலை இளம் வெயில் நன்றாக மேய தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்' இக்கவிதையில் ________ பயின்று வந்துள்ளது.**

அ) பயன் படிமம் ஆ) வினைப் படிமம்
இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்

**விடை: ஆ) வினைப்படிமம்**

3. **கூற்று : உவமை உருவகம் போல படிமமும் வினை, பயன், மெய், உரு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்**

**காரணம் : எவ்வகையான படிமமாக இருந்தாலும் அது காட்சி வழியே கருத்திணை விளக்குவதில்லை.**

அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்றும் சரி, காரணமும் சரி ஈ) கூற்றும் தவறு, காரணமும் தவறு

**விடை: அ) கூற்று சரி, காரணம் தவறு**



www.kalviexpress.in

4. **மெய்ப் படிமத்துக்குரிய பாடலைத் தேர்வு செய்க**

அ) நெருஞ்சிக் கட்க புதுமலர் முட்பயந் தாங்கு

ஆ) கட்டில் நிணக்கும் இழிசினன் கையது

இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்

ஈ) வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப

**விடை: இ) பாசிமணிக் கண்ணும் சிவப்புக் கோட்டுக் கழுத்தும்**


5. **'மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது' - இதில் எவ்வகைப் படிமம் வெளிப்படுகிறது?**

'மாந்தோப்பு வசந்தத்தின் பட்டாடை உடுத்தியிருக்கிறது'

→ இதில் உள்ளார்ந்த ஒப்பீடு படிமம் வெளிப்படுகிறது.

## மொழியை ஆள்வோம்

**I. சான்றோர் சித்திரம் :**



**சோமசுந்தர பாரதியார்**
(1879-1959)

### வினாக்கள்

1. **சோம சுந்தர பாரதியாரின் பன்முக ஆளுமைத் தன்மைகள் யாவை?**
   - பேச்சாளர்
   - சமூக சீர்திருத்தவாதி
   - விடுதலை போராட்ட வீரர்
   - இலக்கிய ஆய்வாளர்

2. **'என்னிடம் இரண்டு சரக்கு கப்பலோடு மூன்றாவதாக ஒரு தமிழ்க்கப்பலும் உள்ளது' என்று பெருமிதத்துடன் யார் யாரைக் குறிப்பிடுகிறார்?**

   வ.உ.சிதம்பரனார் சோமசுந்தரபாரதியாரைக் குறிப்பிடுகிறார்.

3. **வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் சோம சுந்தர பாரதியார் வாதாடினார்.**
   **→ இத்தொடரை வினையாலணையும் பெயர் அமைந்த தொடராக மாற்றுக.**

   வ.உ.சி., சுப்பிரமணிய சிவா ஆகியோர் மீதான வழக்குகளில் வாதாடியவர் சோமசுந்திர பாரதியார்.

4. **கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு இன்றியமையாதது எது?**

   கட்டளை அல்லது நல்ல தமிழ் நடைக்கு எளிதில் பொருள் விளங்கும் தெளிவு இன்றியமையாதது.

5. **இப்பத்தியில் இடம்பெற்றுள்ள சில சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| 1. இனிமையும் எழிலும் | → | எண்ணும்மை |
| 2. வழக்கில்லா | → | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| 3. அருஞ்சொற்கள் | → | பண்புத்தொகை |
| 4. தீந்தமிழ் | → | பண்புத்தொகை |
| 5. நடந்த | → | பெயரெச்சம் |
| 6. சென்றிருந்தனர் | → | பலர்பால் வினைமுற்று |
| 7. செயலாற்றியவர் | → | வினையாலணையும் பெயர் |
| 8. தமிழும் தமிழரும் | → | எண்ணும்மை |

www.kalviexpress.in

## II. தமிழாக்கம் தருக

பெரியார் ஒரு சமூகப்புரட்சியாளராக மட்டுமல்லாமல் அதை விட வேறு தன்மையானவரும் கூட. அவர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடி அதில் வெற்றியும் பெற்றவர். அவர்களுக்கான உரிமை பெறும் போராட்டத்தில் பெரியாரின் பங்கு முக்கியத்துவமானது. எந்தவொரு பிரச்சனைக்கும் நடவடிக்கை எடுக்கும் போது அதனைப் பல்வேறு கோணங்களில் சிந்தித்து மிகவும் ஆழமான யோசனைக்குப் பின்னரே முடிவெடுப்பார். அவர்கள் தங்களது உரிமையைப் பெறுவதற்கான ஆதாரங்களைத் தெரிந்து கொண்டு ஒரு நிரந்தரமான தீர்வினைப் பெறும் வரை ஓய்வெடுக்கமாட்டார். இவரின் தீவிர முயற்சியால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஒதுக்கீடு பெறப்பட்டது.

## III. இலக்கிய நயம் பாராட்டுக

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்!

- *கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை*

**முன்னுரை :**

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை எளிய தமிழைக் கையிலெடுத்துக் கவியுலகில் இமயச் சிகரங்களை எட்டியவர்.

**"ஓடும் உதிரத்தில் - வடிந்து**
**ஒழுகும் கண்ணிரில்**
**தேடிப் பார்த்தாலும் - சாதி**
**தெரிவதுண்டோ அப்பா"**

- என்பன போன்ற நயமான கவிதைகளால் பாரில் புகழ் பெற்றவர் கவிமணி ஆவார். கவிமணியின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த அரிய செல்வம் தெவிட்டாத அமுதம்.

**திரண்ட கருத்து :**

பிறப்பினால் மனிதருக்கு உயர்வு தாழ்வு என்பது வராது. மனிதப்பிறவியில் நாம் சிறப்பினைப் பெறவேண்டுமென்றால் பிறருக்கு நன்மை தரும் நல்ல செயல்களை நாம் செய்ய வேண்டும், பிறருக்கு நன்மைகளைச் செய்பவரே இந்த உலகம் விரும்பும் மேல்குலத்தவர் ஆவார். பிறருக்குத் தீமை தரும் செயல்களைச் செய்பவரை இந்த உலகம் விரும்பாது ஒதுக்கி விடும்.

**மையக் கருத்து :**

பிறருக்கு நன்மை செய்பவரே மேல்குலத்தவர், பிறருக்குத் தீமை செய்பவர் தீண்டத்தகாத கீழ் குலத்தவர் ஆவார். எனவே, மனிதப்பிறவிக்குரிய சிறப்பான செயல்களை மட்டுமே செய்ய வேண்டும்.

www.kalviexpress.in www.kalviexpress.in



**தொடை நயம் :-**

i) **மோனைத் தொடை :**

*'முதலெழுத் தொப்பது மோனை*

→ தொல் நூற்பா

→ ஒரு செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனைத் தொடை.

**எ.கா:**

**பி**றப்பினால் - **பெ**ருமை
**சி**றப்பு - **செ**ய்கை
**ந**ன்மை - **நா**டும்
**தி**ன்மை - **தீ**ண்ட

ii) **எதுகைத் தொடை :**

*'முதலெழுத் தொப்பது மோனை அஃது*
*ஒன்று ஒழிந்தது எதுகை'*

→ தொல் நூற்பா

→ ஒரு செய்யுளில் அடிகளிலோ சீர்களிலோ முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது எதுகைத் தொடை

**எ.கா:**

பி**ற**ப்பினால் - சி**ற**ப்பு
ந**ன்**மை - தி**ன்**மை

iii) **இயைபுத் தொடை :**

*'இறுதிவாய் ஒப்பினது இயைபென மொழி*

→ தொல் நூற்பா

→ ஒரு செய்யுளின் அடிகளில் கடைசி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றி வரத் தொடுப்பது இயைபுத் தொடை ஆகும்.

**எ.கா:**

- வாரா**தப்பா**
  வேண்டு**மப்பா**
- மேற்குல**த்தார்**
  ஒண்ணா**தார்**

iv) **முரண் தொடை :**

*'மொழியினும் பொருளினும் முரணுவது முரணே'*

→ தொல் நூற்பா

→ ஒரு செய்யுளில் சொற்களோ, பொருளோ முரண்பட அமைவது முரண் தொடை ஆகும்.

**எ.கா:**

நன்மை × தின்மை
மேற்குலத்தார் × தீண்ட ஒண்ணாதார்



www.kalviexpress.in www.kalviexpress.in

**அணி நயம் :**

*'காலை மலருக்குப் பனி அழகு*
*கவிதை மலருக்கு அணி அழகு'*

→ என்பதற்கேற்ப இப்பாடலில், 'சிறப்பு வேண்டுமெனில் - நல்ல செய்கை வேண்டுமப்பா'

→ என்று மனித குலத்திற்குச் சிறப்பு அவரவர் செய்யும் செயல்களைப் பொறுத்தே அமையும் என்று உள்ளதை உள்ளவாறே இயல்பாகக் கூறியுள்ளதால் **'இயல்பு நவிற்சி அணி'** பயின்று வந்துள்ளது.

**சந்த நயம் :-**

*'களிற்றுக்கு அழகு தந்தம்*
*கவிதைக்கு அழகு சந்தம்'*

→ என்பதற்கேற்ப இப்பாடலில் தனிச்சொல் காணப்படுவதால் **'சிந்துப்பா'** வகையைச் சார்ந்தது. **'செப்பலோசை'** கொண்ட இப்பாடலானது இராகத்தோடும் தாளத்தோடும் பாடுவதற்கு ஏற்புடைய சந்த நயமிக்கப் பாடலாக அமைந்துள்ளது.

**சுவை நயம் :**

*'நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் உவகை வெகுளியென*
*அப்பால் எட்டே மெய்ப்பா டென்ப'*

→ என்று தொல்காப்பியர் கூறும் எண்வகைச் சுவைகளில் இப்பாடலானது

**'சிறப்பு வேண்டுமெனில் - நல்ல**
**செய்கை வேண்டுமப்பா'**

→ என்று மனித குலம் பெருமைப்பட வேண்டுமெனில் சிறப்பான நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதிலிருந்து **'பெருமிதச் சுவை'** வெளிப்படுகிறது.

**தலைப்பு : 'பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை'**

**முடிவுரை :-**

*'நயமான சொற்களில் கவி வடித்தல்*
*கலையாகக் கற்களில் சிலை வடித்தல்'*

→ என்பதற்கேற்ப இப்பாடலானது இலக்கிய நயங்களை நறுந்தேனாகக் கொண்டு கற்பவருக்கு இனிமை பயக்கின்றது. இது போன்ற கவிதைகள் காலத்தால் என்றும் அழியாதவை.

## IV. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

**எ.கா : இப்ப எனக்குப் புரிஞ்சப் போச்சு. நீயும் புரிஞ்சிக்கோ**
இப்பொழுது எனக்குப் புரிந்துவிட்டது. நீயும் புரிந்துகொள்.

1. **நிலத்தக் கௌறணும்டா அப்பதான் வகுறு நிறையும்**
நிலத்தை உழ வேண்டும் அப்போது தான் வயிறு நிறையும்.

2. **அண்ணைக்கு அவனுக்குப் பணம் குடுத்து ஒதவியிருக்க வேண்டியதான.**
அன்றைக்கு அவனுக்குப் பணம் கொடுத்து உதவியிருக்க வேண்டியது தானே?

3. **வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.**
வீட்டின் அருகில் விளையாடிய குழந்தையை அப்பா எங்கே கூட்டிக் கொண்டுச் சென்றார்?

4. **புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.**
பிள்ளைக்கு உடம்பு சரியில்லை மூன்று நாட்களாக சிரமப்படுகிறது.

5. **ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்.**
இரவில் சித்தப்பாவைக் காவலுக்குப் போகச் சொல்

# மொழியோடு விளையாடு

## I. எண்ணங்களை எழுத்தாக்குக

### தொழில் வளம்



மக்கள் தாம் வாழும் நிலங்களைப் பயன்படுத்தித் தொழில்களைப் பெருக்கி வந்தனர். இயற்கை வளங்களைப் பேணிப்பாதுகாத்ததால் நல்ல விளைச்சல்களைப் பெற்றனர். தாம் விளைவித்த பொருட்களை மூட்டையாகச் சுமந்து சென்று உள்ளூர்ச் சந்தையிலும், மாட்டு வண்டிகளில் ஏற்றிக் கொண்டு பிற நிலங்களுக்கும் சென்று வணிகம் செய்தனர். தாம் கொடுக்கும் பொருளுக்கு ஈடாக வேற்று நிலத்தில் விளையும் பொருட்களைப் பெற்று பண்டமாற்று வணிகம் செய்தனர். எனவே விளைபொருட்கள் நாடு முழுவதும் பரவி எல்லா வளங்களோடும் மக்கள் வாழ ஏதுவாக இருந்தது.

## II. வெட்டியும் ஒட்டியும் பேசுதல் :

**கிராமங்கள் நகரமாவது வளர்ச்சியா?**

- கிராமங்களில் அனைத்து வசதிகளும் பெருகினால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயரும். மக்கள் நவீன வாழ்க்கையைத் தேடி இடம் பெயர்ந்து நகர்ப்புறம் நோக்கிச் செல்வது குறையும். அனைத்துத் தர மக்களுக்கும் அத்தனைத் தொழில்நுட்ப வசதிகளும் கிடைக்கும். கிராமங்களின் வளர்ச்சியே நாட்டினை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்லும். கிராமத்தினைச் சுற்றிலுமுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் வகையில் தொழில் வளம் பெருகும். வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.
- கிராமங்களில் நகர்ப்புறம் போன்றதொரு வளர்ச்சியானது பெருகினால் மக்களிடம் உள்ள நல்ல பண்பாடுகளும் கலாச்சாரங்களும் சீரழிந்து விடும். பழமையைப் பேணாமல் விட்டு விடுவதால் வளங்கள் குறைந்து விடும். இயற்கை வளங்களை அழித்து நகரம் போன்றதொரு குடியிருப்புகளும் பல்வேறு கட்டடங்களும் உருவாவதால் இயற்கைச் சூழலில் மாற்றம் ஏற்பட்டுக் காலநிலையையும் அது பாதிக்கும். நம் முன்னோர்களின் பரம்பரைத் தொழில்கள் அழிந்து விடும். இந்நிலை மேலும் மேலும் ஏற்பட ஒரு நாள் நாம் இயற்கைப் பேரிடரை எதிர்கொள்ள வேண்டிய அவல நிலை ஏற்படும்.

## III. ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.

**எ.கா :**

பூட்டிய
வீட்டிலும்
பூத்துச் சிரிக்கிறது
**முல்லை**

1. விழும்
மரங்கள்
அழியும் காடு
**அபாயமணி**

2. அப்படியென்ன
சொல்லியது காற்று
குதித்தாடுகிறது மேகம்
**மாரிக்காலம்**

3. பூத்த
மலரொன்று
பறக்கிறது
**எருக்கம்பூ**

4. வானம்
அழுகிறது பூமி
சிரிக்கிறது
**அடைமழை**

## IV. கருத்துப்படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக

**சங்க இலக்கியங்கள்**

**எட்டுத்தொகை**

| அகம் | புறம் | அகமும்புறமும் |
|---|---|---|
| நற்றிணை | புறநானூறு | பரிபாடல் |
| குறுந்தொகை | பதிற்றுப்பத்து | |
| ஐங்குறுநூறு | | |
| அகநானூறு | | |
| கலித்தொகை | | |

**பத்துப்பாட்டு**

| அகம் | புறம் |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | மதுரைக்காஞ்சி |
| முல்லைப்பாட்டு | திருமுருகாற்றுப்படை |
| நெடுநல்வாடை | பொருநராற்றுப்படை |
| பட்டினப்பாலை | பெரும்பாணாற்றுப்படை |
| | சிறுபாணாற்றுப்படை |
| | கூத்தராற்றுப்படை |

### சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்கள் என்பவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவற்றை பதினெண்மேற்கணக்கு நூல்கள் என்பர். எட்டுத்தொகையுள் எட்டு நூல்களும் பத்துப்பாட்டுள் பத்து நூல்களும் அமைந்துள்ளன. எட்டுத்தொகையில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களும் அகம் பற்றியன. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டு நூல்களும் புறம் பற்றியன. பரிபாடல் என்ற நூலானது அகமும் புறமும் பற்றியது ஆகும். பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப்பாலை ஆகிய நான்கு நூல்களும் அகப்பொருள் பற்றிய நூல்களாகும். மதுரைக் காஞ்சி. திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகிய ஆறு நூல்களும் புறப்பொருள் பற்றிய நூல்களாகும்.

## V. கீழ்க்காணும் பகுதியைப் படித்துப் பார்த்து, பிறமொழிச் சொற்களைக் கண்டறிந்து தமிழ்ப்படுத்துக

சர்க்கார் கொடுக்கும் சம்பளம் ஜீவனத்துக்குப் போதுமா? அதற்குள் ஜீவனம் நடத்த முடியுமா? என்று அவர் சிந்தித்தது கிடையாது. சிந்திக்க முயன்றதும் கிடையாது. எல்லாம் மாயை; உள்ளூர நிற்கும் ஆத்மா மாசுபடவில்லை. தான் வேறு இந்த மாயை வேறு. தான் இந்த பிரபஞ்சத்தை ஆட்டி வைக்கும் சக்தியின் ஒரு அம்சம் என்று திடமாக நம்பியிருந்தார். ஏனென்றால், அவரது ஆத்ம விசாரத்தை சோதனை போட்டுப் பார்க்க இது வரை தெய்வத்துக்கோ மனுஷனுக்கோ அவகாசம் கிடைத்ததில்லை. மனுஷ வர்க்கம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையை ஸ்புடம் போட்டுப் பார்ப்பது போல தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தது.

**விடை :**

அரசு கொடுக்கும் ஊதியம் வாழ்க்கைக்குப் போதுமா? அதற்குள் வாழ்க்கை நடத்த முடியுமா? என்று அவர் யோசித்தது இல்லை. யோசனை செய்ய முயன்றதும் இல்லை. எல்லாம் நிலையில்லாதது. அகத்தினுள்

www.kalviexpress.in

இருக்கும் ஆன்மாவிற்கு குற்றம் ஏதும் இல்லை. தான் வேறு இந்த நிலையற்ற தன்மை வேறு. தான் இந்த உலகத்தை ஆட்டி வைக்கும் சக்தியின் ஓர் அம்சம் என்று உறுதியாக எண்ணியிருந்தார். ஏனென்றால் அவரது ஆன்மாவின் அகலத்தை ஆய்வு செய்து பார்க்க இதுவரை இறைவனுக்கோ மனிதருக்கோ காலம் கிடைத்ததில்லை. மனித குலம் முழுவதுமே தன்னைப் படைத்தவனுடைய தன்மையைத் தரம் பார்ப்பது போல பிழைக்கு மேல் பிழை செய்து கொண்டிருந்தது.

## நிற்க அதற்குத் தக

**I.** [**ஆளுமைத்திறன் என்பது ஒருவரது ஒழுங்கமைந்த இயங்கியல் நடத்தை, உணர்வு, சிந்தனை ஆகியவற்றைக் குறிக்கிறது. தன்னம்பிக்கை, நேர்மறைச் சிந்தனை, அடிப்படை ஒழுக்கம், உடற்பயிற்சி ஆகிய அனைத்தும் ஆளுமைப் பண்புள் அடங்கும்**]

➢ இமயா இருசக்கர வாகனம் ஓட்டப் பழகுகிறாள். ஓட்டுகையில் இடையில் தடுமாறிக் கீழே விழுகிறாள். கற்றுக்கொடுக்கும் அவளுடைய அண்ணன், 'உன்னால் இரு சக்கர வாகனம் ஓட்ட இயலாது' என்கிறான். நீங்கள் இமயாவாக இருந்தால் என்ன சொல்வீர்கள்?

**விடை :**

நான் இமயாவாக இருந்தால்.... சரியான பயிற்சியோடு தினமும் முயற்சி செய்து இரு சக்கர வாகனம் ஓட்ட என்னால் முடியும் என்று கூறுவேன்.

➢ பள்ளி ஆண்டுவிழாவிற்கு வருகை புரிந்த சிறப்பு விருந்தினர்க்கு நன்றியுரை நிகழ்த்த ஆசிரியர் அழைக்கின்றார். அந்நிலையில் நீவிர் என்ன செய்வீர்?

**விடை :**

என்னால் நன்றாகப் பேச முடியும் என்ற தன்னம்பிக்கையில் எழுந்து சென்று, சிறப்பு விருந்தினரின் அருமைகளை எடுத்துச் சொல்லி விழாவில் கலந்து கொண்டமைக்காக நன்றி கூறி உரை நிகழ்த்துவேன்.

www.kalviexpress.in

## II. படிப்போம் பயன்படுத்துவோம் (நீதிமன்றம்)

| | | | |
|---|---|---|---|
| Affidavit | - ஆணை உறுதி ஆவணம் | Jurisdiction | - அதிகார எல்லை |
| Allegation | - சாட்டுரை | Plaintiff | - வாதி |
| Conviction | - தண்டனை | Sentence | -தண்டனை |

☼ ☼ ☼ ☼ ☼